பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

# காதியானி மத ஆராய்ச்சி

அதாவது

காதியான் கிராமத்தில் தோன்றிய

## மிர்ஸா குலாம் அஹ்மத் சாஹிப்

காதியானியின் மத ஆராய்ச்சி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 NOV 1925
MADRAS

"முஸல்மான்" ஆசிரியர்

தென்காசி

மீ. இ. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப்

அவர்களாலியற்றப்பெற்று

திருநெல்வேலி

மீரானியா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

ஹிஜ்ரி 1343 துல்ஹஜ்ஜு. [விலை ரூபாய் ஒன்று.

சென்னை-600 008.
225373

புத்தகம் கிடைக்குமிடம்:—

"முஸல்மான்" ஆபீஸ்,

தென்காசி.

B

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

# முன்னுரை.

---

1. இதை வாசிக்கும் கனவான்களே! எம் இஸ்லாம் மதத்தைப் புறட்டி சுய அபிப்பிராயத்தை நுழைத்து முஸ்லிம்களைப் பிரித்து பங்கப்படுத்திவிட செய்து வரும் காதியானி மதஸ்தர்களின் சூழ்ச்சிகளை முஸ்லிம்களுக்குத் தெரிவித்துவிடும் நோக்கத்தின்மீதே இப்புத்தகம் இயற்றலானேன். ஆகலின் முஸ்லிம் சமூகம் இதை நன்கு கவனித்து பிழைகள் தவறுகள் காணப்படின் திருத்திக்கொள்வதுடன் தமியேனுக்குத் தெரிவித்தால் மறு பதிப்பில் அக்குறையை நிவர்த்திக்கக் கூடுமென்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

2. யான் இப்புத்தகத்தை மிர்ஸா சாஹிப் நூல்கள், காதியான் பார்டீ, லாஹோர் பார்டீ, எமது உலமாக்களின் கிரந்தம் பத்திரிகைகளை மேற்கோளாக்கொண்டே எழுதி முடித்திருக்கிறேன். இன்னும் அவற்றின் ஆதாரங்களும் ஆங்காங்கு விபரித்திருக்கிறேன்.

3. மிர்ஸா சாஹிபின் நூல்கள் பல்லாண்டுகளாக மாற்றி அச்சிடப்பட்டிருப்பதால் இப்புத்தகத்தில் காட்டியிருக்கும் ஆதாரப் பக்கங்கள் ஒரு கிதாபில் சரியாகவும் மறு கிதாபில் கூடுதல் குறைவாகவும், மற்றொரு கிதாபில் சுமார் 40 பக்கத்திற்கு மேல் வித்தியாசமாகவும் காணப்படுகின்றன. ஆகலின் குறிப்பிட்ட பக்கங்களில் காணாவிட்டாலும் முன்னும் பின்னும் திருப்பிப் பார்த்துக்கொள்ளவேண்டியதவசியமாகும். அன்றியும் ஒவ்வொரு கிதாபிலும், காட்டியிருக்கும் பக்கங்களை விபரித்திருப்பதால் அவற்றில் எந்தப்பக்கத்திலாவது பார்த்துக்கொண்டால் அதுவே போதுமானது. ஒரே கிதாபில் அத்தனை பக்கங்களிலும் காணப்படுவது அவசியமல்ல.

4. இப்புத்தகத்தின் சில பாகங்களை சரிபார்த்த பேட்டை ஜனாப் வா. பீ. பீ. ஹம்ஸா சாஹிப் B. A. அவர்களுக்கும், இன்னும் இதற்கு நிதி உதவிய தென்காசி, பேட்டை, பேட்மா நகரம் முதலிய முஸ்லிம் கனவான்களுக்கும், பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்புத்தகத்தை வாசித்துணர்ந்து முஸ்லிம்கள் உண்மையை விளங்கிக்கொள்வார்களாயின் அதுவே இம்மிஸ்கீனுக்கு போதிய கைமாறாகும்.

காதியானிகளைப்பற்றிய உலமாக்களின் தீர்ப்பும் ஆங்கில குர்ஆன் வியாக்கியான ஆராய்ச்சியின் முகவுரையும் அச்சிடத் தயாராயிருக்கின்றன. உணர்ச்சியும், மதாபிமானமும் பெருகிய முஸ்லிம் கனவான்கள் முன்னுக்கு வந்தால் இன்ஷா அல்லாஹ் கூடிய சீக்கிரம் அச்சாகிவிடுமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆண்டவன் அருள்புரிவானாக. ஆமீன்.

இங்ஙனம்,

ஆசிரியன்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

## மதிப்புரை.

---

இந்த காதியானி மத ஆராய்ச்சி என்னும் அரிய கிரந்தத்தில் பெரும்பாகத்தைப் பார்வையிட்டேன் சரியானபடி தக்க ஆதாரத்துடன் விளக்கிக் காட்டியிருக்கிறதாக தெரியவந்தது. காதியானி கொள்கைகளை ஆராய்ந்து வியாக்கியானஞ் செய்து அதன் தவறுகளை எடுத்துக்காட்டி சரியான முகாந்தரத்துடன் விடை தமிழில் எழுதியிருப்பதில் இதுவே முதலாவது என்பதில் ஐயமில்லை முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் இதை அவசியம் வாங்கி பலனடையுமாறு வேண்டுகிறேன். உலமாக்கள், கல்விமான்கள் நிறைந்த இத்தமிழ் நாட்டில் இஸ்லாம் மார்க்கத்தை கெடுக்க வந்த காதியானிகளின் கெட்ட கொள்கைகளை மறுத்தெழுத ஒருவரும் முன் வராத இச்சந்தர்ப்பத்தில் அதை பரவ விடாது பரோபகார சிந்தையுடன் தடுத்து நிற்கும் இதன் ஆசிரியரும் முஸல்மான் பத்திராதிபருமான கனம், மீ. இ. ஹாஜி முஹம்மது அப்துல் காதிர் சாகிபவர்களை நீடூழிகாலம் சுக ஜீவியாக்கி வைத்து இஸ்லாத்துக்கு உதவி செய்பவர்களாக ஆக்கி வைக்கும்படி நாயனை வேண்டுகிறேன்.

சி. கா. செய்கு இப்ருஹீம்,

மஜ்லிசுல் உலமா காரியதரிசி.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

# விஷய அட்டவணை.


| அதிகாரம். | | பக்கம். |
| --- | --- | --- |
| 1. | பொய் மஹ்தீகளும் வழிகாட்டிகளும் ... | 1 |
| 2. | உபைதுல்லா மஹ்தி ... | 1 |
| 3. | ஹஸனிபுனுசபாஹ் ... | 2 |
| 4. | ஹாக்கிம் ப. அம்றுல்லா ... | 2 |
| 5. | முஹம்மது அலிபாபீ ... | 3 |
| 6. | தாஹிர்ஸைபுத்தீன் ... | 4 |
| 7. | மிர்ஸா ஸாஹிபு காதியானியின் ஆரம்பம் ... | 6 |
| 8. | 500 ரூபாய் வெகுமதி ... | 9 |
| 9. | தியானந்த சுவாமிக்கு ஓர் நோட்டீஸ் ... | 10 |
| 10. | மிர்ஸா ஸாஹிபின் ஓர் வேண்டுகோள் ... | 11 |
| 11. | பறூஹீன அஹ்மதியாவை இயற்றிய நோக்கம் ... | 17 |
| 12. | நேச்சரியர்களை தூஷித்தல் ... | 18 |
| 13. | குர்ஆன்ஷரீப் சம்பூர்ணமானது. வஹீ ரிஸாலத்தும் நின்றுவிட்டது ... | 19 |
| 14. | குர்ஆன்ஷரீபின் அர்த்தம் பேதகப்படாது ... | 20 |
| 15. | முஸ்லிம்களின் தௌஹீதில் பேதகம் வாராது ... | 20 |
| 16. | வஹீயன்றி புத்தியைக்கொண்டு மறுமையின் விஷயம் முதலியன தெரிய வாராது ... | 21 |
| 17. | நபிப்பட்டம் தகுந்தவர்களுக்கு கிடைத்துவிடுகிறது | 22 |
| 18. | பறூஹீனுக்கு இயாராவது மறுப்பெழுதினால் இனுமளித்தல் ... | 23 |
| 19. | ஹஸ்ரத் மஸீஹ் வானத்திலிருந்திறங்குவார்கள் மகனைப்பற்றிய முன்னறிக்கை ... | 26 |
| 20. | இல்ஹாமி வார்த்தையின் அர்த்தமாகிறது இல்ஹாமையுடையவன் விபரிப்பதே நியாயம் | 34 |
| 21. | உபதேசித்தோர்களை நிந்தித்தல் ... | 38 |

22. முன்னறிக்கை நோட்டீஸ்களின் ஆராய்ச்சி ... 39
23. சமயோசிதக் கதை ... 44

## இரண்டாம் பாகம்

## மிர்ஸா ஸாஹிபின் விசுவாசங்கள்.

24. மிர்ஸா ஸாஹிபு அல்லாவுடைய லக்ஷணங்களில் இணைவைப்பது ... 48
25. மிர்ஸா ஸாஹிபு இறைவனின் குமாரன் ... 49
26. ஆண்டவனுக்குச் சரீர சம்பந்தமான இலக்ஷணம் 50
27. உலகோர்களின் தக்தீரை மிர்ஸா ஸாஹிபு எழுதினாராம் ... 50
28. மிர்ஸா ஸாஹிபின் மக்காமின் மகத்துவம் ... 51
29. மலக்குகளின் இலக்ஷணங்களை மறுத்தல் ... 53
30. மிர்ஸா ஸாஹிபு குர்ஆன் ஷரீபை தூஷணித்தல் 54
31. நாயகமவர்களின் ஹதீதுகளை நிந்தித்தல் ... 55
32. மிர்ஸா ஸாஹிபு நபிமார்களை நிந்தித்தல் ... 56
33. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை நிந்தித்தல் ... 57
34. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் அற்புதங்களைப் பரிகசித்தல் ... 59
35. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை வன்மொழிகளால் தாக்கல் ... 61
36. ஹஸ்ரத் மறியம் (அலை) அவர்களின்மீது பாதகப் பழிமொழிகள் ... 63
37. நமது நாயகமவர்களைப் பரிகசித்தல் ... 63
38. அஹ்லபைத்துகள் ஸஹாபாக்களை நிந்தித்தல் ... 67
39. மிர்ஸா ஸாஹிப் தாம் நபி யென வாதித்தல் ... 68
40. தமது வஹீயும் குர்ஆன்ஷரீபும் ஒன்றாம்! ... 72
41. தாம் மஹ்தி மஸீஹ் என்று வாதாடலும் ஹஸ்ரத் மஹ்தி அவர்களை தூஷணித்தலும் ... 73
42 ஹிந்து, ஆரியர், முஸ்லிம்களுக்கு தாம் வழிகாட்டி யென்று வாதித்தல் ... 73
43. மார்க்கத்துக்கு மாற்றமான பற்பல இல்ஹாம்கள் 74
44. மிர்ஸா ஸாஹிபை ஒப்புக்கொள்ளாதவர்கள் காபிர்களாம்! ... 75

45. மிர்ஸா ஸாஹிபை மஸீஹ், மஹ்தி என்பதில் சந்தேகித்தவர்களும் காபிர்களாம்! ... 78
46. மிர்ஸா ஸாஹிபை மறுத்தவர்களுக்குப்பின்னால் தொழக்கூடாதாம்! விவாகம் செய்யக்கூடாதாம் 79
47. உலமாக்களை ஏசல் ... 79
48. மிர்ஸா ஸாஹிபின் விஸ்வாசங்களைப்பற்றி 8 விதமான ஆராய்ச்சி ... 80
49. மிர்ஸாயி மதஸ்தரைப்பற்றி உலமாக்களின் தீர்ப்பு 87

## மூன்றாம் பாகம்.

50. மிர்ஸா ஸாஹிப் தம் வாயால் காபிராகிவிட்டார் ... 92
51. மிர்ஸாயி மதத்தினரைப்பற்றி கோர்டுகளின் தீர்மானம் ... 96
52, இதர ஆறு தீர்ப்புகள் ... 114
53. மிர்ஸா ஸாஹிபின் முன் பின் விரோதச் சொற்கள் 117

(அற்புதங்களை அங்கீகரிக்க வேண்டுமென்றும், அதை மறுக்கிறது நேச்சரியரின் அஞ்ஞான கொள்கையென்றும், சரீரத்தோடு விண்ணுலகிலிருந்து இறங்குகிறது மறுக்கத்தக்கதென்றும், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சரீரத்துடன் வான லோகத்திலிருந்து திமிஷ்க் தேசத்தின் மினாராவில் இறங்குகிறது உண்மையென்றும், இன்னும் பலவாராக எழுதப்பட்டிருக்கிறது.)

54. மிர்ஸா சாஹிபின் ஆதாரவற்ற ஐந்து பொய்கள் ... 130
55. மிர்ஸா சாஹிபும், முஸைலமா கஸ்ஸாபும் ... 137
56. சுவர்க்கலோக சமாதி ... 144
57. மிர்ஸா ஸாஹிப் ஹஜ்ஜுக்குப்போகவில்லை ... 145
58. ஓர் முஸ்லிம் மஹ்தி ஓர் யூத மஸீஹின் சரித்திரம் 149
59. காலத்திற்குத் தக்க நபி ... 152
60 மிர்ஸா ஸாஹிபின் சரித்திரச் சுருக்கம் ... 153
61. ஓர் மிர்ஸாயி மதஸ்தருக்கும் ஓர் மஹ்திக்கும் நடந்த சம்பாஷணை ... 161
62. மிர்ஸா சாஹிபின் உம்மத்துகளின் பிரிவினைகள் முதலாவது கூட்டம் ... 167

63. மிர்ஸா ஸாஹிபின் உம்மத்துகளின் பிரிவினைகள்
இரண்டாவது கூட்டம் ... 167
64. ,, மூன்றாவது கூட்டம் ... 172
65. ,, நான்காவது கூட்டம் ... 172
66. ,, ஐந்தாவது கூட்டம் ... 177
67. மிர்ஸாயி மதஸ்தர்கள் தங்களின் மதத்தைப் பரப்ப முஸ்லிம்களிடத்தில் செய்யும் சூழ்ச்சிகள் 178
68. ஹஸ்ரத் ஈஸா (அலை) வானத்தின்மீது ஜீவித்திருக்கிறதும், நமது நாயகம் மண்ணறையில் அடங்கப்பட்டிருப்பதும் நாயகமவர்களின் மகத்துவத்திற்கு மிக இழிவாம் ... 183
69. காதியானி மதஸ்தர்கள் மிர்ஸா ஸாஹிபைப் புகழல் 185
70. மிர்ஸா சாஹிபைப்பற்றி முஸ்லிம்களின் புகழ் ... 187
71. முஸ்லிம்களின் சந்தேக நிவாரணம் ... 189

(இதில் மிர்ஸாயி மதத்தைப்பற்றி சந்தேகிக்க பொது ஜன முஸ்லிம்களின் 12 கேள்விகள் அடங்கியுள்ளன.)

72. குழப்பங்கள் உண்டாகும் பிற்காலத்தில் முஸ்லிம்கள் யாரை நம்புவது ... 198

# பிழை திருத்த அட்டவணை.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 3 | அம்ரத்ஷரி | அம்ரத்சரி |
| 7 | 3 | யென்று | யொன்று |
| ,, நோட் | 8 | அனுப்புயபோது | அனுப்பியபோது |
| 11 | 13 | குலாம்ரயீஸ் | குலாம்அஹ்மதுரயீஸ் |
| 18 | 18 | அளிந்து | அழிந்து |
| 19 | 5 | சுபாவமண்டாகி | சுபாவமுண்டாகி |
| 21 | 29 | அதன் | அவன் |
| 22 நோட் | 1 | ஜனங்களை | ஜனங்கள் |
| 29 | 22 | பொருமை | பொறுமை |
| 30 | 13 | என்றொரு | என்றொருவராம் |
| 36 | 19 | போகிலும் | போதும் |
| 43 | 29 | கூடய | கூடிய |
| 45 | 17 | பகுத்தரிவ | பகுத்தறிவ |
| 48 | 15 | இணையாம | இணைவையாம |
| 49 | 14 | அர்ரஹீது | அர்ரவீது |
| 51 | 15 | அம்துல்லா | அப்துல்லா |
| 54 | 2 | 8, 69 | 869 |
| ,, | 10 | வசமாக | வசவாக |
| 57 | 15 | மக்களை | மகனை |
| 59 | 23 | பிடித்து | படித்து |
| 61 | 23 | 10,16 | 1016 |
| 64 | 18 | 4 | 5 |
| 67 | 16 | ஒளி | ஒழி |
| 69 | 28 | பெறுகிதே | பெறுகிறதே |
| 80 நோட் | 4 | தூஷணை | தூஷணி |
| ,, ,, | 7 | சொல் | செல்கி |
| 82 | 3 | னொ | றொரு |
| ,, | 23 | பிரம | பிறம |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 83 | 11 | அர்ப்பஅளவு | ஆர்ப்பளவு |
| 84 | 14 | கேள்கக்க | கேட்க |
| ,, | 25 | குரிய | குறிய |
| 87 | 1 | நன்நல்குணர்ந்த | நன்குணர்ந்த |
| ,, | 17 | வாபி | வாயிருப்போம் |
| 91 | 3 | நடிக்கந்த | நடுங்க |
| ,, | 21 | எழுதில் | எழிதில் |
| 98 | 3 | 0' | அல்லது |
| 108 | 31 | முஸ்தபா | முஜ்தபா |
| 114 | 7 | நாலும் | நாளும் |
| ,, | 30 | இங்கு | இங்கும் |
| 122 | 9 | ஞரியா | ஆரியா |
| 123 | 10 | வருமை | வறுமை |
| 124 | 7 | விரங்கு | விறங்கு |
| ,, | 17 | தாமெதன்ன | தாமென்ன |
| 125 | 2 | 337 | 1337 |
| 133 | 30 | 9 | 8 |
| 134 | 2 | 8 | 0 |
| 137 | 30 | அவர்னே | அவனே |
| 141 | 2 | வென்று | வென்ற |
| 144 | 3 | கவனிக்கத்தற் | கவனித்தற் |
| ,, | 23 | என்பதாய் | என்பதாம் |
| 146 | 17 | அறிவிக்கிது | அறிவிக்கிறது |
| 154 | 2 | முரிந்து கொடுக்க ஆரம்பித்தார் | 0 |
| 155 | 30 | உண்டாகிறது | உண்டாக்கிறது |
| 159 | 19 | ஞுரு | குரு |
| 162 | 13 | றஹமானும் | றஹ்மான் |
| 165 | 2 | தவதுதல் | தவறுதல் |
| 169 | 17 | சாஹிபு | சாஹிபை |
| 177 | 8 | 1921 | 1911 |
| ,, | 29 | கத்தனை | கத்னை |
| 182 | 33 | சில | சிலர் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 185 | 2 | 12,14 | விசுவாசப் |
| ,, | 7 | இறந்த | இந்த |
| ,, | 29 | உம்மத்துகளை | உம்மத்துகள் |
| 186 | 12 | அவர்கள் | அவரது |
| 187 | 28 | போதுபான | போதுமான |
| 190 | 2 | நபிமார்களை | நம்பார்களை |
| ,, | 14 | இஜுமா | இஜ்மா |
| 195 | 4 | உலமாக்களிடம் வேண்டு | இல்லை |
| 199 | 3 | னனைத்தும் | ளனைத்தும் |
| ,, | 8 | நகர | நரக |
| ,, | 11 | இரிபாவி | இரிபாவிபுலு |
| 201 | 23 | ஆலஹி | ஆலிஹி |

# காதியானி மத ஆராய்ச்சி.

## முகவுரை.

சர்வலோகங்களையும் படைத்தாளுகின்ற ஆண்டவனுக்கே எல்லாப்புகழும், ஸ்துதிகளும், இன்னும் அவனது உண்மைத் தூதரும் நபிமார்களுக்கெல்லாம் கடைசி நபியுமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் பேரில் ஆண்டவனுடைய சலவாத்தும், சலாமும் எப்போதுமுண்டாவதாக: ஆமீன்.

## முஸ்லிம்களே!

நமது நாயகம் முஹம்மதுர்ரசூலுல்லா அவர்கள் உலகத்தில் தோன்றி சன்மார்க்கத்தைப் பரப்புஞ் சமயம் உலகமிருந்த நிலைமையை அறியாதாரிலர். சிருஷ்டி வணக்கமும், பல தெய்வ வணக்கமும், துர்ச் செயல்களும், எல்லாப் பாகங்களிலும் அளவு கடந்து நடந்துவந்தன. ஆத்ம சூரியனை நாயகமவர்களின் சன்மார்க்கமென்ற சுடர் வீசியவுடன் துன்மார்க்கமென்ற அஞ்ஞான இருளகன்று சத்திய இஸ்லா மதத்தை எல்லோரும் தழுவ ஆரம்பித்தனர். ஆகவே, நாயகமவர்களின் காலத்தில் எங்கும் ஓரே ஒளியாய்ச் சன்மார்க்கம் பிரகாசித்துக்கொண்டிருந்தது. நாயகமவர்கள் பரலோகத்திற்கெழுந்தருளிய பின்னர் நேர் வழி பெற்ற கலீபாக்களின் பிற்காலத்தில் முஸ்லிம்களுக்குள் உட்கலகமுண்டாகவே இதுவே தருணமெனக் கருதி முஸ்லிம்களுடைய பெருங்கூட்டமாகிய சுன்னத்து ஜமாஅத்தைவிட்டும் நீங்கிச் சிற்சிலர் வெவ்வேறு கூட்டமாய்ப் பிரிந்துவிட்டனர். இப்படிப் பிரிவுகளுண்டாகுமென, நமது நாயகமவர்கள் முன்னதாகவே அறிவித்திருக்கிறார்கள்.

### அதாவது:-

எனக்குப் பின்பு என்னுடைய உம்மத்துகளில் 73 கூட்டமுண்டாகும். அதில், நானும் எனது உடன்வாசிகளும் நடந்த

வழியைத்தொடர்ந்த ஒரு கூட்டத்தைத் தவிர, மற்ற கூட்டமெல்லாம் நரகவாதியாயிருக்கும் என்பதே.

இப்படிப் பிரிந்தவர்களில் முதலாவது காரிஜீ வகுப்பார் பின்னர், இவர்களுக்கெதிராக ஷியா வகுப்பாரும் தோன்றினர்கள். அப்பால், பலாசிபாக் கல்விகளைப் பின்பற்றி அதற்குச்சார்பாக குர்ஆன் ஹதீதுகளுக்கு அர்த்தஞ்செய்ய வேண்டுமென்ற முஃதஸிலாக் கூட்டம் தோன்றியது. இவ்வண்ணம், மார்க்கத்தில் பேதங்களுண்டாகவே சுயநலங்கருதிய சில ஜனங்கள் மஹ்தி யென்றும், ஈசா வென்றும், நபி யென்றும், வழி காட்டி யென்றும் பற்பல விதமாய்த் தோன்ற ஆரம்பித்தார்கள். இதைப் பற்றியும், நமது நாயகமவர்கள் முன்னதாகவே உம்மத்துகளுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

அதாவது:-

முப்பது தஜ்ஜால்கள் தோன்றி ஒவ்வொருவரும் நானே ரசூலென்றுசொல்லாதவரை கியாமம் உண்டாகமாட்டதென்றும்;

இன்னும்,

எனது உம்மத்திலே இனிமேல் முப்பது பேர் உண்டாவார்கள். அதில், ஒவ்வொருவரும் நான் நபி யென்றும் சொல்வார்கள். உண்மையில், நான் கடைசி நபியாயிருக்கிறேன். எனக்குப்பின்னால் வேறு நபி கிடையாதென்றும், அருளிச் செய்திருக்கிறார்கள்.

ஆகவே இவ்விதமான நபியும், மஹ்தியும், மஸீஹும், பற்பல காலங்களிலும் வெளியாயிருக்கிறார்கள். தற்காலத்திலும், அவர்களின் கூட்டம் சிற்சில பாகங்களில் இருந்துகொண்டே வருகிறது. நிகழ்காலமாகிய ஹிஜ்ரி 14-ம் நூற்றாண்டிலும் இந்தியாவில் மிர்ஸா குலாம் அஹ்மது யென்றொருவர் காதியான் கிராமத்தில் வெளியாகி தன்னை நபி யென்றும், மஹ்தி யென்றும், முஜத்திது யென்றும், கிருஷ்ணனென்றும், ஈசா நபி யென்றும் சொல்லி வாதித்துப் பலரை அவர் கொள்கைகளில் சேர்த்திருக்கின்றனர். அக்கூட்டத்தார், தாங்களே மோக்ஷம் பெற்றவர்களென்றும், மற்ற சுன்னத்து ஜமாஅத்துகளாகிய முஸ்லிம்களுக்கு முக்தி கிடையாது. அவர்கள் காபிரென்றும், விசுவா-

சித்து வருகிறதோடு தங்கள் கொள்கைகளைப் பரப்புவதற்கு ஒவ்வொரு பாகங்களிலும் பத்திரிகை மூலமாயும், துண்டுப்பிரசுரம், தர்க்கம் முதலிய விஷயங்களாலும் பெரும் முயற்சி யெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால், இக்கூட்டத்தார் மெய்யர்களோ அல்லது பொய்யர்களோ வென்பதை எனது சுன்னத்து ஜமாஅத்துகளுக்குத் தெரியப்படுத்தும்பொருட்டு இப்புத்தகமியற்றலானேன்.

இதை வாசிக்கும் சகோதரர்களே! இதை நன்கு கவனித்து சத்தியத்தைக் கைக்கொண்டு அசத்தியத்தைக் கண்டனஞ்செய்கிறதுடன் இவ்விஷயங்களுக்குத் தகுந்த உதவி செய்கிறது உங்கள் மீது கடமை யென்பதை மறவாமலிருக்கும்படியும் வேண்டிக்கொள்கிறேன்.

மீ. இ. முஹம்மது அப்துல்காதிர்,
மரைக்கார் பள்ளிவாசல் தெரு; தென்காசி.

بسم الله الرحمن الرحيم

# பொய் மஹ்திகளும், வழிகாட்டிகளும்.

முஸ்லிம்களே நமது நாயகமவர்களின் முன்னறிக்கைப்பிரகாரம அநேக கள்ள மஹ்திகளும், பொய் வழிகாட்டிகளும், வெளியாகி ஜனங்களைக் கெடுத்திருக்கிறார்கள். அவர்களில், ஒவ்வொருவரும் தங்களை வாக்களிக்கப்பட்ட மெய்யான மஹ்தி என்றும், வழிகாட்டி யென்றும் ருஜூப்படுத்துகிறதற்காக குர்ஆன் ஹதீஸுடைய அர்த்தங்களுக்கு கருத்துகளை மாற்றியமைத்துப் பொது ஜனங்களை ஏமாற்றி வந்தார்கள். தற்காலங்களிலும், மஹ்திகள், வழிகாட்டிகளின் மும்முரம் மிகவும் அதிகமாயிருந்துகொண்டிருக்கிறது.

ஆகவே, சென்றுபோன மஹ்திகளின் சரித்திரங்களையறிந்தால் இனிமேல் வரப்பட்ட மஹ்திகள், நபிகள் முதலியவர்களைப் பகுத்தறிகிறதில் உதவியாயிருக்குமென நினைத்து சில மஹ்திகளின் சரித்திரச் சுருக்கத்தை வரையலானேன்.

## (1) உபைதுல்லா மஹ்தி.

ஹிஜிரி 296-ம் வருஷம் இவர் நான்தான் வாக்குச்சொல்லப்பட்ட மஹ்தி யென்று தாவாச்செய்தார். இவர் ஆப்பிரிக்காவெல்லாம் சுற்றி விட்டு அதற்குப் பின் ஒரு புது மார்க்கத்தை உண்டுபண்ணினார்; இவரின் மாயவலைக்குள் பெருங்கூட்டம் சிக்கிக்கொண்டது. அதற்குமேல், திரிப்போலியின் பற்பல பாகங்களை ஜெயித்துக்கொண்டு மிஸ்ரையும் கைப்பற்றிக்கொண்டார். ஹிஜிரி 322—ம் வருஷம் மரணமாய்விட்டார். இவர் தன்னை மஹ்தி யென்று சொல்லிய காலங்கள் 24-வருஷங்களும் 1-மாதமும், 20-நாட்கள் மட்டுமே. (தாரீகு இபுனுல் அதீர் வால்யம் 8; பக்கம் 90 காணுதஜ்ஜால் பக்கம் 79.)

## (2) ஹசனிபு சபாகு.

இவர் ஒரு புது மார்க்கத்தை உண்டுபண்ணி இராக்கு, ஆஜர் பாய்ஜான், ஆப்பிரிக்கா முதலிய பாகங்களில் செலுத்தினர். தமக்கு இல்ஹாம் உண்டாகிறதாயும் தாவாச்செய்தார். ஒரு சமயம் இவர் கடல் வழியாய்ப் பிரயாணஞ்செய்யும்போது இவர் ஏறியிருந்த கப்பல் புயற்காற்றிலகப்பட்டு மூழ்கிப்போகுந்தருணமாயிருந்தது; அப்போது, அவர் முன்னறிக்கை செய்ததாவது:— இந்தக் கப்பல் மூழ்கிப் போகாதென ஆண்டவன் என்னிடத்தில் வாக்களித்திருக்கிறனென்பதே.

இவரின் முன்னறிக்கையும் அப்படியே நிறைவேறியது *. இன்னும் இவர் நான் இந்த உலகத்தைக் கைப்பற்றக்கூடியவனுயிருக்கிறேனென்று சொன்னதுமட்டுமல்ல; என்னுடைய உத்தரவு ஆண்டவனுடைய உத்தரவைப்போலென்றும், என்னை விட்டு விலகியவன் ஆண்டவனை விட்டு விலகியவனென்றும், சொல்லத்தொடங்கினர். ஆயிரக்கணக்கான ஜனங்கள் இவரைப் பின்பற்றினர்கள் ‡. இவர் தமது கூட்டத்தாருக்கு ஒரு சுவர்க்கமும் கட்டி வைத்தார் †. இவ்வகுப்பினருக்குப் பிதாயி கூட்டமென்று சொல்லப்படும். கடைசி இம்மார்க்கத்தின் மூலமாக இவர் இராஜாவாகவுமிருந்து 518-ம்வருஷம் மரணமாய்விட்டார். இவரின் இல்ஹாமாயிருந்த காலம் 35 வருஷமே. (காண தஜ்ஜால் பக்கம் 79.)

## (3) ஹாக்கிம் பஅம்ருல்லா.

மிஸ்ரில் இவர் முதலாவது நபி யென்பதாகத் தர்க்கம்செய்த பின்னர் அந்தப் பதவியிலிருந்து வளர்ந்தேறி ஆண்டவனென்றும் தாவாச் செய்தார்; இவர் தமது சிஷர்களுக்கு ஒரு தனி

---

* எங்கள் நபியுடைய முன்னறிக்கைகளில் சிலவை நடந்தேறி வருகின்றன வென்று வாதாடும் காதியானிகள் இதைச் சற்றுக் கவனிப்பார்களாக.

‡ மிர்ஸா சாஹிபும் இப்படியே சொல்லியிருக்கிறார்.

† மிர்ஸா சாஹிபும் தமது கூட்டத்தாருக்கு பிஹஷ்தீ மக்பரு அதாவது சொர்க்கலோக சமாதி ஒன்று உண்டுபண்ணி வைத்திருக்கிறார் அதைப்பற்றி பின்னால் விவரிக்கப்படும்.

வேதமியறறினர்; சிஷர்களைத் தமக்குச் சஜிதாச் செய்யச் செய்தார்; சாராயம் குடிக்கிறதையும், விபசாரம் செய்கிறதையும் ஆகுமாக்கிவிட்டார்; இவர் அநேக கனவுகளெல்லாம் கண்டிருக்கிறார்; இவ்வகுப்பாருக்கு அமீராஸ் கூட்டமென்று சொல்லப்படும். 25 வருஷம் வரை இத்தன்மையராய் வாழ்ந்து பிற்பாடு மரணமானார். (ஹஜஜாஜுல் காராமா தாரீகு காமில் இபுனு அதீர் வால்யம் 9. கஜுதஜ்ஜால் பக்கம் 80.)

## (4) முஹம்மது அலிபாபீ.

ஈரான் தேசத்தில் முஹம்மதுஷாக் காச்சார் என்பவர் 1250-ல், சிம்மாசனமேறினார். அப்போது இந்த முஹம்மது அலி என்பவர் ஒரு புது மார்க்கத்தை உண்டுபண்ணி நான்தான் வாக்குச்சொல்லப்பட்ட மஹ்தி என்னுடைய வார்த்தை (முஹ்ஜிஸா) அற்புதமான தென்றும் தாவாச்செய்தார்.

இன்னும், அவர் ஒரு புதுக் குர்ஆன் ஒன்று இயற்றி இது குர்ஆனுக்கு நிகரானதென்றும், குர்ஆனுடைய கட்டளைகளுக்குப் பதிலாக இதன் கட்டளைப்படியே நடக்கவேண்டுமென்றும், ஆக்ஞாபித்ததோடு தமக்கு இல்ஹாமும், வஹீயும்; உண்டாகிறதாயும் கூறலானார். இவர் மார்க்கத்தில் சாராயம் ஹலாலாகி விட்டது; ரமலான் நோன்பு 19 ஆகிவிட்டது; ஒரு ஸ்திரீ 9 புருஷர்கள் வரை விவாகஞ்செய்யலாமென உத்தரவு கொடுத்துவிட்டார். முதன் முதல் முஹம்மதலிபாபீ இம்மார்க்கத்தை உண்டுபண்ணினார். பின்னர், பஹாவுல்லா வென்பவர் அதை ஊர்ச்சிதப்படுத்தி நடத்திவந்தார். இவர், குர்ஆன் ஆண்டவனாலருளப்பட்டது என்றாலும், என்னை அது கட்டுப்படுத்தாது; என்னைப்பற்றி அநேக முன்னறிக்கைகள் குர்ஆனில் உண்டாயிருக்கின்றன வென்று சொன்னதுடன் தன்னை நபி யென்றும், ரஸூல் என்றும் சொல்லிக்கொண்டிருந்தார். இவரின் மாயா விநோத ஜாலங்களினால் ஹசன்கான் ஹாக்கிம் என்ற இராஜா இவரை ஒப்புக்கொண்டு விசுவாசித்துவிட்டார். இந்தக் கூட்டம், இஸ்தம்பூல், ஷாம், மிஸ்ரு, அமெரிக்கா, பம்பாய், இரங்கூன் முதலிய பாகங்களில் ஏராளமாகப் பெருகியிருக்கிறது. இவரின் கூட்டத்திற்கு பாபீ கூட்டமென்று சொல்லப்படும். இந்த

முஹம்மதலி என்பவர் 40 வருஷம் உயிரோடிருந்து மரணமாய் விட்டார். (காஜுதஜ்ஜால் பக்கம் 80. மதாஹிபே இஸ்லாம் சபர்நாமா ஹாபிஸ் அப்துர்ரஹ்மான் அம்ரத்ஷரீயிலும் விபரிக்கப்பட்டிருக்கிறது. முஹர்ரம் 3, அஹ்லஹதீது 1339.)

(5) முல்லாஷைகு தாஹிர் சைபுத்தீன்.

இவர் பம்பாயில் தோன்றி முஸ்லிம்களுக்குள் பெரிய ஒரு கலக்கத்தை உண்டுபண்ணிவிட்டார். இவர் சொன்னதாவது:—தறகாலம் நான்தான் முஸ்லிம்கள் எல்லோருக்கும் இமாமாயும், வழிகாட்டியாயுமிருக்கிறேன். என்னை மறுத்தவன் அல்லாஹ்வை மறுத்தவனுவான். மானிபச் சொத்துகளுக்கு நானே பாத்தியப்பட்டவன்; நான் நினைத்தபடி செய்யலாம்; பள்ளியைப் பூட்டிவிடவேண்டுமானாலும், எனக்கதிகாரம் உண்டு; தௌபாவுடைய வாசல் திறந்திருக்கிறது; பாவிகளெல்லாம் என் முன் வந்து பகிரங்கமாகத் தௌபாச் செய்யுங்களென்று சொல்லித் தௌபாச்செய்யச் செய்கிறார். இன்னும், மார்க்கக் கல்விகள் எனது உத்தரவில்லாமல் ஒருவருக்கும் கற்றுக்கொடுக்கக்கூடாது நமது விரோதிகளுக்கு சலாம் சொல்லக்கூடாது; அவர்களைப் பள்ளியில் வரவிடக்கூடாது; மானிபச் சொத்துக்களின் வரவு செலவு கணக்குகளை என்னிடம் கேட்க ஒருவருக்கும் அதிகாரமில்லையென்றும், அவர் தமது முரீதீன்களுக்கு உத்தரவளிக்கிறார். இன்னும், வட்டி வாங்கல் கொடுக்கல் ஆகும்; ஸ்திரீகளுக்கு பர்தா வேண்டிய தேவையில்லை; அந்நியர்களோடு தர்கா முதலியவிடங்களுக்குப் பிரயாணஞ்செய்யலாம்; சக்காத்து முதலை வாங்குவதற்கு நானே தகுதியுள்ளவனென்றும்; இன்னும், மேளதாளங்களடித்துக்கொண்டு தமது முரீதீன்களைத் தமக்கு சஜிதாவும் செய்யச் செய்கிறார். இவர், ஒரு புதுக் கிதாபு ஸௌநாறுல் ஹக்குல்முபீன் என்று எழுதி அதில் தமக்கு மாறானவர்களை காபிர், மல்ஊன், முர்த்தது என்றும் தீர்ப்புச் செய்திருக்கிறார்*.

---

* மிர்ஸா சாஹிபும் இப்படியே தம்மை ஒப்புக்கொள்ளாதவர்களை காபிர், முர்த்தத்து, மல்ஊன் அவர்கள் பின் தொழக்கூடாது என்று பத்துவாச் செய்திருக்கிறார். அவரின் உம்மத்துகளும் அப்படியே நடந்து வருகிறார்கள்.

ஆகவே, இவைகளைக் கண்ணுற்ற பம்பாய் முஸ்லிம்களும் மற்றும் பற்பல பாகங்களிலுமுள்ள முஸ்லிம்களும் உலமாக்களிடத்தில் இவைகளைத் தெரியப்படுத்திக் கண்டன பத்துவா வாங்கிப் பிரஸ்தாபித்திருக்கிறார்கள் அவர் இதுவரை உயிரோடிருக்கிறார். (உஸ்வயேஹஸனா 42-ம் நிர். 6—வது வால்யூம். 1919 மார்சசு டில்லி வக்கீல் அமரத்சர் 10, 14 நவம்பர் 1917.)

இன்னமும் இம்மாதிரியான மஹ்திகளும், நபிகளும் உண்டாகி ஜனங்களைக் கெடுத்ததையும், அவர்களின் சரித்திரங்களையும், இது சம்பந்தமான கிதாபுகளில் பார்வையிடவும் இவ்விடத்தில் மாதிரிக்காக சிலர் சரித்திரங்களை மட்டும் யெழுதி நிறுத்தப்பட்டது.

முஸ்லிம்களே! மேலெழுதப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் நான்தான் அந்த வாக்குச்சொல்லப்பட்ட மஹ்தி. மஸீஹ், எங்களைத்தவிர வேறில்லையென்று ஏமாற்றி வழி கெடுத்ததும், பிந்தின மஹ்திகள் முந்தின மஹ்திகளைப் பொய்யாக்கி இருப்பதையும் பார்க்க நாயகமவர்களால் நமக்கு முன்னெச்சரிக்கையாய்ச் சொல்லப்பட்ட தஜ்ஜால்களிவர்கள்தானென்பது எள்ளளவேனும் சந்தேகமில்லாமல் தெரியவருகிறது†. அன்றியும், இவர்களின் கனவுகளும், முன்னறிக்கைகளும் சிற்சில சமயங்களில் நடந்தேறிவிடுகின்றன. இவர்கள், ஜனங்களை வசப்படுத்த சிற்சில மார்க்கச் சட்டங்களை சமயோஜிதப்படி திருத்தியமைக்கிறதோடு தம் மனம்போல் கருத்துகளையும், மாற்றத் துணிகின்றனர். ஆகவே, தங்களின் உலக அபேட்சைகளை நிறைவேற்ற முஸ்லிம்களைப் பற்பல கூட்டங்களாக வகுத்துப் பங்கப்படுத்திவிட்டனர்.

இஃதிவ்வாறாக இந்த ஹிஜ்ரி 14-ம் நூற்றாண்டிலும் மஹ்திகளின் ஆதிக்கம் அதிகமாயிருக்கிறது. அதாவது, இதற்கு முன்னுள்ள தாவாக்காரர்களெல்லாம் மஹ்தி வேறே மஸீஹ் (ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம்) வேறே யென்று வாதாடி வந்தார்கள். இந்த 14-ம் நூற்றாண்டில் ஒருவர் மஹ்தியும் நான்

† மிர்ஸாயி மார்க்கத்தார்கள் தங்கள் நபிதான் கடைசியானவரும், இமாமாயுமிருக்கிறார் யென்று வாதித்து வந்தார்கள். இப்போது, தற்காலத்து இமாம் தோன்றிவிட்டார்; இனி மேற்காலத்து இமாம் எத்தனையோ தோன்றப்போகிறார்களோ கடவுளுக்கே வெளிச்சம்.

தான், வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹும் நான்தான், கிருஷ்ண னும் நானே, முஜத்தித இமாமும் நானே, என்னை நம்பாதோர் காபிர்; அவர்களுக்கு மோக்ஷமுமில்லையென வாதாடி யிருக்கிறார் அவர் வசமாயும் சில ஜனங்கள் சேர்ந்து அந்த மதத்தை வர்ஜி தப்படுத்தப் பத்திரிகை, துண்டுக் காயிதம், புஸ்தகம், தர்க்கம் முதலியவைகளைக்கொண்டு அரும்பிரயாசையெடுத்துக்கொண்டி ருக்கிறார்கள். அவர்தான், **மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிபு காதியானி** யென்பவர். இப்போது, இவரின் சரித்திரத்தை ஆராய ஜனங்களுக்கு ஆவலிருக்குமாதலினால் அதைச் சுருக்க மாய் எழுதித் தெரியப்படுத்திவிட்டு அதன் பின் இவரின் மார்க் கம் மெய்யானதோ அல்லது முன்னோர்களைப்போல இவரும் ஒருவர்தானோ என்ற விஷயத்தை ஆராய்ச்சி செய்வோம்.

மிர்ஸா சாஹிபின் சரித்திரம் இரு பாகமாய்ப் பிரிக்கப்பட் டிருக்கிறது. முதல் பாகம் நபி யென்றும், மஹ்தி யென்றும், வாதாடினதற்கு முந்தினதும்; இரண்டாம் பாகம் நபி, மஹ்தி யென்று தர்க்கித்ததற்குப் பிந்தினதுமாம். இந்த இரண்டு பாகங்களிலும் பேர் வித்தியாசமும், முதற் பாகத்தில் அவர் மிகவும் நல்லவராயும், பிறமதஸ்தர்களோடு போராடி இஸ்லாம் மார்க்கத்திற்கு உழைக்கிறவராயுமிருந்ததினால் பொதுவாக உல மாக்களடங்கலும் அவரைப் போற்றி அவருக்குச் சாதகமா யிருந்தார்கள்.

இரண்டாம் பாகத்தில் அவர் தன்னை மஹ்தி யென்றும், மஸீஹ் யென்றும் வாதாட ஆரம்பித்ததையும், அவரின் நடத்தை களையும், பார்த்த உலமாக்கள் பொதுவாக முஸ்லிம்களடங்கலும் அவரை வெறுத்து கண்டனஞ்செய்து இஸ்லா மார்க்கத்திற்குப் பகைஞனாக மதிக்க ஆரம்பித்தனர். ஆகவே, இவரின் இருபாக மான சரித்திரங்களைச் சுருக்கமா யெழுதலானேன்.

## மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிபு காதியானி:

இஸ்லாத்துல் அவ்ஹாம் என்ற கிதாபில் இவர் தமது குடும் பத்தைப்பற்றி விளக்கியிருக்கிறார்; அதன் சுருக்கமாவது:—

சகுத்தாயி வம்சத்தாரின் இராஜாவாகிய பாபர் பாதுஷா வுடைய காலத்தில் எனது முன்னோர்கள் சமர்கந்து தேசத்தில்

ஒரு பெரிய கூட்டத்தைத் திரட்டிக்கொண்டு டில்லி வந்து சேர்ந்தார்கள்; சிற்சில பூமிகளை இவர்களுக்கு மானியமாக அளிக்கப்பட்டது. இவர்கள் அங்கே பெரிய ஒரு கோட்டையென்று கட்டி ஆயிரம் பட்டாளங்களோடு வசித்துவந்தார்கள். சகுத்தாயி இராஜாங்கம் க்ஷீண நிலையடையவே இவர்கள் பெரிய ஒரு தேசத்தைக் கைவசப்படுத்தி பீரங்கி முதலியவைகளை யெல்லாம் சேகரித்துக்கொண்டு தனியாசாய்விட்டனர். எனது தாதாவின் தகப்பனாகிய மிர்ஸா குலே முஹம்மது சாஹிபு சீக்கியர்களோடு கடுமையான போராட்டஞ்செய்து அவரது வீரத்தனத்தில் ஆயிரம் சீக்கியர்களை முறியடித்தனர் இவர், இவ்வாறு விளங்கியும் ஓர் விஸ்தீரணமான தேசத்தை ஜெயித்து முஸ்லிம் இராஜ்யமாகச் செய்யாமற்போனது முஸ்லிம்களின் துரதிஷ்டமே.

பின்னர், இவரின் குமாரராகிய மிர்ஸா அதாமுஹம்மது சாஹிபுடைய காலத்தில் காதியானும் அதைச் சேர்ந்த சில பூமிகளையுந்தவிர மற்றவையெல்லாம் இவர்களை விட்டு நீங்கிவிட்டன. கடைசியாக, சீக்கியர்களின் அக்கிரமத்தினால் இவர்கள் வசித்துவந்த காதியான் கிராமத்தையும் துறந்தனர்; கொஞ்சக் காலத்திற்குப்பின்பு எனது தந்தை மிர்ஸா குலாம் முர்த்தஸா சாஹிபு திரும்பவும் காதியான் வந்து சேர்ந்தார். அப்போது, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிலிருந்து அவருக்கு காதியானும், வேறு மூன்று பூமிகளும் முன்னோர்களின் பாகத்திற்காகச் சன்மானித்தனர். இவருக்கு கவர்னர் சமுகத்தில் மிகவும் மதிப்பு உண்டாயிருந்தது இவ்விதமாக எனது குடும்பம் முன் இராஜாக்கள் காலத்திலிருந்தே மதிப்புபெற்றதாயிருந்து வருகிறதென்று யெழுதியிருக்கிறார்*. (இஸாலத்துல் அவ்ஹாம்) இபாதத்துல் அவ்ஹாம் ப (6) (இஸாலா 942 முதல் 946 வரை.)

---

* இவ்விஷயங்களால் மிர்ஸா சாஹிபுடைய குடும்பம் இராஜ குடும்பமாயும் ஒரு தலைமுறை வரை இராஜாங்கமிருந்து இப்போதுதான் கையைவிட்டுப் போயிருப்பதாயும் அவரின் கிதாபினால் தெரியவருகிறது; இப்பேற்பட்ட இராஜாங்கத்தைத் திரும்ப எவ்விதத்தினாலாவது பெற்றுக் கொள்ளவேண்டுமென்ற எண்ணம் பொதுவாக மனிதர்களுக்கு ஏற்படுகிறது வழக்கம். அதற்காகவே, இவரும் ஒரு புது இராஜாங்கத்தினுடைய அஸ்திவாரக்கல் நாட்டினார். நேயர்களே! நமது நாயகமவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றி இராஜாக்களுக்கு நிருபம் அனுப்புமபோது

பஞ்காப் மகாணத்தைச் சேர்ந்த குர்தாஸ்பூர் என்ற ஜில்லாவில் பாட்டியாலா என்று ஒரு கஸ்பா இருக்கிறது; அதிலிருந்து பதினொருமைல் தூரத்தில் காதியான் கிராமமிருக்கிறது; மிர்ஸா சாஹிபின் தந்தை ஹக்கீம் மிர்ஸா குலாம் முர்த்தஸா அங்கே வசித்துக்கொண்டிருந்தார்; 1261-ம் ஹிஜ்ரிக்குச் சரியாக கி.பி. 1845-ம் வருஷம் மிர்ஸா சாஹிபு பிறந்தார்†; இவர் தந்தை ஜமீந்தார் குடும்பமாயிருந்து வைத்தியத் தொழில் செய்து கொண்டிருந்தார். மிர்ஸா சாஹிபு ஆரம்பத்தில் ஷியாவகுப்பைச் சேர்ந்த மௌல்வி (குலேஷாஹ்) என்பவரிடத்தில் பாட்டியாலாவில் போய்க் கலவி பயின்றார். உர்து, பார்ஸி, அரபியில் ஓரளவு தேர்ச்சியடைந்தார். ஆனால், ஆங்கிலம் படித்ததாகத் தெரியவில்லை. வாலிபமானவுடன் பிழைப்புக்காக சியால்கோட்டு என்ற தேசத்தின கச்சேரியில் மாதம் பதினைந்து ரூபாய் சம்பளமாக கிளர்க்கு வேலையில் அமர்ந்தார். பின்னர், அதிலிருந்து

அதிலொன்று ரூம் தேசத்து இராஜாவாகிய ஹிரக்லீஸுக்கும் அனுப்பினார்கள். அந்நிருபம், ஹிரக்லீஸுக்குச் சேர்ந்த உடன் அவர் நாயகமவர்களுடைய சரித்திரத்தை விஜாரிக்க ஆசைகொண்டு அவிடத்தில் வியாபாரத்திற்காக வந்திருந்த அபூசுபியான் ரலியல்லாஹு அன்ஹு முதலியோர்களை வருத்தி நாயகமவர்களின் சரித்திரங்களைப்பற்றி விஜாரித்தார். அதிலொரு கேள்வியாவது:- அந்த முஹம்மதுடைய குடும்பத்தில் இராஜாக்களுண்டாயிருக்கிறார்களா? அதற்கு அபூசுபியான் (ரலி) இல்லையென்றார். இராஜா சொன்னார் அப்படியானால் அவர் நபி யென்பதை நான் உண்மையாய் விசுவாசிக்கிறேன். ஏனெனில், அவரின் முன்னோர்களில் இராஜாங்கமுண்டாயிருந்து அது இப்போது இழந்துபோனால் அதைக்கைப்பற்றுகிறதற்காக இவர் இவ்வித உபாயம் செய்கிறாரென நம்பலாம்; அப்படி இல்லாததால் நான் இவரை நபி யென்று பூரணமாய் நம்புகிறேனென்று சொன்னார். இவ்விஷயம், புகாரிஷரீபில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே, மிர்ஸாசாஹிபும் தமது முன்னோர்களின் இராஜாங்க சுதந்திரத்தைப் பெறுகிறதற்கு நாட்டங்கொண்டார். எனினும்; உலக இராஜாங்கத்தைப் பெறுகிறது சாத்தியப்படாதெனத் தெரிந்ததினால் மத விஷயமாக ஒரு புது இராஜாங்கத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டினாரென்பது கவனிக்கத்தக்கது.

† மிர்ஸா சாஹிபு தமது தரியாக் குல்குலூப் என்ற கிதாபின் 68-ம் பக்கத்தில் இப்படியே யெழுதியிருக்கிறார். (தாரீகே மிர்ஸா)

உயர்தர வேலைக்காகப் படித்துப் பரீக்ஷைக்குப்போனதில் தவறி விட்டார். ஆதலால் மனம் வருந்தி வேலையை விட்டு விட்டு அமரத்சர் தேசத்திற்கு வந்து மௌலவி அப்துல்லா சாஹிபு கஸ்னவி என்ற பெரியோரிடத்தில் ஜனங்களை வசியப்படுத்துகிறதற்காக (வஸீபா) மந்திரம் ஏதாவது சொல்லித்தரவேண்டுமென்று கேட்டார். அதற்கு அவர்கள் என்ன பதில் சொன்னார்களோ தெரியவில்லை; அச்சமயம் கிறிஸ்தவ பாதிரிகள், ஆரியர், பிரம்ம சமாஜத்தார் முதலியோர்களின் மத தர்க்கம் மிகவும் மும்முரமாய் நடைபெற்று வந்தது. விசேஷமாக இஸ்லாமதத்தைப் பங்கப்படுத்திப் பொய்யாக்கிவிடவேண்டுமென்று ஒவ்வொரு மதஸ்தரும் தர்க்கிக்கவும், நோட்டீஸ்கள், புஸ்தகங்கள் இயற்றவுமாயிருந்தார்கள்.

மீர்ஸா சாஹிபுக்கு ஒரு விதமான எண்ணம் தோன்றி இந்தப்பக்கம் திரும்ப ஆரம்பித்துவிட்டார். இவர் சில சமயம் ஆரியர்களோடும், சில சமயம் கிறிஸ்தவர்களோடும், சில சமயம் பிரம்மசமாஜத்தாரோடும் எதிர்த்து வாதாடித் துண்டுப்பிரசுரங்கள் வெளிப்படுத்தலாயினர். அவைகளில் நின்றும் சிற்சில பிரசுரங்களின் சாராம்சத்தை இவடம் சுருக்கித்தருகிறேன்.

( விளம்பரம். )

**500 ரூபாய் வெகுமதி.**

இந்த நோட்டீஸ் கொடுக்கிறதற்குக் காரணமாவது.

7—12—1877 வக்கீல் ஹிந்துஸ்தானென்ற பத்திரிகையில் படித்துத் தெறிய ஆரியர்களில் சிலர் ஆத்துமாவென்னும் ரூஹைப்பற்றித் தங்கள் கொள்கைகளை வெளியிட்டிருந்தனர். அதாவது, ஆன்மாக்கள் அந்தமில்லாததாயும், பரமேஸ்வரனுக்குக்கூட எண்ணத்தொலையாத அவ்வளவு அதிகமாயிருக்கின்றனவென்றும், எப்போதும் முக்தி பெற்றுக்கொண்டிருக்கின்றன ஒருபோதும் முடிவடைய மாட்டாதென்றும் எழுதி யிருந்தனர். நான் பிப்ரவரி 9-உ யிலிருந்து மார்ச்சு 9-உ வரை சபீரெ ஹிந்து பத்திரிகையில் தகுந்த மறுப்பு யெழுதி ஆரியர்களின் இக்கொள்கைகள் தவறென்பதை நன்கு விளக்கிக் காட்டிவிட்டேன். இப்போது, இந்த விளம்பரத்தில் அமரத்சர் ஆரியசமாஜ் செக்

ரட்டேரி பாவா நாராயணசிங்கு சாஹிபுடைய மறுப்புக்கும் தகுந்த மறுப்பும் யெழுதியிருக்கிறேன். ஆதலால், எந்த ஆரியராவது தங்கள் கொள்கைகளைப் பின்பற்றி நான் யெழுதியிருக்கிற மறுப்புகளுக்குத் தகுந்தபடி பதிலெழுதி எனது மறுப்புகளைக் கண்டனஞ்செய்து ஆன்மாக்கள் அந்தமில்லாததென்றும் பரமேஸ்வரனுக்குக்கூட அதன் எண்ணிக்கை தெரியாதென்றும், ருஜூப்படுத்திவிட்டால் அவர்களுக்கு நான் (500) ஐநூறு ரூபா வெகுமதியளிப்பேன். அப்படிக் கொடுக்கத் தாமதித்தால் சர்க்கார் மூலமாக வசூல் செய்யப்படும். ஆயினும், ஆரியசமாஜிகளில் நின்றும் எவர்களாவது தங்களது கொள்கைகளைப் பின்பற்றி மறுப்பெழுதாவிட்டால் பின்னர் தங்களுடைய கொள்கை என்னவென்பதை நன்கு துலக்கிக் காட்டிவிடவேண்டும். இந்த விஷயத்திற்காகவே இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது.

மிர்ஸா குலாம் அஹ்மது, ரயீஸ் காதியான்.
2—3—1878.

### ஆரியசமாஜ் ஸ்தாபகராகிய, தியானந்த சுவாமிக்கு ஓர் நோட்டீஸ்.

நாம் ஆரியசமாஜிகளின் கொள்கையாகிய புனர் ஜென்மம் ஆத்துமாக்கள் அந்தமில்லாதது, உலகம் பூர்வீகம் என்ற இந்த விஷயங்களைத் தக்கவிதமாக மறுத்து ருஜூப்படுத்தியிருந்தோம். அதற்குப் பதிலாக தியானந்த சுவாமி மூவர் மூலமாகத் தூது அனுப்பியிருக்கிறார். அதாவது, ஆத்மாக்கள் உண்மையில் அந்தமில்லாததல்ல; எல்லா ஆத்மாக்களும் முக்தி பெற்றுவிட்டபொழுது அவசியப்பட்டால் மோக்ஷத்தைவிட்டும் வெளியேற்றப்படுகின்றன. இவ்விதமாக புனர் ஜென்மம் எப்போதும் நடந்துகொண்டுவருகிறது. இந்த விஷயத்தில் சந்தேகமிருக்கும் பக்ஷம் நேர் நேராகத் தர்க்கஞ் செய்துகொள்ளலாமென்றும், இன்னும் நேர் நேராகத் தர்க்கிக்கிறதில் தமது விருப்பத்தையும் காட்டுகிறார். ஆதலால், நமக்கும் அப்படி நேர் நேராகப் பேசுகிறதைப்பற்றி மிகவும் சந்தோஷமே. சுவாமி சாகிபு பொதுவான ஓர் இடத்தைத் தயார் செய்துகொண்டு ஒரு பிரசித்திபெற்ற பத்திரிகை மூலமாய்க் குறிப்பிட்ட இடம், தேதிகளைத் தெரியப்

படுத்தவேண்டும்; இச்சபை நல்ல யோக்கியதையும் அறிவு முடைய மூன்று பிரம்மசமாஜிகள், மூன்று கிறிஸ்தவர்களின் மத்தியஸ்தத்தின்மேரில் நடைபெறவேண்டும். முதன் முதல் நமது பிரசங்கம் நடக்கும்; பின்னர் சுவாமிஜீ நாகரீகமாக அதற்குப் பதில் பிரசங்கம செய்யவேணடும். பின்னர், அதற்குப் பதில் நான் பிரசங்கம் செய்வேன்; இதோடு பிரசங்கவாதம் முடிவுபெறும். ஆகையால், இவ்விதமாக வாதஞ் செய்கிறதற்கு சுவாமிஜீ சம்மதியாமல் புகல் சொல்கிறதாயிருந்தால் சுவாமிஜீ வெறும் பேச்சாகப் பேசிப் பேசி தன்னைத் துயர்ந்தவர்களை திருப்தி செய்துகொண்டிருக்கிறாரென்று எண்ணவேண்டியதா யிருக்கிறது. இதை வாசிக்கிறவர்கள் இதைப் பார்த்து நியாயத் தீர்ப்புச் செய்யுங்கள்.

மிர்ஸா குலாம் ரயிஸ் காதியானி. 10 ஜுன் 1878.

## இதைச் சுருக்கமாய் யெழுதப்பட்டது.

இவ்வண்ணம் பிறமதஸ்தர்களோடு போராடி தர்க்கஞ்செய் கிறதையும், விளம்பரம், நோட்டீஸ்கள் பிரசுரிக்கிறதையும் முழு மனதோடு இது விஷயங்களிலே கவனத்தைச் செலுத்தி இஸ்லா மார்க்கத்திற்காக உழைத்துக்கொண்டிருக்கிறதையும் பார்த்த எந்த முஸ்லிமுடைய மனம்தான் இவர்பக்கம் சாராமலிருக்கும்.

இவர் போராடுகிறது எங்கும் பிரஸ்தாபமாய்விட்டபொழுது முஸ்லிம்களெல்லாம் இவரை மத போதகரென்றும், இஸ்லாமத ஊழியரென்றும் பூரணமாய் நம்பிவிட்டனர். இதன் பின்னர் இவர் (பராஹீனெ அஹ்மதியயா) வென்று ஓர் கிதாபு இயற்றி அதில் பிறமதஸ்தர்களின் சகல ஆக்ஷேபங்களையும் அடியோடு அழித்து இஸ்லா மத சத்தியத்தை வெளியிடப்போகிறதாகவும் அதற்கு முஸ்லிம்கள் பண உதவி செய்யவேண்டுமென்றும் ஓர் விளம்பரம் கொடுக்க ஆரம்பித்தனர். அதை இங்கு சுருக்கித் தருகிறேன்.

## இஸ்லா மதத்திற்கு உதவி செய்ய முஸ்லிம்களுக்கு ஓர் வேண்டுகோள்.

முஸ்லிம்களே! இஸ்லா மார்க்கத்தின் வேதமாகிய குர்ஆ-னின் உண்மையான மஹத்துவத்தைப்பற்றி நான் ஒரு கிதாபு

இயற்றியிருக்கிறேன். அதைப் பார்த்த எந்த நீதிமானும் இஸ்லாமார்க்கத்தை ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது. அதை எதிர்க்கவும் தைரியமுண்டாகாது. அந்த கிதாபுடன் ஒரு நோட்டீசும் கொடுக்கப்படும். அதாவது,

யாராவது இந்த கிதாபின் ஆதாரங்களை மறுத்து அதற்கு எதிராக அவ்வளவு ஆதாரங்களைக்கொண்டு அல்லது பேர்பாதி அல்லது மூன்றிலொருபங்கு, நாலிலொரு பங்கு அல்லது ஐந்திலொரு பங்கு ஆதாரங்களைக்கொண்டு தங்கள் வேதம் உண்மையானதென்றும், தங்கள் மதம் சத்தியமானதென்றும், ருஜூப்படுத்தி இருவர் மதத்திலும் சேராத நடுநிலைமையுடைய மூன்று நீதிமான்கள் ஞாயமான பதில்தானென்று ஒப்புக்கொண்டுவிட்டால் நான் பதினாயிரம் ரூபாய் அவர்களுக்கு கொடுத்துவிடுகிறேன். இதில சந்தேகம் இருக்கும்பக்ஷம் எனது அசையும் பொருள் அசையாப் பொருள் முதலிய ஐவேசுகளை வந்து பார்த்துக்கொண்டு என்னிடத்தில் இந்தப்படி யெழுதி ரிஜிஸ்டர் செய்து கொள்ளட்டும் என்பதே.

நான் இந்த கிதாபை இயற்ற தியானந்த சுவாமி பண்டிதரும், அவரின் சிஷ்யருமே காரணமாயிருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய மார்க்கத்திற்கு ஆரியசமாஜம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். தங்கள் வேதத்தைத் தவிர ஹஸ்ரத்து மூசா, ஹஸ்ரத்து ஈசா, மஸீஹ், ஹஸ்ரத்து முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் வர்களைப் பொய்யாக்குகிறார்கள். தௌராத்து, இஞ்சீல், சபூர், புர்க்கான் முதலிய வேதங்களைக் கட்டுரைகளென்றும், அந்தப்பரிசுத்தமான தீர்க்கதரிசிகள் பேரில் இழிச்சொற்களை உபயோகப்படுத்தியும் வருகிறார்கள். அதை நம்மால் கேட்க முடியவில்லை‡. ஆகையால், இந்தக்கிதாபிலே பிறமதஸ்தர்களின் சகல ஆக்ஷேபங்களையும் முடிவாகத் தீர்த்துவிட்டதுடன் முன்னூறு நிகரற்ற அத்தாக்ஷிகளைக்கொண்டு குர்ஆன்ஷரீபுடைய

‡ இதை வாசிக்கும் நண்பர்களே! நபிமார்களை இழிச் சொற்களைக் கொண்டு தூஷணிக்கிறதை நம்மால் கேட்க முடியாதென்ற மிகவும் பரிதாபமாய்ச் சொன்ன இந்த மிர்ஸா சாஹிபு வேதியானந்தசுவாமியைக்காண ஒரு பங்கு அதிகமாய் நபிமார்களை இழிவுப்படுத்தியிருக்கிறார். அஞ்சாமே ஆத்தம் அநுபந்தம் 3 முதல் 7 பக்கம் வரை பார்க்க பின்னால் இதை நன்கு விளக்கப்படும்.

உண்மையையும், மகிமையையும் நன்கு துலக்கிவிட்டேன் இந்தக் கிதாபின் ஒரு பாகம் பதினைந்து பிரிவாக எழுதினேன்; அப்பால், சகல அவசியமான விஷயங்களை யெல்லாம் சேர்த்து ஒன்பது பாகம் அதிகப்படுத்திவிட்டேன்; ஆகப் பத்து பாகமும், நூற்றி ஐம்பது பிரிவாகிறது. இந்தப் பத்து பாகத்தில் ஒரு பாகத்தை ஆயிரம் புஸ்தகமாக அச்சடிக்கிறதாயிருந்தால் (94) ரூபாய் செலவாகிறது. பத்து பாகத்தையும் அச்சடிக்கிறதாயிருந்தால் (940) ரூபாய் செலவாகும் இவ்விதமான பெரிய கிதாபை இத்தனை அதிக ரூபாய் செலவு செய்து அச்சடிக்கிறது முஸ்லிம்களுடைய உதவியின்றி மிகவும் பிரயாசையே. இதில் கிடைக்கிற நன்மை ஒரு சாதாரண முஸ்லிமுக்குக்கூடத் தெரியாததல்ல.

ஆகையால், இந்த நன்மைக் காரியத்தில் எல்லோரும் சேர்ந்து உதவிபுரியவேண்டும். சீமான்கள் ஒரு நாள் ஆகாரத்திற்குச் செலவாகும் ரூபாயை அனுப்பினால் மிகவும் இலகுவாக புத்தகம் அச்சாகிவிடும். அல்லது ஒவ்வொருவரும் கிதாபை விலை கொள்ளுகிறதாகத் தீர்மானித்து ஐந்தைந்து ரூபாயை முன்னதாகவே அனுப்பிவிட்டால் இலகுவாக அச்சடித்துப் பின்னால் அவர்களுக்குக் கிதாபுகள் அனுப்பிவிடலாம். இந்தக்கிதாபுக்குப் பெயராகிறது (அல்பராஹீனுல் அஹ்மதிய்யா அலா ஹக்கிய்யத்தி கிதாபுல்லாஹில் குர்ஆன் வன்நுபுவ்வத்தில் முஹம்மதிய்யா) வென்று வைக்கப்பட்டிருக்கிறது ஆகையால், இறைவனுக்கு உதவிபுரிகிறவர்களாக இம் முக்கியமான காரியத்தை முடிவு செய்வீர்களாக.

(குலாம் அஹ்மது காதியான் ஜில்லா குர்தாஸ்பூர் பஞ்சாப்.)

முஸ்லிம்களே! இவ்வித உதாரத்துவமானதும், அருமையான அத்தாக்ஷிகளையுடையதுமான இந்தக் கிதாபுக்கு யார்தான் உதவி செய்யப் பின்வாங்குவார்கள்? அன்றியும் யாராவது ஒழுங்குப்படி இதற்கு ஜவாபு யெழுதி மறுத்துவிட்டால் எனது சொந்த ஆஸ்தியிலிருந்து 10,000 ரூ. அவர்களுக்கு இனாமாய் அளிப்பேன் என்ற இந்த விஷயத்தைக் கண்ணுற்றதும் இவர் எல்லா முஸ்லிம்கள் பேரிலும் ஏற்பட்ட கடமையைத் தானாகச் செய்ய முன் வந்துவிட்டாரென்று முஸ்லிம்கள் பூரணமாய் நம்பி

விட்டார்கள். இவருடைய கிதாபைப்பற்றி பொது ஜனங்களில் நல்லெண்ணம் உண்டாகி இவர் கிதாபுக்கு நிகராக ஒருவரும் எழுதவுமாட்டார்கள். இவ்வளவு வெகுமதிகள் ஏற்படப்போகிறதுமில்லை என்று எங்கும் பிரபல்யமாய்விட்டது.

ஆகவே, முஸ்லிம்களில் பெரும்பாலோரும் இதற்கு உதவி செய்ய முயன்றார்கள். தனவந்தர்களோ தங்கள் சக்திக்குத் தகுந்தபடி பண உதவி செய்தார்கள்; சிலர் வாங்குகிறவர்களாகத் தீர்மானித்து முன்னதாகவே பண உதவி செய்தார்கள்*. இவ்வண்ணம் பொது ஜனங்கள் அவரவர்களாலியன்ற வரைபண உதவி செய்துவிட்டு அப்பால் அந்த அருமையான கிதாபை எதிர்பார்க்கலாயினர்

முஸ்லிம்களெல்லாம் ஆவலாக எதிர் பார்த்துக்கொண்டிருந்த இம்மஹத்துவம் பெற்ற கிதாபு சொற்ப காலத்தில் அச்சாகி வெளியாய்விட்டதைக் கேள்வியுற்ற முஸ்லிம்களில சிலர் 25 ரூபாய் வரை கிரையம் கொடுத்து வாங்கலாயினர்.

விசேஷமான விளம்பரத்தினுடைய இந்த மஹத்துவமான கிதாபாகிறது வெளியானதின் பின் பார்க்கும்போது பெரிய ஏமாற்றத்தையுண்டுபண்ணிவிட்டது. பெரிய எழுத்தால் விளம்பரங்களும் தமது இல்ஹாம் முகாஷபாத்துக் (தனக்கு வெளியான உதிப்பு) களும் ஜனங்களை வசியம் பண்ணக்கூடிய சில தலீல்களும் எழுதப்பட்டிருந்தன. விளம்பரத்தில் கண்டபடி முந்நூறு அத்தாக்ஷிகளும் நூற்று ஐம்பது பிரிவுகளையும் காணோம் அன்றியும் முன்னதாகப் பணம் அனுப்பினவர்களில் பெரும்பாலோருக்குக் கிதாபு அனுப்பவுமில்லை.

இவ்விதம் கிதாபு அச்சாகியும் முன்னுதவி செய்தோர்களுக்குக் கிதாபு கிடையாததால் கடிதம் பத்திரிகைகள் மூலமாக மிர்ஸா சாஹிபின்பேரில் தாவாச்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

---

* பாட்டியாலா ஸ்டேட்டின் பெரிய மந்திரியாகிய கலீபா செய்யிது முஹம்மது ஹஸன் சாஹிபு தன் சொந்தத்திலிருந்து 500 ரூபாயும் ஜனங்களிடத்தில் 75 ரூபாயுமாக வசூல் செய்து அனுப்பியிருக்கிறார். மிர்ஸா சாஹிபுடைய ஹக்கீக்கத்துல்வஹீ என்ற கிதாபில் இதைப்பற்றி யெழுதப்பட்டிருக்கிறது. (காஹுதஜ்ஜால் 39 ப.)

பிரபல்யமான கீர்த்தியையுடைய மிர்ஸா சாஹிபுக்கு இவ்விதம் தாவாச் செய்கிறது இழிவையுண்டுபண்ணக்கூடியதாயிருந்தபடியால் அதைச் சமர்த்தாக நிவர்த்திக்கத் தமது (அல்பதர்) என்ற பத்திரிகையில் ஜவாபு யெழுத ஆரம்பித்தனர். அதாவது இந்தத் தாமதத்தின்பேரில ஆக்ஷேபம் செய்கிறது வீண். குர்ஆன்ஷரீபு அல்லாவுடைய வாக்காகயிருந்தும் 23-வருஷத்தில் இறங்கினது. அல்லாஹுத்தஆலா சில காரணங்களால் அந்த நமது கிதாபை நிறப்பமாக்குகிறதில் தாமதமாக்கிவிட்டால் இதில் என்ன கெடுதல்? விலை கொள்ளுகிறவர்களாகத் தீர்மானித்து முன்னதாகவே ரூபாய் அனுப்பியிருக்கிறோமென எண்ணுதல் மடத்தனமும் அறிவீனமுமாயிருக்கிறது. ஏனெனில், இந்தக்கிதாபுடைய அநேக பாகங்களைச் சிலருக்கு இனாமாயும், சிலருக்கு 5 ரூபாய் விலைக்கும், சிலருக்கு 8 அணா விலைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன்பேரில ஆக்ஷேபிக்கிறது முழுதும் அற்பத்தனமாயும், மடத்தனமாயுமிருக்கிறது. அவ்வண்ணமிருந்தும் நாம்சில அறிவீனர்களுடையவீணைகூக்குரல்களை கவனித்து இரண்டாம் விடுத்தம் நோட்டீஸ் கொடுத்தோம் அதாவது எவர்கள் அந்தக்கிதாபின் கிரையத்தை திரும்ப வாங்க நாடுகிறார்களோ அவர்கள் நமது கிதாபை நம்மிடம் அனுப்பிவிட்டு ரூபாயைப் பெற்றுக்கொள்ளட்டும். இவ்விதமான அந்ஞானர்களெல்லாம் கிதாபையனுப்பி ரூபாயைப் பெற்றுக்கொள்வார்கள். சிலர் கிதாபுகளை தாறுமாறாக்கி அனுப்பியிருந்தும் நாம் ரூபாயை அனுப்பிவிட்டோம். பத்து ரூபாயும், 25 ரூபாயுமாக வாங்கினவர்கள் மிகவும் சுருக்கமே. இவ்வாறான அற்பர்களின் தொகையைத் திருப்பியனுப்பவும் தயாராயிருக்கிறோம் என்பதே. (அல்பதர் 9. ஆகஸ்டு 1906) (காணுதஜ்ஜால் 33 ப.)

முஸ்லிம்களே! முன்னதாகப் பணங்கொடுத்துதவிய முஸ்லிம்கள் எங்களுக்குக்கிதாபுகள் கிடைக்கவில்லையென்று ஆக்ஷேபித்ததற்கு பொறுமை சொல்லித் தாமதத்தின் காரணங்களைத் தெரியப்படுத்தி மன்னிப்பு கேட்கவேண்டியதிருக்க அவர்களைத் தூஷணித்து இழிச்சொற்களைக்கொண்டு நிந்திக்கிறதைக் கவனியுங்கள் இவ்வித இழிச்சொற்களைக் கையாடுகிறதையும், தமது கிதாபில் ஹஸ்ரத்து ஹுசைன் ரலியல்லாகு அன்ஹு அவர்

களைத் தூஷணித்திருக்கிறதையும், பார்த்த சீமான்களில் சிலர் வெட்கித்து கிதாபுகளைக் கேட்காமலிருந்துவிட்டார்கள்†. இன்னும் மூந்நூறு அத்தாக்ஷி எழுதுகிறேனென்று வாக்குறுதி செய்து போதுமான பணம் வசூலாய்விட்டபின் முப்பது அத்தாக்ஷியுடன் நிறுத்திக்கொண்டார். 300 அத்தாக்ஷிகளையும் காணவில்லை அன்றியும், 300 அதாக்ஷிகளுக்கு ரூபால் 5 கிரையம் வைத்தபடி 30 அத்தாக்ஷிக்கு அரை ரூபாய்க் கிரையம் ஏற்படவேண்டியதிருக்க 5 ரூபாய் வைத்துக்கொண்டார். அதைப்பற்றி கணக்குக் கேட்டதற்கு நியாயமான கணக்குக் கொடாமல் பராஹீன் இத்தனை கிதாபு அச்சானது அதற்கு இவ்வளவு செலவானது. அநேகருக்குக் கிதாபு இனாமாயும், அநேகருக்கு ஐந்து ரூபாய் கிரையமாயும், அநேகருக்கு எட்டணா கிரையமாயும், சிலருக்கு பத்து ரூபாயும், சிலருக்கு 25 ரூபாய் கிரையமாயும் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று பொதுவாகச் சொல்லி அநேக ரூபாய்களை ஏப்பமிட்டுக்கொண்டார்*. அன்றியும், கிரமப்படி கணக்குக்கொடுத்தால் நமது அந்தரங்கம் வெளியாகி ஏப்பமிட்ட பணத்தை வெளியாக்கவேண்டியது வருமென நினைத்து அசுத்தமான வார்த்தைகளை தமது வாயிலிருந்து வெளியாக்கித் தூஷணித்து கணக்குக்கேட்காமல் செய்துவிட்டார். தாம் விளம்பரத்தில் சொன்னபடி கிதாபு இயற்றாததால் வெட்கித்து ஜனங்களுக்குப் பொறுமை சொல்லித்திருப்திசெய்யவேண்டியதிருக்க இப்பேற்பட்ட இழிச்சொற்களைக்கொண்டு தூஷணிக்கிற வித்தையைக் கவனிக்கவேண்டும். அன்றியும் தமது கிதாபு தாமதமான காரியத்தைத் தெரியப்படுத்தாமல் குர்ஆன்ஷரீபு சன்னஞ்சன்னமாயிறங்கினவிதத்தை ஒப்பிட்டு அதற்கு நிகர் காண்பிக்கிறார். சுபுஹானல்லா இது எவ்வளவு நன்றி துரோகமும் மோசக்கருத்துமென்பதை அவர் உணரவில்லை. குர்ஆன்ஷரீ

† பாட்டியாலா கஸ்பாவின் பெரிய மந்திரியாகிய கலீபா செய்யிது முஹம்மது ஹுஸைன் சாஹிபு முதலியவர்களாம்.

* துவக்கத்தில் இவருக்குச் சாதகமாயிருந்து இவரின் பராஹீன் என்ற கிதாபைப்பற்றி நல்லபிப்பிராயமெழுதின மௌல்வி முஹம்மது ஹுஸைன் சாஹிபு பாட்டியாலா மிர்ஸா சாஹிபு இவ்வித தந்திரத்தினால் பதினாயிரம் ரூபாய் ஏப்பமிட்டுக்கொண்டாரென்று தமது இஷாஅத்துஸ் ஸுன்னாவில் எழுதியிருக்கிறார். (தஸ்தலஹிதாயாத் 3 பக்கம்.)

பைப்பற்றி முன்னதாகவே ரூபாய் வசூல் செய்யப்பட்டிருந்ததா? குர்ஆன்ஷரீபு தாமதமின்றி அச்சாகி வெளிவருமென வாங்குகிறவர்களுக்கு வாக்குறுதி சொல்லப்பட்டிருந்ததா? அல்லது மிர்ஸா சாஹிபின் பராஹீன் என்ற கிதாபைப்போல் குர்ஆன்ஷரீபு நாயகமவர்களால் இயற்றப்பட்டதா? குர்ஆன்ஷரீபு பூரணமாய்ச் சேர்ந்துவிட்டபின்னால் அநேக வருஷமாய் அதை ஒளித்துவைக்கப்பட்டிருந்ததா? இந்த மிர்ஸாசாஹிபின் விளம்பரத்தில் எல்லா மதத்தைப் பார்க்கிலும் இஸ்லா மதத்தை 300 அத்தாக்ஷிகளைக் கொண்டு அதன் சிறப்பை ருஜூப்படுத்தப்பட்டிருக்கிறதென்று சொன்னபடி அந்த அத்தாக்ஷிகளை வெளிப்படுத்தாமல் ஒளித்து வைத்துக்கொண்டிருப்பானேன்? என்ற இவ்வித ஆக்ஷேபங்களுண்டாயின.

சகோதரர்களே! இவரின் தந்திரங்களையும் அமானமான பணங்களை வீண் புகல் சொல்லி விழுங்கிக்கொண்டதையும், இழிச்சொற்களைக்கொண்டு தனக்கு உதவி செய்த மதாபிமானமுள்ள முஸ்லிம்களை நிந்திக்கிறதையும் பார்த்து இவரின் நடப்புகளையும், குணபாகங்களையும் நன்கறிந்துகொள்ளலாமல்லவா?

அன்றியும், இவருடைய கிதாபில் எழுதியிருக்கப்பட்ட சாமர்த்தியப் புரட்டுகளை பிறர் அறியாவண்ணம் சிலவிடங்களில் சுன்னத்து ஜமாஅத்துகளின் கொள்கைகளுக்கொப்பாகவும், சிலவிடங்களில் சுருக்கம் கொள்ளக்கூடியதாயும், சிலவிடங்களில் மெதுவாக தாம் பிந்தி மஹ்தி, நபியென்று சொல்கிறதற்கு ஹேதுவானவிதமாயும் இப்படிப் பலவிதமாக வரைந்திருக்கிறார்; அவைகளில் நின்றும் சிற்சில விஷயங்களை முஸ்லிம்களின் பார்வைக்குக் கொண்டுவருகிறது அவசியமென நினைக்கிறேன். அதாவது, மிர்ஸா சாஹிபு எழுதுகிறார்,

நான் இந்த (பராஹீனென்ற) கிதாபை இயற்றுகிறதற்கு முந்தி ஒவ்வொரு மதஸ்தரின் கிதாபுகளையும், மிக நீதியாயும், விசுவாசமாகவும், நடுநிலைமையாகவும் ஆராய்ச்சி செய்தேனென்று மெய்யாகச் சொல்லுகிறேன் (பராஹீன் 44,48,95,ப.)

முஸ்லிம்களே! முற்பணங் கொடுத்துதவி பேருபகாரம் செய்த அரிய நன்றியை மறந்து அவர்களை இழிச்சொற்களைக்

கொண்டும், துர்க்குணத்தைக்கொண்டும் நிந்திக்கிற மிர்ஸா சாஹிபு என்ன நடுநிலைமையாயும், விசுவாசமாயும் ஆராய்ச்சி செய்தாரோ யாமறியோம்? இவரின பிற்கால சரித்திரங்களை நன்குணரும்போது இவர் ஆராய்ச்சி செய்த இந்த துவக்கத்திலிருந்தே இவரின் மதாபிமானம் நீங்கித் தனி மார்க்கம் இயற்ற ஆரம்பித்திருக்கிறரென்று புலனுகிறது. அன்றியும், ஒவ்வொரு பிறமதத்தையும இன்னும் இஸ்லா மார்க்கத்தின் வழி சேருகிய பற்பல பிரிவுகளையும், பற்பல காலத்திலும் தோன்றிய மஹ்திகள், நபிகள் இவர்களின் சரித்திரங்களையும், இவர்களின் சமயோஜிதப் புரட்டுகளையும் நன்கு கவனித்து நாமும் இதுபோல் அல்லது இதைவிட அதிகமாகப் பேசலாம்; எழுதலாம். போக்குச்சொல்லாமல் நமது பக்கமும் கூட்டம் சேரும் என நிச்சயமாயறிந்து கொண்டனர். இவ்வித நோக்கத்துடன் இவர் ஆராய்ச்சி செய்திருக்கிறரென்று பிந்திய இவரின் கூற்றுகளை உணர்ந்தவர்கள் நிச்சயமாயறிந்துகொள்ளக்கூடும். இன்னும், இவர் இந்த கிதாபு யெழுதச் சில அவசியங்களையும் குறிப்பிடுகிறுர்.

அதாவது, புத்தியை வீணுய் உபயோகிப்பதனுல் அநேகர் அழிந்துபோகிற காலம் நெருங்கிவிட்டது; நமது காலத்தின் நவீன நாகரிகமும்*, நவீன கல்வியுள்ளவர்களின் ஆத்ம சக்தியும் மழுங்கிக்கொண்டிருக்கிறது; அவர்களின் இருதயங்களில் ஆண்டவனின் மகிமைக்குப் பதிலாக தனது மகிமை உறைந்துவிட்டது; ஆண்டவனை நேர்வழிகாட்டியென்று எண்ணவேண்டியதிருக்க, தாங்களே நேர்வழிகாட்டி யென யெண்ணிக்கொண்டனர். ருபிஸ்தாயி† வகுப்பாரின் வார்த்தைகளாகிறது நவீனக் கல்விமான்களின் இயற்கையில் பற்பல குழப்பங்களை உண்டு பண்ணிவிட்டது. அவர்களின் இயற்கைகளில் அதே வளர்ந்து

---

* மார்க்கக் கல்வியை உலக அபேக்ஷைக்காகக் கற்று மார்க்க விதிகளைத் தமது மனம்போல் அர்த்தஞ்செய்து போக்குச்சொல்லுகிறவர்களைக் குறிப்பிடும்.

† பலாசிபர்களில் ஒரு வகுப்பாருக்குச் ருபிஸ்தாயீ என்று சொல்லப்படும். இவர்களில் சிலர் ஒவ்வொரு வஸ்துக்களின் குணங்களை மறுத்தும் சிலர் எதை நாம் எந்த விதமாய்ப் பாவிக்கிறுேமோ அது அந்த விதமாகவேயிருக்கிறதென்றும், சிலர் நமக்கு ஒரு வஸ்துவின் குணமும் தெரியாதென்றும் சொல்கின்றனர். (அக்காயிதுல் இஸ்லாம் ஹக்கானி.)

கொண்டுபோகிறது. இன்னும், சாந்தம், எளிமை, அந்தரங்க சுத்தம் முதலிய சீதேவித்தனங்கள் (சற்குணங்கள்) அவர்களின் கெர்வம் பிடித்த இருதயங்களைவிட்டு அகன்றுவிட்டது. அவர்கள் படிக்கிற விஷயங்களினால் பெரும்பாலும் மத ஐக்கியத்திற்கடங்காத சுபாவமுண்டாகி பலாபலக்குணமுள்ளவர்களாய்விடுகிறார்கள். அன்றியும், கிறிஸ்தவ மார்க்கம் வளர்ந்தேறிவருகிறது. 27,000-ம் பேர்களாயிருந்து 500,000 ஐந்து லக்ஷம் வரை கிறிஸ்தவர்கள் ஹிந்துஸ்தான் தேசத்தில் சேர்ந்துவிட்டதாகப் பாதிரி ஹட்கர் துரை யெழுதியிருக்கிறார். மார்க்க அறிவில்லாமல் பரவியிருக்கிற கெடுதல்களை நிவர்த்திக்கிறது மார்க்கக் கல்வியைப் பரப்புகிறதைப் பொறுத்ததாயிருக்கிறது. இந்த நோக்கத்தை நிறைவேற்றவும், இன்னும் என்றென்றைக்குமுள்ள சண்டைச் சச்சரவுகள் மகிமையான வெற்றியோடு முடிவு பெறுகிறதற்குமே நாம் இந்தப் பராஹீன அஹ்மதிய்யா வென்ற கிதாபை இயற்றினோம். இந்தக்கிதாபு உண்மையைத் தேடுகிறவர்களுக்கோர் நற்சமாசாரமாகவும், பிறமதஸ்தர்களுக்கோர் ஆதாரமாகவும் இருக்கிறது என்பதே. (இபாதத்துல் அப்ஹாம் 9 ப.)

இன்னும் தமது பராஹீன் என்ற கிதாபில் இந்தக் கிதாபுக்கு யாராவது ஒழுங்குப்படி பதிலெழுதி ருஜுப்படுத்திவிட்டால் பதினாயிரம் ரூபாய் அவர்களுக்கு இனாமளிப்பேனென்றும் விளம்பரம் கொடுத்திருக்கிறார்.

இன்னும் குர்ஆனெஷரீபைப்பற்றி மிகவும் அழகாய்ப்புகழ்ந்திருக்கிறார். குர்ஆனெஷரீபின் போதனையும் முடிவான விதமாக இறங்கியிருக்கிறது. இதே அர்த்தங்களால் குர்ஆனெஷரீபின சட்டங்கள் இறுதியானதாகவும், சம்பூர்ணமானதாகவும் ஏற்பட்டுவிட்டது. முந்தின ஷரீஅத்துகள் குறைவாயிருந்தன. பூரணமான குர்ஆன்ஷரீபுக்குப் பின்னால் வேறு நபியில்லாததால் வேறொரு வேதம் வரவேண்டிய அவசியமில்லை. (பராஹீன் 109. 61.) (இபாதா 10. ப.)

இன்னும் எழுதுகிறார்: வஹியும் ரிஸாலத்தும் (ஆண்டவனால் நபிமார்களுக்கு அனுப்புகிற தூதும், நபிப்பட்டமும்) அவசியமில்லாததால் நின்றுவிட்டது. (பராஹீன் 215. 169 ப.)

இன்னும் எழுதுகிறார்: குர்ஆன்ஷரீபை இலக்ஷக்கணக்கான முஸ்லிம்கள் மனப்பாடமிட்டிருப்பதினாலும், ஆயிரக்கணக்கான அதன் தப்ஸீர்கள் (குர்ஆனின் வியாக்கியானம்) உண்டாயிருப்பதினாலும் தொழுகிறவர்கள் அதன் ஆயத்துகளை ஐந்து நேரத்துத் தொழுகைகளில் ஓதி வருகிறதினாலும், குர்ஆன்ஷரீபு பேதப்படுகிறதும், மாறுபாடாகிறதும் கூடாத காரியம். (பாராஹீன் 110. 62 ப.)

இன்னும் ஹஸ்ரத்து முஹம்மது நபி சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்களின் சிறப்பைப்பற்றி எழுதுகிறார்.

**உண்மையாகவே நாயகம் அவர்கள் கடைசி ரசூலென்பது ருஜுவானது.**

குர்ஆனில் சொல்லப்பட்ட காத்திமுல்லன்பியா சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களுடைய மகத்துவம் பெற்ற நற்குணங்கள் ஹஸ்ரத்து மூஸா நபி அவர்களைவிட ஆயிரக்கணக்கான பாகம் மேலிட்டிருக்கிறது. (பாராஹீன் 508. 469)

இன்னும் அந்த காத்திமுர்ருசுல் (ரசூல்மார்களின் கடைசியானவர்கள்) பகுறுர்ருசுல் (ரசூல்மார்களில் சிறந்தவர்கள்) அவர்களின் பாக்கியங்களையடைவதற்குப் பூரணமான அன்பு அவசியமாயிருக்கிறது. அப்படி அல்லாவுடைய நபியைப் பிரியம் வைத்த பின்னால் மனிதன் அந்த ஒளிவுகளில் நின்றும் தன் தகுதிப்பிரகாரம் பாகம் பெறுகிறான். (பாராஹீன் 300. 261. ப.)

**இன்னும் முஸ்லிம்களைப்பற்றிப் புகழ்கிறார்.**

முஸ்லிம்கள் அல்லாவின் முன்னறிவிப்பின் பிரகாரம் இனி இணைவைத்தலைத் தெரிந்துகொள்கிறது முடியாததாகயிருக்கிறது முஸ்லிம்களுடைய தொகை குறைவாயிருக்கும்போதே தௌஹீதில் யாதொரு பேதம் ஏற்படாமலிருக்கும்போது தற்சமயம் மார்க்கம் வளர்ந்தேறி (20) இருபது கோடிக்கதிகமாக முஸ்லிம்கள் கூட்டமிருக்கும்போது எவ்வாறு தௌஹீதில் பேதம் உண்டாகும். (பாராஹீன் 110. 63 ப)

மிர்ஸா சாஹிபு நான் ஒவ்வொரு மத நூல்களையும் நடுநிலைமையாக ஆராய்ச்சி செய்திருக்கிறேனென்றும் புத்தியை

இருதயத்தில் ஊடுருவிச் செல்லாது நின்றுவிடும்படியும், அவர்களை சீர்திருத்தி மத ஐக்கியத்திற்குட்படுத்துகிறதே எனது நோக்கமென்றும் கிறிஸ்தவர்களின் மார்க்கம் வளர்ந்தேறிவருகிறதால் அதன் உண்மையை ஜனங்களுக்குத்தெரியப்படுத்தி அதன் கோட்பாடுகளைத் தகுந்த அத்தாக்ஷிகளைக்கொண்டு வேரறக் களைந்து இஸ்லாமார்க்கத்தின் சன்மார்க்கக் கொள்கைகளை நிலைநிறுத்துவதுமே எனது முக்கிய நோக்கமென்றும் யெழுதியிருக்கிற இந்த விஷயங்களைப் பார்த்த எந்த முஸ்லிமுடைய மனம் தான் இவர்பக்கம் சாராமலிருக்கும். மார்க்கத்திற்காக தமது ஜீவேஜ்களையெல்லாம் தத்தம் செய்திருக்கிறதையும், இதையே தமது ஜோலியாக யெடுத்துக்கொண்டிருக்கிறதையும், உணர்ந்த எந்த முஸ்லிம்தான் இதற்கு உதவி செய்யாமல் பின் வாங்க நேரிடும்?

முஸ்லிம்களெல்லாம் இவரின் உழைப்பைக் கண்ணுற்ற போது இவர் இஸ்லாமார்க்கத்திற்கு தமது உடல், பொருள், ஆவியை அற்பணஞ்செய்த மகா பக்தனென்று நம்பி முழு மனதோடு விசுவாசிக்கலாயினர்.

இன்னும் ஆரியர்களும், பிரம்மசமாஜிகளும் இல்ஹாம் (உதிப்பு) நுபுவ்வத் (நபிப்பட்டம்) முதலியவைகளை மறுக்கிறதினால் அவர்களுக்கு மறுப்பாக யெழுதுகிறார். ஆண்டவனின் வஹியன்றி புத்தியைக்கொண்டு யாதொரு காரியமும் நடக்க மாட்டாது. சென்ற காலத்தின் விஷயமோ, மறுமையின் விஷயமோ ஆண்டவனின் இலக்ஷணங்களோ யாதொன்றும் தெரிய வரமாட்டாது. வஹியாகிறது சந்தேகமில்லாத திட்டமான ஒரு வஸ்து வென்பதை மறுக்கமுடியாது. (இபாதா 12)

இன்னும் எழுதுகிறார், வஹியும், இல்ஹாமும் ஒன்றாயும், அதன வாசல் என்றென்றைக்கும் திறந்ததாயுமிருக்கிறது.

இன்னும் ஆண்டவனின் புதையல் செலவாய்விட்டதா? அல்லது அதன் வாயில் முத்திரை வைக்கப்பட்டுவிட்டதா? அல்லது இல்ஹாம் அனுப்ப ஏலாதவனாய்விட்டானா? என்றும் பின்னர் நபிப்பட்டம் பொதுவானது என்பதைப்பற்றி வாதிக்கவும் ஆரம்பித்தார். அவர் எழுதுகிறார்,

கிடைக்காமல் தகுதி பெற்ற சிலருக்கு மட்டும் கிடைத்துக்கொள்கிறது. (பராஹீன்) (இபாதா 13 ப.)

சகோதரர்களே! மிர்ஸா சாஹிபு முதன் முதல் புத்தியைக் கொண்டுமட்டும் எல்லா விஷயங்களையும் அறிந்துகொள்ள முடியாது. இல்ஹாமும், நுபுவ்வத்தும் கட்டாயம் வேண்டுமென பலமாய் வாதித்தார். அப்பால், இல்ஹாமும், வஹியும் ஒன்றென்றும் அதன் வாசல் எப்போதும் திறந்திருப்பதாயும் தகுதி பெற்ற மனிதர்களுக்கு அந்த நபிப்பட்டம் கிடைத்துக்கொள்கிறதாயும் வாதித்தார். இவர் பிற்காலத்தில் கட்டிய தமது நபியென்ற கட்டடத்திற்கு நாட்டிய அஸ்திவாரக் கல் இதுதான். இதுவே, தாம் நபி யென்பதற்கு பராஹீன் அஹ்மதிய்யா வென்ற கிதாபில் இரகசியமாக விதைத்த வித்து. ஆனல், சாதாரணப் பொது ஜனங்கள் இந்த அந்தரங்க குறிப்பை உணரவில்லை. எனினும், உலமாக்களுக்குள் பொதுவான ஓர் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. அன்றியும், மார்க்கத்திற்கு மாற்றமான சில ஜாலத்தின் இல்ஹாம்களும் எழுதப்பட்டிருந்தது. இவைகளைக் கவனித்த உலமாக்கள் யோசனை செய்ததாவது:- மிர்ஸா சாஹிபு தற்சமயம் ஆரியர் பிரம்மசமாஜத்காரோடு கடுமையான போராட்டம் செய்துகொண்டிருக்கும்போது நாம் அவரை எதிர்த்துக் கண்டனஞ்செய்வது உசிதமல்ல. எதிரிகள் இவரின் வாதத்தினல் அசல் விஷயம் வெளியாகி இஸ்லாமாகிவிட்டால் ஒரு பெரிய விசேஷ காரியம் கைகூடிவிடும். பின்னர், மிர்ஸா சாஹிபு தமது தவறுதலை ஒப்புக்கொண்டு நீங்கிவிடவும் கூடுமென நினைத்து மறுப்பு யெழுதாமலிருந்துவிட்டனர். மிர்ஸா சாஹிபோ பொதுவாக ஜனங்களெல்லாம் தம் பக்கம் சாயலாயிருப்பதைக் கவனித்துப் பிற்காலத்தில் தாம் நபி யென்பதற்குச் சாதகமாகும்படியான அநேக இல்ஹாம்களை எழுதி வைத்திருந்தனர். அன்றியும், தமது இல்ஹாம்களை எவரும் மறுத்துவிடாதபடி சாருத்தம் கொள்ளக்கூடியதும், சமயத்தில் சுன்னத்து ஜமா அத்துகளின் நியாயமான கொள்கைகளை யோக்கதமாக எழுதி எவரும் மறுக்க முடியாமல் செய்துவிட்டனர்*.

* தற்காலத்திலும் சாதாரண ஜனங்களை மிர்ஸா சாஹிபை சுன்னத்து ஜமா அத்தென நம்பி அத்தாக்ஷிக்காக அவரால் சுன்னத்து ஜமா

அன்றியும் இந்த சாமர்த்தியவான் தமது கிதாபுக்கு யாராவது மறுப்பு எழுதிவிட்டால் வாக்களித்தபடி ரூபாய் பதினாயிரம் கொடுக்கவேண்டியது வருமோவென நினைத்து ஒரு வேலை செய்தார். அந்த வேலையின் தந்திரம் கவனித்த உலமாக்களுக்கு தெரிந்துவிட்டது. எனினும், பொது ஜனங்களுக்குத் தெரியாமல் இதற்கு ஒருவராலும் இனி மறுப்பு யெழுத முடியாத சிறந்த நூலென மதித்துக்கொண்டிருந்தனர். அவர் செய்த தந்திரமாவது,

நம்முடைய அத்தாக்ஷிகளை நம்பர்படி முறிக்கவேண்டும். இன்னும் நான் என்னவிதமாகப் புத்தி ஒப்புக்கொள்ளும்படி அத்தாக்ஷிகள் எழுதியிருக்கிறேனோ அவ்வண்ணம் பிறரும் தங்கள் வேதத்தின் அத்தாக்ஷிகளை புத்தி ஏற்றுக்கொள்ளுமாறு யெழுதவேண்டும் அல்லது அதில் ஐந்தில் ஒரு பாகம் யெழுத வேண்டும். அப்படி எழுத முடியாவிட்டால் எங்கள் வேதமாகிறது பூரணமில்லாததாயும், புத்தி ஒப்புக்கொள்ளத்தகாததாயுமிருப்பதினால் இந்தப் பாகத்திற்கு மறுப்பு யெழுத முடியவில்லையென்று பஹிரங்கமாக யெழுதவேண்டும்.

இன்னும், இரு கக்ஷியாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட மூன்று நியாயாதிபதிகள் ஒற்றுமையாக மறுப்பு யெழுதி விட்டதை அங்கீகரித்துவிடவேண்டுமென்றும்,

இன்னும் ஒவ்வொரு வகையையும் பற்பல பிரிவாகப்பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் இன்னின்னபடி மறுப்பு யெழுத வேண்டுமென்றும் விளம்பரத்தில் காட்டியிருக்கிறார். இவ்விதமான விளம்பரமாகிறது (65) பக்கமுள்ளதாய்விட்டது (இபாதா 12 ப.)

ஆகவே, இவ்விதமான விளம்பரத்தைக் கவனித்த யார்தான் இதற்குப் பதிலெழுதத் துணிவார்கள்? ஒருவராலும் வெகுமதியைப் பெற்றுக்கொள்ள முடியாத அநேக நிபந்தனைகள் ஏற்

அத்துக்கொப்பாக எழுதியிருக்கப்பட்ட விஷயங்களை யெடுத்துக் காட்டுகிறார்கள். இவரின் உம்மத்திலுள்ள விசேஷ சாமர்த்தியவான்கள் பொது ஜனங்களை வசியப்படுத்த சுன்னத்து ஜமாஅத்தின் கொள்கைகளை முதன் முதல் எடுத்துப்போதிக்கிறது வழக்கம். இதைப்பார்த்த பொது ஜனங்கள் இவர் சுன்னத்து ஜமாஅத்தைச் சேர்ந்த நல்ல மனிதனே யென நம்பிவிடுகின்றனர். இங்கிலீஷ் குர்ஆனை எழுதிய மௌல்வி முஹம்மது அலி காஜா சாஹிபு முதலியோரெல்லாம் இத்தன்மையுடையோரேயாம்.

படித்திருப்பதை வாசித்த வகுப்பார்கள் உணர்ந்துகொண்டனர். ஆனால் பொது ஜனங்களுக்கு இந்த நுட்பம் தெரியாததால் அவர்கள் இதற்கொருவராலும் நிகர்காண்பிக்க முடியாதெனப் பூரணமாய் நம்பி இவர் பேரில் முழு விசுவாசம் வைக்கலாயினர். இன்னும் எழுதுகிறார்,

உங்கள் மீது கிருபை வைக்கிறதற்காக அல்லாவின் நாட்டம் எதிர்சென்று வருகிறது நீங்கள் பாவம் அக்கிரமத்தின்புறம் திரும்பும்பக்ஷம் நாமும் தெண்டனை வேதனையின் புறம் திரும்புவோம். இன்னும், நாம் ஜஹன்னத்தைக் காபிர்களுக்குச் சிறைசசாலையாக உண்டுபண்ணிவைத்திருக்கிறோம் என்ற இந்த ஆயத்தாகிறது இந்த இடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் ஆடம்பரமாக வெளியாகிறதைக்குறிக்கிறது. அதாவது, தயவு பெற்ற சாந்தமான வழியை ஒப்புக்கொள்ளாமலும் பஹிரங்கமான அத்தாக்ஷிகளைக் கொண்டு உண்மை வெளியானபின்னால் அதை விசுவாசியாமலும் அக்கிரமஞ் செய்வார்களேயானால் இறைவன் குற்றவாளிகள் பேரில் கடினமான கோபாக்கினியை உபயோகப்படுத்துகிற காலம் வருகிறதாயிருக்கிறது ஹஸ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் மிகவும் மஹத்துவத்துடன் உலகில் இறங்கி சகல வழிகள் ரோட்டுகளையும், கூளம் குப்பைகளைவிட்டு சுத்தமாக்கிவிடுவார்கள். கெட்டபாதைகளின் குறிகூட இருக்கமாட்டாது. அல்லாவின் மஹத்துவமாகிறது வழிகேட்டின் விதையைத் தனது பிரகாசத்தினால் அழித்துவிடும் தற்காலம் அந்தக்காலத்திற்கு இர்ஹாசைப் போலாயிருக்கிறது.

அதாவது அக்காலத்தில் ஆண்டவன் ஆடம்பரமாகத்தனது அத்தாக்ஷியை பூர்த்தியாக்குவான் இப்போது அதற்குப்பதிலாக மெதுவாகவும், நன்றியைக்கொண்டும் அத்தாக்ஷியைப் பூர்த்தி செய்துகொண்டிருக்கிறான். (பராஹீன் 505. 465 ப.)

இதில் மிர்ஸா சாஹிபு மிகத்தெளிவாக வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் இனிமேல் வருவார்களென்றும், நான் ஈசாவல்ல முன்னெச்சரிக்கையாய் வந்த தூதனைப்போலென்றும், ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் மிகவும் ஆடம்பரததோடு வருவார்களென்றும் கூறியுள்ளார்.

ஆகவே பொதுவாக உலமாக்களில் சிலர் இவரின் தவறுதல்

களைக் கவனியாது இவர்பேரில் நல்லெண்ணம் வைத்து இவரின் கிதாபைப் போற்றிப்புகழ ஆரம்பித்தனர். விசேஷமாக மௌல்வி அபூசயீது முகம்மது ஹுசைன் சாஹிபு பாட்டியாலா தமது இஷாஅத்துஸ்ஸுன்னு வென்னும் கிரந்தத்தில் பாராஹீன் என்ற கிதாபைப்பற்றி விரிவாகத் தமது நல்லபிப்பிராயத்தை வெளியிட்டு சந்தேகித்தவர்களுக்கு ஜவாபும் யெழுதியிருக்கிறார். மிர்ஸா சாஹிபும் தம்மைப்பற்றிச் சந்தேகித்தவர்களில் ஒருவரான மௌல்வி அபூ அப்துல்லாகுலாமுல் அலீ சாஹிபு என்பவரின் நாமத்தைச் சுட்டித் தமது கிதாபில் ஜவாபும் யெழுயிருக்கிறார்.

எனினும் தூரதிஷ்டியையுடைய அறிவில் ஆழ்ந்த சில உலமாக்கள் இவரின் கிதாபின் கூற்றை நன்குணர்ந்து இவர் பிற்காலத்தில் தன்னை நபியென்று வாதிப்பாரென எச்சரிக்கை செய்தனர். அவர்கள் யாரெனில் மௌல்வி ஆபீஸ் அப்துல் மன்னுன் சாஹிபு வசீர்ஆபாதி மௌல்வி அபூ அப்துல்லா குலாமுல்அலீ சாஹிபு அம்ரத்சரீ. மௌல்வி குலாம் தஸ்தகீர் சாஹிபு குசூரி. மௌல்வி முஹம்மது சாஹிபு லூதியானவீ முதலிய இன்னும் சிலருமாம்.

இவர்களெல்லாம் கட்டாயம் மிர்ஸா சாஹிபு பிற்காலத்தில் தம்மை நபியென தாவாச் செய்வாரெனச் சொல்லி வந்தனர். ஆனல் பொது ஜனங்கள் முற்குறிப்பறிந்த உலமாக்களின் எச்சரிக்கையைக் கவனியாது அவர்பேரில் பூரண நம்பிக்கை வைத்திருந்தனர்.

சுபுஹானல்லா இவர்களின் தூரதிஷ்டி எவ்வளவு குறிப்பாயிருக்கிறது. இறுதியாக முற்குறிப்பறிந்த உலமாக்களின் சொறபடியே நடந்துவிட்டது*.

* தற்காலத்திலும் மிர்ஸாயி மார்க்கத்தைக் கண்டனஞ்செய்து உலமாக்களெல்லோருமொருமித்து இவர்கள் இஸ்லாமை விட்டுப் புறம்பான முர்த்தத்துகள் என்று தீர்ப்புச் செய்திருந்தும் சிலர் அதை நம்பாமல் அவர்பேரில் நல்லெண்ணம் வைக்கிறதாயிருந்தால் மிர்ஸா சாஹிபின் ஆரம்பக்காலத்தில் அவர்பேரில் நம்பிக்கை வைத்தவர்களைப்பற்றி ஆச்சரியப்படுவதில் யாது பலன்? இந்த முஸ்லிம்களின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்கிடமானது.

முஸ்லிம்களே இதுவரை பெரும்பாலான உலமாக்கள் அவரைப் போற்றிவந்தாலும் தூரதிஷ்டியுடைய சில உலமாக்கள் அவரைக் கண்டித்துப் பிற்காலம் இவர் தம்மை நபியென வாதிப்பாரென்று சொல்லிவந்தனரல்லவா? அவர்களின் சொற்களுக்கிணங்க மிர்ஸா சாஹிபும் படிப்படியாய் ஆரம்பிக்கிறதைக் கவனித்துக்கொண்டு வருவீர்களாக

பொதுவாக பெரும்பாலோர் இவரை ஆதரித்துப் போற்றிவந்ததைப்பார்த்த மிர்ஸா சாஹிபு ஜனங்களெல்லாம் நம் பேரில் மிகவும் பக்தியான விசுவாசம் வைத்துவிட்டார்களென மதித்து முன் தாம் பாராஹீனெ அஹ்மதிய்யா வென்ற கிதாபில் நாட்டிய அஸ்திவாரக் கல்லின்மேல் சிறு கட்டடம் கட்ட எத்தனித்தார். அதாவது, தமக்கு ஆண்டவனிடத்திலிருந்து இல்ஹாம் (ஆண்டவனிடத்திலிருந்து வரக்கூடிய அருள் வாக்குகள்) வருகிறதாகச்சொல்லி பஹிரங்கப்படுத்த ஆரம்பித்தனர். அந்த இல்ஹாமாவது,

முன்னறிக்கை†.

சர்வ வஸ்துக்களின்பேரிலும் சக்தியுள்ள மஹத்துவம் பெற்ற நாயன் இல்ஹாமைக்கொண்டு என்னை நோக்கி அருளினதாவது: நீ என்னிடம் வேண்டிக்கொண்டபடி நான் உனக்கு ஒரு ரஹ்மத்தின் (கிருபையின்) அடையாளம் கொடுக்கிறேன். நான் உனது கெஞ்சுதலைக்கேட்டேன்; உனது வேண்டுதல்களை எனது ரஹ்மத்தைக்கொண்டு ஏற்றுக்கொண்டேன். உனது பிரயாணத்தை ( ஹுஷ்யார்பூர் லூதியானாவை ) உனக்காகப் பரக்கத்தா (பாக்கியமா) க்கிவிட்டேன். வல்லமை, கிருபை, முடுகுதலுடைய அடையாளத்தை உனக்கு அளிக்கப்படுகிறது. ஜெயம், வெற்றியின் திறவுகோல் உனக்குக்கிடைக்கிறது; ஓ! ஜெயம்பெற்றவனே உன்பேரில் சலாம்.

உனக்கு நன்மாராயமுண்டாவதாக: முகவசீகரமும், பரிசுத்தமான ஓர் பையனை உனக்குக்கொடுக்கப்படும். அவன், உனது விருந்தாளியாக வருகிறான். அவன் பெயர், அன்மாயீல் என்

† முஸ்லிம்களே மிர்ஸா சாஹிபின் இல்ஹாமென்ற அருள் வாக்கியங்களை நன்றாய்க் கவனித்துக்கொண்டுபோவீர்களாக. இவரை மெய்யரா பொய்யரா வென்பதற்கு இது ஓர் தகுந்த ஆதாரமாயிருக்கிறது.

றும், பஷீர் யென்றும் உண்டாயிருக்கிறது. அவனுக்குப் பரிசுத்தமான ரூஹைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவன் பாவங்களை விட்டும் சுத்தமானவன்; அவன் அல்லாவின் ஒளிவாயிருக்கிறான். அந்த மகிமையுடையவன்; வானத்திலிருந்து வருகிறான். மகிமையும் அவனுடனிருக்கிறது; அவன் வரும்போது அதுவும் கூட வரும். அவன் உலக பாக்கியமுள்ளவனையும், ஆடம்பரமுள்ளவனையுமிருப்பான். அவன் உலகத்திற்கு வருவான்; தனது மஸீஹின் இயற்கையைக்கொண்டும், ரூஹுல் அக்கு அல்லாவின் ரூஹ்வுடைய பாக்கத்தைக்கொண்டும், அநேகரை வியாதியை விட்டும் சுத்தமாக்குவான். அவன் அல்லாவின் கலிமாவாயிருக்கிறான். அல்லாவின் கிருபையும், சுணையுமாகிறது அவனைத் தனது தம் ஜீதுக் கலிமாவைக்கொண்டு அனுப்பியிருக்கிறது; அவன் மிகவும் மதியூகியாயும் அறிவாளியாயுமிருப்பான். மனதில் பொறுமையினாலும் இன்னும் பஹிரங்கம் அந்தரங்க அறிவுகளைக்கொண்டும் நிறப்பப்படுவான். அவன் மூன்றை நான்காக்குவான்; இதனர்த்தம் விளங்கவில்லை மகிமையான திங்கள்கிழமையாயிருக்கிறது. இந்த மஹத்துவமானபிள்ளை ஆதியும் அந்தமும் வெளியாகிற ஸ்தலமாயும் மஹோன்னதங்கள் வெளியாகும் தானமாயும், அல்லாகுத்தஆலா வானலோகத்திலிருந்து இறங்குகிறதுபோல் அது இறங்குகிறது மிகவும் மேன்மையாயும், இன்னும் அல்லாவின் மஹத்துவம் வெளியாகிறதற்குக் காரணமாயுமிருக்கும் அந்த ஒளிவாகிறது அல்லா தனது பொருத்தத்தின் வாசனையைக்கொண்டு தேய்த்ததுபோல் வருகிறது நாம் அதில் நமது ரூஹைப்போடுவோம் ஆண்டவனின் நிழல் அதன் சிரசின்மேலிருக்கும் அது வெகு துரிதமாக வளரும் சிறையாளர்கள் விடுதலைப் பெறக் காரணமாகும் பூமியின் எல்லைகள் வரை பிரபல்யம் பெறும். இன்னும் கூட்டத்தார்கள் அதைக்கொண்டு பாக்கத்துப்பெறுவார்கள். பின்னர் முடிவாக வானத்தின்புறம் எடுக்கப்படும்‡. அது நிச்சயிக்கப்பட்ட காரியமாய்விட்டது.

பராஹீன் அஹ்மதியாவை இயற்றிய ஏழை மிர்ஸா குலாம்

---

‡ மிர்ஸா சாஹிபு இன்னமும் தன்னையும், அந்தப் பிள்ளையையும் புகழ்ந்திருக்கிறார். அது அவசியமில்லாததால் விடப்பட்டது.

அஹ்மது ஹுஷ்யார்ப்பூர் தவீலா செய்கு மஹர் அலீ சாஹிபு ரயீஸ். 20 பிப்ரவரி (1886.)

இந்த இல்ஹாமுடைய விளம்பரத்தின்பேரில் எதிர்க்கக்ஷியாரால் மிர்ஸா சாஹிபுடைய வீட்டில் சொற்ப தினங்களாக ஒரு பையன் பிறந்திருக்கலாம் அதை மறைத்து வைத்துக்கொண்டு இந்தவிதமான விளம்பரம் கொடுக்கப்பட்டிருக்கிறது வென்று ஆக்ஷேபிக்கப்பட்டது.

இவ்விதமான ஆக்ஷேபங்களையடக்கித் தமது இல்ஹாமின் மஹத்துவத்தைக் காட்டுகிறதற்காக மிர்ஸா சாஹிபு கண்டிப்பான ஓர் விளம்பரம் கொடுக்கலாயினர். அதாவது,

## முக்கிய விளம்பரம்.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம் நஹ்மது ஹு வநு ஸல்லி அலாரசூலி ஹில் கரீம்.

இம்மிஸ்கீன் சகல அழகிய இலக்ஷணங்களும் பொருந்திய சாலிஹான ஓர் ஆண் குழந்தை பிறக்குமென இல்ஹாம் (அருள் வாக்கு) மூலமாய் முன்னறிக்கை செய்ததை காதியான் கிராமத்தில் வசிக்கிற ஹாபீஸ் சுல்தான் கஷ்மீரி சாபிர் அலி யென்ற இருவரும் மிர்ஸா நவாப் பேக் மியான் ஷம்சுத்தீன் மிர்ஸா குலாம் அலி முதலிய இவர்களின் முன்னிலையில் பொய்யெனக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். அதாவது எங்களுக்குத் தெரிந்தவரை மிர்ஸா சாஹிபு வீட்டில் ஒன்றை மாதமாகக் குழந்தை பிறந்திருக்கிறதென்பதே. ஆகையால் சொல்லப்பட்ட இவ்விருவரின் வார்த்தையாகிறது கட்டுரையாயும், முழுப்பொய்யாயும் இயற்கையான பகைமையாயுமிருக்கிறது. இதனால் அவர்கள் என் பேரில் மட்டுமல்ல; எல்லா முஸ்லிம்கள்பேரிலும் எதிர்க்க நாடுகிறார்கள்*. ஆகவே, அன்னவர்களின் பொய்யை மறுக்கிறது அவசியமென நினைத்துப் பொதுவான விளம்பரம் கொடுக்கிறோம். அதாவது, கி. பி. 1886 மார்ச்சு மாதம் 22-ம் தெய்தியாகிய நாளது வரை மூந்தின சுமார் 20, 22 வயதுடைய இரு

* மிர்ஸா சாஹிபு தமது பேரில் ஆக்ஷேபித்ததற்கு எல்லா முஸ்லிம்கள் பேரிலும் ஆக்ஷேபித்ததாக ஏன் விளம்பிக்கொள்கிறாரோ இதெல்லாம் ஜனங்களை வசியப்படுத்தக்கூடிய ஒரு வித தந்திரமேயாம்.

சிறுவர்களைத் தவிர யாதொரு பையனும் ஜனிக்கவில்லை. ஆயினும், ஆண்டவன் வாக்களித்த பிரகாரம் 9 வருஷத்திற்குள் துரிதமாகவோ அல்லது தாமதமாகவோ அந்தப் பையன் நிச்சயமாய்ப் பிறந்தே தீரும். இங்ஙனமாக ஒண்ணறை பாதக் காலமாகப் பிள்ளை பிறந்திருக்கிறதென்று விரோதிகள் சொன்னது முழுப் பொய்யும் கட்டுரையுமாயிருக்கிறது. நாம் இப் பொய்யை (ஜனங்களுக்கு) வெளிப்படுத்துகிறதற்காக எழுதுகிறதாவது:

தற்சமயத்தில் எனது மனைவி அம்பலா வென்ற தேசத்தில் தன் தந்தை மீர்நாசிர் நவாப் சாஹிபு வீட்டிலிருக்கிறார்கள் அவர்களின் வீட்டினருகாமையில் மூன்ஷி மௌலா பக்ஷ் சாஹிபு, பாபூ முஹம்மது சாஹிபு கிளர்க்கு வகையறா வசித்து வருகிறார்கள்.

(என்பேரில்) சந்தேகிக்கிறவர்களும், ஆக்ஷேபிக்கிறவர்களும் அவடம் சென்று அக்கம் பக்கம் நன்கு விசாரணை செய்ய வேண்டியதவசியம். போக்கு வரத்துச் செலவுக்கு இல்லாவிட்டால் நாம் கொடுக்கலாம்.

ஆகவே இப்போதாவது சென்று விசாரணை செய்யாமலும் பொய்யை விட்டு நீங்காமலுமிருந்தால் நமது உண்மை விரும்பிகளின் பார்வையில் பொய்யர்கள் பேரில் அல்லாவின் லகுனத் தென்ற பட்டம் பெறுவதுமன்றி இராஜாதி ராஜனாகிய ஆண்டவனின் கோபாக்கினைக்குள் படவேண்டியதாயும் ஏற்படும் பொருமையால் மதிமயங்கி இஸ்லாமை கவனியாமலும் பொய்யின் முடிவை யோஜனை செய்யாமலுமிருக்கிற இந்த ஜனங்களுக்கு ஆண்டவன் நேர்வழி காட்டுவானாக.

இவ்விடத்தில் இன்னொரு சந்தேகத்தை நிவர்த்திக்கிறது உசிதமாயிருக்கிறது ஹாஷ்யார்பூரில் ஒர் ஆரியர் நமது இந்த முன்னறிக்கையில் ஒரு ஆக்ஷேபனை செய்தார். அதாவது,

மருத்துவச்சியும் பிறக்கிற பிள்ளையின் குறிப்பையறிந்து ஆண் அல்லது பெண் என்று மதித்துக்கொள்கிறாள் என்பதே.

எனவே, இவ்விதம் ஆக்ஷேபிக்கிறது ஆக்ஷேபிக்கிறவர்களின் தந்திரமும் உண்மையை மறைக்கிறதுமாயிருக்கிறதென்று

அறிந்துகொள்ளவேண்டும். முதலாவதோ ஒரு மருத்துவச்சி இவ்வண்ணம் தாவாச் செய்கிறதிருக்கட்டும்; ஓர் தேர்ந்த வைத்தியனால் கூட இவ்வண்ணம் தாவாச் செய்ய முடியாது. இவ்விஷயத்தில் எனது அபிப்பிராயமாகிறது மாறுதலடையாத நிச்சயமான உறுதியுள்ளதாயிருக்கிறது. ஒரு மதிப்பான யோஜனை மட்டுமே பலவிடுத்தம் தவறுதலடைகிறது. (எனது இல்ஹாம் மதிப்பாகச் சொல்லாத அருள் வாக்காயிருப்பதினால் நிச்சயமாய் நிறைவேறுமென்பதில் என்ன சந்தேகம்.) அன்றியும், இந்த முன்னறிக்கையை நாளது தேதியிலிருந்து இரண்டு வருஷத்திற்கு முன்பாகவே பற்பல ஆரியர்கள், முஸல்மான்கள், மௌல்விகள் ஹாபீஸ்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அதாவது, ஆரியர்களில் நின்றும் மிக விரோதியும் காதியான் கிராமத்தவருமாகிய மலாவாமல் என்றொருவராம்.

அன்றியும், முன்னறிக்கையின் கருத்துகளை நன்குணர்ந்தால் இது மானிட சக்தியை விட்டும் மேலானதென்று ஒரு மடையன் கூட அறிந்துகொள்ளக்கூடும் அது ரஹ்மானின் அடையாளமென்பதில் யாருக்கும் சந்தேகமுண்டாகாது. சந்தேகமிருந்தால் இப்பேர்பட்ட மஹத்துவமுள்ள முன்னறிக்கையை (அவர்களும்) செய்யட்டும்

இவ்விடத்தில் நன்கு கவனிக்கவேண்டியதாவது: இது முன்னறிக்கை மட்டுமல்ல. மேலும், அல்லாஹுத்தஆலா நமது நாயகம் முஹம்மது முஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் சத்தியத்தையும், மஹத்துவத்தையும் பிரஸ்தாபிக்க வெளிப்படுத்திய ஒரு சிறந்த வானத்தின் அடையாளமாயிருக்கிறது. உண்மையில், இந்த அடையாள (அற்புத)மாகிறது ஒரு பிரேதத்தை உயிர்ப்பிக்கிறதை விட மஹா சிறந்த மகிமையுடையதாயிருக்கிறது ஒரு பிரேதத்தை உயிர்ப்பிக்கிறதின் உண்மையாவது ஆண்டவனிடத்தில் பிரார்த்தனை செய்து ஒரு ஆத்துமாவைத் திரும்ப அழைத்துக்கொள்கிறதாயிருக்கும் செத்த பிரேதங்களை உயிர்ப்பித்ததாக ஹஸ்ரத் மஸீஹ் (ஈசா அலைஹிஸ்ஸலாம்) இன்னும் சில நபிமார்களைப்பற்றி பைபிளில் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும், அதை ஆக்ஷேபிக்கிறதற்கு அநேக வழிகளுமுண்டு. இவ்வித ஆக்ஷேபத்திற்கிடமாயிருக்

இறந்துடன் இந்தப்பிரேதம் சில நிமிஷமட்டுமே ஜீவித்துக்கொண்டிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் இரண்டாம் விடுத்தம் தனது உறவினர்களை மறுபடியும் சஞ்சலத்தில் ஆழ்த்திவிட்டு இவ்வுலகத்தைவிட்டுப் பயணமாய்விடும் அது (ஆத்துமா) இப்புவியில் வந்ததினால் இப்புவியோருக்கு யாதொரு பிரயோஜனமும், தனக்கு யாதொரு சுகமும், தனது உறவினருக்கு மெய்யான ஆனந்தமுண்டாகவுமில்லை. ஆகவே, ஹஸ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிரார்த்தனையின்படி இப்பாரில் வந்த ஆத்துமாவின் உண்மையைக் கவனிக்கும்பக்ஷம் அது வந்ததும் வாராததும் சரியாகவே யிருக்கிறது. இன்னும், இந்த ஆத்துமா பல வருஷம் சரீரத்திலிருந்துகொண்டாலும் குறைவுள்ள இந்த ஆத்துமா உலகத்திற்கு என்ன இலாபத்தைச் செய்ய முடியும்.

ஆயினும், ரஹ்மானின் கிருபையினாலும் ஹஸ்ரத் காத்திமுல்லன்பியா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் பாக்கியத்தினாலும் அல்லாகுத்தஆலா இந்த ஏழையின் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு பாக்கத்துப் பெற்ற ரூஹை அனுப்புகிறதற்கு வாக்குச் செய்திருக்கிறான். அதன் அந்தரங்க பஹிரங்க பாக்கியங்கள் உலகெங்கும் வியாபித்துவிடும்; வெளிரங்கத்தில் இந்த அற்புதம் மரித்தவர்களை உயிர்ப்பித்ததற்குச் சமமாய்த் தெரிந்தபோதிலும் சிறிது ஊன்றிப் பார்த்தால் இந்த அடையாளம் அதைப்பார்க்க அநேகம் பங்கு சிறப்புற்றதாயிருக்கிறது. இறந்த உயிர் துஆவினால் திரும்ப வருகிறது. எனது இல்ஹாமில் சொல்லப்பட்ட இந்த ரூஹூம் துஆவினால்தான் வருகிறதெனினும் இதற்கும் அதற்கும் இலக்ஷம் பங்கு வித்தியாசமுண்டு. முஸ்லிம்களில் மறைந்த முர்த்தது (ஈமான் மாறினவர்) களாயிருக்கிறவர்களுக்கு ஹஸ்ரத் முஹம்மதுர்ரசூலுல்லாஹி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் இந்த அற்புதம் ஆனந்தத்தைக்கொடாமல் இப்படி ஏன் உண்டானதென்று விசாரத்தைக் கொடுக்கிறது.

ஜனங்களே! நானென்ன; என் தரமென்ன; என்னை எதிர்க்கிறவர்கள் உண்மையில் எனது நாயகம் நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களை எதிர்க்கிறார்கள். சூரியன் மீது மண்

ணைப்போட முடியாது அப்படிப் போட்டால் அவர்களின் தலை மீதும், கண் முகத்தின்மீதும் விழுந்து அவர்களைப் பங்கப்படுத்தும். எவ்விதத்திலும் உங்களால் நாயகமவர்களின் சத்திய மென்ற சூரியனை கெடுத்துவிடமுடியாது. ஆண்டவன் உங்களின் புகைமைகள் துத்தத் தனங்களை நிவர்த்தி செய்வானாக.

பராஹீன் அஹ்மதியாவை இயற்றிய,
ஏழை குலாம் அஹ்மத் காதியான்,
ஜில்லா குர்தாஸ்பூர், 22 மார்ச்சு 1886 சனி.

இந்த விளம்பரத்தின் மீதும் பற்பல ஆக்ஷேபனைகள் கிளம்பலாயின. அதற்கு மிர்ஸா சாஹிபு பதிலெழுதி ஓர் நோட்டீஸ் விடுத்தனர். அந்த நோட்டீஸ் கொஞ்சம் விரிவாயிருப்பதினாலும் பார்க்கிறவர்களுக்குச் சடைவு உண்டாகாமலிருப்பதற்காகவும் அதன் சாரத்தை மட்டும் அடியில் குறிப்பிடுகிறேன்.

மிர்ஸா சாஹிபு கொடுத்த விளம்பரமாவது இந்த ஏழை கி. பி. 1886. மார்ச்சுமீ 22-ம் தெய்தியில் கொடுத்த விளம்பரத்தை முன்ஷீ இந்திரமன் முராத் ஆபாதீ முதலிய சிலர் ஆக்ஷேபித்திருக்கிறார்கள். அதாவது,

அந்த வாக்களிக்கப்பட்ட பிள்ளை பிறக்கிறதற்கு ஒன்பது வருஷம் வரை தவணை வைத்திருக்கிறது; மிகவும் நீண்டகாலமாயிருக்கிறது; இந்தத் தவணைக்குள் ஏதாவதொரு பையன் பிறக்கக்கூடும் என்பதே.

## ஜவாபு.

இவ்வித விசேஷ இலக்ஷணங்களோடு நற்சமாசாரங்கொடுக்கப்பட்டிருக்கிற அந்தப் பிள்ளையின் தவணை ஒன்பது வருஷத்தை விட இரு பங்கதிகப்பட்டாலும் அதன் மகிமையில் யாதொரு விக்கினமும் உண்டாகாது விசேஷமான பிள்ளை பிறக்குமென்ற இந்த மஹத்துவம் பெற்ற சமாச்சாரம் மானிட சக்தியை விட்டும் உயர்ந்ததாயிருக்கிறது. இப்போது மறுபடியும் அந்தப் பிள்ளை விஷயத்தைப்பற்றி ஆண்டவன் சமூகம் கவனத்தைச் செலுத்தியபோது,

கெர்ப்ப காலத்தை விட்டும் கடந்துவிடாத ஒரு பையன் அதிசீக்கிரமாகத் தோன்றக்கூடியவனாயிருக்கிறானென்று இன்று

கி. பி. 1886 எப்பிரல்மீ 8-உ யில் இந்த ஏழைபேரில் வெளியாகிவிட்டது எனினும் சமீப கெர்ப்பத்திலேலா அல்லது அடுத்த கெர்ப்பத்திலேலா என்று நிச்சயமாய் வெளியாகாதபடியால் ஒன்பது வருஷத்திற்குள் கட்டாயம் பிறக்கு மென்பது நிச்சயம் இந்த ஏழை அடிமைக்கு ரஹ்மானிடத்திலிருந்து எவ்வளவு வெளியாகிறதோ அதை மட்டுமே சொலலுகிறேன். இனிமேல் இதைப்பற்றி அதிகமாய் விஷயம் தெரிந்தால் அதையும் பிரசுரிக்கப்படும்.

ஏழை குலாம் *அஹ்மத் காதியான்,*

குர்தாஸ்பூர் ஜில்லா 8 எப்பிரல் 1886, 2 ரஜப் 1303.

கடைசி மிர்ஸா சாஹிபு வீட்டில் ஒரு பையன் பிறந்து விட்டான். அதனால், மிர்ஸா சாஹிபு அடங்காத ஆனந்த மகிழ்ச்சி கொண்டு தமது மதிப்புப் பெற்ற இல்ஹாமின் மஹத்துவத்தை ஜனங்களுக்கு விளங்கச் செய்து தம்மைச் சார்ந்தவர்களைச் சந்தோஷப்படுத்தவும் தமது விரோதிகளை அடக்கித் தாழ்மையாக்கவும் ஓர் விளம்பரம் கொடுக்கலாயினர்.

அதாவது, கவிசேஷம் அல்லது நற் சமாச்சாரம். இதை வாசிக்கிறவர்களே! நான் தங்களுக்கு ரஹ்மானிடத்திலிருந்து அறிவு பெற்று மிகத் தெளிவாய் ஒரு பையன் பிறக்கிறதைப் பற்றி 8 எப்பிரல் 1886ல் நற்சமாசாரம் சொல்லி இந்தக் கெர்ப்பத்தில் அந்தப்பிள்ளை பிறக்காவிட்டாலும் அடுத்த கெர்ப்பத்தில் கட்டாயம் பிறக்குமென்று சொன்னேனல்லவா? *. அந்தப் பிள்ளை இன்று 16-உ தீகாபிதா 1304-க்கு 7 ஆகஸ்டு 1887-வது இரவில் சுமார் ஒன்றரை மணிக்குச் சமீபமாகப் பிறந்துவிட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

இப்போது யாருங்கள் இந்த வெளியான முன்னறிக்கை எவ்வளவு மதிப்புப் பெற்றது; இந்த முன்னறிக்கையின் நேரத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால்தான் நாங்கள் சம்மதிப்போம்

---

* இதை வாசிக்கும் கனவான்கள் இந்த விளம்பரத்தை நன்றாய் திருப்பித்திருப்பி வாசித்து நன்குணர்ந்துகொள்ளவேண்டும். எல்லா விளம்பரங்களுக்கும் சிறந்தது இந்த விளம்பரமாயிருப்பதினால் காரியத்திற்கு மிகவும் அதிகமாய் உபயோகப்படுகிறது இதுவேயாகும்.

என்று அடிக்கடி சொல்லிவந்த ஆரியர்களும் இந்த முன்னறிக்கையை ஒப்புக்கொள்ளும்படி ஏற்பட்டுவிட்டது. ஏனெனில், இரண்டாவது கெர்ப்பம் முற்றிலும் பழுதாய்ப் போய்விடாது கட்டாயம் ஆண் குழந்தை பிறக்கும் அந்தக் கெர்ப்பமும் தூரமில்லை; மேலும் சமீபமாயிருக்கிறதென்பதே அந்த முன்னறிக்கையின் கருத்து அஸல் இல்ஹாமில் (ஆண்டவனிடத்திலிருந்துண்டான உதிப்பில்) இந்த விஷயம் மறைந்திருந்தாலும் நான் அதே நோட்டீஸில் பையன் பிறக்க ஒரு வருஷம் நாலு மாதத்திற்கு முன்பே பரிசுத்த ஆத்மாவினால் சக்தி பெற்று விரிவாக மேல்சொன்னவிஷயத்தை யெழுதிவிட்டிருக்கிறேன். அதாவது:-

பையன் இந்த கெர்ப்பத்தில் பிறக்காவிட்டால் அடுத்த கெர்ப்பத்தில் கட்டாயம் பிறப்பானென்பதே*. ஆரியர்கள், நமது இல்ஹாமுடைய வார்த்தையில் ஒன்றாகிய ஒரு கெர்ப்ப காலத்தைவிட்டும் கடக்காது என்ற இந்த வசனமாகிறது தற்போது தோன்றிய பெண் குழந்தையைக் குறிப்பிடுமென்று ஆக்ஷேபித்திருந்தார்கள். நான் ஒவ்வொரு சபையிலும், பிரசங்கங்களிலும், எழுத்துகளிலும் உங்களுடைய இந்த ஆக்ஷேபம் வீணென்று ஜவாபு கொடுத்தேன். இல்ஹாமி வார்த்தையின் அர்த்தமாகிறது அந்த இல்ஹாமையுடையவன் விபரிப்பதே நியாயமாயிருக்கும். இன்னொருவர் வியாக்கியானஞ் செய்கிறது பொருந்தாது; ஏனெனில், இல்ஹாமையுடையவன் அந்த இல்ஹாமுடைய அந்தரங்க விஷயங்களை அறிகிறான். அன்றியும், ஆண்டவனிடத்திலிருந்து விசேஷமான சக்தி பெற்று அதற்கு அர்த்தஞ் செய்கிறான்.

எனவே, பெண் குழந்தை பிறக்கப் பல நாட்களுக்கு முன்னமே நூற்றுக்கணக்கான நோட்டீஸ் (இந்தக் கெர்ப்பத்தில் பிறக்காவிட்டால் அடுத்த கெர்ப்பத்தில் வாக்களிக்கப்பட்ட ஆண் குழந்தை பிறக்குமென்று) பிரசுரித்து பெரிய பெரிய ஆரியர்கள் சமூகத்தில் அனுப்பிவிட்டேன். ஆதலால், அந்த அர்த்தத்தை ஏற்றுக்கொள்ளாமலிருக்கிறது பிடிவாதமா இல்லையா? இல்ஹா

---

* வாசிக்கும் நண்பர்கள் இவ்விடங்களை நன்கு ஞாபகம் செய்துகொள்ளவேண்டும். தாவாவும், தலீலும் எவ்வளவு உறமாயிருக்கிறதென்பது மிகவும் யாபிக்கத்தக்கது.

மைப் பெற்றவன் தனது 'இல்ஹாமுக்கு அர்த்தஞ் செய்கிறதும் கிதாபை இயற்றினவன் தனது கிதாபுக்குத் தானே அர்த்தஞ் செய்கிறதும், மற்றவர்கள் அர்த்தஞ்செய்கிறதை விட உறுதியா இல்லையா? கிதாபை இயற்றினவன் ஒரு மறைவான விஷயத்தைப்பற்றி பஹிரங்கமாகத் தாவாச்செய்தால் அந்த இல்ஹாமுக்கும், அதன் விளக்கத்திற்கும் அவனே பொறுப்பாளியாயிருக்கிறன். அவனுடைய வார்த்தைகளில் வீணுக நுழைகிறது எங்ஙனம் பொருந்தும்? உதாரணமாக ஒரு புத்தகத்தை இயற்றினவனைப் பார்த்து உனது புத்தகத்திற்கு நீ சொன்ன அர்த்தம் சரியில்லை; நான் சொல்கிற அர்த்தமே சரியென்று வாதித்தது போலாம். ஆகவே, நாம் முன்னதாகவே நமது முன்னறிவிப்பைப்பற்றி எப்படி தாவாச் செய்திருந்தோம். பின்பு அது எப்படி சமயத்தில் நிறைவேறியது என்பதை இதைப் பார்க்கிறவர்களுக்குத் தெரியப்படுத்தும்பொருட்டு 8 ஏப்பிரல் 1886-ல் பிரசுரித்த விளம்பரத்தை அடியில் வரைகிறோம்.

ஏழை குலாம் அஹ்மத் காதியான்,
குர்தாஸ்பூர் ஜில்லா, 7 ஆகஸ்டு 1887.

இந்த விளம்பரமாகிறது மிர்ஸா சாஹிபுடைய சகல தாவாக்களையும், இல்ஹாம்களையும், நடப்புகளையும் பகுத்தறியக் கூடிய தகுந்த ஓர் உரை கல்லாய்விட்டது. மிர்ஸா சாஹிபு இல்ஹாம் மூலமாய் வாக்களித்ததும், வெளிரங்க உள்ரங்க அறிவுகளைப் பொதிந்ததும், யூகத்தில் சிறந்ததும், ஆதியும், அந்தமும் வெளியாகிறஸ்தலமும் மஹோன்னதங்கள், வெளியாகும் தானமும், ஆண்டவனே வானலோகத்திலிருந்து இறங்கி வந்தது போலுமென வாக்களிக்கப்பட்ட அந்தப்பிள்ளை தனது அருமையான தந்தை மிர்ஸா சாஹிபுடைய நெற்றியில் என்றென்றைக்கும் அழியாத இழிவென்னும் கரியைப் பூசிவிட்டு தான் பிறந்த பதினாரும் மாதத்தில் மண்ணாய்ப்போய்விட்டது. ஐயோ பரிதாபம்!

இதைக் கண்ணுற்ற பிறமதஸ்தர்கள், சுயமதஸ்தர்கள் எல்லோரும் எதிர்த்து ஆக்ஷேபித்துப்பங்கப்படுத்தலாயினர். ஆனால், மிர்ஸா சாஹிபோ நாணத்திற்கடங்காதவராயிருந்ததினால் மறுபடியும் ஜனங்களிடத்தில் தான் மெய்யனென்பதை ருஜுப்படுத்

திப் பொய்யனென்ற பட்டப்பெயரைத் தம்மை விட்டு நீக்குவதற்காக மிகவும் கெம்பீரத்தோடும், பெருமையோடும், தைரியத்தோடும் ஓர் விளம்பரம் கொடுக்கலாயினர். அந்த விளம்பரமாகிறது, (24) பக்கங்களைக்கொண்ட பெரிதாயிருப்பதினால் அதன் முக்கிய சாரத்தை மட்டும் குறிப்பிடுகிறேன். அதாவது:-

பஷீரின் மரணத்தைப்பற்றி உண்மையான பிரசங்கம் இந்த ஏழைக்கு 9 ஆகஸ்டு 1887-ல் பிறந்த பஷீர் அஹ்மதென்ற பையன் 4 நவம்பர் 1888-ல் தன் வயது 16-ம் மாதத்தின் அதிகாலையில் தனது ஆண்டவனால் அழைக்கப்பட்டுக்கொண்டான். அதன்பேரில், அறிவில் சிறிய வீணர்களால் பற்பல வீண் எண்ணங்கள் பரப்பப்பட்டன. ஒவ்வொரு வார்த்தையிலும் பொய்யும், கட்டு வார்த்தையும் உண்டுபண்ணக்கூடிய பிறமதஸ்தர்களால் பலவிதமான கட்டுரைகள் இயற்றப்பட்டன நல்ல யூகமுடைய மனிதன் இதனால் தவறிக் கெட்டுப்போவானென்று நாம் எண்ணாததால் நமது பையன் பஷீரின் மரணத்தைப்பற்றி யாதொரு விளம்பரமும் முற்கூட்டியே வெளிப்படுத்தவேண்டியது அவசியமில்லையென நினைத்தோம். ஆனால், இந்த வீணெண்ணம் வளர்ந்தேறி மூடக்குணமுள்ள முஸ்லிம்களின் இருதயங்களிலும் ஊன்றிவிட்டதாகத் தெரிந்தபோதிலும் நாம் அல்லாவுக்காக இந்த விளம்பரத்தை வெளிப்படுத்துகிறது பொருத்தமென எண்ணினோம்.

சில விரோதிகள் இறந்துபோன நமது பையனைப்பற்றி விபரீத்துத் தங்கள் விளம்பரங்கள், பத்திரிகைகளிலும் 2 பிப்ரவரி 1886. 8 ஏப்பிரல் 1886. 7 ஆகஸ்டு 1887-ஆம் மிர்ஸாவினால் கொடுத்த விளம்பரம் இந்தப் பிள்ளையைத்தான் குறிக்கும்; இது தான் இல்ஹாம் மூலமாய் வாக்களிக்கப்பட்ட பிள்ளையென்று குறைகூறி நிந்திக்கிறார்கள்.

உண்மையில் குறைகூறுகிற இந்த் ஜனங்கள். விஷயங்களை நன்குணராது ஏமாறிப்போய்விட்டார்கள். இந்த ஏழையினால் பிரசுரிக்கப்பட்ட நோட்டீஸில் இந்தப் பிள்ளைதான் இல்ஹாம் மூலமாய் வாக்களிக்கப்பட்ட பிள்ளை யென்று ஓரக்ஷரங்கூட ஒரு வசாலும் எடுத்துக்காட்ட முடியாது. மேலும், 8 ஏப்பிரல் 7 ஆகஸ்டில் கொடுத்த விளம்பரத்தில் வாக்களிக்கப்பட்ட பிள்ளை

இதுதானு அல்லது வேறு யென்று நிச்சயமாய்த் துலங்கவில்லை யென்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மரணமான பிள்ளை நோட்டீஸில் பிரசுரிக்கப்பட்ட பிள்ளைதான் யென்று என்னுகிறது பூராவும் நியாய விரோதமாயும் விசுவாசக்குறைவாயுமிருக்கிறது. பற்பல பாகங்களிலுமிருந்து கடிதங்கள் மூலமாய் இல்ஹாமில் வாக்களிக்கப்பட்ட பிள்ளை இதுதானு வென்று யெழுதிக் கேட்டதற்கு இல்ஹாம் மூலமாய் இது விஷயம் நன்கு துலக்கப்படவில்லையென்றும் அபிப்பிராயத்தில் இக்குழந்தையாயிருக்கலாமென்றும் யெழுதியிருக்கிறேன். நாம் இல்ஹாம் மூலமாய் இந்தப்பிள்ளைதானென நிச்சயிக்காமலும் இது விஷயமாய் ஓர்ப்பளவு இல்ஹாம் கூடப் பிரசுரியாமலுமிருக்கும் போது நமது விரோதிகளின் செவிகளில் இப்படி ஊதிவிட்டது யாரென ஆச்சரியப்படுகிறோம்.

குலாம் அஹ்மது அபா அன்கு;
1 டிசம்பர் 1888.

இன்னும் இந்த மேற்கூறிய நோட்டீஸில் மிர்ஸா சாஹிபு தமது நடப்புகளையும் ஆண்டவன் பேரில் தமது தவக்கலென்னும் நம்பிக்கையையும் நன்கு காட்டுகிறார். அதாவது:-

கடைசி எனது எல்லாக் காரியங்களுக்கும் மௌலாக்கரீமாகிய ஆண்டவன் பேரிலே பூரணமான நம்பிக்கையிருக்கிறது. ஜனங்கள் என்னோடு ஒற்றுமையாயிருந்தாலும், வேற்றுமையாயிருந்தாலும் அல்லது எனது தாவாவை ஒப்புக்கொண்டாலும், மறுத்தாலும் என்பேரில் சந்தோஷப்பட்டாலும், வெறுத்தாலும் அதைப் பற்றி நமக்கு கொஞ்சமும் கவலையில்லை. மேலும், நாம் ஆண்டவனைத் தவிர உள்ளவைகளைப் பிணத்தைப்போல் மதித்து நமது ஜோலியிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிறோம். நமது ஜாதியாரிலும் சிலர் நம்மைக் கேவலமாய்ப் பார்த்தாலும் நாம் அவர்களைக் குறைகூறவில்லை. ஏனெனில், நம்மீது வெளியான விஷயம் அவர்கள் மீது வெளியாகாததினாலேயாம்.

மிர்ஸா சாஹிபு அல்லாவின்மீது எவ்வளவு தவக்கல் உள்ளவராயும் பிறரைக் கவனியாது அவன் மீதே சார்பாய் நடப்பதாயும் தமது குணபாகங்களை வெளியிட்டிருக்கிறதைக் கண்ணுற்ற அக்

தப் பஞ்சாப் மாகாணத்தின் உலமாக்களில் சிலர் இவர் பேரில் நல்லெண்ணம் வைத்து ஓர் உபதேசஞ்செய்தார்கள். அதாவது:-

தாங்கள் இவ்விதமான இல்ஹாம் கஷ்புகளை வெளிப்படுத்த வேண்டாம். ஏனெனில், அவைகள் நடக்காமல் பங்கப்படுகிறது மன்றி விரோதிகளுக்கு நகைப்புக்கிடமுண்டாகிறது என்பதே. இந்த விஷயங்களுக்கும் கீழ்க்கண்ட விளம்பரத்தில் எவ்வளவு அழகாய்ப் பதிலெழுதியிருக்கிறரென்பது கவனிக்கத்தக்கது. அதாவது:-

இவ்விடத்தில் இதை யெழுதுகிறதும் உசிதமென்றெண்ணுகிறேன். சில அறிவாளிகள் நமது இந்த இல்ஹாம் கஷ்புகளுடைய நடப்புகளை ஜனங்களுக்குத் தெரியப்படுத்தக்கூடாதென்று உபதேசிக்கிறார்கள். சிலர், இந்த இல்ஹாம் சந்தேகமானதென்றும், சிலர் இந்த இல்ஹாமில் கிடைக்கிற லாபத்தைவிட நஷ்டம் அதிகமிருக்கிறதென்றும், சிலர் இந்த இல்ஹாம் எல்லோருக்கும் சமமென்றும், சிலர் இந்த இல்ஹாமுக்கும், மார்க்கத்திற்கும் யாதொரு சம்பந்தமில்லை, மூமீன், காபிர் முதலிய எல்லோருக்கும் இயற்கையில் ஏற்படக்கூடிய ஒரு விஷயமாயிருக்கிறதென்றும், சொல்கிறார்கள்; இவைகளெல்லாம் வீண் வார்த்தைகளாயிருக்கின்றன. இவ்வார்த்தைகளால் இவர்களின் மந்த புத்தியும் குறுகிய நோக்கமும் அறிவின் தன்மையும் அளவிடக்கூடியதாய் இருக்கின்றது. எனினும், நியாயமான அறிவினால் கவனிக்குமிடத்து அஜாக்கிறதையும், உலக அபேட்சையும் என்ற பூச்சியாகிறது அவர்களின் ஈமானின் அறிவைத் தின்றுவிட்டதெனத் தோற்றுகிறது. இன்னும், கடினமான குஷ்டரோகிகளுக்கு குஷ்டத்தின் ரோகத்தினால் அவயவங்கள் விழுந்து போகிறதுபோலும்; இன்னும், கை கால்களெல்லாம் அழுகி நாறிப்போகிறதுபோலும் இவர்களில் சிலருக்கு மிதமிஞ்சின உலக அபேட்சையினால் ஆத்தும அவயவங்கள் அழுகி நாறிப்போக ஆரம்பித்திருக்கின்றன. அவர்களின் வழக்கம் சிறிப்பு, வேடிக்கை, கெட்ட எண்ணங்களுமாயிருக்கிறது; மார்க்க அறிவின் நுட்பங்களை அறிகிறதை விட்டும் முற்றிலும் நீங்கிவிட்டது இன்னும், நாம் ஏன் உலகிற்கு வந்தோம் நமது அசல் பரிபூரணமென்ன? என்ற விஷயங்கள் என்ன வென்பதை

எறிட்டுக்கூட பார்க்கிறார்களில்லை. இதே நிலைமை இவர்களுக்கு இருக்குமானால் நபிப்பட்டத்தைப்பற்றி அவர்களின் ஈமான தரிபாடாயிருக்குமென்பது பயங்கரமாயிருக்கிறது என்பதே.

ஆகவே, உலமாக்கள் மிர்ஸா சாஹிபின் பேரில் அன்பாகவும், தயவாகவும் உபதேசித்ததற்கு மிர்ஸா சாஹிபால் கிடைத்த பதிலைக் கவனித்தால் ஒவ்வொருவரின் இருதயங்களும் என்ன விதமாய் இருக்குமென்பதும் இவரின் குணபாகங்களும் நன்கு விளங்குகின்றன.

முஸ்லிம்களே! மிர்ஸா சாஹிபின் இல்ஹாம்களையும், அவரின் நடப்புகளையும் நன்குணருகிறதற்காக அவரின் 1-வது நோட்டீஸிலிருந்து கடைசி நோட்டீஸ்வரையிலுமுள்ள முக்கிய விஷய அம்சங்களைப் பொறுக்கி உங்கள் பார்வையில் தருகிறேன் அவைகளைப் பார்த்து நியாயந்தீர்ப்பீர்களாக. அதாவது,

1-வது நோட்டீஸில் ஆண்டவன் மிர்ஸா சாஹிபைப் பார்த்துச் சொல்கிறான். முகவஜீகரமுடையவனும், பாவங்களை விட்டும் பரிசுத்தமானவனும், பஷீரென்ற நாமமுடையவனும், வியாதிகளை விட்டும் ஜனங்களை சுத்தப்படுத்துகிறவனும், வெளிரங்க உள்ரங்க அறிவுகள் நிறம்பினவனும், ஆதியும் அந்தமும் வெளியாகும் ஸ்தலமும் அல்லா வானலோகத்திலிருந்திறங்கியதுபோல் மஹாத்துவமானதும், வெகு துரிதமாக வளர்கிறவனும், ஆண்டவனின் நிழல் அவன் சிரசின்மேலிருக்கிறதும், கூட்டத்தார்களெல்லாம் அந்தப் பிள்ளையைக்கொண்டு பாக்கத்துப் பெறுகிறதும் பூமியின் எல்லைகள் வரை பிரபல்யம் பெறுகிறதுமான ஓர் பிள்ளை பிறக்குமென்று இல்லாம் மூலமாய் நாயன் அருளிச்செய்திருக்கிறான் என்று கூறினார்‡.

2-வது நோட்டீஸில் முந்தின நோட்டீஸைப்பற்றி சிலர் ஆக்ஷேபித்ததற்கு அவர்களை மிகுந்த பலமாகக் கண்டனஞ் செய்து வசைச் சொற்களைக்கொண்டு தூஷணித்து தமது இல்ஹாமை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

---

‡ இன்னமும் மிதமிஞ்சின புகழைத் தம்மைப்பற்றியும் வாக்களிக்கப்பட்ட தமது திருக்குமாரனைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது; அசல் நோட்டீஸைப்பார்க்க.

அதாவது:- விரோதிகள் சொல்கிறது பொய். முந்தின 20, 22 வயதுடைய பையன்களைத் தவிர வேறு வாக்களிக்கப்பட்ட பையன் சுமார் 9 வருஷத்திற்குள் பிறந்தே தீரும்; இவ்வளவு மஹத்துவம் பெற்ற பிள்ளையை அருள்வாக்கின் சகாயமின்றி எவ்வண்ணம் பகரக்கூடும்; மதிப்பான யோஜனைதான் தவறுதலடையும்†. எனது இல்ஹாம் மாறுதலடையாதென்றும் இந்த முன்னறிக்கையை நாளது தேதியிலிருந்து இரண்டு வருஷத்திற்கு முன்பே ஆரியர்கள் முஸல்மான்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது; இந்த முன்னறிக்கையின் மஹத்துவம் மானிட சக்தியை விட்டும் உயர்ந்ததென்று ஒரு மடையன்கூட அறிந்துகொள்வானென்றும்*, இதில் யாருக்கும் சந்தேகமிருந்தால் அவர்களும் இப்பேர்பட்ட முன்னறிக்கை செய்யட்டும் பார்ப்போமென்றும், இது ஹஸ்ரத் முஹம்மதுர்ரசூலுல்லா அவர்களின் மஹத்துவம் விளங்குகிறதும் வானத்தின் அடையாளமென்றும் பிரேதத்தை உயிர்ப்பிக்கிறதை விட இது சிறந்த அற்புதமென்றும் ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாமவர்கள் செத்த பிரேதத்தை உயிர்ப்பித்த செய்திகள் ஒரு வேளை மெய்யாயிருந்தாலும் அதைவிட இந்த நமது அற்புதம் மிகவும் சிறந்ததென்றும் அதற்கும் இதற்கும் இலக்ஷம் பங்கு வித்தியாசமிருக்கிறதென்றும் எனது பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு இப்பேர்ப்பட்ட ஆத்துமாவைக்கொண்ட குமாரனைத் தருகிறதாக ஆண்டவன் வாக்களித்திருக்கிறானென்றும், ஹஸ்ரத் முஹம்மதுர்ரசூலுல்லாவுடைய இந்த அற்புதத்தை மறுக்கிறவர்கள் பங்கப்படுவார்களென்றும் கூறியுள்ளார்§.

3-வது நோட்டீஸ் இதிலும் முந்தின இரண்டு நோட்டீஸை ஆக்ஷேபித்தவர்களுக்குப் பதிலெழுதுகிறார். அதாவது:- இப்

---

† முஸ்லிம்களே இவரின் சொற்படியே இவரின் இல்ஹாம்களெல்லாம் மதிப்பான யோசனை யென்பது புலப்படுகிறதா இல்லையா?

* மிர்ஸா சாஹிபு மதத்தார்களே இல்ஹாம் எவ்வளவு உறமாயிருக்கிறதென்று பார்த்தீர்களா? பின்னும் நீங்கள் கவனிக்காத காரணமென்ன?

§ கொஞ்சம் தயவு செய்து சிரமத்தைப் பாராட்டாமல் அந்த அசல் நோட்டீஸின் சுருக்கத்தை முக்கிய விளம்பரத்தில் திருப்பிப் பார்த்துக்கொண்டு மிர்ஸா சாஹிபின் அற்புத இல்ஹாமின் மஹத்துவத்தைச் சிந்தியுங்கள்.

பேர்ப்பட்ட இலக்ஷணமுள்ள பிள்ளை ஒன்பது வருஷத்திற்கதிசப்பட்டாலும் அதன் மஹத்துவத்தில் கெடுதல் ஏற்படாது. இது, மானிட சக்தியை விட்டும் மேம்பட்டதென்றும், மறுபடியும் ரஹ்மான் சமுகத்தில் கவனத்தைச் செலுத்தியபோது கெர்ப்பகாலத்தைவிட்டும் கடந்துவிடாத ஒரு பையன் அதிசீக்கிரமாகப் பிறப்பது நிச்சயமென்றும் சமீப கெர்ப்பத்திலோ அல்லது அடுத்த கெர்ப்பத்திலோ வென்பது நிச்சயமாய்த் துலங்கவில்லையென்றும், எப்படியும் ஒன்பது வருஷத்திற்குள்ளாகவென்பது நிச்சயமாய்த் தோன்றிவிட்டதென்றும்*, எனக்கு எவ்வளவு ஆண்டவனிடத்திலிருந்து அருள்வாக்குக் கிடைக்கிறதோ அதை மட்டும் சொல்லுகிறேனென்றும் சொல்லலானார்.

## 4-வது கோட்டீஸ்.

மிர்ஸா சாஹிபுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தவுடன் அதற்கு ஆண்டவன் வாக்களித்தபடி பஷீர் யென்று நாமமிட்டு விளம்பரஞ் செய்ததாவது:-

ஜனங்களே! நான் ரஹ்மானிடத்திலிருந்து அறிவு பெற்று நல்ல விபாமாக இந்தக்கெர்ப்பத்தில் பிறக்காவிட்டாலும் அடுத்த கெர்ப்பத்தில் பிறக்குமென்று பகர்ந்தேனல்லவா? அந்தப்படி பிறந்துவிட்டானென்றும், எனது இல்ஹாம் (ஆண்டவனிடமிருந்து வருகிற அருள் வாக்கு) எவ்வளவு மதிப்புப்பெற்றதென்றும், இல்ஹாமில் சொல்லப்பட்ட விஷயம் பொதுவாக இருந்தாலும் ரஹ்மானிடத்திலிருந்து உத்தரவு பெற்று நான் அர்த்தஞ் செய்கிறதினால் கட்டாயம் அந்த அர்த்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும், அந்த வார்த்தைகளில் மற்றவர்கள் நுழைகிறது வீணென்றும், இல்ஹாமைப் பெற்றவனே தனது இல்ஹாமுக்கு அர்த்தஞ்செய்கிறது உறுதி யென்றும் பெருமையடித்தார்.

## 5-வது கோட்டீஸ்.

கடைசி மிர்ஸா சாஹிபால் வாக்களித்த பிள்ளை 16-வது

* முஸ்லிம்களே! சமயத்திற்குத் தக்கபடி அர்த்தத்தை திருப்பிக் கொள்ளலாமென்று அவர் சொல்லுகிற சமர்த்தைப் பார்த்தீர்களா?

மாதத்தில் பரலோகஞ் சென்றபோது அவர் கொடுத்த நோட்டீ ஸாவது:-

அறிவில் சிறிய வீனர்கள் இல்ஹாமி விஷயத்தின் கருத்தை நன்குணராது என்மீது குற்றஞ் சுமத்துகிறார்களென்றும், இல்ஹாம் மூலமாய் வாக்களிக்கப்பட்ட பிள்ளை இந்தப் பிள்ளைதானென எனது நோட்டீஸில் ஓரக்ஷரம்கூட ஒருவராலும் எடுத்துக்காட்ட முடியாதென்றும்,

§ இந்தப் பிள்ளைதானென இல்ஹாம் மூலமாய் நன்கு துலங்கப்படவில்லையென்று கடித நேயர்களுக்கு நான் யெழுதியிருக்கிறேனென்றும் மூடக்குணமுள்ள முஸ்லிம்களின் மனதில் வேறுவிதமாக அர்த்தமாய்விட்டதென்றும், தாங்கள் இவவிதமான இல்ஹாம்களை வெளிப்படுத்தவேண்டாமெனத் தயவாக வேண்டிக்கொண்டவர்களை ஈமானற்ற அவிசுவாசிகள் அவர்களின் ஈமானை உலக அபேக்ஷையென்ற பூச்சி தின்றுவிட்டதென்றும், குஷ்டரோகத்தினால் அவயவங்கள் அழுகி விழுந்து போகிறதுபோல் அவர்களின் ஆத்ம அவயவங்கள் அழுகி விழுந்துவிட்டதென்றும் அவர்களின் வழக்கம் வேடிக்கையும் விளையாட்டுமாயிருக்கிறதென்றும், இவ்விதமாக (அதாவது மிர்ஸா சாஹிபின் சொல்லைக்கேளாமல்) இருந்தால் அவர்களின் ஈமான் தரிபாடாயிருக்கிறது பயங்கரமாயிருக்கிறதென்றும் அறைந்துள்ளார்.

## மேற்கூறிய நோட்டீஸ்களின் ஆராய்ச்சி.

ஆகவே மிர்ஸா சாஹிபு விளம்பரங்களில் முன்னொருவிதம் பின்னொரு விதமாக யெழுதுவதும் இது ஆண்டவனால் அருளப்பட்ட இல்ஹாமென நிச்சயமாய் உறுதிமொழி கூறுகிறதும் பார்த்தால் சில சந்தேகங்கள் ஏற்படுகிறது. அந்தச் சந்தேகங்களை நிவர்த்திசெய்துகொள்ள சில முக்கிய குறிப்புகளை அடியில் வரைகிறேன்.

(1) இது இல்ஹாமே ரப்பானியா.

(2) அல்லது இல்ஹாமே ஷைத்தானியா.

---

§ இதற்கு முந்தின நோட்டீஸில் இந்தப் பிள்ளைதானென நன்கு விளக்கியிருக்கிறார்; நன்கு கவனிக்கவும்.

(3) அல்லது கட்டுரையான பொய்யா.

இவைகளைப் பகுத்தறிந்துகொண்டால் கருத்தை விளங்கிக்கொள்கிறது மிகவும் இலகுவாயிருப்பதினால் அதை விளக்குகிறேன்.

## (1) இது இல்ஹாமே ரப்பானியாயிருக்கிறது கூடாது.

ஏனெனில், அல்லாஹுதஆலா ஒரு விஷயத்தைத் தனது தூதருக்கு இன்னவிதமாய் நடக்கும் அதைப் பார்த்துவிட்டு ஜனங்களெல்லாம் உம்மை உண்மைகொள்வார்களென இல்ஹாம் மூலமாயறிவித்துவிட்டுப் பின்னர் அதற்கு மாற்றமாக நடத்தித் தனது தூதரைப் பங்கப்படுத்தமாட்டான் அதிலும் விசேஷமாக வாக்களித்தபின்னால் அதற்கு மாற்றஞ்செய்கிறது ஒருக்காலும் கூடாத காரியம்; இது தெய்வத்தன்மைக்கு முற்றிலும் விரோதமே. ஆகையால் இது ஆண்டவனாலருளப்பட்ட இல்ஹாமல்லவென்பது நிச்சயமாய்ப்புலப்படுகிறது.

## (2) அல்லது இல்ஹாமே ஷைத்தானியா.

இல்ஹாமே ஷைத்தானி யென்று சொன்னாலும் சொல்லலாம். எனினும்,நன்கு ஆராயுமிடத்து ஷைத்தானுடைய இல்ஹாமென்று சொல்கிறதும் பொருந்தவில்லை. ஏனெனில் ஒரு விடுத்தம் இல்ஹாம் சொல்லி அது நடக்காவிட்டால் மறுவிடுத்தம் நம்மை நம்பமாட்டானென்று ஷைத்தானும் நல்லவிதமாயறிகிறான். ஆகையால் இது ஷைத்தானுடைய இல்ஹாமென்று நிச்சயமாய் நம்பக்கூடவில்லை.

## (3) கட்டுரையான பொய்யா.

இது கட்டுரையான பொய்யென்பது நிர்ச்சந்தேகமாய்ப் புலப்படுகிறது. ஏனெனில், இந்த மிர்ஸா சாஹிபின் பின் கூற்று களை நன்கு கவனிக்குமிடத்து இது பொய்யாக உண்டு பண் ணிக்கொண்ட கட்டுவார்த்தைகளென்பது நன்கு ருஜூவாகிறது.

பொய்கூறுவது எச்சமயத்தாரிடத்திலும் மிகவும் வெறுக் கக்கூடிய ஓர் நடப்பாயிருப்பதினால் அப்படிப் பொய்கூறுபவரின் வார்த்தைகளை நம்புவதும் அவரின் மார்க்கத்தில் சார்வதும் மிக வும் மதிமோசமே யாம்.

காதியான் மார்க்கத்தார்களே! உங்களின் குருவாகிய மிர்ஸா சாஹிபைப்போல் பொய் இல்ஹாம் கூறுவதும் அது நடவாவிட்டால் காலத்திற்கும், சமயத்திற்கும் தக்கபடி அர்த்தத்தை மாற்றி கருத்து இதுதானெனப் பகர்வதும்; அதற்கும் முடியாவிட்டால் அதனர்த்தம் விளங்கவில்லையென விள்ளுகிறது முதலிய இவ்விஷயங்களை உலகத்தில் ஒரு நல்ல மனிதன் செய்வானு வென்பதைச் சற்றே சிந்தியுங்கள். வழி தவறிய கூட்டத்தார்களைத் தவிர எவரும் இவ்வண்ணம் சொல்லத் துணிவார்களா வென்பது மிகவும் குறிப்பிடத்தக்கவிஷயம்.

அன்றியும், மிர்ஸா சாஹிபு தமது விளம்பரத்தில் அவன் மூன்றை நான்காக்குவான் யென்றும் கூறி அதனர்த்தம் விளங்கவில்லை யென்றும் சொல்கிறுர். சுபுஹானல்லா! இது என்ன காரியத்திற்காக முன்னமே அஸ்திவாரக்கல் நாட்டியிருக்கிருரோ யாமறியோம்; இதைப்பற்றியோர் கதை உண்டு.

## கதை.

ஒரு தேசத்தில் மாடுகொள்ளப் போகிறவர்கள் மாட்டின் இலக்ஷணங்களை நன்கறிந்த தரகர்களைக் கூட்டிச்சென்று மாடு பார்த்து வாங்குகிறது வழக்கம் இந்தத் தரகர்ளில் சிலர் மஹா தந்திரசாலிகள்ாயிருப்பார்கள். அவர்கள் எவ்விதத்திலும் மாடு வாங்குகிறவர்களிடத்தில் நமது தரகுப் பணத்தை அப்பிக் கொள்ளவேண்டுமென நினைத்து மாட்டின் இலக்ஷணத்தைப் பார்த்துக்கொண்டு மாடுகொள்கிறவர்களை நோக்கி கண்ணைச் சிமிட்டிவிட்டு வந்து விடுவார்கள். மாடு வாங்குகிறவர்களோ தரகருடைய கண் ஜாடையைப் பார்த்துவிட்டு இது நல்ல இலக்ஷணமுள்ள மாடாயிருக்கலாமென நினைத்து வியாபாரி சொன்ன விலையைக் கொடுத்து மாட்டை ஓட்டிக்கொண்டு வந்து விடுவார்கள். பின்னர், அந்த மாட்டில் ஏதாவது சூற்றம் ஏற்பட்டுத் தரகர்களிடத்தில் வந்து கேட்டால் அவர்கள் இந்த மாட்டில் சுழிப் பேதகம் இருக்கிறது; இதை விலைகொள்ள வேண்டாமென நான் கண் சிமிட்டவில்லையா? என்பார்கள். ஒரு வேளை அது நல்ல மாடாயிருந்தால் விடாமல் பிடித்துக்கொள்ளுங்களென்று தானே கண் சிமிட்டினேன் என்று அறைவார்களாம்.

ஆகவே, அந்தக்கண் ஜாடையாகிறது இருபுறமும் தாராளமாய் உபயோகப்படுகிறதுபோல் மிர்ஸா சாஹிபுடைய இல்ஹாமும் இருபுறமும் உபயோகப்படுகிறதை நேயர்கள் கவனிக்க வேண்டும்.

அந்தத் தாகர்களுக்கு கண் சிமிட்டி யென்று பெயர் வைத்தால் மிர்ஸா சாஹிபுக்கு சொறசிமிட்டி யென்று பெயர் வைத்தல் பொருந்துமா அல்லவா?

அன்றியும் ஜனுப் மிர்ஸா சாஹிபுடைய மார்க்கத்தில் இதிலிருந்தே பொய் கூறுவதும், எதிராளிகளைத் திட்டுகிறதும் சுன்னத்தாக எற்பட்டுவிட்டதால் முஸ்லிம்களே இவர்களின் எந்த விஷயத்தையும் சரிபாராமல் அல்லது கண்காணுமல் நம்புவது மோசத்திற்கிடமென்பது கவனித்தற்பாலது.

ஜனுப் மிர்ஸா சாஹிபைப் பெரிய குரு வென்று மதித்துப் புகழ்ந்தேற்றும் மஹான்களே அறபியில் மிகத்தேர்ச்சியடைந்து கீர்த்தி பெற்றவர்களே ஆங்கிலத்தில் பி. எ., எம். எ. பரீக்ஷையில் கஷ்டறக்கற்றுப் பாசானவர்களே பொய்யில் நின்றும் மெய்யையும், மெய்யில் நின்றும் பொய்யையும் பகுத்தறிவதிலும் பாசாவீர்களா?

மிர்ஸாயி மதத்தார்களே! மதிப்பான யோஜனைதான் தவறுதலடையும் எனது இல்ஹாம் ஆண்டவனுடைய அருள்வாக்காயிருப்பதினுல் தவறுதலடையாதென்றும், ஹஸ்ரத் ஈசா நபி அவர்களின் அற்புதத்லதவிட எனது அற்புதம் சிறந்ததென்றும் செத்த பிரேதத்தை உயிர்ப்பிக்கிறதைவிட எனது அற்புதம் மஹத்துவமுடையதென்றும் மிர்ஸாசாஹிபு சொன்னுரே அதை எங்கே?

முஸ்லிம்களே! மிர்ஸா சாஹிபுடைய இந்த இல்ஹாம் நடந்துவிட்டால் மிர்ஸா சாஹிபு மிகவும் மெய்யர். மெய்வழி காட்டியென்று மிர்ஸாயி மதத்தார்கள் கூசாமலறைவார்களல்லவா?

அப்படியானுல் அது நடக்காமல் போனதைப்பார்த்து அவர் பொய்யர். பொய் வழிகாட்டியென்று ஏன் அறையக்கூடாது.

காதியான் மார்க்கத்தார்களே! இன்னமும் மிர்ஸாசாஹிபை

ஒரு மெய்யான மனிதனென்று நினைப்பீர்களானால் உங்கள் இஷ்டம்*.

ஆகவே ஜனாப் மிர்ஸா சாஹிபின் மதிப்பான இல்ஹாம்களையும், அவரின் நடப்புகளையும் பார்த்த மௌல்வி சகுதுல்லாமர்ஹூம் லூதியானவி என்போருக்கு இந்தக்கவியைச் சொல்ல சமயம் வாய்த்தது†.

ஆகவே, மிர்ஸா சாஹிபின் சரித்திர முதற்பாகம் முடிந்துவிட்டது, இனி இரண்டாம்பாகம் ஆரம்பமாகிறது.

வஸல்லிஅலன் நபிய்யி செய்யிதினா முஹம்மதின் வஆலிஹி
வசஹ்பிஹி அஜ்மயீன் வல்ஹம்துலில்லாஹி ரப்பில்ஆலமீன்.

---

* நமது வேலையெல்லாம் எடுத்துக் காட்டுவதைத் தவிர வேறில்லை. இனி நம்புவதும் நம்பாததும் உங்களிஷ்டம்.

† மிர்ஸா சாஹிபே! உம்மால் வாக்களிக்கப்பட்ட பஷீர் என்ற பிள்ளை உம்மை உயிருடன் பூமியில் தகனித்துப் பங்கப்படுத்தினதைத் தவிர வேறொரு குறைவும் செய்யவில்லை யென்பதாம்.

# காதியானி மத ஆராய்ச்சி,

## இரண்டாம் பாகம்.

முஸ்லிம்களே!

மிர்ஸா சாஹிபுடைய சரித்திரத்தின் முதற்பாகம் கடைசி வரை சிற்சில உலமாக்கள் இவரின் பேதக நடைப்புகளைப்பார்த்து இவருக்கு விரோதமாயிருந்தாலும் பொதுவாக எல்லா உலமாக்களும் இவர் பேரில் நல்லெண்ணம் வைத்து இவர் செய்யும் மார்க்கப் போதனைகளுக்கு உதவி செய்து வந்தனர் பின்னர், இவரின் இரண்டாம் பாகம் ஆரம்பமாகவே முன் இவருக்குச் சாதகமாயிருந்த முஸ்லிம்கள் எல்லோரும் எகோபித்து இவரை இஸ்லா மார்க்கத்தை விட்டும் புறம்பான காபிர், முர்த்தது, முனாபிக்கென்றும், தஜ்ஜாலென்றும் சொல்லத் தொடுத்தனர்.

ஆகவே, மிர்ஸா சாஹிபைப்பற்றி முதன் முதல் ஜனங்கள் நல்லபிப்பிராயம் வைத்து அவர் செய்யும் வேலைகளுக்குச் சாதகமாயிருந்ததும் பின்னர் அவரை விரோதித்து அவரின் வேலைகளை இஸ்லாமைவிட்டும் புறம்பானவையென்றும், சொல்லத் தொடுத்ததின் காரணத்தை நன்கறிந்துகொள்ள நமது முஸ்லிம் சகோதரர்களுக்கு விருப்பமிருக்குமாதலின் அத்தகைய அவரின் விசுவாச அம்சங்களை ஒருவாறு சுருக்கித் தருகிறேன்.

மிர்ஸா சாஹிபு பராஹீனே அஹ்மதிய்யா வென்ற கிதாபை இயற்றினவரை தம்மை ஒரு போதகரென்றும், வழிகாட்டி யென்றும், இஸ்லா மதத்திற்கு ஊழியம் செய்கிற தர்க்க சாஸ்திரி யென்றும் பொதுவாக வெளிப்படுத்தி வந்தனர்.

ஆயினும், பிற்காலத்தில் தம்மை நபியென்று சொல்லவும், ரசூலென்று வாதிக்கிறதற்கும் தகுமான சில சாருத்தம் கொள்ளக்கூடிய விஷயங்களையும் எழுதி வந்தனரென்பதை முற் கூட்டியே எமது முஸ்லிம் சகோதரர்களுக்குத் தெரியப்படுத்தி யிருக்கிறேன். மிர்ஸா சாஹிபு அந்த விஷயங்களைத் தமக்கு அஸ்திவாரமாகக்கொண்டு இப்போது அதன்மேல் சிறு கட்டடங்கட்ட எத்தனித்தனர்.

அதாவது, ஹக்கீகத்துல்வஹீ, இஸாலத்துல் அவ்ஹாம், துஹ்பா, கோலறியா, சுறூறத்தே இமாம், தாபிஉல்பலா, அல்–புஷ்றா, அற்பயீன், ஆயினைகமாலாத்தே இஸ்லாம், நுஸுலுல் மஸீஹ் முதலிய கிதாபுகளை இபற்றி அதில் தாம் முன் பரா–ஹீனெ அஹ்மதிய்யா வென்ற கிதாபில் சொல்லிய ஈாருத்தங் கொள்ளக்கூடிய விஷயங்களைப் பஹிரங்கமாக எழுதலாயினர். அவ்வண்ணம் யெழுதிய அவரின் விசுவாச அம்சங்களைச் சுருக்கித்தருகிறதுடன் மிர்ஸா சாஹிபுக்குச் சாதகமானவர்களும், பாதகமானவர்களும் நிராக்ஷேபமாய் ஏற்றுக்கொள்ளும்படி அவரின் புத்தக ஆதாரத்துடன் வரையப்படுகிறதை சிந்தை கூர்ந்து கண்ணுறுவீர்களாக.

> (1) முஸ்லிம்களே! இஸ்லாம் மார்க்கத்தின் மூல அம்சங்களாகிறது அல்லாஹுத்த–ஆலாவுடைய தாத்திலும், சிபாத்திலும் இணையாமலிருப்பதேயாம். மிர்ஸாசாஹிபு இக்கொள்கையைப் பின்பற்றாமல் தம்மை ஆண்டவனுடைய இலக்ஷணங்களில் கூட்டாளியாக்குகிறார்.

(1) நான் எனது ஒரு கஷ்பில் (ஞானத்தில்) நானே ஆண்டவனென்று கண்டேன். இன்னும், அவனே நானென்று உறுதி கொண்டேன்; அதே நிலைமையில் சொல்லிக்கொண்டிருந்தேன். நாம் ஒரு புதுக் கோர்வையாக புது வானத்தையும், புது பூமியையும் (படைக்க) நாடுகிறோம்; நாமோ முதலாவது வானத்தையும். பூமியையும் மூடலாகப் படைத்தோம். பின்னர், நாம் வானத்தின் உலகத்தைப் படைத்தோம். இன்னும், நாம் வானத்தை நக்ஷத்திரங்களைக்கொண்டு அலங்கரித்தோமென்றும், இப்போது நாம் மனிதனை மண்ணின் சத்தைக்கொண்டு படைப்போமென்றும் சொன்னேன். (கிதாபுலபரிய்யா 78 ப.) (ஆயினைகமாலாத்தேஇஸ்லாம் 564 ப.) (துல்பகார் லாகூர் மார்ச்சு 24. 1920.

(2) மிர்ஸா சாஹிபு தமது கஷ்பில் ஆண்டவன் சொன்னதாகச் சொல்கிறார்:- எப்போது நீ யாதொரு வஸ்துவைப்

படைக்க நாடுவாயோ அது உண்டாய்விடுகிறது. (அல்புஷ்ரா வா. 2. ப. 94.) (அஹ்லஹதீஸ் 22. ரபீயுல்அவ்வல் 1337.)

(3) முஹம்மதுடைய றப்பானவன் அஹ்மது காதியானியின்மீது வெளியானன்; அவன் குலாம் அஹ்மதுடைய உள்ளமையில் தனது பிரகாசத்தைக் காட்டினன். (அல்ஹக்கும் காதியான் நி-ர். 5) (துல்பகார் லாகூர் மார்ச்சு 24 1920.)

(2) இஸ்லாம் மார்க்கத்தில் ஆண்டவனுக்குக் குமாரன் உண்டென்பதை ஷிர்க்கென்று மிகவும் பலமாய் கண்டனம் செய்யப்பட்டிருக்கிறது.

மிர்ஸா சாஹிபு சொல்கிறதைக் கேளுங்கள்.

(1) ஆண்டவன் மிர்ஸாவைப் பார்த்துச் சொல்லுகிறன் ஓ! மிர்ஸாவே நீ எனது குமாரனைப்போலிருக்கிறய். (ஹக்கீக்கத்துல்வஹி 86 ப. அர்ரஹீது தீக்கயிதா 1338.

(2) ஆண்டவன் சொல்லுகிறன்; ஏ! மிர்ஸாவே, நீ என்னில் நின்றும் எனது குமாரனைப்போலிருக்கிறய். (தாபிஉல்பலா 68 ப.)

(3) ஆண்டவன் சொல்லுகிறன்; மிர்ஸாவே நீ என்னில் நின்றும் நான் உன்னில் நின்றுமாயிருக்கிறேன். (தாபிஉல்பலா 6, 8 ப.)

(4) ஆண்டவன் சொல்லுகிறன்; ஓ! எனது குமாரனே கேள்†. (அகாயிதே மிர்ஸா. 6 ப)

(5) ஆண்டவன் சொல்லுகிறன்; ஏ! மிர்ஸாவே, நீ எனது தண்ணீரி (சுக்கிலத்தி)ல் நின்றுமாயிருக்கிறல். மற்ற ஜனங்களெல்லாம் (ஈரமில்லாத) காய்ந்ததில் நின்றுமாயிருக்கிறர்கள். (அர்பயீன் நி-ர். 3. ப. 42.)

(6) மஸீஹுடையவும், இந்த ஏழையினுடையவும் மக்காம் (தானம்) எப்படியிருக்கிறதென்றல், அதை ஜாடையாக மகனென்ற வார்த்தையைக்கொண்டு கூறலாம். (தாபிஉல்பலா 6 ப.)

† கிறிஸ்தவர்களுக்கும் தாம் ஈசா வென்று சொல்லும்போது அதற்குத் தகுந்த வேஷம் போடவேண்டாமா?

ஹக்கீக்கத்துல் வஹீ 86 ப. (அர்பயீன் நி-ர். 3. ப. 34.) அல்-புஷரு 1-வது வால்யம் 49 ப. (துல்பகார் லாகூர் மார்ச்சு 24 1920.)

(3) அல்லாஹுத்தஆலாவுக்குச் சரீர சம்பந்தமான இலக்ஷணங்கள் அறவே கிடையாதென்று இஸ்லாம் மார்க்கம் கூறுகிறது மிர்ஸா சாஹிபு சொல்லுகிறதைக் கேளுங்கள்.

(1) ஆண்டவன் பரிசுத்த ஆவி குமாரன் (இவைகளின்) கலப்பில்லாமல் துப்புரவான திரியேகத்துவமாயிருக்கிறான் இன்னும், ஆண்டவன் ஒட்டகையின்மீது ஏறுகிறதும்; இன்னும், வரிப் புலியைப்போலிருக்கிறதும்; இன்னும், ஆணும் பெண்ணும் பரிசுத்த ஆவியாயிருக்கிறதும்; இன்னும், ஆண்டவன் வானத்திலிருந்து இறங்குகிறதும்; இன்னும், அர்ஷின் மீதிருந்துகொண்டு மிர்ஸா சாஹிபை புகழுகிறதும்; இன்னும், சலவாத்தும் சலாமும் (மிர்ஸா சாஹிபின்பேரில்) அனுப்புகிறதும்; இன்னும், ஆண்டவன் தொழுகிறதும், தூங்குகிறதும், முளிக்கிறதும், நியாயம் செய்கிறதும், தவறுதல் செய்கிறதும், மிர்ஸா ஸாஹிபு அல்லாஹுத்தஆலாவுடைய எல்லா நாமங்களிலும் பெரிய நாமமாயிருக்கிறதும் முதலிய இவ்விஷயங்கள் இல்ஹாமானதாக எழுதப்பட்டிருக்கிறது. (தவ்ஸீஹுல்மராம் 65, 37, 22, 21 ப.) இஸாலாஅவ்ஹாம் 67 ப. (ஹக்கீக்கத்துல்வஹீ 30, 78 ப.) அல்புஷரா 2-வது வால்யம் 79 ப. (துல்பகார் லாகூர் மார்ச்சு 24 1920) அர்பயீன் நி-ர். 2. ப. 13.

(4) இவ்வுலகோர்களுக்கு நடக்கக்கூடிய இலாப நஷ்டங்கள், தக்தீர்கள் முதலியவைகளில் பெரும்பாகத்தை மிர்ஸா சாஹிபு தமது கையால் எழுதினதாகச் சொல்லுகிறார்.

(1) கேளுங்கள் ஒருமுறை உவமையின் விதமாக எனக்கு ஆண்டவனின் காக்ஷி கிடைத்தது. நான் எனது கரத்தால் பல முன்னறிக்கைகள் எழுதினேன். அதன் கருத்தாவது:- இப்பேர்ப்பட்ட விஷயங்கள் நடக்கவேண்டுமென்பதேயாம். அப்போது நான் அந்தக் காகிதத்தைக் கையெழுத்திடுகிறதற்காக

ஆண்டவன் சமுகத்தில் ஆஜர்படுத்தினேன். இறைவன் யாதொரு யோஜனையின்றி சிவந்த பேனாவைக்கொண்டு அதன்பேரில் கையெளுத்திட்டான். அப்படி கையெழுத்திடுகிற நேரத்தில் எவ்விதமாகப் பேனாவில் அதிக மசி வந்துவிட்டால் உதறுகிறோமோ அதுபோல் உதறினான்; பிறகு கையெழுத்துப் போட்டுவிட்டான். (ஹக்கீக்கத்துல்வஹீ 255 ப.) (நிஷான் 106 பக்கம்*.) (தயாக்குல்குலூபு 70 ப)

(2) தமது கஷ்பில் இவ்வுலகிலுள்ள பெரும்பாலரின் இலாப நஷ்டங்களைப்பற்றியும், தம்முடையவும், தமது சிஷர்களுடையவும், இலாப நஷ்டங்களையும் பற்றி எழுதி அதில் கையெழுத்திடும்படி ஆண்டவன் சமுகத்தில் ஆஜர்படுத்தினதாகவும். ஆண்டவன் சிவந்த மையைக்கொண்டு கையெழுத்திட்டதாகவும், அந்தக் கலத்தின் நுனியில் இருந்த மையை உதறும்போது அந்தச் சிவந்த மையின் துளிகள் தமது புடவைகளிலும் இன்னும் அம்துல்லா என்ற ஒருவருடைய புடவையின்பேரிலும் விழுந்ததாகவும், பின்னர் தாம் உஷாரான பின்னால் அந்தத்துளிகளைப் பார்த்ததாகவும், பின்னர் இது விஷயத்தை மேற்படி அப்துல்லாயிடத்தில் சொல்லிக்கொண்டிருக்கும்போது அவரும் அந்தத் துணிகளைப் பார்த்துக்கொண்டதாகவும், இதுவரை அந்தப் புடவைகள் அப்துல்லாயிடத்திலிருக்கிறதாகவும், அவரிடத்தில் இது விஷயத்தைச் சத்தியமாகக் கேட்டால் சொல்வாரென்றும் கூறியிருக்கிறார்†. (தரியாக்கு குலூபு 33, 70 ப.)

(5) மிர்ஸா சாஹிபு தமது மக்காமின் மஹாத்துவத்தைப்பற்றி விவரிக்கிறார்.

(1) அதாவது, நான் ஒளிவாயிருக்கிறேன்; ஏவப்பட்ட முஜத்திதாயிருக்கிறேன்; உதவி செய்யப்பட்ட அடிமையாயிருக்

* மிர்ஸா சாஹிபு தமது காதலி முஹம்மதீ பேகம் என்ற மாதுசிரோன்மணியின் தக்தீரையும் எழுதியிருப்பாரோ? விளங்கவில்லை. மிர்ஸாயி மதத்தார்கள் விளக்குவார்களாக.

† ஷை அப்துல்லாயிடத்தில் இதைப்பற்றி சத்தியமாகக் கேட்டபோது சத்தியம் செய்ய மறுத்துவிட்டார். இதைப்பற்றி விபரமாய்ப் பார்க்க விரும்பினால் 1916 டிசம்பர் 8 தெய்தியுடைய அஹ்லஹதீஸைப் பார்க்கவும்.

கிறேன். வாக்களிக்கப்பட்ட மஹ்தியாயும், முன்னறிவிக்கப்பட்ட மஸீஹாயுமிருக்கிறேன். என்னை யாருடனும் மதிப்பிடாதீர்கள்; மற்றொருவரை என்னோடு சரிசமானமாக்காதீர்கள். நான் தோல் சேராத மூளையாயிருக்கிறேன்; சரீரமில்லாத ஆவியாயிருக்கிறேன்; புகை மறைக்க முடியாத சூரியனாயிருக்கிறேன். என்னைப்போல் ஒரு மனிதனைத் தேடுவீர்களானால் ஒருபோதும் காணமாட்டீர்கள். எனக்குப் பின் என்னைத் துயர்ந்து நடக்கும் ஒலியைத் தவிர வேறு ஒலி கிடையாது நான் எனது ஆண்டவனிடத்திலிருந்து சர்வசக்தியோடும், பாக்கத்தோடும் அனுப்பப்பட்டவனாகயிருக்கிறேன். ஒவ்வொரு உயரமும் முடிவடைந்துவிட்ட மேலான மினாருவின்பேரில் எனது பாதமிருக்கிறது. ஆதலால் ஆண்டவனைக்கொண்டு பயப்படுங்கள்; என்னையும் அறியுங்கள்; விரோதம் செய்யாதீர்கள். என்னைத் தவிர எனது காலத்திற்குப்பின் வேறே மஸீஹ் நிற்க இடமில்லை. எனவே, எவன் எனது கூட்டத்தில் சேர்ந்தானோ அவன் உண்மையில் எனது சர்தார் கைருல் முர்சலீன் (முஹம்மதுர்ரசூலுல்லா) உடைய சஹாபாக்களில் சேர்ந்துவிட்டான். (அதாவது. எனது முரீதுகள் சஹாபாக்களுக்குச் சமானமாயிருக்கிறார்கள் *.) (குத்பா இல்ஹாமிய்யா 18, 19, 20, 35, 158, 171 ப.)

(2) நாம் உனக்கு ஒரு பையனைப்பற்றி நற்சமாசாரம் சொல்கிறோம். அவன் உண்மையும், மகிமையும் உதயமாகும் தானமாயும் அல்லா ஹூத்தஆலா வானத்திலிருந்து இறங்கி வந்தது போலுமிருப்பான். நானும் உங்களைப்போல் ஒரு மனிதனாகயிருக்கிறேன்; என்னளவில் வஹிவருகிறது. அதாவது, உங்களால் வணங்கப்பட்டவன் ஒரே ஆண்டவனாயிருக்கிறான். இன்னும், நாம் உன்னை உலகிலுள்ளவர்களுக்கு ரஹ்மத்தாக அனுப்பியிருக்கிறோம். நீங்கள் அல்லாவின்பேரில் பிரியம் வைத்தால் என்னைப் பின்பற்றி நடவுங்கள். அல்லா உங்கள் பேரில் பிரியம் வைப்பானென்று நீர் சொல்லிவிடும். பயப்படாதே; எனது சமுகத்தில் நபிமார்கள் பயப்படமாட்டார்கள். அல்லா உனது

* மிர்ஸா சாஹிபுடைய சிஷ்யர்கள் சஹாபாக்களுக்குச்சமானமாயிருந்தால் மிர்ஸா சாஹிபுடைய மஹத்துவம் யாருக்குச் சமானமானது? கவனிக்கவும்.

முன் பின் உண்டான சகல பாவங்களையும் மன்னித்துவிட்டான். சந்தேகமின்றி நாம் பஹிரங்கமான ஜெயத்தை உனக்குக்கொடுத்தோம். நீ உண்டாகவில்லையானால் வானத்தைப் படைக்கமாட்டேன் உன்னை (மக்காம்) மஹமூது என்ற ஸ்தானத்தில் நிறுத்துகிறதாக ஆண்டவன் நாடியிருக்கிறான். சந்தேகமின்றி *நேர் பாதையின்பேரில் நபிமார்களில் நின்றுமாயிருக்கிறாய்*. (அல் இஸ்திப்தா 79 ப. அல்கௌலுஸ்ஸஹீஹ் 2 ப)

(3) எங்கே நீ நிற்கிறாயோ அங்கேயே அல்லா நிற்கிறான். (அல்புஷ்ரா 2-வது வால்யம் 24 ப. துல்பகார் லாகூர் மார்ச்சு 24 1920.)

(4) தானியால் நபியானவர் தமது வேதத்தில் எனது பெயரை மீக்காயில் என்று எழுதியிருக்கிறார் அப்ரானி பாஷையில் அதன் அர்த்தமாகிறது ஆண்டவனைப்போலென்று பொருள் படும். (அர்பயீன் 25 ப. ஹாஷியா அர்பயீன் நி-ர். 3. ப. 30.)

(5) நான் உனக்காக இறங்கியிருக்கிறேன். இன்னும், உனக்காக எனது அடையாள (அற்புத) த்தைக் காட்டுவேன். (ஹக்கீக்கத்துல்வஹீ 94 ப. துல்பகார் மார்ச்சு 24 1920.)

(6) மலக்குகளைப்பற்றி குர்ஆனிலும், ஹதீதிலும் மிகவும் அழகாக அவர்களின் இலக்ஷணங்களை விளக்கப்பட்டிருக்கிறது.

### மிர்ஸா சாஹிபு கூறுவதைப் பாருங்கள்.

(1) வஹி ஜிபுரீல் வானத்தின்பேரில் தரிபாடாயிருக்கின்றன. அது தானாகை இறங்கமாட்டாது. (ஆயினைகமாலாத்தெ இஸ்லாம் 111, 124 ப. துல்பகார் மார்ச்சு 24 1920.)

(2) மலக்குகள் தங்கள் சரீர உள்ளமையோடு மனிதர்களைப்போல் காலால் நடந்து பூமியின்பேரில் இறங்குகிறார்கள் என்று ஆராய்ச்சியையுடைய முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

---

* அல்லாஹு த்தஆலா ஹஸ்ரத் முஹம்மதுர்ரசூலுல்லா அவர்களைத் தொட்டும் குர்ஆனில் சொல்லப்பட்ட விஷயங்களையும், ஹதீதில் சொல்லப்பட்ட விஷயங்களையும், தம்மீது வந்ததாக ஏற்படுத்திக்கொள்கிறவிந்தை கவனித்தற்குறியது.

ஆகையால், (முஸ்லிம்களைப்போல் விசுவாசிக்கிற) இந்த எண்ணம் வீணானதாகயிருக்கிறது. (தவஸீ குல்மராம் 8, 69, 29 ப.§)

(3) மலக்குகள் ஆண்டவனால் அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிற ஸ்தானத்தைவிட்டும் ஓர் ஆர்ப்பளவாவது முன்னும் பின்னும் செல்லமாட்டார்கள். (ஷை கிதாபு 31. 869 ப.)

### (7) முஸ்லிம்களின் திருவேதமாகிய குர்ஆன் ஷரீபைப்பற்றி மிர்ஸாசாஹிபு தமது அபிப்பிராயத்தைக் கூறுகிறார்.

(1) தற்காலத்தின் நாகரீகமானவர்களிடத்தில் ஒருவரைச் சாபமிடுகிறது ஒரு வசமாகயிருக்கிறது. ஆனால், குர்ஆன் ஷரீபு காபிர்களைச் செவிகொடுக்கச்செய்து அறிவித்து சாபத்தை அனுப்புகிறது. (இஸாலத்துல் அவ்ஹாம் 13 ப. நோட் 904.)

(2) குர்ஆனானது வலீதிபுனு முகீராவைப்பற்றி (ப் பேசுகிறதில்) மிகவும் கடினமான வார்த்தைகள் (உபயோகப்படுத்தியிருப்பதைப் பார்த்தால்) பார்வையில அழகாயும் உண்மையில் அசுத்தமான வசவுகளாகவும் தெரியவருகின்றன. (இஸாலா அவ்ஹாம் நோட் 901. 13 ப.)

(3) குர்ஆன்ஷரீபு 'அல்லாகுத்தஆலாவின் கலாமாயும், எனது வாயிலிருந்துவந்த வார்த்தைகளாயுமிருக்கின்றன. (ஹக்கிக்கத்துல்வஹீ 84 ப. துல்பகார் மார்சசு 24 1920.)

(4) நான் ஒரு கஷ்பில் மரணமாய்ப்போன எனது சகோதரர் மிர்ஸா குலாம் காதிர் எனது சமீபத்தில் உட்கார்ந்து சத்தமிட்டு குர்ஆன்ஷரீபு ஓதிக்கொண்டிருந்ததாய்ப் பார்த்தேன். அப்போது அவர்கள் இந்த வாசகத்தை ஓதினார்கள். அதாவது, "இன்னா அன் சல்னாஹு கரீபன்மினல் காதியான்" அப்போது நான் காதியானுடைய பெயரும் குர்ஆனில் எழுதப்பட்டிருக்கிறதா வென்று மிகவும் ஆச்சரியமுற்றேன். அதற்கு அவர்கள் இதோ எழுதப்பட்டிருக்கிறது பாருங்கள் என்றார்கள். (பின்னர்) நான் பார்த்தபொழுது மெய்யாகவே குர்ஆன்ஷரீபினுடைய வலது பக்கம் பாதிக்குச் சமீபத்தில் இதே இல்ஹாமி வசனம்

§ ஜாடையாக மலக்குகள் உண்டென்பதை நிராகரிக்கிறார்.

எழுதப்பட்டிருக்கிறது (இஸாலா அவ்ஹாம் கோட் 1வது பாகம் பெரியது 38, 39, 924.)

(5) ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் இதை (குர்ஆனை)க் காண மஹத்துவம்பெற்றதை உண்டுபண்ண முடியாதென்று சொல்லியிருக்கிறார்களே அந்த எண்ணம் மிகவும் வீணானதாயிருக்கிறது. (கராமாத் துஸ்ஸாதிக்கீன் 15 ப. துல்பகார் மார்ச்சு 24 1920.)

(6) குர்ஆன் பூமியிலிருந்து எடுபட்டுப்போய்விட்டது. நான் குர்ஆனை வானத்திலிருந்து கொண்டுவந்திருக்கிறேன். (இஸாலா அவ்ஹாம் 721 ப. துல்பகார் மார்ச்சு 24 1920.)

(7) குர்ஆன்ஷரீபும், வாக்களிக்கப்பட்ட மஸீஹு (மிர்ஸாவு)டைய இல்ஹாம்களும் இரண்டும் ஆண்டவனுடைய வார்த்தைகளாயிருக்கின்றன. இரண்டிலும் முரண் உண்டாகவே மாட்டாது. ஆகையால், (எதை) முற்படுத்தவேண்டியதென்ற கேள்வியே உண்டாகாது. (அல்பஸல் காதியான் 30 ஏப்பிரல் 1915 கலம் 3. தேவ்பந்து அர்ரஷீது துல்ஹஜ் 1338 ப. 16.)

(8) நாயகமவர்களின் திருவாக்கிய ஹதீதுஷரீபைப்பற்றி மிர்ஸா சாஹிபின் கொள்கை.

(1) நாம் அதற்கு ஜவாபாக ஆண்டவன்பேரில் சத்தியம் செய்து சொல்கிறதாவது:- என்னுடைய இந்த தாவாவாகிறது ஹதீதின் அஸ்திவாரத்தின்பேரிலல்ல. மேலும், குர்ஆனும் இன்னும் என்பேரிலிறங்கும் வஹியுமே அஸ்திவாரமாகயிருக்கிறது. ஆனால் பக்க ஆதாரத்துக்காக நாம் ஹதீதையும் எடுத்துக்காட்டுகிறோம். அது குர்ஆனுக்குச் சாதகமாயிருக்கிறதுடன் என்னுடைய் வஹிக்கு மாற்றமானதுமல்ல. (இதைத் தவிரவுள்ள) மற்ற ஹதீதுகளை (பிரயோஜனமற்ற) வீணான வஸ்துவைப்போல் எறிந்து விடுகிறோம். (இஸாலா 310, 311. இஃஜாஸ அஃமதி 30 ப)

(2) அல்லாகுத்தஆலா எனக்குத் தெரியப்படுத்தியிருக்கிறதாவது:- இந்த எடுத்துக்காட்டுகிற எல்லா ஹதீதுகளும் அர்த்தமாறுதலிலாவது, எழுத்துப்பேதத்திலாவது புரளப்பட்ட

தாயிருக்கின்றன. அல்லது பூருவும் கட்டுரையாயிருக்கின்றன. எந்த மனிதன் மார்க்கத் தீர்ப்புச் செய்கிறவனாய் வருகிறானோ அவனுக்கு ஹதீதுகளினுடைய புதையல்களில் நின்றும் எந்தக் குவியலை நாடுவானோ ஆண்டவனிடத்திலிருந்து அறிவு பெற்று ஒப்புக்கொள்ளவும், எந்தக் குவியலை விரும்புவானோ ஆண்டவனிடத்தில் அறிவு பெற்று அதை ரத்துச்செய்யவும் அதிகாரமிருக்கிறது (இஃஜாஸே அஹ்மதி 29 ப. துஹ்பாகோல்றிய்யா 14 பக்கம்.)

(3) அல்லாஹுத்தஆலாவுடைய வஹிக்குப்பின் நகலைப் பற்றி என்ன மதிப்பிருக்கிறது. ஆதலால் நாம் அல்லாவுடைய ஹதீதுக்குப்பின் யாருடைய ஹதீதை ஒப்புக்கொள்வோம்†.

(4) ஹதீதுகளோ துண்டு துண்டாக்கப்பட்டுவிட்டன. ஒவ்வொரு கூட்டமும் தன் தன் ஹதீதுகளைக்கொண்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறது. (கஸீதா இஃஜாஸியா 57 ப.)

(5) நாம் அதை (ஹதீதுகளை) இறைவனிடத்திலிருந்து எடுத்தோம். நீங்கள் பிரேதங்களிலிருந்து ரிவாயத்துச் செய்கிறீர்கள். (துஹ்பாகோல்றிய்யா அனுபந்தம் 10 ப. இஃஜாஸே அஹ்மதி 56, 57, 30 ப.)

(9) மிர்ஸா சாஹிபு நபிமார்களைப்பற்றித் தூஷணித்தல் ஹஸ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப்பற்றிய கொள்கை.

(1) இன்னும் அல்லாஹுத்தஆலா ஆதமைப் படைத்து சர்வ ஜனங்களுக்கும், ஜின்களுக்கும் அதிகாரியாக்கினான். அப்பால், அவர்களை ஷைத்தானைக்கொண்டு ஏமாற்றச்செய்து சுவர்க்கலோகத்தைவிட்டும் துரத்தினான். ஹஸ்ரத் ஆதமுடைய அதிகாரம் ஷைத்தானுக்குக் கிடைத்தது. இந்த யுத்தத்தில் ஆதமுக்குத் தாழ்மையும், சிறுமையும் கிடைத்தது. பின்னர், கடைசி காலத்தில் ஷைத்தானைத் தோற்கடிக்கிறதற்காக நாயன் வாக்களிக்கப்பட்ட மஸீஹை (மிர்ஸா சாஹிபை) சிருஷ்டித்தான், (ஸீறத்துல் அப்தால் என்ற கிதாபின் கடைசி குத்பா இல்ஹாமியாவுடைய நோட் அல்ஹதீஸ் 23 ஜமாதிஸ்ஸானி 1339.)

---

† நகல் என்பது ஹதீதாயிருக்கும்.

(ஹஸ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்திலிருந்து நமது நாயகமவர்கள் காலம் வரை ஒரு நபியாலும் ஷைத்தானைத் தோற்கடிக்க முடியவில்லை. மிர்ஸா சாஹிபு வந்து தோற்கடித்தாராம். மிர்ஸா சாஹிபுடைய முதல் கலிபா மௌல்வி நூருத்தீன் சாஹிபு யெழுதியிருக்கிறார்.)

(10) ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப்பற்றி மிர்ஸா சாஹிபின் கடினமான இழிச் சொற்கள்.

(1) ஆண்டவன் இந்த உம்மத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹை (ஈசா) நபியை அனுப்பினான் அவர் (மிர்ஸா) அந்த முந்தின மஸீஹைப் பார்க்கிலும் தமது எல்லா அடையாள (அற்புத)ங்களிலும் மிகவும் உயர்ந்தவராகயிருக்கிறார். இன்னும், அவருக்கு (இறைவன்) குலாம் அஹ்மது என்று பெயர் வைத்தான். (தாபிஉல்பலா 10, 11, 13, 14.)

(2) மரியமுடைய மக்களைப்பற்றிப் பேசவேண்டாம். அவரைக்காண குலாம் அஹ்மது மிகவும் உயர்ந்தவராயிருக்கிறார். (தாபிஉல்பலா 13, 20 ப)

(3) நான் நன்மாராயம் சொல்லப்பட்டபடி வந்திருக்கிறேன். எனது மிம்பரில் அடிவைக்கிறதற்கு ஈசா வென்பவர் யார்? (இஸாலா 156 956 ப. துர்ரேதமீன் 222 ப.)

(4) மஸீஹுடைய சன்மார்க்க நடப்பு தமது காலத்திலுள்ள மற்றோர்களின் நடப்புகளைப்பார்க்கிலும், அதி விசேஷமாக ஏற்படவில்லை. யஹ்யா நபிக்கு மஸீஹின்பேரில் ஒரு மகிமையிருக்கிறது. யஹ்யா நபி சாராயம் குடித்துக்கொண்டிருக்கவுமில்லை, யாதொரு கெட்ட ஸ்திரீ தான் சம்பாதித்த முதலிலிருந்து அவருடைய சிரசின்மேல் அத்தர் தேய்த்திருந்தாள் அல்லது காங்கள் அல்லது சிரசின் ரோமங்களைக்கொண்டு அவரின் சரீரத்தைத் தொட்டிருந்தாள் அல்லது யாதொரு சம்பந்தமில்லாத (அன்னிய) வாலிப ஸ்திரீ அவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள் என்று ஒருபோதும் கேள்விப்படாதகால் மஸீஹைவிட இவருக்கு ஒரு மகிமையிருக்கிறது. இதே காரணத்தால் இறைவன் குர்ஆனில் யஹ்யாவுடைய 'பெயரை ஹஸூர் (ஆண் தன்மையுடையவராயிருந்தும் ஸ்திரீயின்மேல்

மோஹிக்காதவன்) என்று பெயர் வைத்தான்†. ஆனால், மஸீஹுக்கு இப்பேர்ப்பட்ட பெயர் வைக்கிறதற்கு அவரின் சரித்திரம் வித்தியாசமாயிருந்ததினால் வைக்கவில்லை. (தாபிஉல்பலா கடைசி பக்கம்.)

(5) எவனுடைய கைவசம் எனது ஆவியிருக்கிறதோ அவன் பேரில் சத்தியமாக மரியமுடைய மகன் மஸீஹு எனது காலத்திலிருப்பாரானால் எந்தக் காரியத்தை நான் செய்கிறேனோ அதை அவரால் ஒருபோதும் செய்ய முடியாது. இன்னும், என்னில் நின்றும் வெளியாகிக்கொண்டிருக்கிற அந்த அடையாள (அற்புத)ங்களை ஒருபோதும் அவரால் காட்டமுடியாது. (ரிவியூ 475 ப. கிஷ்திநூஹ் 56 ப.)

(6) துவக்கத்தில் எனது விசுவாசமாகிறது என்னவென்றால் எனக்கு மஸீஹிபுனு மரியமுடன் என்ன சம்பந்தமிருக்கிறது. அவரோ நபியாயும், இன்னும் அல்லாவுடன் நெருங்கியவர்களில் விசேஷமுடையவருமாயிருக்கிறார்; என்னைப்பற்றி யாதொரு மஹத்துவமான செயல் வெளியாகுமானால் நான் அதை ஒரு (சிறு) பிரிவான மகத்துவமாக நிச்சயித்துக்கொண்டிருந்தேன். (ஆகவே, இது எனது துவக்கமான விசுவாசமாயிருந்தது.) எனினும், ரஹ்மானுடைய வஹி மழை வருஷித்ததுபோல் என்மீதில் வருஷித்தபின்னால் முந்தின விசுவாசத்தின் பேரில் (ஈசா நபி தம்மைக்காண மேலென்ற விசுவாசத்தின்பேரில்) நிலைத்திருக்கவிடவில்லை; இன்னும்,பஹிரங்கமாக நபி என்ற பட்டம் எனக்குக் கொடுக்கப்பட்டது. (ஹக்கிக்கத்துல்வஹி 149 ப. அல்பெகளனுல் ஸஹீஹ் 3 ப.)

(7) ஹஸ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாத்துவஸ்ஸலாம் அவர்களுக்கு எனக்குக்கொடுக்கப்பட்ட இயற்கைத் தத்துவங்கள் கொடுக்கடவில்லையென்பதில் என்ன சந்தேகம். அவர்களோ, ஒரு குறிப்பிட்ட கூட்டத்திற்காக வந்திருந்தார்கள்; எனது

---

† சுபுஹானல்லா; முஸ்லிம்களே! தாம் ஈசா நபியாகிறதற்காக பரிசுத்தமான ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்களை பன்னவிதமெல்லாம் இழிவுப்படுத்துகிறார். இவரைத்தான் நாச்சியார்கோவில் பா. தாவூத்ஷா முஜத்தித் யென்று விசுவாசிக்கிறார். முஸ்லிம்களே, மிகவும் கவனிக்கத்தக்கது.

ஸ்தானத்தில் அவர்கள் இருப்பார்களானால் அல்லாவுடைய கிருபையாகிறது எனக்குச்செய்கிறதற்கு சக்தி கொடுத்திருக்கிற அவ்வளவு தங்கள் இயற்கையின் காரணத்தால் அவர்கள் செய்ய முடியாது இதை நான் பெருமையினால் சொல்லவில்லை. (ஹக்கிக் கத்துல் வஹீ 153 ப. அல்கௌலுஸ்ஸஹீஹ் 3 ப.)

(8) ஆதலால், எப்போது அல்லாவும், அவனது ரசூலும் மற்றும் எல்லா நபிமார்களும் கடைசிகாலத்தினுடைய மஸீஹை (மிர்ஸா சாஹிபை) அவரின் வேலைகளின் மூலமாக மகிமையாய்த் தீர்மானித்திருக்கும்போது நீங்கள் ஏன் மரியமுடைய மகனாகிய மஸீஹைப் பார்க்கிலும் தங்களை மேன்மையென்று தீர்மானித்திருக்கிறீர்களென்று பகருவது ஷைத்தானுடைய எண்ணமாக யிருக்கிறது. (ஹக்கீக்கத்துல்வஹீ 155 ப. அல்கௌலுஸ்ஸ-ஹீஹ் 3 பக்கம்.)

ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாமவர்களின் அற்புதங்களைப்பற்றி மிர்ஸா சாஹிபு தமது அபிப்பிராயத்தை வெளியிடுகிறார்.

(9) அல்லாகுத்தஆலாவானவன் ஹஸ்ரத் மஸீஹ் அவர்களுக்கு ஒரு மண்ணால் செய்த கிளுக்கை அழுத்துகிறதினாலும் அல்லது ஊதிவிடுகிறதினாலும் ஏதோ ஒரு விதமாகப் பறந்துவிடுகிற புத்திசாலித்தனமான ஒரு வழியைத் தெரிவித்துக் கொடுத்திருக்கிறான். இது ஆச்சரியமல்ல; பறவைகள் பறக்கிறது போலும் அல்லது அப்படிப்பறக்கவில்லையானால் காலினால் நடக்கிறதுபோலும் புத்தி மூலமாகப் பிடித்துக்கொடுத்திருக்கலாம் இது ஆச்சரியமில்லை. ஏனெனில் ஹஸ்ரத் மஸீஹுபுனு மரியம் தமது தந்தை யூசுபுடனே 22 வருஷகாலம் வரை தச்சு வேலை செய்துகொண்டிருந்தார்கள். தச்சு வேலையினால் உண்மையில் இயந்திரங்களை உண்டுபண்ணுகிறதினாலும் விதவிதமான தொ-ழில்களை உண்டுபண்ணுகிறதினாலும் புத்தி கூர்மையாகிவிடுகிற விஷயம் பஹிரங்கமானதே. (தவ்ஸீஹுல் மராம் காதியான் ஸியாஉல் இஸ்லாம் அச்சு 9 ப. ஹாஷியா இஸாலா அவ்ஹாம் 1013 பக்கம்.)

(10) ஹஸ்ரத் மஸீஹானவர் தமது தாதா சுலைமானைப் போல் அக்காலத்தின் விரோதிகளுக்குப் புத்தியின் தீக்ஷண்யத்

தால் அற்புதம் காட்டியிருக்கிறதைப்பற்றிக் கொஞ்சமும் வியப் படையவேண்டியதில்லை. இப்பேர்ப்பட்ட அற்புதம் காட்டு கிறது புத்திக்கு தூரமானதல்ல. ஏனெனில், தற்காலத்திலும் அநேக தொழில்காரர்கள் குருவிகளை உண்டாக்கிக்கொள்கிறார் கள். அவைகள் பேசுகிறதாகவும், அசைகிறதாகவும், வாலை ஆட்டுகிறதாகவும் பார்க்கப்படுகிறது. அன்றியும், இயந்திரத் தின் மூலமாகச் சில குருவிகள் பறக்கிறதாகவும் நான் கேட்டி ருக்கிறேன். (இஸாலா முதற்பாகம் 353 ப. ஹாஷியா 1013 ப.)

(11) அன்றியும், இப்பேர்ப்பட்ட அற்புதங்களை மெஸ்மரி ஸத்தின் மூலமாக விளையாட்டு வேடிக்கைகளைப்போல் செய்தி ருக்கலாமென்று யூகிக்கவும் இடமிருக்கிறது. மெய்யானவித மாக வெளியாக்கமுடியாது. ஏனெனில், இவ்வித நடப்புகளைத் தற்காலத்தில் மெஸ்மரிஸமென்று சொலகிறார்கள். இது எப் படிப்பட்ட அதிசயமென்றால் அதில் பூரணமாக அப்பியாசம் செய்கிறவர்கள் தங்களது ஆவியின் உஷ்ணத்தை மற்ற வஸ்துக் களின்பேரில் செலுத்தி அந்த வஸ்துக்களை உயிருள்ள வஸ்துக் களைப்போல் காட்டுகிறார்கள். மனிதனுடைய ஆவியில் ஒரு விதமான விசேஷமிருக்கிறது. அவன் தனது ஆவியின் உஷ் ணத்தை ஒரு உயிரற்ற வஸ்துவின்பேரில் செலுத்தி உயிருள்ள வர்களில் நின்றும் வெளியாகிறதைப்போல் சில நடப்புகளை வெளியாக்கக்கூடும். (இஸாலா 354 ப. ஹாஷியா 1013 ப.)

(12) ஹஸரத் மஸீஹிபுனு மரியம் இறைவனின் ஏவலைக் கொண்டு அல்யஸஉ நபியைப்போல் இந்த மெஸ்மரிஸமென்ற தொழிலில் பூரணமான தேர்ச்சி அடைந்திருந்தார்களென்பது உறுதியாய்விட்டது. எனினும், அல்யஸஉ வுடைய பூரணபத விக்குக் குறைந்தவர்களாகவே இருந்தார்கள். உதாரணமாக, அல்யஸஉ (நபி) உடைய பிரேதமும் அற்புதங்காட்டிவிட்டது. அதாவது, அதனுடைய எலும்புகள் பட்டதினால் வேறொரு பிரேதம் ஜீவித்துவிட்டது. ஆயினும், கள்ளர்களுடைய பிரே தத்தில் மஸீஹினுடைய சரீரம் பட்டதினால் ஒருபோதும் ஜீ- விக்கவில்லை; அந்த இரண்டு கள்ளர்கள் யாரென்றால் மஸீஹு- டன் சிலுவையில் அறையப்பட்டவர்களாம்.

ஆகவே, இந்த மெஸ்மரிஸமென்ற தொழில் காலத்திற்குத்

தகுந்த ஒரு சமயோசிதமாயிருந்தது. எனினும், இந்தச் செயல் சாதாரண ஜனங்கள் நினைக்கிறபடி மதிக்கத்தகுந்ததல்ல வென்பது ஞாபகம் வைக்கத்தக்கது.

இந்த ஏழை இந்தச் செயலை இழிவாகவும், வெறுப்பாக வும் நினையாவிட்டால் ஆண்டவனின் கிருபையைக்கொண்டு *இந்த ஆச்சரியத் தொழில்களில் ஹஸ்ரத் இபுனு மரியமைப்பார்க்கி லும் குறைவாயிருக்கமாட்டானெனபது பலமான நம்பிக்கை. (இஸா 305 ப.) (* ஹாஷியா இஸாலா 1015 ப.)

(13) இந்தக் கெட்ட செயலுடைய குணமென்னவென்றால் எந்த மனிதன் தன்னை இதே ஜோலியில் ஏற்படுத்திச் சரீர வியாதிகளை நிவர்த்தி செய்கிறதில் தனது மனவன்மையையும், மூளையின் தததுவத்தையும் செலவு செய்துகொண்டிருக்கிறானோ அவனுடைய ஆத்தும வியாதிகளை நீக்குகிற ஆத்தும தத்துவம் மிகவும் பலஹீனமாகவும், வீணாகவும் ஆய்விடுகிறது. இன்னும், அந்தரங்கத்தை வெளிச்சமாக்குகிறதும், நபுஸை சுத்தமாக்கு கிறதுமான அசல் விஷயம் அவனது கையில் நின்றும் மிகவும் குறைவாகவே நிறைவேறுகிறது.

இதே காரணத்தால் ஹஸ்ரத் மஸீஹ் சரீர வியாதிகளை இந்தச் செயலினால் சுகப்படுத்திக்கொண்டிருந்தார்கள். எனி னும், மார்க்கத்தில் உறுதியாக இருக்கிற பூரணமான விதத்தை மனதில் தரிபாடாக்குகிற விஷயத்தில் அவர்களின் தொழிலா கிறது ஏறக்குறைய நிறைவெறுததாகவேயிருந்தது. (இஸாலா 308, 309 ப. ஹாஷியா இஸலா 10, 16 ப.)

கிறிஸ்தவர்களுக்கு ஜவாபு கொடுக்கிறதுபோல்
மிர்ஸா சாஹிபு ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம்
அவர்களை ஏசுகிறதைப் பாருங்கள்.

(14) மஸீஹு பொய்யன் அசுத்தமான எண்ணமுடைய வன், சாராயம் குடிக்கிறவன், கெர்வி, நல்லவர்களின் விரோதி, யகூதியின் சிஷன், சுழியனை ஷைத்தானுக்குப் பின் நடக்கிற வன், குபாடக்காரன், செட்டவன், பட்டி, கெட்ட நாவுடைய

* இவ்விடத்தில் நரியும், திராட்சைப் பழமும் என்ற கதை நேயர் களுக்கு ஞாபகத்தில் வரலாம்.

வன், கோபக்காரன், நிந்திப்போன், ஷைத்தானின் அனுசாரி, ஷைத்தானால் இல்ஹாம் செய்யப்பட்டவன்; அவனின் பாட்டிகள் வேசைகள், அவர்களின் இரத்தத்தால் அவன் உற்பத்தியானான் அவன் வேசிகளுடன் சேர்ந்திருப்பதும், வேசிகளை நாடுவதும். அவனின் பரம்பரைக் கறையின் காரணமாயிருக்கக்கூடும். ஒரு வேசி தான் வேசித்தனத்தால் சம்பாதித்த பணத்தைக் கொண்டு வாங்கிய வாசனையால் அவன் தலையை அபிஷேகம் பண்ணவிட்டான். (பத்துல்ஹமஸீஹு 19 முதல் 45 வரை. அஞ்சாமேஆத்தம் அநுபந்தம் 3 முதல் 10 வரை. துல்பகார் மார்ச்சு 24 1920) (கொழும்பு அப்துல்கப்பார் சாஹிபு நோட்டீஸ்.)

(15) மரியமுடைய மகன் கோஷில்யா உடைய மகனாகிய ராஜா ராமச்சந்திரரைப் பார்க்கிலும் சிறந்தவரல்ல. (அஞ்சாமே ஆத்தம் 4 ப.) (†துல்பகார் மார்ச்சு 24 1920.)

(16) ஒருகரம் ஹஸ்ரத் மஸீஹ் பூமியின்பேரில் வந்ததின் பலனாக பல கோடிக் கணக்கான முஷ்ரிக்கீன்கள் (இணைவைக்கிறவர்கள்) உலகத்தில் பரவிவிட்டார்கள் (அப்படியிருக்க). இரண்டாம் விடுத்தம் வந்து அவர்கள் என்னசெய்துவிடுவார்களென்று ஜனங்கள் அவர்களின் வருகையை விரும்புகிறார்கள். (பதுர் மே மாதம் 9–உ 1907) (முரக்கஹ் காதியானி 12 ப)

(17) யசூஹு மஸீஹுடைய முகுஜிஸாத்துகள் (அற்புதங்கள்) மெஸ்மரிஸமென்னும் ஏமாற்றைத் தவிர வேறொன்றுமில்லை (இஸாலா 303,322. அஞ்சாமேஆத்தம் அநுபந்தம் 7.*)

---

† மிர்ஸாயி மதத்தார்களே, ஸ்ரீ தியானந்த சுவாமியானவர் ஹஸ்ரத் மூசா, ஈசா, முஹம்மது நபி முதலியவர்களை இழிச்சொற்களைக்கொண்டு நிந்திக்கிறதை நம்மால் சகிக்கமுடியவில்லை யென்று வரைந்த மிர்ஸா சாஹிபினுடைய பிறழும் பேனா இங்கே என்னவிதமாக எழுதி நிந்திக்கிறதென்று பார்த்தீர்களா? மிர்ஸாயி மதத்தார்களே சர்வஞானமுடைய ரஹ்மான் சமுகத்தில் என்ன பதில் சொல்வீர்கள்.

* மிர்ஸா சாஹிபின் உம்மத்துகளே, 1902 செப்டம்பர் மாதத்தின் ரிவியூ 344-ம் பக்கத்தில் அமெரிக்காவிலுள்ள டாக்டர் டொய் துரைக்கு ஜவாபு எழுதும்போது யசூஉ மஸீஹை ஆண்டவனின் தாழ்ந்த அடிமையாயும், நபியாகவும் விசுவாசிக்கிறேனென்று மிர்ஸா சாஹிபு எழுதிவிட்டு அதே நபியை இவ்விடத்தில் இவ்வளவு அழகான பட்டங்களைக்கொண்டு

(11) ஹஸ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மாதாவாகிய கன்னி மரியம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை குர்ஆன் ஹதீதுகளில் பத்தினி என்றும், நலவிசுவாசியென்றும் புகழ்ந்திருக்க; மிர்ஸா சாஹிபு சொல்லுகிற அவலக்ஷணமான நிந்தனையைப் பாருங்கள்.

(1) மரியம் எப்படிப்பட்டவளென்றால் அவள் ஒருகாலம் வரை தன்னை விவாகத்தை விட்டும் தடுத்துக்கொண்டாள். அப்பால், தான் கெர்ப்பமாய்விட்ட காரணத்தால் பெரியோர்களின் வற்புறுத்தலைக்கொண்டு விவாஹம் செய்துகொண்டாள்.

தௌராத்துடைய போதனைக்கு மாற்றமாகத்தான் கெர்ப்பமாயிருக்கும்போது ஏன் விவாஹம் செய்துகொண்டாளென்றும், கன்னியின் பருவத்தை ஏன் வீணாகக் கெடுத்துவிட்டாளென்றும், பல பெண்களை விவாஹம் செய்கிற அஸ்திவாரம் ஏன் போடப்பட்டதென்றும், யூசுபு நஜ்ஜாருக்கு முதலாவது ஸ்திரீ இருக்கிறதுடன் மரியம் ஏன் சம்மதித்து யூசுபு நஜ்ஜாருடைய விவாஹத்தில் வந்தாளென்றும் ஜனங்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். எனினும், நான் (மிர்ஸா) சொல்கிறேன் இவைகளெல்லாம் புகலில்லாமல் நடந்தவைகளாயிருக்கின்றன. இந்த விதத்தில் அந்த ஜனங்கள் இரக்கங்கொள்ளத் தகுந்தவர்களேயல்லாது ஆக்ஷேபிக்கத்தகுந்தவர்களல்ல. (கிஷ்திநூஹ் 26, 16-பக்கம்.)

(முஸ்லிம்களே) உலகத்தில் உதயகிரியிலிருந்து அஸ்தகிரிவரையிலுள்ள முஸல்மான்களில் ஓர் ஆர்ப்பளவு நல் விசுவாசமுள்ள எவனும் ஹஸ்ரத் ஈசா நபி அவர்களையும், அவர்களின் மாதாவாகிய கன்னி மரியம் அவர்களையும், இவ்விதம் இழிவு கூறுவானா; நிந்திப்பானா; தூஷணிப்பானா; மிர்ஸாயி மதத்தார்களே இவைகளை நன்கு கவனித்து முடிவு செய்வீர்களாக.

(12) முஸ்லிம்களே கைருல் முர்ஸலீன் காத்தமன் நபிய்யீனாகிய ஹஸ்ரத் முஹம்மது

---

வர்ணிக்கிறதைப்பாருங்கள். இந்த இரண்டு இடத்தையும் சரி பார்த்துத் தீர்ப்புச்செய்வீர்களாக.

முஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைஹிவ சல்லம் அவர்களைப்பற்றி மிர்ஸா சாஹிபு எழுதுகிறதைப் பாருங்கள்.

(1) ஹஸ்ரத் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய முன்னறிவிப்பிலும் தவறுதல் நடந்திருக்கிறது. (இஸாலா 2-ம் பாகம் 343 ப. துல்பகார் மார்ச்சு 24 1920.)

(2) ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய மிஃறாஜின் பிரயாணமாகிறது இந்த அசுத்த சரீரத்தோடு நடக்கவில்லை. மேலும் அது ஒரு உயர்தரமான கஷ்பாகயிருந்தது; இந்த விதமான கஷ்பில் எனக்கு மிகவும் பரீக்ஷையுண்டு; உண்மையில் அதை விழிப்பில் நடந்ததென்றே சொல்லவேண்டும். (இஸாலா 1-ம் பாகம் 34, 916 ப) (நோட் 596 ப.)

(3) ரசூலுல்லாவுடைய இல்ஹாமும், வஹியும் தவறிவிட்டது. (இஸலா 681 ப துல்பகார் 24 மார்ச்சு 1920)

(4) இந்தக் கஷ்பு (மிஃறாஜுக்குப் போனது) கனவில் நடந்தது. விழிப்பில் நடக்கிறதாயிருந்தால் பகல் வேண்டியதாயிருந்தது. (துஹ்பாகோல்றியா 209 ப.)

(4) நபிநாயகம் அவர்களின்பேரில் இபுனு மரியம் இன்னும் தஜ்ஜாலுடைய பூரணமான உண்மை யாதொரு மாதிரி உண்டாயிராத காரணத்தால் நல்லவிதமாக வெளியாகவில்லை. இன்னும், தஜ்ஜாலுடைய கழுதையின் விபரமும் துலக்கப்படவில்லை. இன்னும், யாஜூஜ் மாஜூஜுடைய ஆழ்ந்த கருத்துவரை ஆண்டவனுடைய வஹீ தெரியப்படுத்தவுமில்லை. இன்னும், தாபத்துல் அர்லுடைய உண்மையும் வெளிப்படுத்தப்படவுமில்லை. மானிட சக்திக்குத் தகுந்தபடி மறைவான விஷயங்களை மூடலான விதமாகத் தெரியப்படுத்தியிருந்தால் என்ன ஆச்சரியம்*. (இஸாலா 1182 ப.)

(6) சந்திரன் (பிளந்தது பிளந்ததல்ல) ஒரு விதமான சந்திர கிரகணமாயிருந்தது. (நஸூலுல்மஸீஹ் 128 ப)

---

* காதியான் மதத்தார்களே, நபிநாயகம் அவர்களுக்கு விளங்க முடியாத அநேக இரகசியங்கள் தமக்கு விளங்கியிருப்பதாக வாதிக்கிறதைக் கவனித்தீர்களா. இனிமேலாவது மிர்ஸா சாஹிபினுடைய மார்க்கம் இன்னதென்று அறிந்துகொள்ளலாமல்லவா?.

(7) அவருக்காக (நாயகமவர்களுக்காக) சந்திர கிரகணம் மட்டும் உண்டானது எனக்காக சந்திரன், சூரியன் இரண்டும் கிரகணமானது. (கஸீதா இஃஜாஜியா 71 ப.)

(8) எனக்கு உதவிக்காக இறைவனிடத்திலிருந்து இதுவரை வெளியான அற்புதங்களை எண்ணும்பக்ஷத்தில் மூன்று இலக்ஷத்தைக்காண அதிகமாயிருக்கலாம். (ஹக்கிக்கத்துல்வஹீ 46 கோட் 163 ப. அகாயிதெ மிர்ஸா 6 ப.)

(9) எனது அற்புதங்கள் பத்து இலக்ஷமாயிருந்தது. (தஙிக் கிறத்துஷ் ஷஹாதத்தைன் 41 ப§.)

---

§ முஸ்லிம்களே! மிர்ஸா சாஹிபு நமது நபிகள் பெருமான் முஹம்மதுர்ரசூலுல்லா அவர்களின் அற்புதங்களைவிட எனது அற்புதங்கள் தொகையாலதிகமென்றும், சிறந்ததென்றும் கூறுவதுடன் தமது அற்புதம் மூன்று இலக்ஷத்திற்கதிகமென்றும் கூறுகிறார். மற்றோரிடத்தில் முந்திச்சொன்னதை மறந்துவிட்டுப் பத்து இலக்ஷமற்புதம் எனக்குண்டாயிருந்ததென்றும் கூறுகிறார். சரி; மிர்ஸா சாஹிபு தம் மனம்போல் இன்னும் எத்தனை இலக்ஷத்தையதிகப்படுத்தினாலும் இங்கு நாமதைப் பற்றி வாதிக்கவில்லை, எனினும் அதன் சாரத்தைக் கவனிப்போம்.

மிர்ஸா சாஹிபுக்கு வயது 68 தான் ஏற்பட்டது. நாம் 70 என்று வைத்துக்கொண்டாலும், ஒரு நாளொன்றிற்கு அற்புதம் 39-க்கு மேல் ஆகிறது. இது அவரின் சிறு பிராயத்தில் குறைந்தது, 15 வயதைத் தள்ளி பார்த்தால் ஒரு நாளிற்கு 50 அற்புதமாகிறது. இவ்விதமானல் மணி ஒன்றிற்கு இரண்டு அற்புதத்தைக் காண அஙிகமாகிறது. இதில் நித்திரை செய்கிறது, மலஜலங்கழித்தல் ஜனங்களோடு முக்கிய விஷயங்களைப் பேசல் கிதாபு கோர்வை செய்தல் முதலிய மற்றும் விஷயங்களைக் கழிக்கவில்லை. இவைகளையெல்லாம் கழித்துப் பார்க்கில் மணி ஒன்றிற்கு எத்தனை அதிகப்படுமோ பெருக்கிப்பார்த்துக்கொள்ளவும்.

ஆகவே, இப்போது மிர்ஸாயி மதத்தார்களி—த்தில் நமது கேள்வி ஒன்றுண்டு. அதாவது, ஏ! மிர்ஸாயி மதத்தார்களே! இவ்வித அற்புதங்களை மிர்ஸா சாஹிபு எந்த உலகத்தில் காட்டியிருக்கிறார்? இந்த மண்ணுலகத்தில்தானா? அல்லது விண்ணுலகத்திலா? அல்லது நர ஜென்மங்கள் வசிக்காத உலகத்திலா? இப்பேர்ப்பட்ட அற்புதங்களை எந்த மஹான்களெல்லாம் கண்டு களிகூர்ந்தார்களோ யாமறியோம்; இதை நன்கு கவனித்து பதிலுரையுங்கள்.

அல்லது மிர்ஸா சாஹிபை முஜத்தித என்று விசுவாசிக்கிற நாச்சியார் கோவில் பா. தாஊத்ஷா சாஹிபு பார்த்திருப்பாரா? நம்ம்—த்தில்

மிர்ஸா சாஹிபுடைய முதல் கலீபாவாகிய மௌல்வி நூருத்தீன் சாஹிபு நாயகம் அவர்களை எதிர்க்கிறார்.

(10) மிர்ஸா சாஹிபு நபி நாயகம் அவர்களின் மூவாயிரம் அற்புதங்களை ஒப்புக்கொண்டதும் ஏதோ ஒரு சூக்ஷியை நாடித் தான் என்று துலங்குகிறது. ஏனெனில், அவரின் முதல் கலிபாவாகிய நூருத்தீன் சாஹிபு நாயகமவர்களின் ஒரு அற்புதத்தைக் கூட ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை. அவர் லீக்ராம்பண்டிதருக்கு எழுதுகிறார்.

சஹீஹான ஹதீதுகளின் உயர்தரக் கிதாபுகளாகிய புகாரி முஸ்லிம் திர்மதீ என்ற கிதாபுகளில் முஃஜிஸா வென்ற எழுத்தின் ஆதாரங் கொடுங்களென்று எழுதுகிறார்' (தக்தீப் பராஹீன அஹ்மதிய்யா 2-ம் பாகம் 209 ப. 23 ஜமாதில்ஸானி 1339 அஹ்லஹதீஸ்.)

(11) பஹிரங்கமான ஜெயத்தின் காலம் நமது நபியவர்களின் காலத்தில் கழிந்துவிட்டது. வெளிப்படையே ஆயினும் இரண்டாவது ஜெயம் மீதமிருக்கிறது. அது முந்தின (நபியவர்களின் காலத்தின்) ஜெயத்தைப் பார்க்கிலும் பிரமாண்டமானதாயும், பெரிதாயும் பிரசித்திபெற்றதாயுமிருக்கிறது. அதனுடைய நேரம் வாக்களிக்கப்பட்ட மஸீஹு (மிர்ஸாவு)டைய நேரமென்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. (ஃகுத்பா இல்ஹாமிய்யா 193 ப. ஷெடி அஹ்லஹதீஸ்.)

(12) அன்றியும், இரண்டு நாமம் இரண்டு நபிகளோடு சில விசேஷங்கள் வைத்திருக்கின்றன. அதாவது, மஹ்தியுடைய நாமம் நமது நபியவர்களோடு சொந்தமாகயிருக்கிறது. பரிசுத்த ஆவியைக்கொண்டு உதவி செய்யப்பட்ட மஸீஹு (மிர்ஸா)வுடைய நாமம் ஹஸ்ரத் ஈசாவுடன் சில விசேஷம் வைத்திருக்கிறது. இன்னும், நபிமார்களின் முன்னறிக்கையில் கடைசி காலத்தின் இமாமிடத்தில் இந்த இரு இலக்ஷணங்களும் ஒன்று

---

வினவினால் நமக்கெட்டியவரை பத்து இலக்ஷமற்புதமல்ல; பத்து இலக்ஷம் பொய் யென்று பகருதல் கூடும், இதையன்றி வேறொன்று கூற நம்மால் முடியாது.

சேர்ந்துவிடும் என்றும் இருந்தது. (ஹாஷியா அர்பயீன் 12 ப. நிர். 1 11. ப. 23 ஜமாதிஸ்ஸானி 1339 அஹ்லஹதீஸ்.)

(13) அஹ்லபைத்துகள் சஹாபாக்கள் முதலியோரைப்பற்றி நமது நாயகம் அவர்கள் வெகுவாய்ப் புகழ்ந்திருக்க மிர்ஸா சாஹிபு அன்னவர்களை இழிச்சொற்களைக் கொண்டு தாக்கி நிந்திக்கிறதைப் பாருங்கள்.

(1) முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய குடும்பமென்பது உலகக் குடும்பமென்பது கருத்தல்ல. மேலும், குடும்பத்தின் கருத்தாவது எவர்கள் பிள்ளைகளைப்போல நாயகம் அவர்களின் ஆத்தும முதலுக்கு வாரீசாக ஏற்படுகிறார்களோ அவர்களாயிருக்கும். ஆல், என்பதின் கருத்து ஒவ்வோரிடத்திலும் இதாகவேயிருக்கிறது. (தரியாக்குல்குலூபு 99 ப. ஹாஷியா தரி 247 ப)

(2) பழைய கிலாபத்தின் சண்டையை ஒழியுங்கள். இப்போது புதிய கிலாபத்தை எடுங்கள். ஒரு உயிருள்ள அலி உங்களிடத்திலுண்டாயிருக்கும்போது; அவரை விட்டு விட்டு என் செத்துப்போன அலியைத் தேடுகிறீர்கள். (அல்ஹுக்கும் நிர். 4. வால்யம் 4. 1900 நவம்பர் 10. துல்பகார் 24 மார்ச்சு 1920)

(3) ஏ! ஷியா வகுப்பார்களே! ஹுசைன் உங்களுக்கு மோக்ஷம் கொடுக்கிறவரென்று பிடிவாதம் பண்ணுறீர்கள். ஏனெனில், நான் மெய்யாகவே சொல்கிறேன் இன்று உங்களில் அந்த ஹுசைனைக்காண மஹத்துவம் பெற்ற ஒருவனிருக்கிறான். (தாபிஉல்பலா 13 ப.)

(4) இந்த ஜனங்கள் அறியாததைப்பற்றிக் கைசேதமாயிருக்கிறது. என்னவெனில், குர்ஆனோ இமாம் ஹுசைனுக்கு மகன் என்ற பதவியைக்கூடக் கொடுக்கவில்லை. அன்றியும், (அவர்களின்) நாமங்கூடச் சொல்லப்படவில்லை. அவர்களைவிட ஸைதுடைய பெயர் குர்ஆனில் உண்டாயிருப்பதினாலே அவர் நல்லவராயிருக்கிறார். (நுஸூலமஷீஹு 45 ப.)

(5) ஏ! ஜனங்களே, இமாம் ஹுசைனில் நின்றும் உங்களுக்கு பார்க்கப் பிரயோஜனம் ஏதாவது கிடைத்திருந்தால்

காட்டுங்கள்? நான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் உடைய வாரிசாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறேன். ஆதலால், நான் பரிசுத்தமான கோத்திரமாகயிருக்கிறேன். நீங்கள், அவநம்பிக்கையாய்ச் செத்தப்போன (ஹுசைன்) பஸ்டத்தில் நின்றும் உத்தரவு தேடுகிறீர்கள். நான் ஆண்டவனுடைய பஸ்பமாயிருக்கிறேன். எனினும், உங்களுடைய ஹுசைன் பகைவர்களின் பஸ்பமாயிருக்கிறான். இன்னும், என்னிலும் உங்களுடைய ஹுசைனிலும், பெரிய வித்தியாசமிருக்கிறது. ஏனெனில் எனக்கோ இறைவனிடத்திலிருந்து பக்க பலமும் உதவியும் கிடைத்துக்கொண்டிருக்கிறது. (இஃஜாஸே அஹ்மதி 69, 81, 70 ப.)

(6) அபூஹுறைரு மந்த புத்தியுடையவனும், நற்புத்தியில்லாதவனுமாயிருந்தான் (இஃஜாஸே அஹ்மதி 52, 69, 81, 18 ப)

(7) உண்மையான விஷயமாவது இபுனு மஸ்ஊது ஒரு சாதாரண மனிதனயிருந்தான். (இஸாலா அவ்ஹாம் 596 ப. அல்கௌலுஸ்ஸஹீஹ் 7 ப.)

> மிர்ஸா சாஹிபினுடைய அன்பார்ந்த முரீது மௌல்வி அப்துல்கரீம் சியால்கோட்டி ஹஸ்ரத் அலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பற்றித் தனது கிதாபில் எப்படி நிந்திக்கிறானென்று பாருங்கள்.

(8) அலி கோழை; பலயீனமானவன், உள்ளொன்று வெளியென்றாகக் காலங்கழிக்கிறவன்; இவ்விதமாகச் சற்குணத்தின் பலம் குறைந்துவிட்டதினால அவரின் பிள்ளைகள்பேரிலும் (அக்குறை) உண்டாயிருக்கிறது. அலியும் அவரின் குடும்பமும் மிகவும் பலமற்றவர்களும், அஜாக்கிறதையானவர்களாயும்; இன்னும், பங்கப்பட்டவர்களாயும் சொல்லத் தகாத ஜனங்களுமாயிருக்கிறார்கள். (கிலாபத்தெருஷிதா 24, 25, 20 ப)

(14) நமது நாயகம் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் எனக்குப் பின்னால் வேறு நபி கிடையாதென்றும், தஜ்ஜாலைத்

தவிர ஒருவரும் நபி, ரசூல் என்று வாதாடமாட்டார்களென்றும் திருவுளமாயிருக்க; மிர்ஸா சாஹிபு தாவாச்செய்கிறதைப் பாருங்கள்.

(1) அல்லாஹுத்தஆலா என்னிடத்தில் பேசியிருக்கிறானென்ற விஷயம் தீர்மானிக்கப்பட்டதாய் இருக்கிறது. இன்னும், மறைவான விஷயங்கள் என்பேரில் வெளியாயிருக்கிற அவ்வளவு 13-ம் நூற்றாண்டு ஹிஜிரியாகிய இதுவரை என்னைத் தவிர யாருக்கும் இந்தப் பாக்கியம் கொடுக்கப்படவில்லை இதை யாராவது மறுத்தால் ஸ்தாபிக்கவேண்டிய பாரம் அவர்களின் தோள்மீதிருக்கிறது. சுருக்கிச் சொல்லில் இந்தப் பெரும்பாகமான அல்லாவுடைய வஹீயிலும், இன்னும் மறைவான விஷயங்களிலும் இந்த உம்மத்தில் நின்றும் நானே தனிச் சொந்தமானவனாயிருக்கிறேன். எனக்கு முந்தி எவ்வளவு அவுலியாக்களும் அப்தால்களும், அக்தாபுகளும் இந்த உம்மத்திலிருந்து சென்றிருக்கிறார்களோ அவர்களுக்கு இந்தப் பாக்கியத்தின் பெரும் பாகத்தைக் கொடுக்கப்படவில்லை. ஆகலால், இவ்வித காரணங்களைக்கொண்டு நபி யென்ற பெயர் பெறுகிறதற்காக நானே சொந்தமாக்கப்பட்டவனாயிருக்கிறேன். மற்றெல்லா ஜனங்களும் இந்த நாமத்திற்குரியவர்களல்ல. ஏனெனில், அதிகமான வஹீயும், அதிகமான மறைவான விஷயங்களும் இதிலே நிபந்தனையாயிருப்பதினால அந்த ஷர்த்துகள் இவர்களில் காணப்படவில்லை. (அல்கவ்லுஸ்ஸஹீஹ் 4 ப. ஹக்கிக்கத்துல்வஹீ 390, 391 ப* )

(2) நமது தாவாவாவது ஒருவிதத்தில் நான் உம்மத்தியாயிருக்கிறேன். ஒரு விதத்தில் ரசூலுல்லாவுடைய நுபுவத்தின் பாக்கியத்தினால் நபியாயிருக்கிறேன். நபியைக்கொண்டு கருத்தாவது ஏகனிடத்தில் அதிகமாய் எதிர்ப்பட்டு பேசுகிற சிறப்பைப் பெறுகிறதே.

முஜத்திது சாஹிபு சர்ஹிந்தி தமது கிதாபில் எழுதி

---

* மிர்ஸா சாஹிபு தன்னை நபி யென்றும் வேறு எவ்விதமாகவும் சொல்லிக்கொண்டதாக எனக்குப் புலப்படவில்லை யென்று சொன்ன நாச்சியார்கோவில் பா. தாவூத்ஷா சாஹிபு இப்போதாவது கண்ணை விழித்துப்பார்ப்பாரா?

யிருக்கிறதாவது; இந்த உம்மத்திலுள்ள சில மனிதர்கள் இறைவனிடத்தில் எதிர்ப்பட்டு பேசுவதைக்கொண்டு சொந்தமாக்கப்பட்டவர்களாக யிருக்கிறார்கள். இன்னும், கியாம நாள்வரை அப்படியே இருப்பார்கள். எனினும், எவனுக்கு ஏராளமாக இவ்வித வார்த்தையாடுகிறது எதிர்ப்படுகிறதைக்கொண்டு சிறப்பாக்கப்படுமோ, இன்னும் ஏராளமான மறைவான விஷயங்கள் அவன் பேரில் வெளியாக்கப்படுமோ அவன் நபியென்று சொல்லப்படுகிறான். (ஹக்கீக்கத்துல்வஹீ 390, 391 ப. அல்கௌலுஸ் ஸஹீஹ் 3 ப.)

(3) நான் அற்புதங்கள் காட்டமுடியுமென்று மட்டும் பதிலுரைக்க மாட்டேன். மேலும், ஏகனின் கிருபையினால நான் கொடுக்கிற பதிலென்னவென்றால்; அவன் (ஆண்டவன்) எனது தாவாவை ஸ்தாபிக்கிறதற்காக எவ்வளவு அற்புதங்காட்டியிருக்கிறானென்றால் மிகவும் குறைந்த நபிகளே இவ்வளவு அற்புதங்கள் காட்டியிருக்கிறார்கள், (ஹக்கீக்கத்துல்வஹீ அநுபந்தம் 136 ப. அல்கௌலுஸ்ஸஹீஹ் 4 ப.)

இந்த ஏழை இறைவனிடத்திலிருந்து இந்த உம்மத்துக்காக புது விஷயங்களை உண்டுபண்ண வந்திருக்கிறேனென்பதிற் சந்தேகமில்லை. அப்பேர்ப்பட்ட முஜத்திதும் (புது விஷயங்களை உண்டுபண்ண வந்திருக்கிறவனும்) ஒரு அர்த்தத்தில் நபியாகவே யிருக்கிறான். அவனுக்கு நபிப்பட்டம் பூரணமில்லாவிட்டாலுஞ் சரி; எனினும், பிரிவினுடைய விதமாக ஒரு நபியாகவே இருக்கிறான். ஏனெனில், அவன் இறைவனுடன் வார்த்தையாடுகிற ஒரு மகிமையை வகித்திருக்கிறான். மறைவின் சங்கதிகள் அவன் பேரில் வெளியாக்கப்படுகின்றன. இன்னும், ரசூல்மார்கள் நபிமார்களுடைய வார்த்தையைப்போல் அவனுடைய வஹியிலும் ஷைத்தான் புகுதுகிறதை விட்டும் பரிசுத்தமாக்கப்படுகின்றது. இன்னும், ஷரீஅத்தினுடைய மூளையை (சத்தை) அவன்பேரில் திறக்கப்படுகின்றது. அப்படியே நபிமார்களைப்போல் ஏற்படுத்தப்பட்டனாக வருகிறான். அன்றியும், தன்னை உயர்ந்த சத்தத்தைக்கொண்டு வெளிப்படுத்துகிறது அவன்மீது பர்லாகயிருக்கிறது. அவனை மறுக்கிறவன் ஓரளவு தண்டனைக்குத்தகுந்தவனாயிருக்கிறான். நுபுவத்தின் அர்த்தமாகிறது மேற்சொல்லப்பட்ட

விஷயங்கள் அவனிடத்தில் காணப்படுகிறதைத் தவிர வேறொன்றும் இல்லை. (தௌஸீஹுல்மராம் 864, 865 ப.)

(4) நாம் ரசூலும், இன்னும் நபியாகவும் இருக்கிறோம். இதுவே நமது தாவாவாகயிருக்கிறது. (பதுர் 5 மார்ச்சு 1908.)

(5) இதிலிருந்து 20 வருஷத்திற்கு முன்னேயே எனது நாமத்தை முஹம்மது என்றும் அஹ்மது என்று வைத்திருக்கிறான். (எக்கலத்திக்கா இஸாலா) (தாரீகே மிர்ஸா 50 ப.)

(6) எவன் கைவசம் எனது உயிரிருக்கிறதோ அவன்மீது சத்தியமாக நான் கூறுகிறதாவது அவனே என்னை அனுப்பியிருக்கிறான். இன்னும், அவனே எனது நாமத்தை நபி யென்று வைத்திருக்கிறான்; அவனே என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பெயரைக்கொண்டழைத்திருக்கிறான். நமது தாவாவாவது நாம் ரசூலும், இன்னும் நபியாகவும் இருக்கிறோம். அன்றியும், அல்லாஹுத்தஆலா அளவிலும், விதத்திலும், மற்றவர்களைக் காண யாரிடத்தில் அதிகமாகப் பேசுகிறானோ; இன்னும், அவனின் முன்னறிக்கைகளும் ஏராளமாய் இருக்குமோ அவனை நபி யென்று சொல்கிறார்கள். இந்த அர்த்தம் நம்மீது உண்மைப் படுகிறதால் நாம் நபியாக இருக்கிறோம். நம்மீது பல வருஷங்களாக வஹீ இறங்கிக்கொண்டிருக்கிறது. இன்னும், ரஹ்மானுடைய பல அடையாளங்கள் இதன் உண்மையைப்பற்றி சாக்ஷி கொடுத்துவிட்டது. இப்படி யிருப்பதனால் நாம் நபியாக இருக்கிறோம். (அல்பதுர் மார்ச்சு 5. 1908. அகாயிதே மிர்ஸா 5 ப.)

(7) எனக்கு இல்ஹாம் உண்டாயிருக்கிறதாவது; ஓ! ஜனங்களே நான் உங்களெல்லாரிடத்திலும் அல்லாவுடைய ரசூலாய் வந்திருக்கிறேன். (ஹக்கீக்கத்துல்வஹீ 391 ப.) இஸ்தின் காபுல் முஸ்லிமீன்.)

(8) இறைவன் அருள்கிறான்; நீ (மிர்ஸாவே) சந்தேகமின்றி ரசூலாயிருக்கிறாய். ஹக்கீக்கத்துல்வஹீ 107 ப. இஸ்தின்காபுல் முஸ்லிமீன்.)

(9) ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைத் தவிர மற்றெல்லா நபிமார்களைப்பார்க்கிலும் நான் மேன்மையாக இருக்கிறேன். (ஹக்கீக்கத்துல்வஹீ அநுபந்தம் 136 ப. ஜட்ஜியின் தீர்ப்பு)

(10) பிளேக் என்ற வியாதி உலகத்தில் எழுபது வருஷம் தவறாமல் இருந்தாலும் அல்லாஹுத்தஆலா காதியான் தேசத்தை அதன் பயங்கரமான கெடுதல்களை விட்டும் காப்பாற்றி வைப்பான். ஏனெனில், இது அவனுடைய ரசூலின் இராஜதானிப்பட்டணமாக இருக்கிறது. எவன காதியானில் தனது தூதரை அனுப்பினானோ அவனே உண்மையான நாயன். (தாபிஉல்பலா 10, 11 ப.)

(11) குர்ஆனில் நற்சமாசாரமாய்ச் சொல்லப்பட்ட அஹ்மது நபீ நானே. (இஸாலா முதற்பதிப்பு 673 ப. அக்காயிதே மிர்ஸா 3 பக்கம்.)

(12) நீ உண்டாகாவிட்டால் நான் வானத்தைப் படைக்கமாட்டேன். (ஹக்கீகத்துல்வஹீ 99 ப. இஸ்தின்காபுல் முஸ்லிமீன்.)

(13) நான் வஹீ அன்றிப் பேசமாட்டேன். (அர்பயீன் 3. 44 பக்கம்.)

(14) ஆண்டவன் உன்னை ரஹ்மத்தாக அனுப்பியிருக்கிறான். (ஹக்கீக்கத்துல்வஹீ 85 ப. அல்பகார் மார்ச்சு 24. 1920.)

(15) நீ எங்கே யிருந்தாலும் ஆண்டவன் உன்னோடிருப்பான். (அஞ்சாமே ஆத்தம் அநுபந்தம் 17 ப.)

(16) ஆண்டவன் எனக்கு ஹௌதுல் கௌதரைக் கொடுத்திருக்கிறான். (அஞ்சாமே ஆத்தம் 58 ப.)

(17) எனக்கு இல்ஹாமுண்டானது அதாவது நம்முடைய நபி (மிர்ஸா) தனது விருப்பத்தினால் பேசமாட்டார். ஆயினும், அவர் பேசுகிறது வஹீயைக்கொண்டாயிருக்கிறது. அவர் வில்லினுடைய இரண்டு மூலைகளைப்பார்க்கிலும் அதிகச் சமீபமாக ஆண்டவனிடத்தில் நெருங்கினார். என்னையும் பொய்யாக்குகிறவர்களையும் விட்டு விடு. நான் அவர்களைக்கொண்டு அறிந்து கொள்வேன். (அர்பயீன் 3, 36, 44 ப.)

### (15) மிர்ஸா சாஹிபு தம்மீது இறங்குகிற இல்ஹாம் வஹியைப்பற்றித் தமது நம்பிக்கையைக் காட்டுகிறார்.

(1) நான் ஆண்டவன்மீது சத்தியம் செய்து சொல்லுகிறேன். குர்ஆன்ஷரீபு மீதும் மற்ற அல்லாவின் வேதங்களின்

மீதும் எவ்விதமாக ஈமான் கொண்டிருக்கிறேனோ அவ்விதமே எனது இல்ஹாமின்பேரிலும் ஈமான்கொண்டிருக்கிறேன். எவ்விதமாக குர்ஆனஷரீபை உறுதியாயும், நிச்சயமாயும் அல்லாவுடைய கலாமென்றும் என்னுகிறேனோ அவ்விதமே என்மீது இறங்குகின்ற கலாமையும் அல்லாவுடைய கலாமென்று நிச்சயமாய் என்னுகிறேன். (ஹக்கீக்கத்துல்வஹீ 211 ப. அல்கௌலுல்ஸஹீஹ் 4. ப)

(16) மிர்ஸா சாஹிபு தம்மை மஹ்தியென்றும் மஸீஹ்யென்றும், கூறுகிறதுடன் ஹஸ்ரத்து மஹ்தி அவர்களைத் தூஷணித்தும் யெழுதுகிறார்.

(1) நான் வாக்குச்சொல்லப்பட்ட மஸீஹாயிருக்கிறேன். (இஸாலா முதற்பதிப்பு 665 ப. 909 ப.)

(2) வாக்குச் சொல்லப்பட்ட மஹ்தி நானே. ஹஸ்ரத்து அபூபக்கர்தானென்ன? சில நபிமார்களைப்பார்க்கிலும் மேன்மையாயிருக்கிறேன். (அக்காயிதே மிர்ஸா 3 ப. இஷ்திஹார் மகியாருல் அகியார் 11 ப.)

(3) மிர்ஸா சாஹிபு ஹஸ்ரத் மஹ்தீ அலைஹிஸ்ஸலாமவர்களை இரத்தப்பிரியமுள்ள கொல்லக்கூடிய மஹ்தீ யென்றும் யெழுதுகிறார் (துஹ்பா கோல்றிய்யா 27 ப. தூர்ரேதமீன் 75, 55 பக்கம்.)

(17) மிர்ஸா சாஹிபு ஹிந்துக்கள், ஆரியர்கள், முஸ்லிம்கள் முதலிய எல்லோருக்கும் தம்மைக் குருவென்றும் வழிகாட்டி என்றும் கூறுகிறார்.

(1) நாம் முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹாயும். ஹிந்துக்களுக்கு கிருஷ்ணனாகவும் இருக்கிறேன். (லெக்சர் சியால்கோட் 33 ப.)

(2) நீ ஆரியர்களின் பாத்துஷாவென்று எனக்கு இல்ஹாம் உண்டாயிருக்கிறது*. (ஹக்கீக்கத்துல்வஹீ அநுபந்தம் 85 ப.) (அர்பஈது தல்கயிகா 1338.)

---

* மிர்ஸா சாஹிபு தமது மனம்போனபடி தம்மை மஹ்தியென்றும், ஈசாவென்றும், நபியென்றும், ரசூலென்றும் இல்ஹாமிற் சொல்லி

(18) மிர்ஸாசாஹிபுடைய பற்பல இல்ஹாம்கள்.

(1) குர்ஆனில் கூறப்பட்டுள்ள மஸ்ஜிது அக்ஸாவென்னும் பைத்துல் முகத்திசாகிறது எனது ஊராகிய காதியானின் பள்ளிவாசலேயாகும். மக்கா, மதீனா காதியானுடைய பெயர்கள் கௌரவமாக குர்ஆனில் எழுதப்பட்டிருக்கின்றன. தஜ்ஜாலென்பதின் கருத்தாகிறது பாதிரிகளின் கூட்டமாக இருக்கும். அவன் கழுதை யென்பது புகை வண்டியாக இருக்கும்.

§ ஆத்மசக்தி படைத்திராத உலமாக்களே! தாபத்துல் அர்லுவென்னும் ஜந்து வாகும். (மீனாரத்துல்மஸீஹ் இஸாலா 39 ப. 1103; 1104, 925, 1180.)

(2) உனது (ஆண்டவனது) ஹைலையாவது அல்லது நஜீசையாவது, அல்லது அசுத்தத்தையாவது தெரிந்துகொள்ள

---

யிருக்கிறதுடன் ஒருபோது தம்மை ஆரியர்களின் பாதுஷா வென்றும் கூறுகிறார். மிர்ஸா சாஹிபு ஆரியர்களிடத்தில் பட்டபாடு அவர் மாணமாய்ப்போனாலும்; இன்னும் அவருக்கு ஞாபகமிருக்கலாம். உதாரணமாக ஆரியர்களின் குருவாகிய லீக்ரும்பண்டிதர் மிர்ஸா சாஹிபின் பாராஹீனே அஹ்மதியா வென்ற அவரின் கிதாபிற்கு பாராஹீனே அஹமக்கியா அதாவது முட்டாளுடைய கிதாபு யென்ற சதாகாலமும் எழுதிவந்திருக்கின்றனர். இது இங்ஙனமாக மிர்ஸா சாஹிபு ஆரியர்களுக்குத் தான் இராஜாவென்ற கனவு கண்டு கொண்டிருக்கிறதைப் பார்க்க மிகவும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றது.

§ மிர்ஸா சாஹிபு எல்லா மனுக்களுக்கும் வழிகாட்டியாயும், சர்வ சக்தியுள்ளவராயும் இருந்தும், மக்காவில் போய் ஹஜ்ஜு செய்யவில்லை. தஜ்ஜாலின் கழுதையாகிய ரயிலில் ஏறக்கூடாதென்ற நோக்கத்தினலோ அல்லது இஸ்லாமிய ராச்சியத்திற்குப்போனால் நமது கதி யென்னவாகும் என்ற நோக்கத்தினலோ நமக்கொன்றும் விளங்கவில்லை. மிர்ஸாயி மதத்தார்களே! இதை விளக்கவேண்டும். அன்றியும், இரயிலுக்குக் கழுதை யென்பது கருத்தானல் கப்பல், ஆகாயக்கப்பல், சப்மரைன், செப்பளின் முதலிய இயந்திரங்களுக்கு மிர்ஸா சாஹிபுடைய இல்ஹாமில் என்ன கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ யாமறியோம். எனினும் மிர்ஸாயி மதத்தார்களிடத்தில் நமக்கொரு கேள்வியுண்டு. ஓ! மிர்ஸாயி மதத்தார்களே! நீங்கள் அந்தக்கழுதையின்பேரில் ஏறியிருக்கிறீர்களா? அப்படி நீங்கள் தஜ்ஜாலின் கழுதையின்மீது ஏறியிருந்தால் தங்களின் பெயர் என்ன? கவனித்துப் பதிலுரைப்பீர்களாக.

வேண்டுமென்று பாபூ, இலாஹீ பக்ஷ் நாடுகிறான். (ஹக்கீக் கத்துல்வஹீ அநுபந்தம் 193 ப. துல்பகார் மார்ச்சு 24 1920.)

(3) ஆண்டவன் அர்ஷின்பேரில் என்னைப் புகழ்கிறான். இன்னும் என்னளவில் வருகிறான். (அஞ்சாமேஆத்தம் 55 ப.)

(4) ஆண்டவன் என்னைப்பார்த்துச் சொல்கிறான். (ஓ மிர் ஸாவே!) உனது நாமம் பூரணமாகும். எனது நாமம் பூரணமாக மாட்டாது†. (அர்ப்பயீன் 3. 36 ப. கிர் 2. 15 ப.)

(5) ஆண்டவன் சொல்கிறான் (ஓ மிர்ஸாவே) நான் உன்னோடும் உன்னுடைய வீட்டாரோடுமாயிருக்கிறேன். (இவர்கள் விஷயத்தில்) எது உமது நாட்டமாயிருக்கிறதோ அதையே நான் நாடுவேன். (ஹக்கீக்கத்துல்வஹீ 106 ப. அர்ரஷீது துல் ஹஜ் 1338.)

(6) ஆண்டவன் மிர்ஸா சாஹிபுக்குச் சொல்கிறான் நான் நோம்பும் வைக்கிறேன்; திறக்கவும் செய்கிறேன். (ஹக்கீக்கத் துல்வஹீ 104 ப. ௸ அர்ரஷீது.)

(7) ஆண்டவன் மிர்ஸா சாஹிபுக்குச் சொல்கிறான் நான் தவறுதலும் செய்கிறேன்; ஒழுங்காகவுஞ்செய்கிறேன். (ஹக்கீக் கத்துல்வஹீ 103 ப. ௸ அர்ரஷீது.)

(8) அல்லாஹுதஆலா மிர்ஸா சாஹிபுடைய தந்தையின் மரணத்தைப்பற்றித் துக்கம் விசாரிக்கிறான். (நுசூலமஸீஹ் 37 ப. துல்பகார் மார்ச்சு 24 1920.)

(9) மிர்ஸா சாஹிபின் மனைவி உம்முல் மூமினீன் அதாவது மூமீன்களுக்கெல்லாம் மாதாவாம். (பதுர்ஜூலை 11 1907 முறக்கரு காதியான் 32 ப.)

(19) மிர்ஸா சாஹிபை ஒப்புக்கொள்ளாதவர்கள் காபிர்களாம்.

(1) நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கிறேன். ஆண்டவன் சாதாரணமாக வானத்திலிருந்து அற்புதங்களை

† கியாம நாள்வரை இவரின் பெயர் எப்படி மங்கும்? இவர் காலத்திற்கு முந்தியுள்ள மற்றுநபிகள் ஈசா நபிகள் முதலியோரின் நாமம் ஒவ்வொரு காலத்திலும் மங்காமல் பிரகாசித்துக்கொண்டிருக்கும்போது இவரின் நாமம் மங்குகிறதற்கு என்ன காரணம்?

வெளியாக்கிவிட்டான். எந்த மனிதனின்மீது நான் வாக்களிக்கபபட்ட மஸீஹ் யென்ற விஷயமாக ஆண்டவனில் நின்றும் அத்தாக்ஷி பூர்த்தியாய்விட்டதோ; இன்னும் எனது தாவாவின்பேரில் அவன் தெரிந்துவிட்டானோ (அவன் எனனை ஒப்புக்கொள்ளாவிட்டால்) கேள்கப்படுவான ஏனெனில் இறைவனால் அனுப்பபபட்டவர்களை விட்டும் முகத்தைத் திருப்பிக்கொள்கிறது கண்டிக்கத்தகாத விஷயமல்ல. இப்படியே நாயகம் அவர்களின் மீதும் எனது விசுவாசமிருக்கிறது என்னவெனில் எவனுக்கு நாயகம் அவர்கள் (இவ்வுலகத்திற்கு) வந்ததும் அவர்களினழைப்பும் தெரிந்ததுமன்றி ஆண்டவன் சமுகத்திலிருந்து நாயகமவர்களின் தீர்க்கதரிசனத்தின் அடையாளமும் பூர்த்தியடைந்துவிட்ட பின்னால் (அவன் இஸ்லாமாகாமல்) குபிரின்பேரில் மரணமடைந்துவிட்டால் நித்திய காலத்தின் நரகத்திற்குப் பாத்திரவானாகிவிடுவான். (ஹக்கீக்கததுல்வஹீ 79. அலகொளனுஸ்ஸஹீஹ் 8 ப.)

(2) குபிரென்பது இரண்டு வகையாயிருக்கும். ஒன்றாவது குபிராகிறது நாயகமவர்களை ரசூலென்று விசுவாசியாமலும் இஸ்லாமார்க்கத்தை மறுக்கிறதுமாயிருக்கும். இரண்டாவது குபிராகிறது வாக்களிக்கப்பட்ட மஹ்தியை ஒப்புக்கொள்ளாததாயிருக்கும். (ஆகக் குபிரிரண்டு வகையாகயிருக்கிறது) ஆயினும், நன்றாய்க்கவனித்துப் பார்க்கும்பக்ஷம் இந்த இருவகையான குபிரும் ஒரே வகையில் புகுந்ததாயிருக்கிறது. (ஹக்கீக்கத்துல்வஹீ 59 ப. அக்கௌளனுஸ்ஸஹீஹ் 8 ப)

மிர்ஸா சாஹிபு தமது முரீதுடைய ஒரு கேள்விக்குப் பதில் எழுதுகிறார்.

(3) வினா.

எஜமான் ஆயிரக்கணக்கான இடங்களில் கலிமாச் சொல்லுகிற கிபுலாவுடையவர்களைக் காபிர் என்று கூறுவது எவ்விதத்திலும் பொருந்தாதென்று வரைந்திருக்கிறீர்கள். இதனால், எந்த மூமின்கள் தங்களைக் காபிர் என்று கூறி (தாங்கள்) காபிர்களாகிவிட்டார்களோ அவர்களைத்தவிர தங்களை (காபிரென்று கூறாமல்) ஒப்புக்கொள்ளாதவர்கள் காபிர்களாகமாட்டார்களென்பது நன்கு துலக்குகிறது. இப்படியிருக்க தாங்கள் அபதுல்

அக்கீம்கானுக்கு எழுதியிருப்பதில் எந்த மனிதனுக்கு எனது (நான் மஹ்தி, மஸீஹ் என்ற) அழைப்புத் தெரிந்த பின்னால் அவன் ஒப்பவில்லையோ அவன் இஸ்லாமல்லவென்று எழுதியிருக்கிறீர்கள். அன்றியும், தாங்கள் தரியாக்குல்குலூபு என்ற கிரந்தத்திலும் என்னை ஒப்பாதவன் காபிராக மாட்டானென்றும மெழுதியிருக்கிறீர்கள். (இவ்விதமெல்லாம் எழுதிவிட்டு) இப்பொழுது என்னை மறுத்தவன் காபிர் என்று எழுதுகிறீர்கள். ஆகையால், முன் பின் சொற்களில் வித்தியாசம் ஏற்படுகின்றது.

ஜவாபு.

தாங்கள் (என்னை)க் காபிர் என்று சொல்லுகிறவர்களையும், இன்னும் என்னை ஒப்புக்கொள்ளாதவர்களையும் இரண்டுவிதமான மனிதர்களாய்த் தீர்மானித்திருக்கிறீர்கள். உண்மையில், இறைவனிடத்தில் (இரண்டும்) ஒரே விதமாக இருக்கிறது. (ஹக்கீக்கத்துல்வஹீ 163 ப. பைஸலாஹாக்கும் 12 ப.)

மிர்ஸா சாஹிபின் அருமைப் புதல்வர் மிர்ஸா மஹ்மூது அஹ்மது என்பவரால் எழுதப்பட்ட தஷ்ஹீதுல் அத்ஹான் என்ற நூலின் கிர். 4 ஜிந்து 6 எப்பிரல்மீ 1911 135-ம் பக்கத்தில் எழுதியிருப்பதாவது:-

(4) எல்லாவற்றிற்கும் முன்னதாக நான் ஹஸ்ரத்து சாஹிபா (மிர்ஸாவா)ல் இல்ஹாம மூலமா யெழுதப்பட்டிருக்கின்ற வாசகத்தை எழுதுகிறேன். அதை ஒரு அஹ்மதியனாலும் மறுக்கமுடியாது. அந்தக் கடிதத்தில் (மிர்ஸா) தாங்கள் அப்துல் ஹக்கீம் கானுக்கு ஜவாபாக எழுதுகிறார்கள். அதாவது, எனது (மிர்ஸா) ஜமாஅத்தில் சேராத ஆயிரக்கணக்கான ஜனங்கள் நல்லவர்களைவிட்டும் நீங்கினவர்களாவென்று தங்களுக்கு (அப்துல் ஹக்கிம்கானுக்கு)ம் எண்ணமிருக்கிறது. அப்படியானால் (மிர்ஸா சாஹிபு சொல்கிறார்) ஆயிரக்கணக்கான யகூதி, நஸாராக்கள் இஸ்லாம் மார்க்கத்தில் சேராதவர்களும், நல்லவர்களைவிட்டும் நீங்கினவர்களாவென்று தாங்கள் எண்ணிக்கொள்ள வேண்டியது. எவ்விதத்திலும், எந்த மனிதனுக்கு எனது அழைப்புச் சேர்ந்த பின்னால் என்னை ஒப்புக்கொள்ளவில்லையோ அவன் இஸ்லாமல்ல.

இவைகளை எழுதிவிட்டு மிர்ஸா சாஹிபின் புத்திர பாக்கியம் மிர்ஸா மஹ்மூது என்பவர் தமது வியாக்கியானத்தை எழுதுகிறார்.

இப்பொழுது இதிலிருந்து மூன்று விஷயம் வெளியாகிறது. ஒன்றாவது ஹஸ்ரத் (மிர்ஸா) உடைய அழைப்புத் தெரிந்த பின்னால் விசுவாசியாதவன் முஸல்மானல்ல. இரண்டாவது எவர்கள் (மிர்ஸா) காபிர் என்பதில் பிரயாசைப்பட்டார்களோ அவர்கள் மட்டும் காபிரல்ல. மேலும், ஒப்புக்கொள்ளாத எந்த மனிதனும் காபிரே. மூன்றாவது அவன் இறைவனிடத்தில் தண்டனைக்குத் தகுந்தவன் என்பதே

இவைகளை எழுதிவிட்டுக் கிருஷ்ணன் காதியானியின் செல்வப் புத்திரர் இன்னும் எழுதுகிறார்.

(20) மிர்ஸா சாஹிபு மஸீஹ் மஹ்தி என்பதில் சந்தேகப்பட்டவர்களும் காபிர்களாம்.

(1) மிர்ஸா மஹ்மூது எழுதுகிறார்:- ஹஸ்ரத் மஸீஹ் சொன்னார்கள். என்னை மஸீஹென்றெண்ணிவிட்டு என்னிடத்தில் பைஅத்துச் செய்யாமல் தாமதித்தவனும் காபிரே.

(2) ஒரு ஹிந்து ரசூலுல்லா அவர்களை மெய்யரென்று ஒப்புக்கொண்டு மனதிலும் விசுவாசித்ததுமன்றி வெளிரங்கமாக மறுக்கவுமில்லை. ஆயினும், சில காரணங்களால் பஹிரங்கமாக இஸ்லாமாகாமலிருந்தால் நாம் ஒரு போதும் அவனை இஸ்லாம் என்று எண்ணமாட்டோம். மார்க்கம் அவனிடத்தில் இஸ்லாமிய ஸ்திரீயை விவாகஞ்செய்து கொடுக்கிறதைச் சம்மதிக்கவில்லை. இதேவிதமாக அஹ்மதியர் (மிர்ஸாயி)களைத் தவிர உள்ளவர்களுமாம். (தஷ்ஹீதுல் அத்கான் 140, 141 ப. அல்கௌலுல்ஸலஹீஹ் 9 பக்கம்)

(3) இன்னும், எப்போது தீபேத்து, ஸ்விட்சர்லாந்து தேசங்களில் வாழும் ஜனங்கள் ரசூலுல்லாவை ஒப்புக்கொள்ளாததுபற்றி காபிராயிருந்தால் ஹிந்துஸ்தானில் வாழும் ஜனங்கள் வாக்களிக்கப்பட்ட மஹ்தியை (மிர்ஸாவை) ஒப்புக்கொள்ளாவிட்டால் எப்படி மூமினாயிருப்பார்கள். (தஷ்ஹீதுல் அத்ஹான் 122 பக்கம். அல்கௌலுல்ஸலஹீஹ் 9 முதல் 10 வரை)

(21) மிர்ஸா சாஹிபை மறுத்தவர்களுக்குப் பின்னல் தொழக்கூடாதாம்; விவாஹஞ் செய்யக்கூடாதாம்.

(1) என்னைக் காபிராக்கினவன், பொய்யனுக்கினவன் (என் பேரில்) சந்தேகப்பட்டவனுக்குப் பின்னல் தொழுகிறது ஹறாம். இன்னும் நிச்சயமான ஹறாமென்று இறைவனெனக்குத் தெரியப்படுத்தியிருக்கிறான் (துஹ்பாகோல்றிய்யா அநுபந்தம் நோட் 27 ப. பதாவா அஹ்மதிய்யா முதல வால்யம் 18 ப.)

குறிப்பு:—

உலகத்திலுள்ள முஸ்லிம்களெல்லாம் மிர்ஸாயி மதத்தார்களிடத்தில காபிராய் இருக்கும்போது அவர்களுக்குப் பின்னல் தொழுகிறது கூடுமா?

(2) எனது முரிதீன்கள் மற்ற அங்கியர்களோடு (மிர்ஸாயி மதத்தில் சேராதவர்களோடு) விவாஹஞ் செய்துகொள்ளக் கூடாது. (பதாவா அஹ்மதிய்யா இரண்டாவது வால்யம் 7 ப. இஸ்தின்காபுல் முஸ்லிமீன் 18 ப.)

(22) முஸ்லிம்களே! நமது பரிசுத்த குர்ஆனிலும், ஹதீதிலும் நமது மார்க்க உலமாக்களை மிகவும் மதித்துப் புகழ்ந்திருக்க மிர்ஸா சாஹிபு, அவர்களுக்குக் கொடுக்கிற திருப்பாட்டைக் கேளுங்கள்.

(1) ஓ ஈமானற்றவர்களே, தஜ்ஜால்களே, பாதிக்கிறிஸ்தவர்களே, தஜ்ஜாலின் சிநேசிதர்களே, கெடுவுள்ளமையுடைய மௌல்விக்கூட்டங்களே, நீங்கள் எது வரை உண்மையை ஒளிப்பீர்கள்? நீங்கள் எகூதிகளின் வழக்கானுசாரங்களை விடுகிற காலம் எப்போது வரும். ஏ அநியாயக்கார மௌல்விகளே! உங்களின் பேரில் பரிதாபம்! நீங்கள் எந்த ஈமானற்ற பாத்திரத்தைப் பானஞ்செய்தீர்களோ, அதையே சாதாரண ஜனங்களுக்கும் பருகச்செய்தீர்கள்†. (அஞ்சாமேஆத்தம் 21 ப. (துல்பகார் மார்ச்சு 24 1920)

† இப்பேர்ப்பட்ட அசுத்த வார்த்தைகளையும், தகாச் சொற்களையும் கொண்டு இஸ்லாமிய உலமாக்களைத் தூஷணித்த மிர்ஸா சாஹிபை

(2) இன்னும், உலமாக்களைத் தூஷணிக்கிறார். நஜீசு கின்னி ஷைத்தான், கலகக்காரன், ஓநாய், அற்பன், உளறுகிறவன், குபாடக்காரன், நாய் ஜாஹில், மோசக்காரன், நஜீசு, கொசு, தேள் ஹைறுல்ள ஸ்திரீ, பொய்யன், சுழியன், இணைவைக்கிறவன், பிசாசு, குழி நரி, மலபாதை, வீணன், முட்டாளுடைய கெட்ட சுக்கிலம், குதிரை, சண்டாளன் முதலியவைகள்*. இது ஜாஸ மஸீஹ், ஷதுறு ஹக்கு முதலிய கிதாபுகளில் சாதாரணமாய்க் காணப்படுகின்றன. (துல்பகார் மார்சசு 24 1920.)

சுருக்கிச் சொல்லில் மிர்ஸா சாஹிபின் விசுவாசக் கூற்றுகளை விபரமாக எழுத இச்சிறு புத்தகம் இடந்தராததாதலின் இம்மட்டோடும் நிறுத்தும்படியாய் நேர்ந்தது. இப்போது, மேல் வரையப்பட்ட 22 பெரிய பிரகரணங்களில் 115 சிறு பிரிவுகள அடங்கியுள்ளன. அவைகளின் முக்கிய சாரங்களைச் சுருக்கி எண்டு தருகிறேன்†.

அதாவது, மிர்ஸா சாஹிபு தாம் உலகத்தைச் சிருஷ்டிக்கிற நாயனென்றும், நாயனின் குமாரனென்றும், நாயன் சரீர இலக்ஷணங்களுடையவனென்றும், உலகில் நடக்கிற தக்தீரைத் தாம் தமது கரத்தால் எழுதினதாயும், தனக்கு நிகர் கிடையாதென்றும், உலகசிருஷ்டிக்குத் தாமே காரண கர்த்தாவென்றும், தான் ரஹ்மத்துன்லில்ஆலமீன் என்றும், மக்காம் மஹ்மூதென்ற ஸ்தானத்திற்கு உரித்தானவனென்றும் தாவாச்செய்துள்ளார்,

இன்னும் அமரர்களை மறுத்ததும் பரிசுத்த குர்ஆன்ஷரிபையும், நாயகமவர்களின் ஹதீதுஷரீபையும் நிந்தித்துத் தூஷ

---

மஹ்தி யென்றும் ஈசா வென்றும, வழிகாட்டி என்றும் விசுவாசித்த காஜா கமாலுத்தீன் சாஹிபுடைய மூளை தான் 7000 மனிதர்களின் மூளைக்குச் சமமானதோ. நாச்சியார் கோவில் பா. தாவூத்ஷா கவனிப்பாராக.

* எந்த மார்க்கத்தில் இவ்வித வாய் மதம் பிடித்த தூஷணைகள், வழிகாட்டியாயும், குருக்களாயும் ஏற்பட்டிருப்பார்களோ, அந்த மார்க்கத்தில் என்னவிதமான இலாபம் கிடைக்கிறதாய் நினைத்து இந்த காதியானிகள் சொல்கிறார்கள். இந்த மதம் வாய் மதம் பிடித்துப் பிறர்களை தூஷணிக்கிறதற்குச் சரியான ஓர் திறவுகோலென்பது முஸ்லிம்கள் அறியக்கிடக்கின்றது.

† சுமார் 4, 5-வரை திரும்பவும் சமயத்திற்குத் தக்கபடி வரையப்பட்டிருக்கிறது.

ணித்தலும், தாம் நபியென்றும், ரசூலென்றும் வாதித்தலும், ஹஸ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் முதல் கடைசி நபியாகிய ஹஸ்ரத் முஹம்மதுர் ரசூலுல்லா அவர்கள் வரை ஒருவரையும் விடாமல் தூஷணித்தலும்; விசேஷமாக ஹஸ்ரத்து ஈசா நபியவர்களை மிகவும் இழிவாகவும், அவர்களின் தாயாராகிய பதிவிரதா சிரோன்மணி ஹஸ்ரத் மரியம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சமிக்கையாய் விஞவின் அவதூறு சொல்கிறதும், ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாமின் அறபுதங்களையும் எமாற்றுத்தனமென்றும், சூபாடக்காரர்களென்றும், முஸ்லிம்களின் மனங்கள் சகிக்க முடியாதபடி திட்டுகிறதும், ஹஸ்ரத் முஹம்மதுர் ரசூலுல்லா அவர்களைத் தவிர மற்றும் எல்லா நபிகளைப் பார்க்கிலும் தான் சிறந்தவனென்றும், ஹஸ்ரத்து நபிநாயகமவர்களின் அற்புதங்களை இகழ்கிறதும், அஹ்லபைத்துகள் ஸஹாபாக்கள், இமாம்கள், ஒலிமார்கள் முதலிய எல்லோரையும தூஷணித்தலும் அவரின் விசுவாசங்களில் அடங்கியுள்ளன.

இன்னும், தமது வஹீ குர்ஆனுக்குச் சமமானதென்றும், ஹஸ்ரத் ஈசா நபியவர்கள் மரணமாகிவிட்டார்கள். நானே வாக்களிக்கப்பட்ட மஹ்தியும், ஈசாவுமாயிருக்கிறேனென வாதித்தலும், ஹிந்து, ஆரியர், கிறிஸ்தவர், முஹம்மதியர் முதலிய எல்லாருக்கும் தாம் வழிகாட்டியென்றும், ஹஸ்ரத்து ஈசா நபி அவர்களுக்கு தகப்பனுண்டென்றும், சிலுவையில் அறையப்பட்டு அப்பால் மரணமடைந்தார்களென்றும் கூறியுள்ளார்.

அன்றியும்; புகை வண்டி தஜ்ஜாலின் கழுதை யென்றும், பைத்துல்முகத்திசு, திமஷ்கு என்பதின் கருத்துகள் எனது காதியான் கிராமமென்றும், தம்மை ஒப்புக்கொள்ளாதவர்களும், தம்மீது சந்தேகித்தவர்களும் முர்த்தத்தென்றும், அன்னவர்களுக்குப்பின் தொழுகிறதும், விவாஹ சம்பந்தங்கள் செய்கிறதும் ஹறாமென்றும், உலமாக்களை இழிச்சொற்களைக்கொண்டு தூஷணித்தல் முதலிய இன்னும் பல விஷயங்கள் மிர்ஸா சாஹிபின் கொள்கைகளில் நிறம்பியுள்ளன.

முஸ்லிம்களே! இந்த மிர்ஸா சாஹிபின் கொள்கைகள் ஒவ்வொன்றிற்கும் பதில் எழுதுவதென்றால் வால்யம் வால்யமாக எழுதினாலும் தொலையாது. எனினும், சூடலாக ஒரு சிறிய

ஆக்ஷேபம் செய்கிறேன்.

(1) மிர்ஸா சாஹிபின் இல்ஹாம்கள் முகாஷபாத்துகளைப் பார்த்தால் ஆண்டவனொருவனென்பதும், அவனின் பரிசுத்த இலக்ஷணங்களும் அடியோடழிந்துபோய் சரீரமுள்ளவனாகவும், ஏற்பட்டுவிட்டது. அவனின், சர்வ அழகிய இலக்ஷணங்களிலும் இழிவான கறையுண்டாய்விட்டது. முஸ்லிமகளே! ஒரு சொற்படி இலட்சத்திருபத்தி நாலாயிரம் நபிமார்களில் எவர்களாவது இப்படிப் போதித்திருக்கிறார்களா? அல்லது ஓர் சிர் திருகதஞ் செய்கிறவர் முஜத்தித் ஆண்டவனால் ஏவப்பட்டவருக்கு ஷரீஅத்தே முஹம்மதியாவில் இவ்விதமான போதனை செய்ய உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறதா? இப்பேர்ப்பட்ட விசுவாசமுடையவர்களைக் கலப்பற்ற தௌஹீதுடைய முஸ்லிம் என்று பகரக்கூடுமா? இந்த வகுப்பார்கள் பிறமதஸ்தர்களிடத்தில் நாங்கள் கலப்பற்ற தௌஹீதுடைய முஸ்லிமென்று வாதாடல் பொருந்துமா? பிறமதஸ்தர்கள், பிதா, குமாரன் பரிசுத்த ஆவி யென்றும், எல்லாம் அவன்தான் என்றும் வாதாடும்போது அவர்களைக் காபிரென்றும், முஷ்ரிக்கென்றும், நிச்சயிப்பதும; முஸ்லிம்களில் இப்படிச் சொல்பவர்களைச் சரியான முஸ்லிம் என்று சொல்வதும் ஆச்சரியத்தைத் தரவில்லையா? கிறிஸ்தவர்கள் ஹஸரத்து மஸீஹ் அவர்களை பிதா குமாரன் பரிசுத்த ஆவி யென்றால் காபிர்களாம். இந்த மிர்ஸாயி மதத்தார் மிர்ஸா சாஹிபை இவ்விதமாக நிர்ணயங்கொண்டால் காபிர்களல்லவாம்.

மிர்ஸாயி மதத்தார்களே! இது நீதியாகுமா? பிரமதஸ்தர்களிலும் உங்களிலுமென்ன வித்தியாசமிருக்கின்றது. ஒரே விஷயத்தைக்கொண்டு பிறமதஸ்தர்கள் காபிராகிறதும், அதே விஷயத்தைக்கொண்டு மிர்ஸாயி மதத்தார்கள் காபிராகாமலிருப்பதும் ஆச்சரியமான நியாயந்தான். மிர்ஸாயி மதத்தார்களே! உலக நீதிமான்கள் என்ன சொல்வார்களென்பதைக் கவனிக்க வேண்டாமா? மஜ்தூபுகளின் எந்த வார்த்தையும் ஷரீஅத்தே முஹம்மதியாவில் ஆதாரமாகுமா? குபிரின் இலக்ஷணம் பூரணமாயுடையோர்களைக் காபிரென்று கூறவிட்டால் பின் யாரைத்தான் காபிரென்று கூறுவது?

(2) மஹத்துவம் பெற்ற தீர்க்கதரிசிகளையும், விசேஷமாக

ஹஸ்ரத்து ஈசா, ஹஸ்ரத்து மரியம் அவர்களையும், மற்றும் ஆதி முதல நாளது வரையில் உண்டாயிருக்கப்பட்ட ஸஹாபாக்கள், இமாம்கள், ஒலிமார்கள், முஹத்திதீன்கள், முபஸ்ஸிரீன்கள், உலமாக்கள் முதலியவர்களையும் வாய் கூசாமல் நிந்திக்கிறதையும். திட்டுகிறதையும் பார்த்தீர்களா? இதுதான் சீர்திருத்தஞ் செய்கிற முஜத்தித் சாஹிபின் அழகான போதனையோ? நபி, ரசூல், மஹ்தி, மஸீஹ், முஜத்தித், கிருஷ்ணன என்ற பதவியுடையவர்களுக்கு இதுதான் தகுந்ததோ? இவரைச் சோதித்தறிய இவரின் நடப்புகளும், விசுவாசங்களும் உறைகல்லில்லையா? இவ்விதமான இவரின் நடப்புகளும், விசுவாசங்களும் நன்கு விளங்கிவிட்ட பின்னர், ஓர் அர்ப்ப அளவு அறிவுள்ள எந்த மனிதனும் இவரை வழிகாட்டியென்றும் மஹ்தி என்றும், ஈசா நபியென்றும் கூறுவானோ? அப்படியானால், உலகில் எவன் எவ்வளவுக்கெவ்வளவு துன்மார்க்க நடப்பில் கீர்த்திபெற்றிருக்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனை நபியென்றும், ரசூலென்றும் பரிசுத்தமானவனென்றும் ஏன் சொல்லக்கூடாது? மிர்ஸாயி மதத்தார்களே! உண்மையை உணர்வீர்களாக.

(3) இந்த காதியான் மதத்தார்களிலேயே முக்கியமான விசுவாச அம்சங்களில் கடினமான விகற்பம் ஏறபட்டு, லாகூர் பார்ட்டி யென்றும், காதியான் பார்ட்டி யென்றும்* பிளவுபட்டு ஒருவருக்கொருவர் காபிரென்றும், முர்தத்தென்றும் வாதித்துக் கொண்டிருக்கிறதை உலகமறியவில்லையா? இவ்வண்ணம், இவர்களுக்குள்ளேயே ஒரு முடிவு தெரியாமல் காறுமாறாய் நிந்தித்துக்கொண்டிருக்கிற அந்தச் சந்தேகித்த விஷயங்களை பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தைக் கைக்கொண்ட முஸ்லிம்களிடத்தில் எடுத்துக்காட்டி வாதாடுவது தகுமா? இது புத்திசாலித்தனமும் கபடச்சித்தமுமில்லாத நீதிமான்களின் வேலையாகுமா?

(4) நாயகம் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்க

---

* காதியான்பார்ட்டி மிர்ஸா சாஹிபை ஒரு நபியுடைய ஸ்தானத்தில் நபியென்றும், ரசூலென்றும் விசுவாசிக்கிறார்கள். லாகூர்பார்ட்டி அவரை முஜத்தித் என்றும், வாக்களிக்கப்பட்ட மஹ்தி, மஸீஹென்றும் விசுவாசிக்கிறார்கள். இதன்பேரில் ஒருவருக்கொருவர் காபிர், முர்த்தத்து என்று வாதாடிக்கொண்டிருக்கிறார்கள்.

ளுக்குப் பின்காலத்திலிருந்து மிர்ஸா சாஹிபு காலம் வரை வெளியாகி மஹ்தி யென்றும், மஸீஹென்றும், நபி யென்றும், வழிகாட்டி யென்றும் தாவாச் செய்த முஸைலமாகஸ்ஸாபு உபைதுல்லா மஹ்தி, ஹஸனிபுனுஸபாகு, அப்துல் மூமின் மஹ்தி, ஹாக்கிம்ப அம்ருல்லா, அக்பர் பாதுஷா, முஹம்மதலி, பாபி, யூதாசப், சஜாஹென்ற ஸ்திரீ, இஸ்ஹாக்கு அக்ரஸ் முதலியோர்களும் மிர்ஸா சாஹிபுக்குப் பின் வெளியான முல்லாதாஹிர் சைபுத்தீன் அப்துல்லா சக்கடாலவி மிர்ஸா சாஹிபின் சிஷர்களிற் சிலருமான இவர்களெல்லாம் நாங்களும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியாயிருக்கிறோம், நபியாயிருக்கிறோம், எங்களையும் இறைவனே அனுப்பியிருக்கிறான். எங்களின் வருகையைப் பற்றிக் குர்ஆனில் சொல்லப்பட்டிருக்கிறது. எங்களுக்கு வஹீயும், இல்ஹாமும், கனவுகளும் உண்டாயிருக்கிறது இதை நம்ப வேண்டும்; இல்லாவிட்டால் ஆண்டவனிடத்தில் கேள்கக்கப்படுவீர்களென்றும் வாதாடிய இவர்களின் தாவாக்களை யெல்லாம் அங்கீகரியாமல் மிர்ஸா சாஹிபின் தாவாவை மட்டும் அங்கீகரித்ததற்கு யாது காரணம். அன்றியும், மிர்ஸா சாஹிபு ஹஸ்ரத் ஆதம் நபி முதல் நாளதுவரையிலுள்ள எல்லாப் புண்ணியவான்களையும் நிந்தித்துத் தூஷணித்திருப்பது போலும் அளவுகடந்த பொய்கள் சொல்லியிருப்பதுபோலும், இதற்கு முன்னுள்ள பொய் நபிகளும், மஹ்திகளும் சொல்லாமலிருக்கும் போது அவர்களை முதற்றரமான மஹ்திகள் நபிகளென்று விசுவாசியாமலிருப்பதும் விவேகிகளுக்கு அழகல்லவே.

(5) மிர்ஸா சாஹிபு தமது காரியத்தில் ஜெயங்கொண்டு விட்டாரா? இப்பூமண்டலத்தில் இஸ்லாமார்க்கத்திற்குரிய தௌஹீது எவ்வளவு தூரம் பரவி விட்டது. சிலுவை மதம் தாழ்ந்து விட்டதா? இவர் உதயமான பஞ்சாப் மாகாணத்தில் ஹிந்து, ஆரியர், கிறிஸ்தவர்கள் எவ்வளவு தூரம் இவர் மதத்தைத்தழுவினார்கள். இவர் ஜெனித்த காதியான் கிராமத்திலாவது குபிர், ஷிர்க்கு அழிந்துவிட்டதா? ஹஸ்ரத் ஈசா நபி மரணமாய் விட்டாரென்று தீர்மானித்ததினால் கிறிஸ்தவ மதம் எவ்வளவு தூரம் தோல்வி அடைந்துவிட்டது. சுமார், நாற்பத்தைந்து கோடி முஸ்லிம்களைக் காபிர் ஆக்கிவிட்டதினால் என்ன பயன் கிடைத்துவிட்டது. மிர்ஸாயி மதத்தார்களே! இவரைத்தானு

வாக்களிக்கப்பட்ட மஹ்தி யென்றும், ஈசாவென்றும் விசுவாசிக்கிறீர்கள். ஆச்சரியம்! ஆச்சரியம்!!

(6) மிர்ஸா சாஹிபு இப்பூமண்டலத்திலுள்ள 45 கோடி முஸ்லிம்களைக் காபிராக்கி யிருக்கும்போது அவரின் மதத்தைத் தொடர்ந்த உத்தம சிஷரான காஜா கமாலுத்தீன் சாஹிபும் மற்றும் சிலர்களும் ஐரோப்பாவிற் போய் இஸ்லாமார்க்கத்தினழகை எடுத்துப் புகட்டிச் சிற்சில ஐரோப்பியர்களை இஸ்லாமாக்கிவிட்டதனால் மகிழ்ந்துவிடுகிறதில் பயனென்ன? 45 கோடி முஸ்லிம்களைக் காபிராக்கிவிட்டுச் சிற்சில ஐரோப்பியர்களை இஸ்லாமாக்கிவிட்டதனால் இஸ்லா மார்க்கத்திற்கு என்ன விருத்தி யுண்டாய் விட்டதோ யாம் அறிகிலோம். நமது காலத்தில் முஸ்லிம்களைக் காபிராக்குகிறவர்தான் மஹ்தியாம்; மஹ்திகளிப்படித்தான் இருக்கவேண்டும்.

(7) மிர்ஸாயி மதத்தார்கள் பெரும்பாலும் பத்திரிகைகளைக்கொண்டும் மாதாந்தர சஞ்சிகைகளைக்கொண்டும் இஸ்லாம் மதத்தைப பரவச்செய்ய உத்தேசிக்கிறது சரிதான். எனினும், தாங்களே பூரணமாக மார்க்கத்தைப் பின்பற்றாமலும், பூரணமான ஒரு மாதிரியில்லாமலும் பிறமதஸ்தர்களிடத்தில் இஸ்லாம் மார்க்கத்தினுண்மையை எப்படிப் புகட்ட முடியும்? இஸ்லாம் மார்க்கத்தின் மூலஅம்சங்களோ சாதாரணமானதாயும், இயற்கை சுபாவத்திற்கு ஒத்ததாயிருக்கிறதுடன் ருஷியா, தென்னாபிரிக்கா அமெரிக்கா, ஜப்பான் முதலிய பாகங்களில் மிகவும் சுறுசுறுப்பாகப் பரவிக்கொண்டு போகிறது உலகமறிந்த இரகசியம். அன்றியும், உண்மையில் இஸ்லா மார்க்கத்தைக் காக்கிறவன் பரிசுத்தமான ஆண்டவனாயிருக்கிறான். இப்படியிருக்க மிர்ஸாயி மதத்தார்கள் தங்களின் மிர்ஸாயி மதத்தைப் பரப்பாமல் இஸ்லாம் மதத்தைப் பரப்புவார்களென்று நாம் எப்படி நிச்சயமாய் நம்பக்கூடும். தற்காலத்தில் பூரண இஸ்லாம் மார்க்கத்தை விருத்தி செய்வது அவசியமா? அல்லது மிர்ஸாயி மதத்தை விருத்தி செய்வது அவசியமா என்பது முஸ்லிம்கள் கவனித்தற்குரியது.

(8) சிலரின் அபிப்பிராயப்படி மிர்ஸா நபியுமல்ல; அவரின் கலிமாவும் அவர்பேரில் சலவாத்தும் ஓதப்படவுமில்லை. அவரின் பெயரைக்கொண்டு பாங்கு இகாமத்துக் கூறப்படவுமில்லை. அ

ருக்கு வேறு ஷரீஅத்தும் சட்டங்களுமில்லை. நபிப்பட்டத்திற்குத் தகுந்த வஹியுமல்ல இனனும், அவரை ஒப்பாதவன் காபிரென்றும், அவரை ஒப்புவது இஸ்லாமிலுள்ள ஒரு பர்லென்றும் சொல்லப்படவுமில்லை. அந்நியர்களை இஸ்லாம் மதத்தில் சேர்க்கிறபோது அவரின் பெயரைச் சேர்த்துக் கலிமாச் சொல்லிக் கொடுக்கவுமில்லை. ஆகலால், அவரைக் குறைகூறுவது நியாயமில்லையென்று சில ஜனங்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இதற்கு மறுப்பாவது, இந்த மிர்ஸா சாஹிபின் சரித்திர நடப்புகளைப் பூரணமாயறிந்தவன் ஒரு போதும் இவ்வாறு கூறமாட்டானென்பது நிச்சயம். எனினும், கீழ்க் கண்ட சமாதானத்தையும் கூறுகிறேன். அதாவது நமது இஸ்லாம் மார்க்கத்தின் கலிமாவே பூரணமானது. அதை ஒப்புக்கொள்ளாதவன் நிச்சயமாகக் காபிரே. மேலும், அது மோக்ஷத்திற்கு அல் திவாரமாகவும் இருக்கிறது. இன்னும், நமது இஸ்லாமும் பூரணமானது. குர்ஆன்ஷரீபும், ஹதீதுஷரீபும், பூரணமானது நமது நாயகமும், பூரணமான ரசூலே. பரிசுத்தமான அஹ்லபைத்துகளும், ச்ஹாபாக்களின் நடப்புகளும் பூரணமானது.

ஆகவே, நமது மார்க்கத்தின் சகல அம்சங்களும் பூரணமாயிருக்கும்போது நாம் மிர்ஸாவை ஒப்புக்கொள்ளவேண்டியதும், அவரின் சொற்செயல்களை மார்க்கத்தைக்கொண்டு சோதித்துப் பாராமல் ஏற்றுக்கொள்ளவேண்டியதற்கும் என்ன அவசியம் ஏற்பட்டுவிட்டது.

உண்மையில் இந்த மிர்ஸாயி மதத்தார்கள் எந்தவிதமான நோக்கத்துடன் இந்த வேலையில் இறங்கியிருக்கிறார்களென்பது சந்தேகமாயிருக்கும்போது நாம் எப்படிப் பணஉதவி செய்யக் கூடும். மிர்ஸாயி மதத்தைப் பரப்பாமல் இஸ்லாம் மார்க்கத்திற்கு உழைக்கிறோமென்று நிச்சயமான உறுதிமொழி கூறிவிட்டால் முஸ்லிம்கள் எப்படி உதவி செய்வார்கள்§.

நண்பர்காள் இந்த (8) எட்டு ஆக்ஷேபங்களும் சுருக்கமாய் கூறப்பட்டுள்ளதை நன்கு கவனிப்பீர்களாக.

---

§ கஜா கமாலுத்தீன் சாஹிபு தந்திரத்தை காதியான் நபியும் நாச்சியார்கோவில் முஸ்லிம் சங்கமுமென்ற பிரிவில் பார்வையிடவும்; நோக்கந் துலங்கும்.

ஆகவே, மிர்ஸா சாஹிபின் இக்கூற்றுகளை மிகவும் நன்னுணர்ந்த உலமாக்கள் அவருக்கு எழுதியும், உபதேசித்தும் தர்க்க மூலமாயும், எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர் அதை ஒப்புக்கொள்ளாமல் தமது வாதத்தின்பேரிலே உறுதியாக நின்றதுமன்றி மென்மேலும் தமது மதத்தைப் பரப்ப முயற்சி செய்துகொண்டு வந்தனர். இவைகளைக் கண்ணுற்ற உலமாக்கள் யோசித்ததாவது:-

இவர் ஏதோ ஒருவிதமான நோக்கத்தை மனதுள் கொண்டு தாறுமாறாக நடக்கிறதுடன் ஜனங்களையும் வழி கெடுக்கிறதில் சிறிதும் பின் வாங்கினவராகக் காணவில்லை. இதற்கு முன இவர் மீது நல்லெண்ணம் வைத்து இவரின் மாறான கொள்கைகளைப் பகிரங்கப்படுத்தாமல் மௌனஞ் சாதித்திருந்தது-போல் இனியும் இருப்போமானால் இனி வரும் நமது குடும்பங்களுக்கு மிகவுந் துரோகஞ் செய்தவர்களாக ஆகிவிடுவோம். மேலும், ரஹ்மானுடையவும், அவனின் திருத்தூதருடையவும் பரிசுத்த மார்க்கத்தைப் பங்கப்படுத்தினதற்கு நாமே காரண கர்த்தாவாயிருப்போம். அதனால, வரப்பட்ட பழி நம்மீதே சாரும். ஆதலால், இவரின் கொள்கையை வெளியிட்டு உலமாக்களைக்கொண்டு தீர்ப்பெழுதச் செய்து நம் முஸ்லிம் சகோதரர்களுக்குத் தெரியப்படுத்திவிடவேண்டுமென எல்லோரும் ஓர் மனதாய்த் தீர்மானித்தனர். இதில் 4 மத்ஹபுடைய சுன்னத்து ஜமாஅத்துகள், அஹ்லெஹதீஸ்கள், சுன்னத்து ஜமாஅத்தைத் துயராத ஷியா வகுப்பாரும் ஒருமித்துவிட்டனர்†.

அப்பால், இவரின் கொள்கைகளை எழுதி உலமாக்களின் தீர்ப்புகளுக்காக பற்பல பாகங்களிலும் அனுப்பப்பட்டது. மிர்ஸாவின் நடப்புகளையும், கொள்கையும் நன்கறிந்த உலமாக்கள் எல்லோரும் இது விஷயங்களை ஆராய்ச்சி செய்து முடிவான ஓர் தீர்மானத்திற்கு வந்தனர்.

முஸ்லிம்களே! சுன்னத்து ஜமாஅத்துகளைச் சேர்ந்த

---

† முஸ்லிம் உலகமெல்லாம் இவரைக்காபிரென்று தீர்ப்புசசொல்லி விட்டார்கள். ஆனால், ஹிந்து, ஆரியர், கிறிஸ்தவ சமயத்தார்கள் இவர் மகா பொய்யரென்பதில் ஒற்றுமையாகவே தீர்மானித்துவிட்டதை எமது முஸ்லிம் சகோதரர்கள் அறிவார்களாக.

உலமாக்களும் அஹ்லஹதீஸ் உலமாக்களும், சுன்னத்து ஜமா-அத்தைத் துயராத ஷிபா வகுப்பு உலமாக்களும், ஆக எல்லோரும் ஒருமித்து மிர்ஸாவின்பேரில் செய்த தீர்மானமாவது:-

(1) எந்த மனிதனுடைய விசுவாசம் மேலே விபரிக்கப்பட்டபடி இருக்குமோ அவன் சுன்னத்து ஜமாஅத்தில் நின்றும் அல்ல. மேலும், இஸ்லாம் மார்க்கத்தை விட்டு முற்றிலும் நீங்கிவிட்டானென்பதில் அணுவேனும் ஐயமில்லை. ஆகலால் மிர்ஸாவும், அவரைத் துயர்ந்த எல்லோரும் இஸ்லாமை விட்டுப் புறம்பான முர்த்கதுகளாயும், சிந்தீக்குகளாயும், கடுங்காபிர்களாகவும் இருக்கிறார்கள்.

(2) மிர்ஸாயி மதஸ்தருடன் இஸ்லாமார்க்கப்படி மார்க்க சம்பந்தமான எந்த நடவடிக்கையும் செய்கிறது கூடாததாயிருப்பதினால் அவர்களுடன் இஸ்லாமிய சலாமும், விவாக சம்பந்தங்களும் செய்யக்கூடாது. அவர்களால் அறுக்கப்பட்டவைகளைப் புசிக்கிறதும், அவர்களுடன் அன்பு முதலியது வைக்கிறதும், ஒருபோதும் கூடாது. இன்னும், அவர்களை இஸ்லாமிய சபைகளில் வரவிடுகிறதும், அவர்களின் சபைகளில் மூஸ்லிம்கள் கலக்கிறதும் கூடாத காரியம். எகூதி, நஸாரா, ஹிந்துக்களுடன் மத விஷயத்தில் எவ்விதமாகக் கலக்காமலிருக்கிறோமோ அதைப் பார்க்கிலும் அதிகமாயும், நஜீசு, அசுத்தம், சர்ப்பம், தேள், முதலியவைகளைவிட்டும் எவ்விதமாய்ப் பேணுகிறோமோ அதைவிட விசேஷமாகவும், மிர்ஸாயி மதஸ்தர்களைவிட்டும் பேணவேண்டியது மார்க்கப்படி மிகவும் அவசியமாயிருக்கின்றது.

(3) ஹிந்து, நஸாராக்களுக்குப் பின்னால் தொழுகிறது கூடாததுபோல் எந்த மிர்ஸாயி மதஸ்தருக்குப்பின்னும் தொழல் கூடாது.

(4) மிர்ஸாயி மதஸ்தர்கள் தொழுகை புரிகிறதற்கும், மற்றும் அவர்களின் மத அநுஷ்டானங்களை நிறைவேற்றுகிறதற்கும் முஸ்லிம்களின் மஸ்ஜிதுகளில் பிரவேசிக்க விடக்கூடாது. இவர்களை முஸ்லிம்களின் பள்ளிகளில் தங்கள் மத விதிகளை நடத்த விடுகிறது, எகூதி நஸாராக்களை நமது மஸ்ஜிதுகளில் அவர்களின் மார்க்கக் கிரியைகளை நடத்த இஷ்டப்பட்டதுபோலாயிருக்கும். ஆதலால், இவ்விஷயம் ஒருபோதும் கூடாது.

இவ்விதமாக எல்லா உலமாக்களும் சேர்ந்து தீர்ப்புச்செய்திருக்கிறார்கள். இப்போது இந்தத் தீர்ப்பின் பிரிவுகளைச சற்று விவரிக்கிறேன்.

இஸ்லாமான ஆண், பெண்கள் இந்த மார்க்கத்தில் சேர்ந்துவிட்டால் உடனே அவர்கள் காபிராகிவிடுகிறார்கள். அவர்களின் விவாகக் கட்டு முறிந்துவிடும். அவர்களுக்குள் பிரிக்கவேண்டுவது அவசியமன்று மிர்ஸாவின் விசுவாசங்களும், அவரைப் பற்றிய உலமாக்களின் தீர்ப்புகளும் தெரிந்த பின்னால் அவரைக் காபிரென்பதில் சந்தேகித்தவனும் காபிரே. மிர்ஸாவைத் துயர்ந்தவர்கள் நாங்களே. நாங்களே இஸ்லாத்திற்கு உழைக்கிறவர்கள் என்று சொன்னாலும் அல்லது எவ்விதமான பிரசங்கியாயிருந்தாலும் அந்த மார்க்கத்தை விட்டுத் தௌபாச் செய்கிறவரை அவர்களும் முர்த்ததுகளாம். இந்த மிர்ஸாயி மதஸ்தர்களின் ஜனாஸாத் தொழுகை தொழவுங்கூடாது. முஸ்லிம்களுடைய கபுறுஸ்தானில் அடக்கவுங்கூடாது. மேலும் கபனில்லாமல் புதைக்கவேண்டியதே முறை§.

கவர்ன்மெண்டுக்கு இது விஷயங்களை அறிக்கையிட்டு எங்களின் இஸ்லாம் மார்க்கம் வேறு; அவர்களின் மார்க்கம் வேறு என்று தெரியப்படுத்திவிடவேண்டும். இவ்விதமாக சுன்னத்து ஜமாஅத்துகளைச் சேர்ந்த மதுஹபுடைய உலமாக்களும், அஹ்லஹதீது உலமாக்களும், சுன்னத்து ஜமாஅத்தைத் துயாத ஷியா உலமாக்களும் ஆக எல்லோரும் ஏகமனதாய்த் தீர்ப்புச் செய்துவிட்டார்கள். இவ்வித உலமாக்களின் பெயர்களை விவரித்தால் இடம் விரிவாகுமென நினைத்து அவர்களின் தேசத்தை மட்டும் விபரிக்கிறேன்.

இதில் கீழ்க்கண்ட தேசத்தின் உலமாக்களெல்லாம் கை-யொப்பமிட்டிருக்கின்றனர்.

---

§ இஸ்லாமிய இராச்சியமாகிய காபுல் தேசத்திற்கு மிர்ஸாயி மதஸ்தரில் இருவர் தங்களின் மார்க்கத்தைப் பரப்பச்சென்றிருந்தனர். அவர்களின் விசுவாசங்களைத்தெரிந்து அமீரவர்கள் உலமாக்களின் தீர்ப்புப்படி கழுமரத்திலிட்டு மேற்சொன்னபடியே முஸ்லிம்களுடைய கபுறுஸ்தானில் அடக்காமல் எறிந்துவிட்டனர். இதைப் பின்னால் நன்கு விளக்கப்படும்.

பூப்பால், ராம்பூர், ஹைதராபாத்து, தேவ்பந்து, தாணுபூன், சஹாரம்பூர், ராய்ப்பூர், கலகத்தா, பனாரஸ், (காசி) ஆரா, பதாயூன், அல்வர், சம்பல் ஆக்ரா, புலந்துஷஹர், முராதாபாது, லக்னவ், நதுவத்துல் உலமா சபையார், டில்லி, ஹுஷ்யார்பூர், லூதியானு, லாகூர், பிஷாவார், ராவல்பண்டி, மசாபாத் முல்தான், ஜஹ்லம், சியால்கோட், குர்தாஸ்பூர், குஜிராத், கோஜிரன்வாலா, அமாத்சர், பதுகுகடு, கூஹாட் முதலியவைகளாம்.

இதில், விசேஷமாக குத்துபுல் இர்ஷாது ஹஸ்ரத் மௌலானு ரஷீது அஹமது சாஹிபு குங்கூஹீ ஹக்கீமுல் உம்மத் ஹஸ்ரத் ஷாஹ் மௌலானு முஹம்மத் அஷ்ரப் அலி சாஹிபு தானவி.

ஷெய்குல் ஹிந்து ஹஸ்ரத் மௌலானு மஹமூதுல் ஹசன் கிபுலா முஹத்திது, தேவுபந்தீ† முதலியவர்கள் விசேஷமாகக் குறிப்பிடத் தக்கவர்கள்.

இன்னும், மௌல்வி முஹம்மது ஹசன் சாஹிபு பட்டாலவியும், நதுவத்துல் உலமா சபையோர்களும் மிகவும் கண்டனஞ்செய்திருக்கிறார்கள். இவ்விஷயங்களை விசேஷமாய்ப் பார்க்க விரும்பினவர்கள் (அல்கவுலுஸ் ஸஹீஹ் பீமக்காயிதுல்மஸீஹ்) என்ற கிதாபிலும் (இஸ்தின் காபுல் முஸ்லிமீன் அன்முகாலத்தத்தில் மிர்ஸாயீன்)என்ற சிறிய கிதாபுகளிலும் பார்வையிடவும்.

அன்றியும் நமது தென்னாட்டில் இந்த மிர்ஸா சாஹிபின் விசுவாச அம்சங்கள் தெரிந்த பின்னர் மதராஸ் மாகாணம் சிலோன், மலையாளம் முதலிய சர்வ தேச உலமாக்களும் யாதொரு தடையின்றி வட இந்திய உலமாக்களின் தீர்மானத்தை நிச்சயமாய் ஆதரிப்பார்களென்பதில் ஆக்ஷேபணையில்லை.

முஸ்லிம்களே! இப்போது தீர்ப்புச்செய்திருக்கிற உலமாக்களைச் சாமானியமானவர்களென்று நினைக்கவேண்டாம். பத்துவாக்கொடுக்கிற முப்தீகளும், ஷம்சுல் உலமா வென்ற பட்டம்

---

† நாச்சியார்கோவில் முஸ்லிம் சங்கத்திலிருந்து 1921—ம் வுல மே மாதத்தில் வெளியான தத்துவ இஸ்லாம் என்ற மாதாந்தா சஞ்சிகையின் இரண்டாம் பக்கத்தில் இவர்களின் அபிப்பிராயத்தை ஒற்றுமையாமையைப்பற்றி எழுதப்பட்டிருக்கின்றது.

பெற்றவர்களும், ஹக்கிமுல் உம்மத், ஷெய்குல் ஹிந்து முதலிய உயர்தர உலமாக்களுமாயிருக்கிறார்கள். தவிரவும், மிர்ஸா சாஹிபின் ஜீவிய காலத்தில் அவரை கடுக்கஞ் செய்துகொண்டிருந்த மகத்துவம்பெற்ற உலமாக்களும் இதில உண்டு.

ஆகவே, இவ்வித மார்க்க விஷயமான எல்லா அம்சங்களிலும் பூரண சித்தியடைந்த மஹாத்தான உலமாக்களின் தீர்ப்புக்களை முழுமனதோடு அங்கீகரித்து அதன்படி ஒழுகி நடக்க வேண்டியதே முஸ்லிம்கள் மீது கடமையாகும். சிநேகிதர்களே! மிர்ஸா சாஹிபின் சரித்திரத்தை இம்மட்டோடு நிறுத்திக்கொண்டு இனி மிர்ஸாயி மதத்தில் அறிந்துகொள்ளவேண்டிய பற்பல முக்கிய விஷயங்களை ஒருவாறு தொகுத்துக்கூறுகிறேன். ஏனெனில், அவ்விஷயங்களும் நன்கு தெரியாத வரை மிர்ஸாயி மதத்தின் பூரண உண்மை தெரியாமற் போகிறதால் நமது முஸ்லிம்களுக்குத் தெரியப்படுத்துவது உசிதமென நினைத்தேன் இவரின் பிந்திய சரித்திரத்தை அடுத்த மூன்றாம் பாகத்தில் எதிர்பார்ப்பீர்களென நம்புகிறேன். கப்பலில் சரக்கு மூட்டை பூராவும் அடுக்கிவைத்திருப்பதுபோல் மிர்ஸாயி மதத்தில் அடுக்கி வைத்திருக்கப்பட்ட பொய் மூட்டைகளைப் பொது ஜனங்கள் அறியுமாறு அடுத்த மூன்றாம் பாகத்தில் ஒவ்வொன்றாக சரித்திர ஒழுங்கின் பிரகாரம் திறந்து வைக்கிறேன். சர்வ மதஸ்தர்களும் அதைப்பார்த்து இம்மதத்தினரின் உண்மையை எளிதில் உணர்ந்து இவர்களின் ஏமாற்றத்தில் அகப்படாதிருக்கத் தகுந்த காரணமாயிருக்கும் என்பது எனது நம்பிக்கை.

இனி மூன்றாம் பாகத்தின் துவக்கத்தை இதில் இருந்தே கவனிப்பீர்களாக.

இரண்டாம் பாகம் முற்றுப்பெற்றது.

# காதியானி மத ஆராய்ச்சி.

## மூன்றாம் பாகம்.

——:*:——

எனது அன்பார்ந்த முஸ்லிம் நண்பர்களே!

மிர்ஸா சாஹிபின் நடப்புகளைப் பார்த்து மார்க்க உலமாக்கள் மல்வூன், மூர்த்தது என்று தீர்ப்புச் செய்திருக்கிறதைக் கவனித்துக்கொண்டீர்கள். முஸ்லிம்களுக்கு இதற்குப்பின் யாதொரு சந்தேகமுமுண்டாகாது ஆயினும், இப்போது இன்னொரு விஷயத்தைத் தருகிறேன்; அதையும் கவனித்து அம்மார்க்க உண்மையை அறிந்துகொள்ளுங்கள்.

இப்போது, நாம் மிர்ஸா சாஹிபைக் காபிரென்று ஸ்தாபிக்கிறதில் சர்வ மதஸ்தர்களும் சம்மதிக்கக்கூடியதுமன்றி மிர்ஸாயி மதஸ்தர்களும் யாதும் மறுப்பின்றி எமது வாதத்தை அங்கீகரிப்பார்களென நம்புகிறோம்.

மிர்ஸா சாஹிபு தமது வாயினால் காபிராகிவிட்டார்.

மிர்ஸா சாஹிபு எழுதுகிறார்:—

(1) நான் நபிப்பட்டத்தை தாவாச் செய்யவில்லை. அன்றியும், இவ்வாறு தாவாச் செய்பவனை இஸ்லாமின் வளையத்தை விட்டும் புறம்பானவனாக நினைக்கிறேன். (ஆஸ்மானி பைசலா 7 ப. முரக்கஹ் காதியானி 34 ப.)

(2) ஏ! முஸ்லிம்களின் வம்சமென்று கூறுகிறவர்களே! குர்ஆனுக்கு விரோதியாகாதீர்கள். இன்னும், இறுதி நபிக்குப் பின்பு நபிப்பட்டத்தின் வஹியின் புதிய தொடரை நடத்தாதீர்கள். எவன் முன்னால் ஆஜராக்கப்படுவீர்களோ, அந்த நாயனைக் கொண்டு வெட்கியுங்கள். (ஆஸ்மானி பைசலா 38 ப.)

(3) நான் நபிப்பட்டத்தை தாவாச்செய்து இஸ்லாமை விட்டுப் புறம்பாய்விடுகிறதும்; இன்னும், காபிர்களோடு சேர்ந்து விடுகிறதும் கூடாத காரியம். (ஹமாமத்துல் புஷ்ரா 79 ப.)

சிநேகிதர்காள்! முதல் வாக்கியத்தில் நபிப்பட்டத்தைத் தாவாச் செய்தவன் இஸ்லாமின் வளையத்தைவிட்டு நீங்கிவிடுகிற

னென்றும், இரண்டாம் வாக்கியத்தில் கடைசி நபிக்குப்பின்னால் வஹீ, நபிப்பட்டத்தின் தொடரை நடத்துகிறவன் ஆண்டவனிடத்தில் வெட்கமில்லாதவன், குர்ஆனுக்குப் பகைஞனாயிருக்கிறானென்றும், மூன்றாவது வாக்கியத்தில் மிகவும் விளக்கமாக நான் நபிப்பட்டத்தைப்பற்றி தாவாச்செய்தால் இஸ்லாமைவிட்டு நீங்கின காபிரோடே சேர்ந்துவிடுவேனென்றும், கூறியுள்ளார்.

இதில் மிர்ஸா சாஹிபு தாம் நபியென்றும், வஹீயுடையவனென்றும் தாவாச் செய்தால் நிச்சயமாகக் காபிராகப்போவேனென்று பகர்ந்திருக்கிறாரல்லவா? ஆதலால், இதற்கு மாறாய்க் கூறி வாதாடியிருந்தால் அவர் காபிரென்பதில் சந்தேகமில்லை. இதைச் சர்வ சமயத்தாரும் ஆக்ஷேபமின்றி ஏற்றுக்கொள்ளுவதுடன், விசேஷமாக மிர்ஸாயீ மதஸ்தர்கள் பூரண நம்பிக்கையோடு காபிரென்று நிர்ணயிக்கவேண்டியதும் ஏற்படும்.

இப்போது மிர்ஸா சாஹிபு என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனிப்போம்.

(1) என்மீதிறங்கின இறைவனின் அந்தப் பரிசுத்தமான வஹீயின் வாசகமாவது:- "எதுவரை அந்த ஜனங்கள் இறைவனால் ஏற்படுத்தப்பட்டவனையும், ரசூலையும் அங்கிகரிக்கவில்லையென்ற எண்ணத்தை நிவர்த்திக்கவில்லையோ அதுவரை இந்தப் பிளேக் கென்ற ஆபத்தை நீக்கமாட்டேனென்பதே." (தாபிவுல் பலா 5 ப.)

(2) காதியானில் தனது ரசூலை அனுப்பினானே அவனே மெய்யான நாயன். (தாபிவுல்பலா 11 ப)

(3) இந்த உம்மத்தில் நானே ஓர் மனிதனாயிருக்கிறேன். எனக்கு நபிநாயகத்துடைய மாதிரியின் பேரில் அல்லாவின் வஹீயைப் பெறுகிறதில் 23 வருஷ காலம் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அன்றியும், 23 வருஷ காலம் வரை இந்தத் தொடரை நடத்திவைக்கப்பட்டிருக்கிறது. (அர்பயின் 3, 22, 27 ப.)

(4) நாம் புதிய ஷரீஅத்தில்லாத ரசூலாகவும், நபியாகவும் இருக்கிறோம் என்பதே நமது வாதம். பனீஇஸ்ராயீல்களில் இப்படியே வேதம் இறங்காத பல நபிகள் உண்டாயிருந்திருக்

கிறார்கள்*. (1908 மார்ச்சு 5. அல்பதுர். முராக்கஹ்ற காதியானி 52 பக்கம்.)

(5) அன்றியும், ஷரீஅத்தென்பது என்ன வஸ்து என்ற இதையாவது விளங்குங்கள். யார் தனது வஹீயின் மூலமாக சில ஏவலும், விலக்கலும் விபரித்து தமது உம்மத்திற்காக ஒரு சட்டம் ஏற்படுத்தினரோ அவரே ஷரீஅத்துடையவர். ஆகவே, இதே அர்த்தத்தின்படி நமது விரோதிகள் (என்னை நபியென்றும், ரசூலென்றும், ஷரீஅத்தையுடையவனென்றும் ஒப்புக்கொள்கிறதில்) கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்கள். எனது வஹீயிலும், ஏவலும் விலக்கலும் இருப்பதினாலேயாம். (அர்பயின் நிர். 4. 76 ப.)

இவைகள் தவிர இன்னும் பல விஷயங்களை மிர்ஸாசாஹிபின் விசுவாசத்திற் பார்க்கவும், இபபோது மேல் வரையப்பட்ட விஷயங்களால் மிர்ஸா, நபியென்றும், ரசூலென்றும், வஹீயுடையவனென்றும், ஷரீஅத்துடையவனென்றும் நன்கு துலக்கியிருக்கிறார். இவைகளை ஒரு சாமானியப் புத்தியுடையவனும் நிர்ச்சந்தேகமாய் விளங்கிக்கொள்ளலாம். ஆகவே, முந்தின வாதங்களில் நபிப்பட்டத்தைப்பற்றி தாவாச் செய்கிறவன் இஸ்லாமதத்தைவிட்டுப் புறம்பான காபிரென்று வாதித்தார். பிந்தின வாதங்களில் தானே நபியென்றும், ரசூலென்றும் வாதித்தார். இப்போது இந்த இரு விஷயங்களையும் ஒற்றுப்பார்த்துத் தீர்ப்புச்செய்யுங்கள்.

### மிர்ஸா சாஹிபு யார்?

ஓ! உலகின்கண் சிறந்து விளங்கும் நீதிமான்களே! பொய்யும், மெய்யும், கலந்திருக்கும் விவகாரங்களில் நுழைந்து பொய் வேறு; மெய் வேறாகப் பிரித்துத் தீர்ப்புச் செய்யும் தீக்ஷண்யபுத்தியுடையவர்களே! பி. ஏ., எம். ஏ பரீக்ஷையில் மாசறக்கற்றுப் பாஸான புண்ணியவான்களே! அரபியில் மிக்க கீர்த்திபெற்ற மகான்களே!

மிர்ஸாவின் வாக்குமூலத்தினுல் அவரின் கேஸ்களை விசாரித்துத் தீர்ப்புச்செய்யுங்கள். மிர்ஸா சாஹிபு யார்?

* அதாவது, ஹஸ்ரத்து ஹாரூன், யஹ்யா, சக்கரிய்யா அலைஹிமுஸ்ஸலாம் முதலியவர்களைப்போலாம்.

அன்றியும், இந்தக் கேஸை விசாரணை செய்ய மிகவும் நீதமான நாயகமவர்களின் மூன்று ஹதீதையும் சாக்ஷியாகத் தருகிறேன்.

(1) நாயகமவர்கள் திருவுளமானார்கள்:- எனது உம்மத்தில் இனி 30 பெயருண்டாவார்கள். அதில் ஒவ்வொருவரும் நான் நபி யென்று சொல்லுவார்கள். உண்மையில் நான் கடைசி நபியாகயிருக்கிறேன். எனக்குப் பின்னால் வேறு நபி கிடையாது. (அபூதாவுது (ரஹ்) திருமதி (ரஹ்) மிஷ்காத் பாபுல் பித்தன்.)

(2) முப்பது தஜ்ஜால்கள் தோன்றி ஒவ்வொருவரும் நானே ரசூலென்று கூறுதவரை கியாமம் உண்டாக மாட்டாது. (புகாரி (ரஹ்) முஸ்லிம் (ரஹ்))

(3) ஹஸ்ரத்து நாயகமவர்கள் ஹஸ்ரத் அலியவர்களை நோக்கிச் சொன்னார்கள்:- (ஓ அலியே!) மூசாவுக்கு ஹாரூனைப் போல், நீர் என்னில் நின்றும் ஹாரூனைப்போலிருக்கிறீர். வித்தியாசமென்னவெனில், எனக்குப் பின் நபியில்லை. (இதுவே வித்தியாசம். (புகாரி (ரஹ்) முஸ்லிம் (ரஹ்).)

சகோதரர்களே! ஹஸ்ரத்து ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் மூஸா அலைஹிஸ்ஸலாமுடனே நபியாயிருந்தார்கள். நாயகம் அவர்களுக்குப்பின் வேறு நபி கிடையாதென்று நாயகம் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் அருளியிருக்கிறார்கள். அன்றியும், ஹஸ்ரத்து அலிரலியல்லாஹு அன்ஹு எப்படிப்பட்ட மஹத்துவம் பெற்றவர்களென்றால், நாயகமவர்களின் சொந்த நெருங்கிய சகோதரரும் மருமகனுமாயிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட மகத்துவம் பெற்றவர்களையே நாயகமவர்கள் நபி யென்ற பட்டத்திற்கு உரித்தானவர்களாகப் பாவிக்காமலிருக்கும்போது மிர்ஸா தம்மை நபிப்பட்டத்திற்கு உரித்தானவரென்று சாதிக்கிறதையும் பாருங்கள் *.

ஆதலால், நீதிமான்களே! இந்த நீதியான ஹதீதுஷரீபுகளின் சாக்ஷியங்களையும் கவனித்துக்கொண்டு தீர்ப்புச் செய்யுங்கள்.

---

* இப்பேர்ப்பட்ட மகத்துவம்பெற்ற ஹஸ்ரத் அலியவர்களை மிர்ஸா சாதிபு கடினமாய் நிந்திக்கிறதை அவரின் விசுவாசத்தில் பார்க்கவும்.

### மிர்ஸா வென்பவர் யார்?

என் மிர்ஸாயி மதத்தார்களே! எங்கள் முஸ்லிம் உலமாக்கள் மிர்ஸாவைக் காபிரென்றும், தஜ்ஜாலென்றும் கூறினால்தான் தங்களுக்கு சிற்றம் உண்டாகும். இப்போது உங்களின் மிர்ஸாவின் தீர்மானத்திற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

இனி நாங்கள் மிர்ஸாவைக் காபிரென்றும், தஜ்ஜாலென்றும், கூறினால் சினங்கொள்ளமாட்டீர்களே?

மிர்ஸாயி மதத்திலும் நீதிமான்களிருக்கவும் கூடும். அவர்கள் இதற்கு என்ன உத்தரவு சொல்வார்களென எதிர்பார்க்கிறோம்.

இவ்வித பகிரங்கமான விஷயத்தையுணர்ந்து தீர்ப்புச் செய்யச் சக்தியில்லாதவர்கள் நாங்கள் இஸ்லாம் மதத்திற்கு உழைக்கிறோமென்றும், எங்களுக்கு உதவிபுரியவேண்டுமென்றும், வாதிக்கிற வீண் வாதங்களை நம்பி முஸ்லிம்கள் எப்படி உதவிபுரிய முடியும்? இப்பேர்ப்பட்ட பகுத்தறிவற்றவர்களை எப்படி வழிகாட்டிகளென்று நம்பக்கூடுமென்பது நமது கேள்வி.?

### மிர்ஸாயி மதத்தைப்பற்றி கோர்ட்டுகளின் தீர்மானம்.

ஐயன்மீர்! இதுகாறும் நாம் மிர்ஸாவைக் காபிரென்றும், மல்ஊனென்றும், மதக்கிரமப்படி மதாச்சாரியர்களைக்கொண்டும் மிர்ஸா சாஹிபின் வார்த்தைகளைக்கொண்டும், நீதிமான்கள் ஆமோதிக்கும்வண்ணம் ருஜுப்படுத்திவந்திருக்கிறோமல்லவா. இனி, உலக விவகாரக் கோர்ட்டுகளில் ஜட்ஜிகளால் மிர்ஸா சாஹிபைப்பற்றியும். அவரின் சிஷ்யர்களைப்பற்றியும் எவ்வாறு தீர்ப்பு நடந்திருக்கிறதென்பதையும், தங்கள்பால் எடுத்துக் காட்டுகிறேன். இவ்விதம் எடுத்துக்காட்டுகிறதில் இரு கக்ஷியாரின் வாதங்களையும், சாக்ஷியங்களையும் பூரணமாக வரைகிறது அவசியமின்மையால், அவைகளை யொதுக்கிவிட்டு நாம் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களைமட்டும் வரைகிறேன். இக்கேசின் வாதங்களை அறிந்துகொள்ள அக்கேஸின் அம்சங்களைச் சுருக்கித்தருகிறேன்.

அதாவது, வட இந்தியாவில் மௌங்கீர் என்று ஒரு தேசமுண்டு. சற்றேறக்குறைய அதில் நாலாயிரம் சுன்னியா

களைச் சேர்ந்த ஹனபி முஸ்லிமகள் வசித்து வருகிறார்கள். சொற்ப காலமாக, சுமார் ஆறு பேர் வரை காதியான் மதத்தில் சேர்ந்துகொண்டு பள்ளியில் சுன்னத்துஜமாஅத்து இமாமிற்குப் பின்னால் தொழுதால் எங்கள் தொழுகை கூடா தென்றும் எங்களுக்குள் நாங்களே ஓர் இமாமை ஏற்படுத்தி ஜமாஅத்தை நடத்திக்கொள்வோமென்றும் வாதிக்கலாயினர். இதைக்கண்ணுற்ற மற்ற முஸ்லிம்கள் இவர்களைப் பள்ளியில் வரவிடாமல் துரத்திவிட்டனர். இதன்பேரில் இந்த ஆறு பேர்களும், நாங்களும் பள்ளியில் தனி இமாமத்து ஏற்படுத்தித் தொழுகை நடத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் வாதியாக நின்று கேஸ் நடத்த ஆரம்பித்தனர்; இதுதான் இந்தக் கேஸின் சாரம்.

பின்னர், ஜட்ஜ் இரு கக்ஷிகாரரையும் விசாரணை செய்து கடைசியாக தமது அபிப்பிராயத்தை வெளியிட்டுத் தீர்ப்புச் செய்திருக்கிறார். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

வாதி:— காதியானிகள்.

பிரதிவாதி:— சுன்னத்து ஜமாஅத்து ஹனபி முஸ்லிம்கள்.

## ஜட்ஜியின் தீர்ப்பு.

இந்த விவாதப்பட்ட மஸ்ஜிதை சற்றேறக்குறைய 200-வருஷ காலமாக அப்துன் நபி யென்பவர் கட்டினாரென்பதை இரு கக்ஷியாரும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆயினும், அவருடைய நெருங்கிய வாரீஸ் யாரென்பதைப்பற்றி இரு கக்ஷியாரினும் பலத்த அபிப்பிராய பேதமிருக்கிறது. அப்துன் நபியுடைய வாரீஸ் இன்னார்தானென்று நிச்சயிப்பது இக்கேஸின் அம்சமாயில்லாததினால் அவசியமில்லை யென்பது எனது அபிப்பிராயம். ஆயினும், அவர் சுன்னத்து ஜமாஅத்தைச் சேர்ந்த ஹனபி முஸ்லிமாயிருந்தாரென்பதும், இந்த பள்ளி கட்டும்போது இந்தப் புதிய பிரிவாகிய காதியானிக்கூட்டம் தோன்றவில்லை யென்பதும், நன்கு துலங்குகிறது. மேற்படி அப்துன் நபி ஹனபியாயிருந்ததும், இந்தப்பள்ளி ஹனபிகளுக்காகவே கட்டப்பட்டதென்பதும், 1905-ம் வருஷம் வரை எல்லா வாதிகளும் மிர்ஸா குலாம் அஹமது இடத்தில் பைஅத்துச் செய்துகொள்ளாமல்

ஸுன்னி, ஹனபி, முஸ்லிம்களாயிருந்தார்களென்பதும் வக்புநாமாவைக்கொண்டு வெளியாகிறது.

இப்போது, பள்ளியை வக்பு செய்த ஒருவன் சுன்னி அல்லது மற்றெந்த மதுஹபாயிருந்தாலும், அவன் பிரதானமான விஷயத்தில் விசுவாச அம்சங்களில் தன்னோடு ஒற்றுமையும், பிரிவுகளில் தன்னை விட்டும் வேற்றுமையான ஒருவனைப் பள்ளியில் தன்னுடனாவது அல்லது வேறே கிரமமான ஜமாஅத்துடனாவது தொழுகிறதைத் தடுக்க முடியுமா? அல்லவா? இதுதான் வாதிக்கவேண்டிய விஷயம்.

எனது அபிப்பிராயத்தில் தடுக்க முடியாது. ஏனெனில், பள்ளியை ஒரு தரம் இறைவன் பாதையில் வக்பு செய்துவிட்டால் பின்னர் அது ஒருவனுடைய சொந்த உடமையாகமாட்டாது. ஒரு முஸ்லிமானவன் மற்றொரு முஸ்லிம் பிறரோடு தொழுகிறதைக் கலகமுண்டாகுமென்ற எண்ணமுண்டாகும் வரை தடுக்கமுடியாது. ஆதலால், ஒரு ஹனபி முஸ்லிம் அல்லது அஹ்லஹதீஸ் அல்லது ஷாபியீ, மாலிக்கி, ஹன்பலி முதலிய எந்த முஸ்லிமிற்கும் ஹனபிப் பள்ளியில் ஹனபி இமாமிற்குப்பின்னால் தொழக்கூடிய பாத்தியதையுண்டு. எனினும், வாதியின் தாவாவின்படி அவர்களுக்குத் தனியாய் ஜமாஅத்து ஏற்படுத்துகிற அதிகாரங்கிடையாது. வாதிகள், அஹமதியராய் விட்டதுமுதல் மிர்ஸா சாஹிபை நபியென்றும், வாக்களிக்கப்பட்ட மஹ்தியென்றும் விசுவாசியாத எந்த இமாமுடனும் தொழுகிறதை மறுக்கிறார்கள். இப்போது வாதிக்கவேண்டிய விஷயமாவது:—

வாதிகள் வழக்காடப்பட்ட பள்ளியில் பிரதிவாதிகளைவிட்டும் தனியாகவோ அல்லது முன் பின்னாகவோ ஜமாஅத்தை ஏற்படுத்த முடியுமா வென்பது வாதிக்கவேண்டிய விஷயம். அதாவது, வாதிகள் தங்கள் மதுஹபைத் தழுவாத பிரதிவாதிகளின் எந்த இமாமுடனும் சேர்ந்து தொழுகிறதைக் கண்டிப்பாய் மறுக்கிறார்கள். மேற்படி பள்ளியை ஒரு ஹனபியானவர் ஹனபி ஜமாஅத்திற்காகக் கட்டியிருக்கிறார். அச்சமயம் யாதொரு அஹ்மதியனும் உண்டாகவில்லை. அப்பள்ளியின் இமா

மும் எப்போதும் ஹனபியே. நிகழ்கால முத்தவல்லியும் (தர்ம கர்த்தாவும்) ஹனபியே.

வாதிகளின் நோக்கமும், பள்ளியில் கோர்ட்டு மூலமாக ஜமா அத்து ஏற்படுத்தக்கூடிய உத்தரவைப்பெற வேண்டுமென்பதைத்தவிர வேறன்று. வாதிகளின் தாவா என்னவெனின்: பள்ளியில் நாங்கள் எங்கள் ஜமா அத்தை பிரதிவாதியின் ஜமா அத்திற்கு முந்தியாவது பிந்தியாவது ஏற்படுத்தக்கூடிய அதிகாரம் கோர்ட்டிலிருந்து கிடைக்கவேண்டுமென்பதேயாம். ஆயினும், இவ்வித ஆச்சரிய விண்ணப்பம் இதற்கு முன் எந்தக் கோர்ட்டிலாவது நடந்திருக்குமாவென்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. அஹ்லஹதீஸ் ஹனபிகளின் இரு வியாச்சியங்கள் கல்கத்தா ஹைகோர்ட்டு, அலஹபாத்து கோர்ட்டுகளிலும் தீர்ப்புச்செய்யப்பட்டிருக்கிறது. இன்னும், இவ்விரு வகுப்பாரின் விசுவாசங்களில் சில்லறைப் பிரிவுகளில்மட்டுமே சொற்ப வித்தியாசமுண்டு. அஹ்லஹதீஸ்கள், ஹனபிகளுக்குப்பின்னால் தொழுகிறதை நிராகரிக்கவில்லை. இங்ஙனமாக, வாதிகளோ அஹ்மதியர்களைத் தவிர பிறருக்குப்பின்னால் தொழுகிறதை மறுக்கிறார்கள். அஹ்லஹதீஸ்களுக்கும், ஹனபிகளுக்கும் நடந்த வியாச்சியத்தில் ஹனபிகளின் தொழுகைகளுக்கு யாதொரு பின்னமேற்படாவிட்டால் அஹலஹதீஸ்களுக்கு ஹனபிகளோடு சேர்ந்து தொழுகை புரிய அதிகாரமுண்டுமென்று தீர்ப்புச் செய்யப்பட்டிருந்தது இன்னும், எந்த வழக்குகளிலும் மார்க்க விசுவாசங்கள்தான் முக்கிய அளவுடையதென்று பிரிவி கவுன்ஸிலும் தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. அஹ்லஹதீஸ்கள், தொழுகைகளில் ஆமீன் இரைந்தோதுகிறதும், தொழுகைக்கு இடையில் கையை உயர்த்துகிறதுமான சில்லரை விஷயங்களில் பிரிவுடையவர்களாயிருப்பதினால், இந்தக் காரணம் அவர்களை ஹனபிப் பள்ளிகளில் வரவிடாமற்றடுக்கிறதற்குத் தகுந்ததல்ல. தற்தமயம் நடக்கிற இந்த வியாச்சியத்தில் ஒரு ஹனபியே இந்தப்பள்ளியைக் கட்டியிருந்தாரென்றும் சொற்ப வருஷத்திற்கு முன் காதியானிகளை ஒருவரும் அறிந்திருக்கவில்லையென்றும், தற்சமயம் நடந்து வருவதுபோல் சுன்னிகளின் ஜமா அத்தே நடந்துவந்ததென்றும், முஸ்லிம்களில் மூவாயிரம், நான்காயிரம்

பேர்களில் மூன்று நான்கு மனிதர்களை காதியானிகளென்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் வாதிகளுக்கு, சுன்னி இமாமிற்குப்பின்னல் தொழ உத்தரவு கொடுக்கப்படவேண்டுமென்றும் அல்லது மற்ற முஸ்லிம்களைப்போல் தொழுகை புரிவதற்கு உத்தரவு கொடுக்கப்படவேண்டுமென்றும் வாதிகள் தாவாச் செய்தால் எனது அபிப்பிராயம் இந்த வியாச்சியத்தில் யாதொரு கஷ்டமில்லை. வாதிகளோ, தனியாக ஜமாஅத்து நடத்த உத்தரவு கேட்கிறார்கள்.

பிரதிவாதிகள் சொல்லுகிறார்கள்; ஒரு பள்ளியில் இரு ஜமாஅத்து நடத்துகிறது கூடாது அப்படி இரு ஜமாஅத்து நடத்துகிறதாயிருந்தால் முந்தின ஜமாஅத்து நடந்த பின்னர் சில விதிகளை அநுசரித்து நடத்தல் கூடும். அதாவது, முந்தின ஜமாஅத்துடன சேர்ந்துகொள்ளச் சந்தர்ப்பமில்லாமல் தாமதமாய் வந்தவர்கள். தங்களுக்குள்ளொருவனை இமாமாய் நியமித்துத் தொழலாம். இதுவன்றி முந்தின ஜமாஅத்துடன் தொழக் கூடாது. வேறெ தனியாக ஜமாஅத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் தாமதமாய் வருகிறார்களென்று இமாமுக்காவது தர்மகர்த்தாவுக்காவது தெரிந்துவிட்டால் அவர்களுக்கு வேறே ஜமாஅத்து நடத்த இடங்கொடுக்கப்படமாட்டாதென்பது ப்ரதிவாதிகளின் வாதம். ஜும்ஆவுடைய நாளில் இரண்டு ஜமாஅத்து, இரண்டு குத்பாவுடன் நடந்ததாக நான் எங்கும் கேள்விப்படவில்லை. வாதிகள், கஃபாவிலும் தினசரி ஒரு இடத்தில் நான்கு ஜமாஅத்து நடக்கிறதென்று கூறுகிறார்கள். அங்கேயோ, நான்கு மதஹபுக்காரர்களின் நான்கு முசல்லா தனித்தனியாக இருக்கின்றன. இந்த நான்கு முசல்லாக்களும் வெவ்வேறான நான்கு பள்ளிகளின் சட்டங்களிலிருக்கின்றன. தவிரவும், அந்த நான்கு முசல்லாக்களும் எங்கே இருந்தனவோ அங்கேயே இருக்கிறதன்றி ஒரு இடத்திலிருந்து மற்றொரிடத்திற்கு மாத்திக்கொண்டிருக்கவில்லை ஒரு முசல்லா ஒரு பள்ளிக்குச்சமமாக நாலு முசல்லாவையும், நான்கு பள்ளிக்குச் சமமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகலால், வாதிகள் ஒரே பள்ளியில் நான்கு ஜமாஅத்து நடக்கிறதென்று சொலவது பொருந்தாது மேலும், இந்த நான்கு பிரிவுகளில் இன்றும்

225373
சென்னை-600 008.

எந்தப் பிரிவாராவது அடுத்த பிரிவுக்குப்பின் தொழுகிறதை மறுக்கவுமில்லை. வாதிகளோ, காதியானிகளைத் தவிர மற்றோர்களுக்குப்பின்னால் தொழுகிறதை மறுக்கிறார்கள்.

இப்போது. எனது அபிப்பிராயத்தில் தீர்க்கவேண்டிய விஷயத்தை ஆரம்பிக்கிறேன், இந்தக் கேஸின் சம்பந்தமாக வாதிகள் காபிரா? அல்லவா! என்று தீர்ப்புச்செய்கிறது அவசியமென்பதை நான் உணரவில்லை. இது ஒருவனை பார்க்க வலையத்தைவிட்டும் புறம்பாக்க அதிகாரமுடைய மார்க்கக் கச்சேரியல்ல இந்த வியாச்சியத்திற்காக இவ்வளவே போதுமானது. அதாவது, ஒவ்வொரு பிரிவாரும் அடுத்த பிரிவாரைக் காபிர் அல்லது பாஸி யென்று கூறுகிறார்கள். வாதிக்கும் பிரதிவாதிக்கும் இருக்கப்பட்ட வித்தியாசங்களால் சேர்ந்து தொழுகிறதை மறுக்கிறார்கள். வாதிகளும் அவர்களின் சாக்ஷிகளும் கூறுகிறதாவது:-

> எவன் மிர்ஸா குலாம் அஹ்மதை நபி யென்றும் மஸீஹென்றும் விசுவாசிக்கவில்லையோ, அப்பேர்ப்பட்ட எந்த முஸ்லிமிற்குப் பின்னாலும் தொழக்கூடாதென்று எங்கள் மதுஹபின் தலைவர் (மிர்ஸா குலாம் அஹ்மது) இடமிருந்து விலக்கப்பட்டிருக்கிறது என்பதே.

வாதியின் சாக்ஷியான மௌல்வி அப்துல்மஜீத் சொல்கிறார்: நான் காதியான் மிர்ஸா சாஹிபை ஒப்புக்கொள்ளாத எந்த முஸ்லிம் இமாமாயிருந்தாலும் அவனுக்குப்பின் தொழமாட்டேன். இந்தத் தொழுகை மஸ்ஜிது நபவியிலா (மதீனாவிலுள்ள நாயகம் அவர்களின் பள்ளி) யிருந்தாலும், பைத்துல்லா ஷரீபி (மக்கத்து கஃபத்துல்லாவி) லாயிருந்தாலும் சரியே; நான் தொழமாட்டேனென்கிறார்‡.

உபய் கக்ஷிகளுக்கிடையில் எந்த முக்கியமான பேதங்களினால் வாதியைப் பிரதிவாதிகள் பள்ளியில் தொழுகை புரிய உத்தரவு கொடுக்கவில்லையோ அவைகளை நாம் கீழே விவரிக்கிறோம்.

---

‡ முஸ்லிம்களே! இவர்களின் கொள்கை விசுவாசங்களை நன்றாய்க் கவனிப்பீர்களாக.

(1) ஹனபி உலமாக்களின் ஒற்றுமையான அபிப்பிராயப்படி வாதிகள் காபிராயிருக்கிறார்கள்*.

(2) வாதிகள் பிரதிவாதிகளைப் பாவியென்று பகருகிறார்கள்†.

(3) வாதிகள் குர்ஆன் ஹதீதிற்கு மாற்றமான சில விசுவாசமுடையவர்களாயிருக்கிறார்கள்.

(4) ஹஸ்ரத்து முஹம்மதுர்ரசூலுல்லா அவர்கள் கடைசி நபியாயிருக்கவில்லை. இன்னும், மிர்ஸா குலாம் அஹ்மது நபியாயிருந்தார். அவர்மீது அல்லாவின் புறத்திலிருந்து வஹீ இறங்கிக்கொண்டிருந்ததென்று வாதிகள் சொல்லுகிறார்கள்.

(5) வாதிகள், ஹஸ்ரத்து ஈசா நபி அவர்களின் அற்புதங்களை விசுவாசிக்கவில்லை.

(6) ஹஸ்ரத்து ஈசா அலைஹிஸ்ஸலாம் நான்காம் வானத்தில் உயிரோடிருக்கவில்லையென்றும், மேலும் காஷ்மீரில் அடங்கப்பட்டிருக்கிறார்களென்றும் வாதிகள் சொல்லுகிறார்கள்.

(7) மிர்ஸா குலாம் அஹ்மது ஹஜரத்து ஈசா நபியவர்களைக்காண சிறந்தவரென்று வாதிகள் சொல்லுகிறார்கள்.

(8) மிர்ஸா குலாம் அஹ்மது ஹஜரத்து இமாம் ஹசன், இமாம் ஹுசைன் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப்பார்க்கிலும் சிறந்தவரென்றும் சொல்லுகிறார்கள்.

மிர்ஸா குலாம் அஹ்மது தமது இஜாசே அஹ்மதி யென்ற கிரந்தத்தில் இவ்விரு இமாம்களைப்பற்றியும், மிகவும் கேவலமான நிந்தனை வார்த்தைகளை உபயோகித்திருக்கிறார்.

(9) மிர்ஸா குலாம் அஹ்மது, ஹஸ்ரத்து ஈசா, ஹஸ்ரத்து மரியம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் விஷயத்தில் அநாகரிகமான தூஷண வார்த்தைகளை வழங்கியிருக்கிறார்.

(10) மிர்ஸா குலாம் அஹ்மது; ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் நீங்கலாக மற்றெல்லா நபிமார்களைப்பார்க்

* தமது வாயினாலும், மிர்ஸா காபிராயிருக்கிறார்.

† மிர்ஸா சாஹிபு பிரதிவாதிகள் காபிரென்று பத்துவாக்கொடுத்தி

கிலும் சிறந்தவரெனத் தாவாச் செய்திருக்கிறார். இன்னும், அவர் தமது சில எழுத்துகளிலும், வசியத்துகளிலும் ஹஸ்ரத்து நபி நாயகம் அவர்களுக்கு நிகரானவரென்றும் தாவாச் செய்திருக்கின்றார்.

இந்த வியாச்சியத்தில் உபய கக்ஷியாரும் மிர்ஸா குலாம் அஹ்மதால் இயற்றப்பட்ட அநேக நூல்களிலிருந்து அவரின் மார்க்க விசுவாசங்களையும், தாவாக்களையும் எடுத்துக்காட்டினார்கள். ஆயினும், நான் மிர்ஸா சாஹிபின் நபிப்பட்டத்தின் தாவாவைப்பற்றியும், ஈசா வென்னும் தாவாவைப்பற்றியும் ஆராய்ச்சி செய்ய, முன் குர்ஆனிற் சொல்லப்பட்ட ஹஸ்ரத்து ஈசா நபியவர்களின் முஃஜிஸாவின் சம்பந்தத்தைப்பற்றி விப-ரிப்பது அவசியமெனநினைக்கிறேன். வாதிகளின் எட்டாவது சாக்ஷியாகிய மௌல்வி சாஹிபு தமது சாக்ஷியத்திற் சொல்லுகிறார்: எவன் குர்ஆனின் ஒரு பாகத்தை விசுவாசிக்கவில்லையோ அவன் காபிராயிருக்கிறான் என்பதே. குர்ஆனின், மூன்றாவது ஜூசுவில் ஹஸ்ரத்து ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப்பற்றிய கீழ்க்கண்ட வாசகம் உண்டாயிருக்கிறது.

அந்நாளையில் ஆண்டவன் சொல்லுவான்: ஓ! மரியமுடைய மகனாகிய ஈசாவே! நான் (உலகத்தில்) உன் மீதும், உன் தாய் மீதும் செய்த நன்றியை நினை. நான் பரிசுத்த ஆவியைக் கொண்டு உனக்கு உதவி செய்திருந்தபோது, நீ மடியிலிருந்து கொண்டும், (சிசுவிலும்) வளர்ந்தும் (ஒன்றுபோல்) பேசினாய். இன்னும், நான் உனக்கு எழுத்தையும், ஹிக்குமத்தையும் (புத்திசாலித்தனத்தையும்,) தௌராத்து, இஞ்சீலையும் கறபித்த பொழுதும்; இன்னும், நீ எனது உத்தரவின்பேரில் மண்ணைக் கொண்டு ஒரு குருவியின் ரூபம் உண்டுபண்ணி அதில் ஊதி, அது (வாஸ்தவமாகவே) எனது உத்தரவைக்கொண்டு குருவியாய்விட்டபொழுதும்; இன்னும், பிறவிக் குருடர், குஷ்டரோகிகளை எனது உத்தரவைக்கொண்டு சுகமாக்கிவிட்டபோதும்; இன்னும், நீ எனது உத்தரவைக்கொண்டு செத்த பிரேதங்களை (கபுறிலிருந்து உயிரோடு) வெளிப்படுத்தும்பொழுதும்; இன்னும் நான் பனி இஸ்ராயீல்களை உன்னை (வெட்டுகிறதை) விட்டும், தடுத்தபோதும்; நீ, அவர்களிடத்தில் அற்புதங்களைக்

கொண்டுவந்தபோதும் அவர்களில் காபிராயிருந்தவர்கள் இதுவோ, யாதொன்றுமல்ல. பகிரங்கமான ஜாலவித்தையா யிருக்கிறதென்று சொல்ல ஆரம்பித்தார்கள் என்பதே.

ஆகவே, மேற்சொல்லப்பட்ட அற்புதங்களில் நின்றும், எதையாவது விசுவாசியாமல் இருந்தால் குர்ஆனின் இந்த வாசகத்தை மறுக்கிறது மிகவும் பகிரங்கமானதே அன்றியும், இஸ்லாமென்று வாதாடுகிற எவனும் இதைப் பொருந்தமாட்டான உண்மையில் ஹஸ்ரத்து ஈசா நபியவர்களின் அற்புதங்கள் குர்ஆனிற்சொல்லப்பட்டிருக்கின்றன. முஸ்லிம்களுடைய பரிசுததமான வேதத்தின் இந்த எழுத்துக்கள்தானே சாக்ஷியாக இருக்கும்போது எனது அபிப்பிராயத்தை உரைக்கவேண்டிய தேவையில்லை.

ஆதலால், எவன்மேற் சொல்லப்பட்ட வாசகத்தை ஒப்புக்கொள்ளவில்லையோ, அவன் பகிரங்கமான தவறுதலின்பேரிலிருக்கிறதுந் தவிர, சுன்னத்து ஜமாஅத்து மதுஹபின் பிரகாரம் அவன் காபிராயிருக்கிறனென்பதில் எதுவும் சந்தேகமுண்டோ?

பிரதிவாதியின் வக்கீல் சொல்லுகிறர்: குர்ஆன்ஷரீபில் ஒரு ஆயத்தின் அர்த்தம் மற்றொரு ஆயத்தின் அர்ததத்திற்கு மாறுனதாக ஒரு ஆயத்தும் கிடையாதென்கிறர். குர்ஆன்ஷரீபின் இறைவன்மட்டுமே உயிர்ப்பிக்கக்கூடிய சக்தியுள்ள ஒரு உண்மையாயிருக்கிறன் என்று வரையப்பட்டிருக்கிறது. எந்த ஆயத்தை நான் மேலே குறிப்பிட்டிருக்கிறேனே அதன் கருத்தாகிறது ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் பிரேதங்களைத் தங்களின் சுய சக்தியைக்கொண்டு உயிர்ப்பித்துக் கொண்டிருந்தார்கள் என்பதல்ல. அன்றியும், குர்ஆனின் ஆயத்துகளில், பிஇத்னி (எனது உத்தரவுப்பிரகாரம்) என்ற வார்த்தை வந்திருக்கிறது. ஆதலால், மையித்துகளை உயிர்ப்பிக்கிறது ஆண்டவனின் எவுதலைக்கொண்டாயிருந்தது. மேல் வரையப்பட்ட (குர்ஆனின்) வாசகத்தில் எப்போது நான் பனி இஸ்ராயில்கள் உன்னை வெட்டுகிறதைவிட்டும் விலக்கினேனே என்ற இதன் கருத்தாகிறது. ஹஸ்ரத்து ஈசா நபி அவர்கள் உயிரோடிருக்கிறர்களென்பதேயாகும். அவர்களை உயிரோடிருக்கிறதாக ஒப்பாமலிருக்கிறது

குர்ஆனை ஒப்பாததுபோலாகிறது. காதியானிகளின் விசுவாச மார்கிறது ஹஸ்ரத்து ஈசா அலைஹிஸ்ஸலாம் எப்போது சுகமாய் விட்டார்களோ, ஹிந்துஸ்தான் தேசத்திற்கு வந்து இங்கேயே மரணமடைந்தார்கள். இன்னும், காஷ்மீரில் அடக்கப்பட்டிருக்கிறார்களென்பதேயாகும். ஹஸரத்து ஈசா அலைஹிஸ்ஸலாமின் மரணத்தைப்பற்றி குர்ஆனில் வேறே ஆயத்துகளும் இருக்கின்றன.

அதாவது:—

அவர்கள் (ஹஸ்ரத்து ஈசா நபியவர்களை) மறுத்ததுமன்றி, மரியமின்பேரில் பிரமாண்டமான அவதூறும் சொன்னார்கள். அன்றியும் நாம் அல்லாவுடைய ரசூலென்று சொல்லிக்கொண்டிருந்த மஸீஹிபுனு மரியமைக் கொன்றுபோட்டோமென்றும் சொல்ல ஆரம்பித்தனர். உண்மையில், அவரைக் கொன்று போடவுமில்லை. சிலுவையில் அறையப்படவுமில்லை. எனினும், அவர்களுக்குச் சந்தேகமுண்டாய்விட்டது. எவர்கள் இதில் (ஈசா நபி அவர்கள் விஷயத்தில்) அபிப்பிராய பேதகமாயிருந்தார்களோ அவர்கள் தாங்களே சந்தேகத்திலிருந்தார்கள். அவர்களுக்கு கொஞ்சமும் நம்பிக்கையில்லை. ஆயினும், மதிப்பான யோசனையின்பேரில் சென்றுகொண்டிருந்தார்கள் (உண்மையாவது) அந்த எகூதிகள் ஈசாவை வெட்டவில்லை; இது உறுதியாயிருக்கிறது. மேலும், ஆண்டவன் அவரை தன்னளவில் எடுத்துக்கொண்டான். இன்னும், ஆண்டவன் தத்துவமுள்ளவன். பூரண அறிவுள்ளவனுமாயிருக்கிறான் என்பதே.

இந்த குர்ஆனின் ஆயத்துகளாகிறது:— 3-வது சுஜூவிற் சொல்லப்பட்ட ஆயத்துகளுக்குப்பின்னல் இறங்கியிருக்கிறது. ஆதலால், ஹஸ்ரத்து ஈசா நபியவர்கள் வெட்டப்படவுமில்லை. சிலுவையில் அறையப்படவுமில்லை. மேலும், அவர்கள் வானத்தின்பேரில் எடுத்துக்கொள்ளப்பட்டார்களென்பது பகிரங்கமாயிருக்கிறது.

குர்ஆனில் இவ்வளவு தெளிவாக விளக்கப்பட்டிருந்தும், மிர்ஸா குலாம் அஹ்மதைத் தயார்ந்தவர்கள், ஹஸ்ரத்து ஈசா நபியவர்கள் வானத்தின்பேரில் அழைக்கப்படவில்லையென்றும், அவர்கள் இந்துஸ்தானிற்குப் பிரயாணஞ்செய்து, காஷ்மீரில்

மரணமாகி அங்கேயே அடக்கப்பட்டிருக்கிறார்களென்றும், சொல்லுகிறார்கள்.

இப்போது நான் வாதி; பிரதிவாதிகளில் மார்க்க விசுவாசப்பிரமாணங்களில் உண்டாயிருக்கிற முக்கிய பேதங்களை விபரிக்கிறேன். மிர்ஸா சாஹிபு தமது பற்பல நூல்களிலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹென்று தாவாச் செய்திருக்கிறார். இந்தத் தாவாவை வாதியும் அவர்களின் மற்ற மதஹபுக்காரர்களும் பொதுவாக அங்கிகரிக்கிறதினால் நாம் ஆதாரங் கொடுக்கத் தேவையில்லை. இதற்கு மாற்றமாக பிரதிவாதிகள் மிர்ஸா சாஹிபு வாக்களிக்கப்பட்ட மஸீஹில்லை. ஏனெனில், ஹதீதின்படி ஹஸ்ரத்து ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இரண்டாம் விடுத்தம் இவ்வுலகிற்கு வரும்பொழுது திமிஷ்கு தேசத்தின் கீழ்புறத்திலிருக்கப்பட்ட வெள்ளை மனாறவின்பேரில் இறங்குவார்கள் என்று (ஹதீதில் வந்திருப்பதினால் இவர் இல்லை என்று) சொல்லுகிறார்கள்.

முஸ்லீமுடைய ஹதீதைப் பார்க்கவும்; இன்னும் அவர்களின் (ஈசா நபியின்) காலத்தில் உலகம் மிக்க செழிப்பாயும், அமைதியாயுமிருக்கும். பொறாமை, கோபம், பூரணமாய் எடுபட்டுப்போய்விடும். வேங்கையும், ஒட்டகையும், காடியும், ஆடும் ஓரிடத்தில் வசிக்கும். பிள்ளைகள் பாம்புடன் விளையாடுவார்கள். அவர்களுக்கு யாதொரு திமையும் அணுகாது. (என்று சொல்லப்பட்டிருக்கிறது.) (சேல்துரையின் முகவுரை 63-ம் பக்கம் பார்க்க.)

இன்னும், ஹஸ்ரத்து ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 40 வருஷம் வரை உயிரோடிருப்பார்களென்றும், பின்னர் மரணமாகி ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் மஹத்தான கபுரின் பக்கத்தில் அடங்கப்பட்டுக் கியாம நாளில்கூட எழும்புவார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (மிஷ்காத்துடைய ஹதீதைப் பார்க்க.)

இவ்விதக் காரணங்களால் பிரதிவாதிகள் மிர்ஸா குலாம் அஹ்மது வாக்களிக்கப்பட்ட மஸீஹென்பதை நிராகரிக்கிறார்கள். மிர்ஸா சாஹிபு தமது நூல்களில் தாம் நபியென்றும்

ஆண்டவனின் ரசூலென்றும், தாவாச் செய்திருக்கிறார். அவர் தம்மைத் தனித்த நபியாகத் தாவாச் செய்யவில்லையென்றும், உம்மத்திலுள்ள நபியாகத் தாவாச் செய்திருக்கிறாரென்றும், வாதிகள் சொல்லுகிறார்கள். இன்னும், அவர் ஹஸ்ரத்து முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவ சல்லமவர்களைப் பின் பற்றினதாலும் அவர்களின் பிரதிநிதியாயிருந்ததனாலும் அவர் நபியாயிருக்கின்றாரென்றும், வாதிகள் சொல்லுகிறார்கள்.*

ஒரு உம்மத்திலுள்ளவரும், பிரதிநிதியானவரும், நபியாவாரென்று குர்ஆனிலும், ஹதீதிலும், எங்கும் சொல்லப் படவுமில்லை. இஸ்லா மார்க்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட எந்த நூல்களிலும் அவ்விதம் கூறப்படவுமில்லை. வாதிகளும் அதை ஸ்தாபிக்கிறதற்கு முடியாமலிருந்துவிட்டார்கள். இதற்கு நேர் மாறாக முஹம்மது நபியவர்களுக்குப் பின்பு யாதொரு நபியும் இடையாது. நாயகமவர்கள் கடைசி நபியாயிருந்தார்களென்று குர்ஆன் ஹதீது மூலமாக வெளியாகிறது. (சேல்துரை 33-ம் அதி. 31-ம் ப. பார்க்க.)

குர்ஆனுடைய ஆயத்து கீழே வரையப்பட்டிருக்கிறது.

அதாவது:- (ஜனங்களே!) முஹம்மது உங்களில் நின்றும் யாருக்கும் பிதாவல்ல. திட்டமாக அவர் அல்லாவின் ரசூலாயும் கடைசி நபியாயுமிருக்கிறார் என்பதே. காத்தம் என்ற எழுத்தின்பேரில் அபிப்பிராய பேதமுண்டாயிருக்கிறது. வாதிகள் அதன் அர்த்தம் கடைசி என்பதை ஒப்புக்கொள்ளுகிறார்களில்லை. முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் கடைசி நபியாயிருந்தார்கள். அவர்களுக்குப் பின் வேறு நபி கிடையாதென்பது உலகத்திலுள்ள சர்வ முஸ்லிம்களின் விசுவாசப் பிரமாணம். (சேல்துரையின் முகவுரை 49, 57. ப.)

இந்த குர்ஆனின் ஆயத்திற்கு வியாக்கியானம் செய்கிறது ஹஸ்ரத்து ரசூல் நாயகம் அவர்களை விட விசேஷமாக ஒருவராலும் முடியாதென்பது எனது அபிப்பிராயம். ஏனெனில், நாயகமவர்களின் மீதே குர்ஆன் இறங்கப்பட்டுள்ளது. (மிஷ்காத்தைப்பாருங்கள்.) ஹதீதின் அர்த்தத்தை எழுதப்படுகிறது.

திட்டமாக எனது உம்மத்தில் முப்பதுபேருண்டாவார்கள்.

அதில் நின்றும் ஒவ்வொருவனும் நபிப்பட்டத்தைப்பற்றி தாவாச் செய்வான். நான் கடைசி நபியாயிருக்கிறேன். எனக்குப்பின் வேறு நபி கிடையாது என்பதே. புகாரியிலும் இவ்வித ஹதீதுகளிருக்கின்றன. ஹதீது ஷரீபுகளிலிருக்கின்றது எனக்குப் பின் வேறு நபி உண்டாகக்கூடுமானால், அது (ஹஸ்ரத்து) உமருயிருக்கலாம் என்பதே.

காதியானிகள் மிர்ஸா குலாம் அஹ்மதை ஹஸ்ரத்து ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக்காண பதவியில் சிறந்தவர்களாக எண்ணுகிறார்களென்றும், உம்மத்திலுள்ள நபியைப்போலில்லாமல் நபியினுடைய ஸ்தானத்திலே நபியென்றும், பைகம்பர் என்றும், விசுவாசிக்கிறார்களென்றும், யாதும் சந்தேகமின்றி எனது அபிப்பிராயத்தில் பூரணமாக ருஜுவாய்விட்டது. வாதிகளின் 8-வது சாக்ஷியும் அப்படியே விபரித்திருக்கிறார். வாதிகள் மிர்ஸா குலாம் அஹ்மது தனது உள்ளமையைக்கொண்டே நபியாயிருந்தாரென்றும், ஹஸ்ரத் முஹம்மது நபியவர்களின் மீது இறங்கிக்கொண்டிருந்த வஹீயைப்போல் இவர் மீதும் இறங்கிக்கொண்டிருந்ததாகவும், பிடிவாதம் பண்ணுகிறார்கள். வாதிகளின் இந்த ஆச்சரியமான விசுவாசம் குர்ஆன் ஹதீதிற் சொல்லப்பட்டபடி. அதாவது, ரசூல் நாயகம் அவர்களுக்குப் பின் யாதொரு நபியும் உண்டாகமாட்டார்கள் என்ற இஸ்லாமின் அஸ்திபாரத்திற்கு மாற்றமாயிருக்கிறது. இன்னும், அவர் தாம் நபியென்றும், ரசூலென்றும், தாவாச் செய்ததுமன்றி ரசூல் நாயகமவர்கள் நீங்கலாக மற்றெல்லா நபிமார்களைப் பார்க்கிலும் சிறந்தவராக வாதாடியிருப்பது அவரின் சில நூல்களிலிருந்தும் வெளியாகிறது. (ஹக்கீக்கத்துல் வஹியைப் பார்க்க.)

அன்றியும், ஹஸ்ரத் முஹம்மதுர்ரசூலுல்லா அவர்களுடன் சரிசமானமானவரென கவிகளைக்கொண்டும் தாவாச் செய்கிறார். உதாரணமாக பார்ஸி பாஷையில் ஒரு கவியில் சொல்லுகிறார்.

நானே காலத்தின் மஸீஹாயும், ஆண்டவனுடன் வசனித்த (மூசாவைப்போலும்) வனாகவுமிருக்கிறேன். நானே முஹம்மதாயும், அஹ்மதாயும், முஸ்தபாவாயும் இருக்கிறேன் என்பதே.

இவர் தமது துவக்கமான நூல்களில் தம்மைப் பின்பற்றினவரென்றும் சொல்லியிருக்கிறார். ஆயினும், அவரின் வயது அதிகப்பட்டுக்கொண்டு போகப் போக அவர் ஹஸ்ரத் ரசூல் நாயகம் அவர்கள் நீங்கலாக, இமாம் ஹசன், ஹஸ்ரத் ஈசா இன்னும் மற்ற எல்லா நபிமார்களைப் பார்க்கிலும் உயர்ந்து கொண்டே போகிறார். அப்பால், ரசூல் நாயகம் அவர்களுடன் சரிசமானமென்றும், தாவாச் செய்ய ஆரம்பிக்கிறார். எதுவரை (உயர்கிறார்) என்றால் அவர் செல்லச் செல்ல சர்வ தத்துவமுடைய ஆண்டவனாகவுமாகிவிடுகிறார். அப்போதுதான் அவர் பூமியைச் சிருஷ்டிக்க உத்தரவு கொடுத்தார்.

மிர்ஸா குலாம் அஹ்மது ஹஸ்ரத்து ஈசா நபியவர்களின் விஷயத்தில் தாழ்ந்த இழிச்சொற்களை வழங்கியிருக்கிறார். இமாம் ஹசன் ஹுசைன் அலைஹிமுஸ்லாம் அவர்களை நிந்தனையாய்ப் பேசியிருக்கிறார். இதற்குப்பின் அவர் சொல்லுகிறார்:- கிறிஸ்தவர்கள் நமது நாயகமவர்களின் மஹாத்துவத்திற்கு மாற்றமான சொற்களைச் சொல்லுகிறதினால் அவர்களுக்கெதிராக ஹஸ்ரத் ஈசா நபியவர்களைத் தூஷணித்திருக்கிறேனென்றும், இமாம் ஹசன் ஹுசைனை ஷியாக்களுக்கு மறுப்பாகத் தூஷணித்திருக்கிறேனென்றும் சொல்லுகிறார்.

நஸாராக்கள் பைபிளின் மூலமாக ஹஸ்ரத்து முஹம்மதுர் ரசூலுல்லா அவர்களை மதிக்கிறதற்குக் கட்டுப்பட்டவர்களல்ல. ஆதலால், அவர்களும், (மிர்ஸாவுக்கெதிராக) நாயகமவர்களின் விஷயத்தில் எதை நாடுவார்களோ சொல்லக்கூடும். ஆண்டவன் ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை குர்ஆன் ஷரீபில் தானே புகழ்ந்தும், அவர்களின் நாமத்தைப் பற்பல இடங்களில் மதிப்பாகச் சொல்லும்போது மிர்ஸா குலாம் அஹ்மது அவர்களின் விஷயத்தில் இவ்விதமான நிந்தனைச் சொற்களை உபயோகிக்காமலிருக்கவேண்டியது அவசியமாயிருந்தது. முஸ்லிம்களின் விசுவாசப்படி அசல் தௌராத்தும், இஞ்சீலும், உலகத்தை விட்டுத் தவறிப்போனதென்றும்; தற்காலமிருக்கப் பட்ட பைபிளை ஒப்புக்கொள்ளவில்லையென்றும் ஏற்பட்டிருக்கும்போது, மிர்ஸா சாஹிபு இழிச்சொற்கள் (நபியவர்களைப் பற்றி) பைபிளில் இருக்கின்றனவென்று சொல்லவேண்டிய

அவசியமென்ன? (நஊதுபில்லா அல்லா காப்பாற்றவேண்டும்.) மிர்ஸா சாஹிபு ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாமவர்களை ஜாலவித்தைக்காரரென்றும், சாராயம் குடிக்கிறவரென்றும், பாவியென்றும், அநேக தூர் நடப்புள்ள ஸ்திரீகளின் சாவகாசத்தில் இருந்தாரென்றும், அந்த ஸ்திரீகளைகொண்டு சிரசில் எண்ணெய் தேய்க்கச் செய்தாரென்றும் கூறுகிறார். ஹஸ்ரத் மரியம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விஷயத்தில் மிகவும் கேவலமாக அவர்களின் மாதாவும், பாட்டியும் தூர் நடப்புள்ளவரென்றும், கூறுகிறார். (ஹக்கீக்கத்துல் வஹீயைப்பாருங்கள்.)

மேலே சொல்லப்பட்ட விஷயங்களைப் பார்க்கும்போது முஸ்லிம்களின் இருதயங்களில், ஒரு பிரமாண்டமான வெறுப்பின் கிளர்ச்சியுண்டாகிறது. குர்ஆன்ஷரீபில் ஹஸ்ரத் ஈசாநபி அவர்களையும், அவர்களின் மாதாவையும் மிகவும் மதிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது: (அல்லாவுடன்) நெருங்கியவர்களின் சிநேகத்தைத் தவிர உங்களில் நின்றும் அதன் பேரில் யாதொரு கூலியும் நாடவில்லையென்று சொல்லிவிடும் என்பதே. ஹதீதில் நாயகமவர்கள் சொன்னதாக நாம் பார்க்கிறோம்.

> எனது குடும்பத்தில் ஹசன், ஹுசைன்
> எனக்கு எல்லோரையும் விட அதிகப் பிரியப்
> பட்டவர்களாயிருக்கிறார்கள் என்பதே.

என் முன்னாலிருக்கப்பட்ட சகல எழுத்துக்கள் சாக்ஷியங்களைக்கொண்டு இந்த முடிவை எடுக்காமல் இருக்க முடியாது. அதாவது, வாதி பிரதிவாதிகளின் மார்க்க விசுவாச மூலப்பிரமாணங்களில் எவ்விதமான ஒற்றுமையும் கிடையாது. இவ்வித பலத்த மாற்றங்கள் உண்டாயிருக்கும்போது, வாதிகள் தங்களுக்குத் தனியாக ஒரு மஸ்ஜிதைக் கட்டிக்கொள்ளாமல் கோர்ட்டிற்கு எப்படி வந்தார்களென்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. இவ்வாறான நூல்களை இயற்றினதின்பேரில் பிரதிவாதிகள் மிர்ஸா குலாம் அஹ்மதை ஹனபி உலமாக்களிடத்தில் முஸ்லிமல்லவென்று புகல்கின்றார்கள். மிர்ஸா சாஹிபு எப்படியிருந்தார், அவர் யார், என்ற விஷயங்களை மத சம்பந்தமான கோர்ட்டுகளில் தீர்ப்புச் செய்யவேண்டியதைத் தவிர எனது

அபிப்பிராயத்தை வெளியிடமுடியாது. வாதி பிரதிவாதிகளில் இஸ்லாமுடைய சில முக்கிய அம்சங்களில் பலத்த பேதகமிருக்கிறது. மிர்ஸா குலாம் அஹ்மது ஏற்படுத்திய மார்க்கத்தைத் துயர்ந்ததினால் காபிரென்று சொல்லத் தகுந்தவர்களாயிருக்கிறார்கள். நான் அவர்களைக் காபிரென்று பகராவிட்டாலும், அவர்கள் ஹனபி முஸ்லிம்களல்லவென்பதைக் கண்டிப்பாய்க் கூறுவேன். அவர்களை அக்தாராகப் பள்ளியில் தொழுகை புரிய உத்தரவு கொடுக்கப்படமாட்டாது. வாதிகளின் விசுவாசப்படி கலகமுண்டாகும். திலாவர்பூர் என்ற தெருவில் கட்டப்பட்ட பள்ளி உலகத்திலுள்ள சுன்னத்து ஜமாஅத்துகளுக்காகக் கட்டப்பட்டது. ஆதலால், வாதிகள் பள்ளியில் தொழுகை புரிய யாதும் அதிகாரமில்லை. ஷை தாவாவை நூற்றுக்கு ஆறு வட்டியுடன் செலவு சகிதம் டிஸ்மிஸ் செய்யப்பட்டது.

இபுராஹீம் அஹ்மத்,

சப்-ஜட்ஜ்.

30, ஜூன் 1920 பத்திரிகையில்.

1914-க்கு தவறுதலாக 1920 என்று எழுதியிருக்கலாம். ஏனெனில் இதற்குப் பிந்தின அப்பீல் 1915-ல், ஏற்பட்டிருக்கிறது. (ரிசாலா அர்ரஹீது தேணிபந்து றஜபுமீ 1338-ம் ஹிஜ்ரி.)

## அப்பீல்.

இவ்வாறு தீர்ப்புச் செய்யப்பட்ட பின்பு வாதிகள் டிஸ்டிரிக்ட் ஜட்ஜிடம் அப்பீல் செய்துகொண்டார்கள். அவரும், திரும்ப விசாரணை செய்து தீர்ப்புச் செய்யலானார்.

அதன் சுருக்கம் பின்வருமாறு:—

## டிஸ்டிரிக்ட் ஜட்ஜின் தீர்ப்பு.

வாதிகள் தங்களுக்குத் தனி ஜமாஅத்தை ஏற்படுத்த ஆசையை பிறப்பிக்க வேண்டுமென்கிறார்கள். பிரதிவாதிகள் அவர்கள் இஸ்லாமானவர்களல்ல. ஆதலால், பள்ளியில் தொழப் பாத்தியதையுடையவர்களல்ல என்கிறார்கள்.

இதிலிருந்து மூன்று விஷயம் வாதிக்கத்தக்கது:—

(1) மிர்ஸா குலாம் அஹ்மது முஸ்லிமா அல்லவா.?

(2) விவாதத்திலிருக்கப்பட்ட பள்ளி யாருக்காக கட்டப்பட்டது.?

(3) வாதிகள் பள்ளியில் தொழத் தகுந்தவர்களா? அல்லவா? தகுந்தவர்களானால் ஒரு தனித்த இமாமிற்குப் பின்னல் மற்ற நேரங்களில் தொழக்கூடுமா? அல்லவா.?

முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் மிர்ஸா குலாம் அஹ்மதைக் காபிரெனப் புகல்கிறார்கள். எனது அபிப்பிராயத்தில் வாதிகள் முஸ்லீம்களென்பதில் சந்தேகமன்று. இப்பள்ளியாகிறது, சுன்னி முஸ்லிம்களுக்காகவே கட்டப்பட்டது. பிரதிவாதிகள் வாதிகள் காபிராயிருக்கிறார்களென்று ஆதாரங்காட்டுகிறார்கள். அவைகளும் அஸ்திபாரமற்றதுமல்ல. மிர்ஸா குலாம் அஹ்மதின் நூல்களைக்கொண்டே ருஜூவாகிறது. ஆயினும், சுன்னத்து ஜமாஅத்துகளில் முக்கிய கொள்கைகளுக்கு நேர் மாற்றமாயிருக்கிறார்கள். குர்ஆனின் சட்டப்படி, யார் கடைசி நபி யென்று தீர்ப்புச் செய்கிறது. என்னைச் சம்மந்தப்பட்டதல்ல. எனினும், இரு கக்ஷியாரும் ஒருவருக்கொருவர் காபிர் என்று பகர்வதில் ஆக்ஷேபமன்று. எனது அபிப்பிராயத்தில் தனி ஜமாஅத்தை எற்படுத்தத் தகுந்தவர்களல்ல. அப்பீல் செலவு சகிதம் தள்ளப்பட்டது. ஆனால், கீழ்க் கோர்ட்டாரின் தீர்ப்பில் ஒரு திருத்தஞ் செய்கிறேன்.

அதாவது: வாதிகள் பள்ளியில் எற்படுத்தப்பட்ட இமாமிற்குப்பின்னல் பிரதிவாதிகள் மற்றும் சுன்னத்து ஜமாஅத்துகளுடன் சேர்ந்து தொழுகை புரிய அதிகாரமுண்டு.

மிஸ்டர். யன். கே. தத்,

18, மே 1915. டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்.

## அப்பீல்.

அப்பீல் இரு கக்ஷியாரும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜியின் தீர்ப்பைக்கொண்டு சமாதானப்படாமல், பஞ்சாப் ஹைக்கோர்ட்டு ஜட்ஜ்களிடம் அப்பீல் செய்துகொண்டார்கள்.

## ஹைக்கோர்ட்டு ஜட்ஜ்களின் தீர்ப்பு.

டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் வாதிகளைக் காபிரென்று தீர்மானிக்க

வேண்டியதிருக்க அவரின் (மிர்ஸாவின்) துவக்கமான நூல்களைப் பார்த்துக்கொண்டு முஸ்லிமென்று தீர்ப்புச் செய்துவிட்டார். அன்றியும், கீழ்க் கோர்ட்டாரின் தீர்ப்பில் திருத்தம் செய்து வாதிகள் பள்ளியில் சென்று முஸ்லிம்களோடு தொ-ழுகை புரியலாமெனத் தீர்ப்புச் செய்திருக்கிறது தவறு என்று பிரதிவாதிகள் சொல்லுகிறார்கள்.

டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் வாதிகளை முஸ்லிம் என்று ஒப்புக்கொண்டு அப்பால் பிரதிவாதிகளின் ஜமாஅத்திற்கு முன்னாவோ, பின்னாவோ வாதிகள் தனி ஜமாஅத்து ஏற்படுத்தலாம் என்று தீர்ப்புச் செய்யவேண்டியதிருக்க; மாற்றமாய்த் தீர்ப்புச் செய்திருக்கிறது சட்டவிரோதமாயிருக்கிறது என்று வாதிகள் சொல்லுகிறார்கள். கீழ்க் கோர்ட்டார்கள் வாதியை முஸ்லிம் என்று தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். எனினும், அவர்கள் மதாபிமானிகளான முஸ்லிம்களைக் காபிரென்று கூறுவதினால் அவர்கள் (மிர்ஸாயி மதத்தார்கள்) டிஸ்டிரிக்ட் ஜட்ஜியின் டிக்ரியின் பிரகாரம் பிரயோஜனம் பெற வாதியில்லை. வாதிகளின் தாவாவின்படி ஒரே பள்ளியில் இரு வகுப்பார், இரு ஜமா-அத்தை ஏற்படுத்துகிறது இஸ்லாமிய ஷரீஅத்தில் காணப்படவில்லை. இவ்வாறு இரு ஜமாஅத்து ஏற்படுத்த உத்தரவு கொ-டுத்தால், காதியானிகளைக் காபிரென்றும், அதன்பேரில் தீர்ப்பும் செய்திருக்கப்பட்ட சுன்னி முஸ்லிம்களின் தொழுகையின் க்ஷேமம் குறைவு படும். அன்றியும், பூர்விக முஸ்லிம்களுக்கு பரம்பரையாய்க் கிடைத்துக்கொண்டிருந்த பாத்தியதையழிந்துவிடும். தேவாலயத்தில் சதாவும் கலகம் நடந்துகொண்டிருக்கும். இது காரணங்களால், வாதிகளின் தாவா ரத்துச்செய்யத் தகுந்ததாக இருக்கிறது. ஆகவே, இரண்டு அப்பீலும், செலவு சகிதம் தள்ளப்பட்டது.

ஜஸ்டிஸ். ஷேமர் துரை பஹதூர்.
21, டிசம்பர் 1916.

இந்த அபிப்பிராயத்தை நானும் அங்கீகரிக்கிறேன். இந்த வியாச்சியத்தைத் தீர்ப்புச் செய்திருக்கிற யோக்கியதையுடைய சப்-ஜட்ஜ் ஒரு முஸ்லிமாயிருக்கிறார். அவர் தமது தீர்ப்பில்

தனி ஜமாஅத்து ஏற்படுத்துகிறதைப் பற்றி ஒரு அழகான ஆதாரங் காட்டியிருக்கிறார். எனது அபிப்பிராயத்தில் இந்த ஆதாரம் ஸாதுல்மஆது என்ற நூலின் 3-வது வால்யும் பாக்கி யுடைய அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால், வாதிகளுக்குத் தனி ஜமாஅத்து ஏற்படுத்த உத்தரவு கொடுக் கப்படமாட்டாது. இரு அப்பீலும், செலவு சகிதம் தள்ளப் பட்ட அபிப்பிராயத்தை நானும் அங்கீகரிக்கிறேன்.

ஜஸ்டிஸ். ரோ துரை பஹ்துர்.

21, டிசம்பர் 1916.

(ரிசாலா அர்ரஷீது ஷஃபான் 1338 ஹிஜிரி.)

1. மௌங்கீர் தேசத்திற் கடுத்தாற்போல் பாகல்பூர் என்று ஓர் நகரமிருக்கிறது. காதியானி மதத்தைச் சேர்ந்த மௌல்வி. அப்துல் மாஜிது என்பவர் அவ்விடத்திலுள்ள பெரு நாள் தொழுகிற இடத்தை எங்களுக்குரியதென்றும், முஸ்லிம் கள் இதில் பிரவேசிக்கக் கூடாதென்றும் தடுக்கலாயினர். அப் பால், வியாச்சியம் நடைபெற்றது. கோர்ட்டார் விஜாரணை செய்து காதியானிகள் அங்கே பிரவேசிக்கக்கூடாதென்று தீர்ப்புச் செய்து விட்டார். சிறுமைப்பட்டவர்களாக காதியானி கள் துரத்தப்பட்டார்கள்.

2. கட்டக் என்ற நகரத்தில் மிர்ஸாயி மதஸ்தர்கள் முஸ் லிம்களாகிய எங்கள் பள்ளியில் பிரவேசிக்கக் கூடாதென்று முஸ்லிம்களால் வியாச்சியம் நடத்தப்பட்டது. அதில் மௌங் கீர் ஜட்ஜிமெண்டு நகலை வருத்தி ஆஜர் செய்யப்பட்டது. கோர்ட்டார் விஜாரணை செய்து தீர்ப்புச் செய்ததாவது:

காதியானிகள் சுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களுடைய நான்கு பள்ளிகளாகிய, (1) ரசூல்பூர்; (2) கோசம்பி; (3) முஹிப் யித்தின்பூர்; (4) திவான் சாஹி முதலிய பள்ளிகளில் அடிவைக் கக்கூடாது. மீறி நடப்பார்களானால், சட்டப்படி நடவடிக்கை கள் நடத்தப்படும் என்பதே.

ஆகவே இங்கு அவமானத்துடன் விரட்டப்பட்டார்கள்.

3. ஆப்பிரிக்காவில் மோரீஷஸ் என்று ஒரு தீவு இருக் கிறது. சற்றேறக் குறைய 45,000 முஸ்லிம்கள் வசிக்கிறார்கள்.

10 பள்ளிக்கு அதிகமாக இருக்கிறது. அவிடம், சென்ற ஆறு வருடங்களாக காதியானி மிஷனரிகள் சென்று கிலாபத்துக்கு மாற்றமாகவும், கவர்ன்மெண்டுக்கு உதவியாகவுமிருந்து சாதாரண முஸ்லிம்களைப் பயமுறுத்தி சுமார் 50 பேர் வரை மிர்ஸாயி மதத்தில் சேர்த்துவிட்டார்கள். அவடம், ஜும்ஆ பள்ளியின் இமாமாகிய ஜனாப். மௌலானா அப்துல்லாரஷீது அவர்களுக்கு இது விஷயம் எட்டினதும் உடனே இம்மதத்தினரைக் கண்டனம் செய்ய ஆரம்பித்து பத்திரிகை, நோட்டீஸ் புத்தகம், தர்க்கம் முதலியவைகளால் மேற்கொண்டு வந்தனர். அப்பால், இவர்கள் எங்கள் பள்ளிகளில் பிரவேசிக்கத் தகுந்தவர்களல்லவென கோர்ட்டில் வியாச்சியம் நடத்தப்பட்டது. மௌலானா அவர்கள், இந்தியா மௌங்கிர் ஜட்ஜ்மெண்டு நகலை வருத்திக் கோர்ட்டில் ஆஜர்படுத்தினார்கள். காதியானி, பி. எ. முதலியவர்கள் எவ்வளவு பிரயத்தனம் எடுத்தும் பலிக்காமல் சிறுமைப்பட்டவர்களாக எல்லாப் பள்ளிகளிலும் நுழையக் கூடாதென்று கண்டிப்பான உத்தரவு செய்து தூரத்தப்பட்டார்கள்.

4. கட்டக் என்ற நகரத்தில் மிர்ஸாஹி மதத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரீ மரணமாய்விட்டாள். அவளை முஸ்லிம்களின் சமாதிஸ்தானத்தில் அடக்கம்பண்ண ஆரம்பித்தார்கள். முஸ்லிம்கள் தடுத்துவிட்டனர். மிர்ஸாயி மதஸ்தர்களால் கோர்ட்டில் வியாச்சியம் நடத்தப்பட்டது. செஷன் ஜட்ஜ் நன்கு விசாரணை செய்து முஸ்லிம்களின் கபுருஸ்தானங்களில் புதைக்க உங்களுக்கு அதிகாரமில்லையென்று தீர்ப்புச் செய்துவிட்டார்.

5. பஞ்சாப் மாகாணத்தில் ஓஜ்ஹீர்கா வென்றொரு தேசமுண்டு. அங்கே முஸ்லிமான ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம் செய்துகொண்டு அந்த ஸ்திரீ வீட்டிலேயே வாசம்பண்ணி வந்தான். அப்பால், அவன் மிர்ஸாயி மதத்தில் சேர்ந்துகொண்டானென்ற பிறஸ்தாபம் எட்டியவுடன் பெண் வீட்டார்கள் அவனை அந்த வீட்டிலிருந்து தூரத்திவிட்டு பெண்ணையும் விடாமல் வைத்துக்கொண்டார்கள். அவன் எனது ஸ்திரீ எனக்குக் கிடைக்கவேண்டுமென்று பாகல்பூர் கோர்ட்டில் பிராது கொடுத்தான். முன்சிபு விசாரணை செய்து தீர்ப்புச் செய்ததாவது:

சற்றேறக்குறைய இந்தியாவிலுள்ள உலமாக்களடங்க

இம் மிர்ஸாயி மதஸ்தன் முஸ்லிமான பெண்ணை விவாகஞ் செய்யத் தகுந்தவனல்லவென ஒற்றுமையாய் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். ஆதலால், நான் விவாகத்தைப் பிரித்துவிட்டேன் என்பதே.

6. நமது ராஜப்பிரதிநிதி சிம்லாவில் காதியானி தூதர்களுக்குப் பேட்டி கொடுத்தார். அதில் காதியானி தூதர்கள் ராஜப்பிரதிநிதிக்கு ஓர் அட்ரஸ் வாசித்துக் கொடுத்தார்கள். அதில் ஒரு விஷயமாவது: எங்கள் மிர்ஸா சாஹிபு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று தாவாச் செய்ததிலிருந்து ஜிஹாது (யுத்தம்) என்ற வீண் எண்ணத்தை ஜனங்களின் மனதிலிருந்து எடுத்துவிடவில்லையானால், இங்கிலீஷ் கவர்ன்மெண்டு இந்தியாவை விட்டு துரத்தப்பட்டுப்போய் வெகுநாளிருக்கும் என்றும் வாசித்தார்கள். ராஜப்பிரதிநிதி அவர்களின் அட்ரஸ்களுக்கெல்லாம் பதில் சொல்லிவந்து கடைசியில் இவர்களின் மதம் இஸ்லாமல்ல. மிர்ஸா சாஹிபால் உற்பத்தி செய்யப்பட்ட ஓர் புதிய மதமாயிருக்குமென்று பதிலளித்தார்.

மிர்ஸா சாஹிபு முகஸ்துதிகள் செய்து ஏதாவதொரு பட்டம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வேலை செய்து வந்ததுபோல் அவரின் உம்மத்துகளும் நடத்தி வருகிறார்கள். ஆயினும், பட்டம் பெற்றுக்கொள்கிறதற்குப் பதிலாக இஸ்லாமை விட்டும் நீங்கினவர்களென்று பக்கம் பெற்றுக்கொண்டு வந்தது மிக்க பரிதாபமாயிருக்கிறது. இதெல்லாம் மிர்ஸா சாஹிபின் பிரார்த்தனையின் பாக்கியமேயன்றி வேறல்ல. (அர்ரஷீது சபர் 1339. 25 ரமலான் 1339. அஹ்லெ ஹதீது சபர் 18 1340. அஹ்லஹதீது.)

முஸ்லிம்களே! இந்த ஜட்ஜிகள் தீர்ப்புச் செய்ததிலிருந்து அநேக விஷயங்கள் வெளியாகின்றன. அதாவது, காதியானிகள் காபிர்கள். சமீபத்தில் தோன்றிய புது வகுப்பார்கள்; இவர்களின் விசுவாசம் முழு உலக முஸ்லிம்களுக்கும் மாற்றமானதே. காதியானிகள், முஸ்லிம்களுக்குப் பின் தொழக்கூடாதாம். அவர்களின் குரு அப்படியே தீர்ப்புச் செய்திருக்கிறார். மிர்ஸா சாஹிபை வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் என்று ஏற்றுக்கொள்ளாத எந்த முஸ்லிமாயிருந்தாலும் கற்பத்துல்லா

வின் இமாமாயிருந்தாலும் பின்னல் தொழக்கூடாதாம். ஹஸ்ரத்து ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் அவர்களின் தாயாரையும், இமாம் ஹசன், ஹுசைன் (ரவி) முதலியோர்களையும் கடுமையாய்த் தூஷணித்திருக்கிறது ஞாபகத்தில் இருக்க வேண்டும்.

நேயர்காள்! இந்தக் காதியானி மதத்தாரின் கொள்கைகளையும், நடப்புகளையும் நன்கு விளக்கிக்கொள்ளவே இந்த வியாச்சியங்களின் சாரங்களை இங்கே தரப்பட்டது. இவைகளையெல்லாம் நன்கு கவனித்து இந்தக் காதியானிகள் நாங்களும் ஹனபிகள் சுன்னிகளென்றும்; உங்களுக்கும், எங்களுக்கும் மூல அம்சங்கள் முதலியவைகளில் வித்தியாசமில்லையென்றும் ஏமாற்றும் ஜால வித்தைகளில் நின்றும் தப்பித்துக்கொள்ளுகிறது மிக்க அவசியமாயிருக்கிறது. ஆண்டவன் இந்த மத சத்துருக்களாகிய காதியானிகளின் தீங்கை விட்டும் நம்மைக் காப்பாற்றுவானாக. ஆமீன்.

## மிர்ஸா ஸாஹிபின் முன் பின் விரோதச் சொற்கள்.

மிர்ஸா சாஹிபாலியற்றப்பட்ட ஒரு புத்தகத்தைப் பார்த்துவிட்டு அவரால் இயற்றப்பட்ட அடுத்த புத்தகத்தைப் பார்த்தால் இது இவராலியற்றப்பட்டதோ; என்னமோ வெனச் சந்தேகமுண்டாகிறது. இவ்விஷயம், அவரின் புத்தகத்தை ஆராய்ச்சி செய்த மகான்களுக்குத் தெரியாமல் போகாது. சில நேரங்களில் அவரின் துவக்கமான நூல்களைப் பார்த்துவிட்டுக் கடைசி நூல்களைப் பார்த்தால், வானத்துக்கும் பூமிக்குமுள்ள வித்தியாசம் ஏற்படுகிறதைப் பார்க்கலாம். ஒரு கிதாபில் ஒரு விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் பேனாப் பிடித்துவிட்டாரானால் உலகத்தில் இதற்கு நிகருண்டாவென்கிறவரை தமக்குத் தாமே நிகர் நிற்கிறார். அப்பால், மறு கிதாபில் ஏதோ ஒரு நோக்கத்தின் பேரில் முந்தின கிதாபுக்கு மாற்றமாக எழுதப் பேனாவைத் தாங்கிவிட்டால் முந்தின விஷயங்களை அடியோடழித்து இந்த விஷயத்துக்கு நிகரில்லையென மிக்குதீவண்ணம் ருஜூப்படுத்திக் காட்டுகிறார். இந்த இரண்டுக்கு மாற்றமாக வேறே எழுத ஆரம்பித்துவிட்டால், முந்தி எழுதின விஷயங்களெல்லாம் பகலவனைக்கண்ட பனியைப்போலாகும்

வண்ணம் புத்திக்குத் தக்கபடி விஸ்தரித்துக் காட்டுகிறார். இவ்விதம் சமயத்திற்கும், காலத்திற்கும், தக்கபடி எழுதுகிறது மிர்ஸா சாஹிபின் இடதுகை விளையாட்டாயிருக்கிறது. அவரின் நூல்களில் ஒன்றுக்கொன்று மாற்றமானதும், பொய்யாக்கக்கூடியதுமான அநேக விஷயங்களிருக்கின்றன. அவைகளினின்றும் சிற்சில விஷயங்களை எமது முஸ்லிம் நண்பர்களின் பார்வையில் கொண்டுவருகிறேன்.

1. மிர்ஸா சாஹிபு பராஹீன் என்ற கிதாபை இயற்ற ஜனங்களிடத்தில் பண உதவியை நாடி ஒரு விளம்பரம் கொடுத்தனர். அதில் அவர் எழுதுகிறார்:

ஆரியசமாஜத்தார் தங்கள் வேதத்தைத் தவிர மற்ற தௌராத்து, இன்ஜீல், சபூர், புர்க்கான் முதலிய வேதங்கள் கட்டுரை யென்றும் அந்தப் பரிசுத்தமான தீர்க்கதரிசிகளாகிய ஹஸ்ரத்து மூசா, ஈசா, மஸீஹ். ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா அலைஹிமுஸ்ஸலாம் முதலிய நபிமார்களைப் பொய்யாக்கி அவர்களின்மீது இழிச் சொற்களை உபயோகப்படுத்துகிறார்கள். அதை நம்மால் கேட்க முடியவில்லை யென்கிறார்.

2. அமெரிக்காவிலுள்ள டாக்டர் டோய் துரை யென்பவரைப்பற்றி எழுதும்போது மிர்ஸா சாஹிபு எழுதுகிறார்:

டோய் துரை, யசூஉ மஸீஹை ஆண்டவனென்று எண்ணுகிறார். ஆயினும், யான் அவரை ஒரு தாழ்ந்த அடிமையாயும், நபியாகவும் எண்ணுகிறேன். (1902 செப்டம்பர் மாதத்தின் ரிவியூ 344. ப.) (முறக்கஸ் காதியானி 5 ப.)

இவ்விரண்டு விஷயங்களிலும் பரிசுத்தமான தீர்க்கதரிசிகளை ஆரியர்கள் நிந்திக்கிறார்கள். அதை நம்மால் கேட்கமுடியவில்லையென்று எவ்வளவு பரிதாபமாகச் சொல்கிறார். அன்றியும் டோய் துரைக்கு எழுதும்போது * ஹஸ்ரத் ஈசா நபியைத்தாம்

* அமெரிக்காவில் டாக்டர் டோயி என்னும் ஒரு துரை இருந்தார். அவரும் மிர்ஸா சாஹிபைப்போல் தம்மை இல்யாசு நபி யென்று தாவாச் செய்தார். இவ்விஷயம் மிர்ஸா சாஹிபுக்குத் தெரிந்ததும் ஆ! ஆ!! நாம் பஞ்சாபிலிருந்து உலகோர்களுக்கெல்லாம் நபி யென்றும் ரசூல் என்றும் வாதாடிக்கொண்டிருக்கும்போது ஒரு அமெரிக்கனும் இவ்விதம் வாதாடலாச்சுதா வெனச் சினக்கொண்டு அவரைப் பற்பல விதமாய் எழுத ஆரம்

நபி யென்று விசுவாசிக்கிறதாகவும் எழுதுகிறார். பின்னர், தாம் ஈசா, மஸீஹ் என்றும் அவர்களைக் காண பதவியில் சிறந்தவனென்றும் தாவாச்செய்ய ஆரம்பித்தவுடன் என்ன விதமாக எழுதுகிறாரென்று பாருங்கள்.

மஸீஹ், பொய்யன்; அசுத்தமான எண்ணமுடையவன். சாராயம் குடிக்கிறவன்; கொர்வி; நல்லவர்களின் விரோதி; யஹூதியின் சிஷன்; சுழியனை ஷைத்தானுக்குப் பின் நடக்கிறவன்; குவாடக்காரன்; கெட்டவன்; மட்டி; கெட்ட நாவுடையவன்; கோபக்காரன்; திருதிப்போன்; ஷைத்தானின் அனுசாரி; ஷைத்தானால் இல்ஹாம் செய்யப்பட்டவன்; அவனின் பாட்டிகள் வேசைகள்; அவர்களின் இரத்தத்தால் அவன் உற்பத்தியானான். அவன், வேசிகளுடன் சேர்ந்திருப்பதும், வேசிகளை நாடுவதும், அவனின் பரம்பரைக் குறையின் காரணமாயிருக்கக் கூடும். ஒரு வேசி தன் வேசித்தனத்தால் சம்பாதித்த பணத்தால் வாங்கிய வாசனையால் அவன் தலையை அபிஷேகம் பண்ணி விட்டான். (பத்ஹுல் மஸீஹ் 19 முதல் 45 வரை.) (அஞ்சாமே ஆத்தம் அனுபந்தம் 3 முதல் 10 வரை.)

1. மஸீஹ் தமது தேசமாகிய கலீலில் போய் மரணமாய் விட்டாரென்பது வாஸ்தவம். (இஸாலா 2-ம் பாகம் 1091 ப.)

இப்போது இதற்கு மாற்றமாக எழுதுகிறார்:-

எந்த மனிதன் கஷ்மீரில் கான்யார் என்ற தெருவில் அடங்கியிருக்கிறாரோ அவரை வீணாக வானத்தின்பேரில் இருத்தாட்டப்பட்டது. எவ்வளவு அநீதமாகயிருக்கிறது. (காபி உல்பலா 15 ப.)

மேல் விவரிக்கப்பட்ட காஷ்மீருக்கும், கலீலுக்கும் உதயகிரி, அஸ்தகிரியுடைய வித்தியாசமிருக்கிறது. காஷ்மீர் இந்தியாவில்தான் தேசத்திலிருக்கிறது. கலீல், ஷாம் தேசத்திலிருக்கிறது.

---

பித்தனர். இவர் எவ்விதமாயெழுதியும் அந்தப் பட்டணத்து நபி இந்தப் பட்டிக் காட்டு நபியை எதிட்டுக்கூடப் பார்க்கவில்லை. இவ்விதமாக எழுதும்போது மிர்ஸா சாஹிபு ஹஸ்ரத் மஸீஹ் அவர்களை மதிப்பாக நபி யென்று ஒப்புக்கொள்வதாக யெழுதியிருக்கிறார்.

இப்போது இவ்விரண்டுக்கும் மாற்றமாக எழுதுகிறார்:-

ஹஸ்ரத் மஸீஹ் இரண்டாம் விடுத்தம் உலகத்துக்கு வரும்பொழுது அவர்களின் கையைக்கொண்டு எல்லாப் பாகங்களிலும் இஸ்லாமார்க்கம் பரவிவிடும். (1878—ம் வருஷம் அச்சடிக்கப்பட்ட பராஹீன் 4-ம் வால்யம் 498 ப. 458 ப.)

இதில் ஹஸ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாம்
மரணமடையவில்லை யென்று எழுதுகிறார்:-

2. மஸீஹ் அவர்களைச் சிலுவையில் அறையப்பட்ட நேரமாகிறது மூன்று மணியாயிருந்தது. (இஸாலா 49 ப.)

இப்போது இதற்கு மாற்றமாக எழுதுகிறார்:-

(சிலுவையில் அறையப்பட்ட நேரமாகிறது) சற்றேறக் குறைய இரண்டு மணி நேரத்தைக் காணக் குறைவாயிருந்தது. (இஸாலா 324. ப.)

இன்னும் எழுதுகிறார்:-

சில நிமிஷங்களிலேயே மஸீஹை சிலுவையில் இருந்தும் இறக்கப்பட்டது. (இஸாலா 381. ப.)

ஒரே கிதாபில் மூன்று விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

3. எனது தாவாவை மறுத்த எந்த மனிதனும் காபிராகவும், தஜ்ஜாலாகவும் ஆகமாட்டான். அவனுக்கு ஈமானில்லாதவனென்று பெயர் வைக்கமாட்டேன். நான் ஒருபோதும், கலிமாச் சொல்லுகிறவனுடைய பெயரைக் காபிரென்று வைக்கமாட்டேன். தனது தாவாவை மறுத்தவனை ஆண்டவனிடத்திலிருந்து ஷரீஅத்தும், புதிய சட்டங்களும் கொண்டு வந்த நபிமார்கள்தான் காபிரென்று சொல்லக் கூடும். இதைத் தவிர, எப்பேர்ப்பட்ட இல்ஹாமுடையவனாயிருந்தாலும் ஆண்டவனுடன் பேசுகிற மகிமையுடையவனாயிருந்தாலும் அவனை மறுத்த ஒருவனும் காபிராகமாட்டான். (ஸிறாறத்துல் இமாம் 17-ம் பக்கம் முதல் பார்க்க.) (அல்கௌலுஸ்ஸஹீஹ் 8. ப. பைஸலா ஹாக்கும் 12. ப.)

இப்போது இதற்கு மாற்றமாக எழுதுகிறார்:-

குபிரென்பது இரண்டு வகையாயிருக்கும். முதலாவது

குபிராகிறது நாயகமவர்களை ரசூலென்று விசுவாசியாமலும் இஸ்லா மார்க்கத்தை மறுக்கிறதுமாயிருக்கும். இரண்டாவது குபிராகிறது வாக்களிக்கப்பட்ட மஹ்தியை ஒப்புக்கொள்ளாத தாயிருக்கும். (ஆக குபிர் இரண்டு வகையாயிருக்கிறது) ஆயினும், நன்றாய்க்கவனித்துப் பார்க்கும்பட்சம் இந்த இரு வகையான குபிரும் ஒரே வகையில் புகுந்ததாயிருக்கிறது. (ஹக்கிக் கத்துல்வஹீ 59 ப. அல்கௌஉல்ஸஹீஹ் 8 ப.)

4. தாபத்துல் அர்லு என்ற வார்த்தையின் அர்த்தம் சாதாரணமான உலமாக்களாயிருக்கிறது. (மிஹறத்துல்மஸீஹ். இஸாலா 39 ப.) 1104, 1107.)

இதற்கு மாற்றமாக எழுதுகிறார்:-

தாபத்துல் அர்லு என்ற வார்த்தையின் அர்த்தம் புழுக்களாயிருக்கிறது. (லெக்சர் சியால் கோட்) 49. ப.)

5. நபிமார்களின் முன்னறிக்கைகள் தவறிப்போகிறது கூடாத காரியம். (கிஷ்தீநூஹ் 5 ப.)

இந்த விஷயத்தை மறந்துவிட்டு இப்போது வேறே எழுதுகிறார்.

ஒரு இராஜாவின் காலத்தில் நானூறு நபிமார்கள் அவனின் ஜெயத்தைப்பற்றி முன்னறிக்கை செய்தார்கள். அதெல்லாம் பொய்யாய் * விட்டது. (இஸாலா 2-ம்பாகம் 1157 ப.) (ஸஹறத்துல்இமாம் 17 ப)

6. ஆதலால், உவமையின் விதமாக இவன் (மிர்ஸா) தந்தையின்றிப் பிறந்த இபுனுமரியமாயிருக்கிறான். இவனுக்கு யாதொரு ஆத்ம தந்தை உண்டென்று உங்களால் ஸ்தாபிக்க முடியுமா? (இஸாலா 2-ம் பாகம் 269 ப.) 1169 ப.)

இதில் ஹஸ்ரத் ஈசாநபியவர்கள் தந்தையில்லாமல் பிறந்தார்களென்று ஒப்புக்கொள்ளுகிறார். அதாவது, எவ்விதமாக

---

* சுபுஹானல்லா! பொய் சொன்னாலும் பொருந்தச்சொல்லவேண்டாமா? இவ்விதம் நானூறு நபிமார்களுக்குத் தவறுதலுண்டானது நமது பஞ்சாப் நபிக்குத்தான் தெரியவந்தது மேலும், எந்த இராஜா எந்த நபிமார்களென்று விபரமாக அவரின் உம்மத்துகள் தெரியப்படுத்துவார்களாக.

ஈசா நபிக்குத் தந்தையில்லையோ அதுபோல் எனக்கு ஆத்ம தந்தை யில்லையென்பது அவரின் கருத்து.

இப்போது இதற்கு மாற்றமாக எழுதுகிறார் பாருங்கள்:-

மஸீஹ் தமது தந்தை யூசுபுடன் 22 வருஷமாக தச்சு வேலை செய்துகொண்டிருந்திருக்கிறார். (இஸாலா முதற் பாகம் 125 ப. நோட்.) 1013.

7. ஆண்டவன் வானத்தில் பேரில் தனது வல்லமையான ஆளுகையைக் காட்டினான். சந்திரனை இரண்டு துண்டாக்கி விட்டான். (சுர்மயே சிஷம் சூரியா 12-ம் பக்கம் நோட்.)

இப்படியே நாயகமவர்களின் 2-வது முஃஜிஸாவாகிய மதி பிளந்தது; இதே ஆண்டவனின் சக்தியைக்கொண்டு வெளியானது. யாதொரு துஆவும் அதோடுசேர்ந்திருக்கவில்லை; அதாகிறது அல்லாவின் சக்தியைக்கொண்டு நிரம்பியிருந்த விரலின் சைக்கினையைக்கொண்டே நடந்திருந்தது. (தாபிஉல் வஸாவிஸ் 65. ப.) (1 ஷவ்வால் 1338. அஹ்லஹதீஸ்.)

(1) இதற்கு மாற்றமாக எழுதுகிறார். அந்நேரத்தில் காபிர்கள் ஒருவித சந்திர கிரகணமாயிருந்த சந்திரப்பிளப்பின் அடையாளத்தைப் பார்த்துவிட்டு இதில் என்ன ஆச்சரிய விஷயமென்று சொன்னார்கள். (நுஸூலுல்மஸீஹ் 128 ப.)

(2) இறைவன் தனது உத்தரவைக்கொண்டும், நாட்டத்தைக்கொண்டும் ஒருவனை பரணம், ஜீவிப்பு, இலாப நஷ்டங்களுக்கு எஜமானாக்கமாட்டான். நபிமார்கள் துஆவைக்கொண்டும், கெஞ்சுதலைக்கொண்டும் முஃஜிஸாவைத் தேடுகிறார்கள். (நுசூலுல்மஸீஹ் 128 ப. இஸாலா 130 ப. நோட்) 1018 ப.

8. திமஷ்கில் மஸீஹைப்போல் ஒருவன் உண்டாகமாட்டானென்று இறைவன் என்பேரில் வெளியாக்கிவிட்டான். ஆயினும், யாதொரு எதிர் காலத்தில் விசேஷமாக திமஷ்கிலேயும் மஸீஹைப்போல ஒருவன் உண்டாகிறது என்னிடத்தில் கூடுமானதாயிருக்கிறது. (மூன்றாந்தரம் அச்சடிக்கப்பட்ட இஸாலா 30. ப. நோட்.) (இஸாலா 922. ப.)

இதில் சர்வ வியாக்யானமுடைய ஆண்டவன் மஸீஹைப்

போலொருவன் உண்டாக முடியாது என்று அருளுகிறான். ஆனால், மிர்ஸா சாஹிபு இதற்கு மாற்றமாக என்னிடத்திலுண்டாகக்கூடுமென்று சொல்கிறார். மிர்ஸாயி மதஸ்தர்கள்தான் இதற்குத் தீர்ப்புச் செய்யவேண்டும்.

இதே மிர்ஸா சாஹிபு எழுதுகிறார்:-

ஒரு காலத்தில் ஹதீதுகளின் வெளிரங்கமான சில எழுத்துகள் அவர்பேரில் உண்மைப்படும்படியான மஸீஹ் வருகிறது கூடுமானதாயிருக்கிறது. மேலும். பூருவும் கூடுமானதாயிருக்கிறது. ஏனெனில், இந்த ஏழை உலக அதிகாரத்தோடும் இராஜாங்கத்தோடும் வரவில்லை. தரித்திரம் வறுமை யென்ற உடையில் வந்திருக்கிறேன். (ஷை இஸாலா 82 ப.) (968ப.)

இதிலிருந்து சில விஷயம் வெளியாகிறது.

(1) மிர்ஸா சாஹிபுக்கு ஹதீதுகளின் வெளிரங்கமான எழுத்தின் பிரகாரம் தாம் மஸீஹல்ல. வேறொருவர் வருகிறது கட்டாயம் கூடுமென்பது பூரணமான நம்பிக்கையாயிருந்தது. (2) வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அதிகாரியாயும், இராஜாவாயும் வருவாரென்றும் நம்பியிருக்கிறார்.

மிர்ஸாயி மதஸ்தர்களே! உங்களின் மிர்ஸா சாஹிபு ஹதீதின் பிரகாரம் வேறொரு மஸீஹ் வருகிறது கூடுமென்றும். நான் அந்த மஸீஹல்லவென்றும் சமிக்கையாய்ச் சொல்கிறதை உணர்ந்தீர்களா?

இன்னும் எழுதுகிறார் பாருங்கள்.

இதற்கு ஜவாபாவது, மஸீஹத் தன்மையாகிறது. ஏனது உண்மையின்பேரில் முடிவாய் விட்டதென்றும், இனியாதொரு மஸீஹும் வரமாட்டாரென்றும் இந்த ஏழையின் வாதமில்லை. அன்றியும், ஒருவரென்ன! பதினாயிரத்தைக் காண அதிகமான மஸீஹுகள் வரக் கூடுமென்று நான் நம்பி அடிக்கடி கூறுகிறேன். இன்னும் வெளிரங்கமான மஹத்துவத்தோடு ( மஸீஹ் ) வருகிறதும் முதலாவது திமிஷ்கிலே இறங்குகிறதும் கூடுமானதாயிருக்கிறது. (ஷை இஸாலா 122 ப.) 1009 ப.)

இந்த வாசகத்தில் சில விஷயங்கள் வெளியாகிறது.

அதாவது, மிர்ஸா சாஹிபு சொல்கிறார்: (1) என்மேரில் மஸீஹுடைய தன்மை முடிவடைந்துவிட்டதென்று நான் தாவாச்செய்யவில்லை. (2) எனக்குப்பின் பதினாயிரம் மஸீஹுகள் வரை வரக்கூடும். (3) மஸீஹு வெளிரங்கமான ஹதீதின் பிரகாரம் இராஜாங்கத்தோடு வருகிறதும் கூடும். (4) மஸீஹு முதலாவது திமிஷ்கிலிறங்குகிறதும் கூடும். (5) ஹஸ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் மரணமாகவில்லை யென்பதும் வெளியாகிறது.

ஆக இவ்வளவு விஷயங்களையும் பகிரங்கமாய் எடுத்துச் சொல்லியும் மிர்ஸாயி மதஸ்தர்கள் கவனியாமலிருப்பது மிக்க ஆச்சரியமே.

இப்போது இதற்கு நேர் மாற்றமாக எழுதுகிறார்:-

நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாயிருக்கிறேன். (இஸாலா, முதற்பதிப்பு 665 ப.) 909 ப.)

வாக்குச்சொல்லப்பட்ட மஹ்தி நானே. ஹஸ்ரத் அபூபக்கர்தானென்ன! சில நபிமார்களைப் பார்க்கிலும், மேன்மையாயிருக்கிறேன். (அக்காயிதெமிர்ஸா 7 ப) (இஷ்திஹார் மியாறுல் அகியார் 11 ப.)

9. சில ஜனங்கள் அங்கத் உடைய ஜீவிய சரித்திரத்தில் இந்த (குருநாங்குசாஹிபுடைய)ச் சரீரம் வானத்திலிருந்து இறங்கியிருக்கிறது. இன்னும், நாயன் தனது கரத்தால் எழுதியிருக்கிறான் என்ற இந்த விஷயத்தின்பேரில் ஆச்சரியமுறுவார்கள். ஆயினும், முடிவில்லாத இறைவனின் தத்துவத்தின் பேரில் நோட்டமிட்டால் யாதொரு ஆச்சரியமான காரியமல்ல. (வென்பது புலப்படும்) ஏனெனில், அவனின் தத்துவத்தை ஒருவனும் முடிவு கண்டுவிடவில்லை. ஏகனின் வல்லமை இவ்வளவுதான் இதற்கப்புறம் இல்லை யென்று எவனும் சொல்லக் கூடும்? இவ்வித பலம் குறைந்த இன்னும் இருளான விசுவாசமோ தற்காலங்களில் நேச்சரியர் * அல்லது பிரமசமாஜத்

* நேச்சரியர்களென்பது, ஸர் ஸையத் அஹ்மத்கான் சாஹிபையும் அவரைச் சேர்ந்தவர்களையும் குறிக்கும்.

தாருடையதாயிருக்கின்றன. (சத்பஜன் 37 ப.) (21, ரபீயுஸ் ஸானி 337 அஹ்லஹதீஸ்.)

இந்த விசுவாசத்தில் அற்புதங்களையும் ஆண்டவனின் வழக்கத்துக்கு மாற்றமான ஆச்சரிய விஷயங்களையும் ஒப்புக் கொள்ளவேணுமென்று வற்புறுத்துகிறார்.

இப்போது இதற்கு மாற்றமாக எழுதுகிறார்:-

மஸீஹ் இறங்குகிற விஷயத்தைக் குறித்து அதாவது, அவர் மேலான இராஜ உடைகளோடும் விலையுயர்ந்த துணிகளை அணிந்தவராயும் வானவர்களுடன் வானத்திலிருந்து இறங்குவாரென்று மிகவும் ஊக்கத்துடன் விவரிக்கப்படுகிறது. வஸ்திரங்கள், சால்வைகள், பட்டாயிருக்கிறதுடன் சாதாரண வஸ்திரங்களாகிய மீஸ் மல், மல், காசா, டோரியா முதலிய இவைகளை வானத்தில் எவன் நெய்திருப்பான்? எவன் தைத்திருப்பான்? இதுவரை முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களில் நின்றும் ஒருவனும் அதைப்பற்றி யாதொரு அடையாளமும் கொடுக்கவில்லை. (தௌஸீஹ் மராம் 6 ப. 860 ப.)

10. எந்தக் காரியத்தில் யாதொரு நிகர் காணப்படவில்லையோ அந்தக் காரியத்துக்கு வேறு எழுத்துகளில் வழக்கத்துக்கு மாற்றம் (முஃஜிஸா அல்லது அற்புதம்) என்று சொல்லப்படும். (சுர்மயேசிஷம் ஆரியா 15 ப.) (ஹக்கீக்கத்துல்வஹீ 196 ப.)

இப்போது இதை மறுக்கிறார்.

எந்த நபியுடைய எந்த முஃஜிஸாவிலாவது அல்லது வழக்கத்திற்கு மாற்றமான காரியத்திலாவது (அற்புதத்திலாவது) மற்ற ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூட்டாளியாகாமலில்லை. (துஹ்பா கோல்ரியா)

11. பின்பு நூற்றுக்கணக்கான நபிமார்களைவிட நமது அற்புதங்கள் உயர்ந்துவிட்ட சமயத்தில் (நுஸூல மஸீஹ் 84 ப.) ஒரு சபையை எதிர்படுத்தி நமது அற்புதங்களைக் கேளுங்கள். (ஷை 84 ப.) என்னுடன் வானத்தின் அடையாளமும் ஆண்டவனின் அற்புதங்களும் இருந்தன. (சிதாரயெகைஸர் 10 ப.)

ஆத்தம் பாதிரி அற்புதம் கேட்டபொழுது
இதற்கு மாற்றமாகச் சொல்லுகிறார்:

எனக்கு நபிப்பட்டத்தின் தாவாயில்லை. எங்கள் மார்க்கப்படி இந்த அடையாளங்களுக்கு கருமத் என்று சொல்லப்படும். (ஜங்கு முகத்தஸ் 67 ப.)

12. உவமைகளில் பூரணமான ஒற்றுமை வேண்டியது அவசியமாகாது. (இஸாலா முதற்பாகம் 30 ப. 922 ப.)

இப்போது இதற்கு விரோதமாக எழுதுகிறார்:

உவகை சொல்லப்பட்ட இரு வஸ்துக்களில் அதாவது, முஷப்பஹ, முஷப்பஹபிஹி யில் பூரணமான உவமை அவசியமாயிருக்கிறது. (சத்பஜன் 164 ப. ஷவ்வால் 1, 1338 அஹ்லஹதீஸ்.)

13. நேச்சரீயர்களின் இருதயங்களில் அல்லா ரசூலுடைய வார்த்தைகளின் மதிப்பு இல்லை. ஆதலால், எந்த விஷயம் அவர்கள் புத்திக்கு எட்டாததாகயிருக்குமோ அதைக் கூடாததும், நடக்காததுமான விஷயத்தில் சேர்த்துக்கொள்கிறார்கள். இந்த இயற்கைச் சட்டமென்ற பல்சபாவைப் பார்க்கிலும் சற்று உயர்ந்த வேறொரு இயற்கைச் சட்டம் இருக்கிறது. அது மிகவும் நுணுக்கமாயும் இரகசியமானதாயுமிருக்கிறது. (இஸாலா 557 ப.) (ஷை பத்திரிகை.)

இதில் அற்புதங்களெல்லாம் உண்டாகக்கூடிய விஷயந்தான் நமது சிற்றறிவிற்கெட்டாவிட்டால் அதை மறுக்கிறது அறிவீனமும், அஞ்ஞானமுமென்று நன்றாய் ருஜுப்படுத்துகிறார்.

இப்போது இதற்கு நேர் விரோதமாக எழுதுகிறார்:-

ஒரு மனிதன் சிதகோளம் (குளிர்ந்த ஆகாயம் அல்லது வானம்) வரை சேர்ந்து விடுகிறதைப் பழைய புதிய பல்சபா (இயற்கைச் சட்டம்) கூடாதென்று ஸ்தாபிக்கிறது. (இஸாலா முதற்பாகம் 20 ப.) (912 ப.)

எவ்விதத்திலும் ஹஸ்ரத் ஈசாவின் முஃஜிஸா (அற்புதம்) ஒரு விளையாட்டைப்போலிருந்தது. (இஸாலா 133 ப. 1021.

பக்கர்குறுவில் பசுவின் கதை மெஸ்மெரிஸத்தின் (மனோ சக்தி அல்லது தந்திரத்தின்) ஒரு கிளையாயிருந்தது. (இஸலா 305 ப.) (1207 முதல் 1208.)

குர்ஆன்ஷரிபில் நான்கு பறவையின் விஷயம் எழுதப் பட்டிருக்கிறது. இதுவும், மெஸ்மெரிஸத்தின் புறம் சமிக்கை செய்கிறது. (இஸாலா 306 ப.) 1209.)

ஆகவே, இன்னும் மிர்ஸா சாஹிபுக்கும் சர் ஸையத் அஹ்மத்கான் சாஹிபுக்கும் நடந்த விஷயங்களும் வேறு அநேக நாஜுமாஞன் விஷயங்களுமிருக்கின்றன. அவசியப்பட்ட நேரத்தில் இன்ஷா அல்லா அவைகளையும் எழுதக்கூடும்.

மிர்ஸா சாஹிபு முந்தி ஒரு விஷயத்தை நல்ல விதமாக ருஜூப்படுத்துகிறதும், பின்னர் அதே விஷயத்தைத் தகுந்த ஆதாரத்தோடு மறுக்கிறதும், அப்பால் சமயோசிதமாக விஷயங்களை எழுதி தமது பேனாவின் பலத்தைக் காட்டுகிறதும், இவருக்கு ஏற்பட்ட ஒரு சாதாரண வழக்கமென்பது இதை வாசிக்கும் நண்பர்கள் அறிந்துகொள்ளக்கூடும்.

மிர்ஸா சாஹிபை குருவென்றும், ஒரு வழிகாட்டி என்றும் விசுவாசித்துக்கொண்டிருக்கிற அவரின் உம்மத்துகளிடத்தில் சில கேள்விகள் கேள்கிறேன்.

மிர்ஸா சாஹிபு சொல்லுகிறார்:-

1. ஆகையால், இந்த எல்லா பற்பல அபிப்பிராயங்களும் நாநுமாஞன சொற்களும் ஒரு தீர்ப்புச் செய்கிற ஹாக்கமை (நியாயாதிபதியை) விரும்பிக்கொண்டிருக்கிறது அந்தத் தீர்ப்புச்செய்கிறவன் நானாகவே இருக்கிறேனென்றும் எனது தீர்ப்புக்கு அப்பீல் இல்லையென்றும் கூறி ¶ யிருக்கிறபடி பற்பல அபிப்பிராயங்களையும் நீக்கி ஒரே அபிப்பிராயத்தை நிலைநாட்டினாரா? இல்லையென்றால் இப்பேர்ப்பட்டவர் தீர்ப்புச் செய்ய வந்ததில் யாது பிரயோஜனம்?.

2. மிர்ஸா சாஹிபுடைய சொற்படி இவ்விதம் தாறுமாறுக்கூறும் வார்த்தைகள் அவரால் கூறப்பட்டவைகளாக நினைக்க

¶ (சரூறத்துல் இமாம் 14 ப. 25.) (1914 டிசம்பர் 24-உ அச்சடிக்கப்பட்ட தஹ்பா கோல்றியா 25 ப. கோட்)

இடமில்லை. ஏனெனில், அவர் நான் வஹியன்றிப் பேசமாட்டே னென்றும், ஆண்டவன் மீது சத்தியமாக என்மீதிறங்குகிற வஹீயையும், இல்ஹாமையும் நான் குர்ஆன்ஷரீபைப்போல் நிச்சயமாய் நம்புகிறேன் * என்றும் சொல்லுகிறார்.

மிர்ஸா சாஹிபு சொற்படி ஆண்டவன்புறத்திலிருந்து வருகிறதாயிருந்தால் இப்படி மாற்றி மாற்றிச் சொல்வானேன். நாயனுக்கு மறைவான விஷயங்கள் தெரியாமல் யோசித்து யோசித்துச் சொல்கிறானா?.

குர்ஆன்ஷரீபில் "இவ்வித அபிப்பிராயப் பேதகமாகிறது ஆண்டவனிடத்திலிருந்து வரவில்லை யென்பதற்கு அத்தாட்சியாயிருக்கிறது என்று ஆண்டவன் அருள்கிறான்." இந்த இறைவனின் திருவசனத்தால் மிர்ஸா சாஹிபின் தாறுமாறான வார்த்தைகளைச் சோதித்தால் இறைவனின் வஹி யென்று ஏற்படுமா அல்லது மிர்ஸா சாஹிபு பொய்யரென்று ஏற்படுமா? இந்தத் திருமறையின் வார்த்தையை நம்பி மிர்ஸா சாஹிபின் வார்த்தைகளைப் பொய் யென்று சொல்கிறதா? அல்லது மிர்ஸா சாஹிபின் வார்த்தையை நம்பி திருமறையின் வார்த்தையைப் பொய் யென்று சொல்கிறதா? மிர்ஸா சாஹிபுடைய சொல்லை நம்பினால் ஆண்டவன் பொய்யனாக ஏற்படுகிறான். ஆண்டவன் சொல்லை நம்பினால் மிர்ஸா சாஹிபு பொய்யனாக ஏற்படுகிறார். இப்போது மிர்ஸாயி மதஸ்தர்கள் இந்த இருவரில் யார் சொல்லை நம்புகிறார்களென்பது குறிப்பிடத்தக்கது.

3. மிர்ஸா சாஹிபுக்கு வஹீயாகிறது மழை பொழிந்தது போல் பொழிந்துகொண்டிருக்கிறது. அன்றியும் அவரின் வஹியில் ஷைத்தான் நுழைகிறதை விட்டும் காக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவி ஒவ்வொரு நேரமும் கூட இருந்து வழிகாட்டுகிறது. இப்படி யெல்லாம் இருந்தும் இவ்விதம் தாறுமாறாகச் சொல்கிறதை ஒரு வஹியாவது தடுக்காமலும் ஒரு பரிசுத்த ஆவியாவது விலக்காமலும் இருந்த காரணமென்ன?.

4. மிர்ஸா சாஹிபு தமது நூலில் ஹஸ்ரத் ஈசா நபியவர்கள் காஷ்மீரில் அடங்கியிருக்கிறார்களென்றும் மறு நூலில் கலீலில் அடங்கியிருக்கிறார்க ளென்றும் கூறியிருக்கிறார் அல்லவா? இந்த இரண்டில் எது மெய். எது பொய்.

* (அர்பாஈன் 3 ப. 44 ப்.) (ஹக்கீக்கத்துல்வஹி அநுபந்தம் 136 ப.)

5. பகுத்தறிவுடைய ஒரு மனிதன் பொய்யில் நின்றும் மெய்யையும், மெய்யில் நின்றும் பொய்யையும் வகுத்தறியாமல் ஒரு விஷயத்தை எப்படி நம்புவான்?.

விசேஷமாக நமது நாயகமவர்கள் முப்பது தஜ்ஜால்கள் தோன்றி ஒவ்வொருவரும் தன்னை நபி யென்றும், ரசூலென்றும் வாதிப்பார்களென்று முற்கூட்டியே நமக்கு எச்சரிக்கை செய்திருக்க; அந்த அருள் வாக்கைக்கொண்டு ஒவ்வொருவரையும் சோதனை செய்யாமல் நம்புகிறதாயிருந்தால் அவனைப் பகுத்தறிவுடையவனென்று சொல்லக்கூடுமா? அவனது சிரசில் என்ன இருக்கிறதென்று சொல்லலாம்.

6. ஓ காதியான் மதத்தார்களே! மிர்ஸாயி வகுப்பார்களே! உங்களுக்கு இவ்விஷயங்களை நன்றாய் ஆராய்ச்சி செய்து தீர்ப்புச் செய்ய முடியாவிட்டால் நாச்சியார் கோவில் முஸ்லிம் சங்கப் பிரஸிடெண்ட் ஜனாப், பா. தாவூத்ஷா சாஹிபால் மிகவும் மெச்சத்தக்க மூளையை உடைய காஜா கமாலுத்தீன் சாஹிபுக்குத் தெரியப்படுத்தி தீர்ப்பைக் கேளுங்கள். ஏனெனில், அவர் வக்கீல் வேலை பார்த்து வருங்காலத்தில் இப்படித் தாறுமாறாய்ச் சொன்ன அநேக கேஸ்களை விசாரணை செய்திருப்பார். அதே சட்டங்களை உபயோகப்படுத்தி மிர்ஸாசாஹிபின் கேஸையும் விஜாரித்துத் தீர்ப்புச் செய்யச் சொல்லுங்கள். அதுவும் போதாவிட்டால் இங்கிலீஷ் குர்ஆன் எழுதின மௌலவி. முஹம்மதலி எம். ஏ. இன்னும் மிர்ஸா சாஹிபுடைய புத்திர பாக்கியம் மஹ்மூது அஹ்மது சாஹிபையும் கூட ஒத்தாசைக்குச் சேர்த்துக்கொண்டாலும் எங்களுக்கு யாதொரு ஆக்ஷேபமில்லை.

மிர்ஸாயி மதஸ்தர்களே! ஒரு நாள் அல்லாவின் சமூகத்தில் சென்று அவனது கேள்விக்குப் பதில் சொல்லவேண்டியது வரும் என்பதைக் கவனித்து சத்தியத்தைப் பின்பற்றுங்கள்.

### மிர்ஸா சாஹிபு சொல்கிறார்:-

ஒரு மனதிலிருந்து முரணான இரு வார்த்தைகள் வெளியாகாதென்பது வெளிப்படையே ஏனெனில், இப்பேர்ப்பட்ட நடப்புகளால் மனிதன் பைத்தியக்காரனென்றாவது அல்லது

முனபிக் என்றுவது சொல்லப்படுகிறுன். (சத்பச்சன் 31 ப.) (8, ரபீயுல் அவ்வல் 1337. அஹ்லஹதீஸ்.)

இதை வாசிக்கும் நண்பர்கள் இதை வாசித்து மிர்ஸா யார் யென்று சொல்லட்டும்.

இப்பேர்ப்பட்ட மூளையுடையோர்தான் ஹஸ்ரத் ஈசா நபியவர்கள் மரணமாய்ப் போனர்களென்று ருஜுப்படுத்தப் பார்க்கிறார்கள். தூப்.

## மிர்ஸா சாஹிபின் ஆதாரமற்ற பொய்கள்.

முஸ்லீம்களே! மிர்ஸா சாஹிபுக்குப் பொய் சொல்லும் வழக்கமுண்டென்றும் சமயம் வாய்க்கும்போது பொய்யைக் கொண்டே தமது காரியத்தைச் சாதிக்கப் பார்ப்பாரென்றும் இப்புத்தகத்தை வாசிக்கும் நண்பர்கள் அறிந்துகொள்ளக்கூடும். புகாரி ஷரீபில் ஒரு ஹதீது வருகிறது. ஹிரக்கில் அரசன் தனது தேசத்தில் வர்த்தகத்திற்காக வந்திருந்த அரபியர்கள் இடத்தில் ஹஸ்ரத் முஹம்மதுர்ரசூலுல்லா அவர்களின் நடப்புகளைக் குறித்து விஜாரித்து விட்டு எந்த மனிதன் ஜனங்களின் மீது பொய் கட்டுரை செய்கிறுனே அவன் இறைவன் மீதும் பொய் கட்டுரை செய்கிறது ஆச்சரியமல்ல வென்று சொன்னர். மிர்ஸா சாஹிபோ ஆண்டவன் மீதும், ரசூல் நாயகம் மீதும் இல்லாத பொய் கட்டுரைகளைச் சுமத்தினதை இங்கு அவ்வளவு விவரிக்கவில்லை. ஆயினும், மனிதர்களின் மீது பொய்க்கட்டுரைகளை சுமத்தியிருக்கிறுரென்பதை இங்கு ஆராய்வோம்.

சூரியனில் நின்றும் வெளிச்சமும், யானையில் நின்றும் கருப்பும் அரைக்ஷணங்கூட ஒன்றையொன்று பிரியாமல் எப்படிச் சேர்ந்து கலந்திருக்கிறதோ அப்படியே மிர்ஸா சாஹிபை விட்டு ஒரு க்ஷணங்கூட பொய் நீங்காமல் சேர்ந்து கலந்திருப்பதை இதை வாசிக்கும் நண்பர்கள் அறிந்துகொள்ள கடலில் காயம் உறைத்ததுபோல் சுருக்கமாய் விபரிக்கிறேன். அவ்வண்ணம் விபரிக்கிறதில் பெரிய பெரிய பாரப் பொய்களையெல்லாம் விபரிக்காமல் பாடசாலையில் பயின்றுவரும் சிறுவர் சிறுமிகள் முதல் விளங்கக்கூடிய சிறிய பொய்களில் சிலவற்றை கண்டு பொறுக்கி வைக்கிறேன்.

## மிர்ஸா சாஹிபு எழுதுகிறார்:-

1. சஹீஹ் புகாரியின் ஹதீதுகளில் கடைசி காலத்தின் சில கலீபாக்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. விசேஷமாக புகாரியில் அந்த கலீபாவைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறதாவது: வானத்திலிருந்து அவருக்காகச் சத்தமுண்டாகும். அதாவது, இவர் அல்லாவுடைய கலீபாவாகிய மஹ்தியாயிருக்கும் என்பதே. (ஷஹாதத்துல் குர்ஆன் 41 ப.)

ஏ! அஹ்மதிய சங்கத்தார்களே! மிர்ஸா சாஹிபு எழுதியிருக்கப்பட்ட இந்த விஷயம் சஹீஹ் புகாரியில் இருந்தால் எடுத்துக் காட்டுங்கள்?.

2. ஹஸ்ரத் ஈசாவின்மீது இந்த சமிக்கைச் சொல் திரும்புமேயானால் மறுகிறஅத்திலே மௌத்திஹிம் எப்படி உண்டாகும்; தப்ஸீர் சனயியைப் பாருங்கள். அதில் மிகவும் மும்முரமாக நமது இந்த விபரத்தின் உண்மை உண்டாயிருக்கிறது. அன்றியும், அதில் அபூஹுரைரா ரலியல்லாகு அன்ஹுவிடத்தில் இதே அர்த்தமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும், அபூஹுரைரா குர்ஆனின் விளக்கத்தில் (அறிவு) குறைந்தவர் என்றும், அவரின் புத்திசாலித்தனத்தில் முஹத்திஸீன் (ஹதீதையுடைய இமாம்)களுக்கு ஆக்ஷேபமிருக்கிறதென்றும் அபூஹுரைராவிடத்தில் (பார்த்த ஒரு விஷயத்தை) நகல் செய்கிற சக்தியிருந்ததென்றும் அறிவிலும் விளக்கத்திலும் மிகவும் குறைவான பாகமே வைத்துக்கொண்டிருந்தாரென்றும், தப்ஸீரையுடையவர் எழுதுகிறார். (பாராஹீன அஹ்மதிய்யா அனுபந்தம் 5–வது வால்யம் 234 ப.)

ஏ! மிர்ஸாயி மதத்தார்களே! தப்ஸீர் சனயியில் ஹஸ்ரத் அபூஹுரைராவைப்பற்றி இவ்விதம் எழுதப்பட்டிருக்கிறதாக மிர்ஸா சாஹிபு எழுதியிருக்கிறாரல்லவா? நீங்கள் உண்மையுள்ளவர்களாகயிருந்தால் ஷை தப்ஸீரில் எங்கே எழுதப்பட்டிருக்கிறதென்று எடுத்துக்காட்டுங்கள்?.

3. ஹதீதுகளில் வந்திருக்கிறது இந்த விஷயத்திற்குப் (ஹஸ்ரத் ஈசா நபி சிலுவையில் அறையப்பட்ட) பின் மரியமுடைய மகனாகிய ஈசா 120 வயதுடையவராயிருந்தார். அப்

பால் மரணமாகித் தமது நாயனிடத்தில் போய்ச் சேர்ந்தார். (தஹுக்கிரத்துஷ் ஷஹாததைன் 26. 27 ப.)

ஹஸ்ரத் மஸீஹ் முப்பத்திமூன்றுவது வயதில் சிலுவையில் அறையப்பட்டார். (ராஸேஹக்கிக்கத் 3 ப.)

ஆக இந்த இரு விஷயங்களையும் சேர்த்துப் பார்த்தால் ஹஸ்ரத் ஈசா நபியவர்களுடைய வயது நூற்றி ஐம்பத்திமூன்று ஆகிறது.

ஏ! காதியான் மதத்தார்களே! ஹதீதுகளில் ஹஸ்ரத் ஈசா நபியவர்களுக்கு 153 வயதாயிருந்ததென்றும், சிலுவையில் அறையப்பட்டாரென்றும், வந்திருக்கிறதாக மிர்ஸா சாஹிபு எழுதியிருக்கிறாரல்லவா? தயவு செய்து ஹதீதுகளில் எங்கே வருகிறதென்பதை எடுத்துக்காட்டுங்கள்?.

4. குர்ஆன்ஷரீபிலும் தௌராத்தின் சில பாகங்களிலும், வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் பிளேக் உண்டாகும் என்ற இந்தச் சமாசாரம் உண்டாயிருக்கிறதாக ஞாபகமிருக்க வேண்டும். அன்றியும், ஹஸ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாமும் இஞ்ஜீலில் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். இன்னும், நபிமார்களின் முன்னறிவிப்புகள் தவறிவிடுகிறது கூடாத காரியம். (கிஷ்திநூஹ் 5 ப.)

வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் பிளேக் உண்டாகிறது பைபிளின் புத்தகங்களாகிய சக்கரியா அதி. 14 வ. 12-லும்; மத்தேயு அதி. 22, 24 வ. 8-லும்; யோவானுக்கு வெளி அதி. 22. வ. 8-லும் சொல்லப்பட்டிருக்கிறது. (கிஷ்திநூஹ் 5 ப. நோட்.)

கிருஷ்ணஜி மதத்தார்களே! மஸீஹின் காலத்தில் பிளேக் உண்டாகுமென்று குர்ஆன்ஷரீபிலும், தௌராத்தின் சில பாகங்களிலும், இன்ஜீலிலும் சொல்லப்பட்டிருக்கிறதாக மிர்ஸா சாஹிபு எழுதியிருக்கிறாரல்லவா? நீங்கள் மெய்யர்களாயிருந்தால் குர்ஆனிலும், பைபிளிலும் எடுத்துக்காட்டுங்கள்?.

இதை வாசிக்கும் நண்பர்களே! வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் பிளேக் உண்டாகுமென்று பைபிளில் எழுதியிருக்கிறதாக மிர்ஸா சாஹிபு ஆதாரமும் கொடுத்திருக்கிறாரல்

லவா? அதே ஆதாரப்படி பைபிளில் என்ன எழுதப்பட்டிருக்கிறதென்பதை உங்கள் பார்வையில் எடுத்து வைக்கிறேன். ஆராய்ந்து தீர்ப்புச் செய்யுங்கள்.

சக்கரியா 14-ம் அதிகாரம் 12-ம் வசனம் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ணின எல்லா ஜனங்களையும் கர்த்தர் வாதிக்கும் வாதையாவது: அவர்கள் காலூன்றி நிற்கையிலும் அவர்களுடைய சதை அழிந்துபோகும்; அவர்கள் கண்கள் தங்கள் குழிகளிலே கெட்டுப்போகும்; அவர்கள் நாவு அவர்கள் வாயிலேயே அழுகிப்போகும்.

மத்தேயு **24**-ம் அதிகாரம்.

3. பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவர்களிடத்தில் தனித்து வந்து:
இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.
4. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.
5. ஏனெனில் அநேகர் வந்து; என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி
6. அநேகரை வஞ்சிப்பார்கள்—யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள். இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும்,
7. முடிவு உடனே வராது—ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்
8. டாகும்—இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.

யோவானுக்கு வெளி **22**-வது அதிகாரம்.

9. யோவானாகிய நானே இவைகளைக் கண்டும் கேட்டும்

இருந்தேன். நான் கேட்டுக் கண்டபோது, இவைகளை .8. எனக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன்—

சகோதரர்களே! இதில் கள்ள மஸீஹ்கள் வரும்போது அநேக ஆபத்துக்கள் வருமென்று விபரித்து மிர்ஸா சாஹிபின் தாவாவைப் பங்கப்படுத்திக்கொண்டிருக்கிறதைப் பார்க்க இவரின் சாக்ஷியத்தைக்கொண்டே இவர் கள்ள மஸீஹாக ருஜூவாகிறது. அன்றியும், மிர்ஸா சாஹிபின் தாவாவின்படி எழுதப்பட்டிருக்கிறதாவென்றும் பாருங்கள்.

மிர்ஸாயி மதத்தார்களே! என்ன பதில் சொல்கிறீர்கள்? உங்கள் மஸீஹின் தாவாவை எங்கே? அல்லாஹுத்தஆலாவுக்குப் பயந்து நாயகமவர்களால் பொய் நபிகளும், கள்ள மஹ்திகளும் வருவார்களென்று சொல்லப்பட்ட ஹதீதுகளையும் மனதிலிருத்திக்கொண்டு பதில் சொல்வீர்களாக.

5. குசூரி, மௌல்வி. குலாம் தஸ்தகீர் என்பவர் தமது கிதாபிலும், அலிக்கர் மௌல்வி. இஸ்மாயீல் என்பவரும், என்னைப்பற்றி கண்டிப்பான தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். அதாவது, அவர் (மிர்ஸா) பொய்யராயிருந்தால் எங்களுக்கு முந்தி மரணமாய்விடுவார் இன்னும், கட்டாயம் எங்களுக்கு முந்தி மரணித்துவிடுவார். ஏனெனில், அவர் பொய்யராயிருக்கிறார். ஆயினும், அவர்களின் நூல்கள் உலகத்தில் பிரசித்தியாய்விட்டபொழுது பின்னர் அதி விரைவாகத் தாங்களே மரணித்துவிட்டார்கள். இந்த விதமாக அன்னவர்களின் மரணமாகிறது. எவன் பொய்யனாயிருந்தான் என்பதைத் தீர்ப்புச் செய்துவிட்டது. (அர்பயீன் கிர். (3) பக்கம் 9.) 11 ப.)

இதில் எந்தவரியில் நாம் வரி இழுத்திருக்கிறோமோ அதுபோல் மிர்ஸா சாஹிபும் வரி எழுதியிருக்கிறார். அதன் கருத்தாகிறது, கோடு போட்டிருக்கிற அதே வரி அலீகர் மௌல்வி சாஹிபு, குசூரி மௌல்வி சாஹிபு அவர்களின் கிதாபுகளில் இருக்கிறதென்பதே அதன் குறியாகும். முஸ்லிம்களே நன்கு கவனித்துக்கொள்ளுங்கள்.

**இன்னும் மிர்ஸா சாஹிபு எழுதுகிறார்:**

இந்த அறிவற்ற அநீதக் காரரைப்பார்க்கிலும் மௌல்வி குலாம் தஸ்தகீர் நல்லவராயிருந்தார் அவர் தமது நூலில் யாதும் தவணை யேற்படுத்தவில்லை. (முஸ்லிம்களே இதை ஞாபகம் வைக்கவேண்டும்) அவர் துஆச் செய்ததாவது: ஆண்டவனே நான் மிர்ஸா குலாம் அஹ்மதைப் பொய்யாக்குறதில் உண்மையின்பேரிலில்லாவிட்டால் எனக்கு முதலாவது மரணத்தைக் கொடுத்துவிடு. ஆனல், மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி தமது தாவாவில் உண்மையின்பேரில் இல்லாவிட்டால் அவரை என்னில் நின்றும் முந்தி மரணமாக்கிவிடு. (இதுதான் அவர் செய்த பிரார்த்தனை) இதற்குப் பின்னர் மிகவும் விரைவாக ஆண்டவன் அவருக்கு மரணத்தைக் கொடுத்துவிட்டான். பாருங்கள் எவ்வளவு தெளிவாக பைசலாகிவிட்டது. (அர்பயீன் நம்பர் 3. பக்கம் 11.) 14 ப.)

முஸ்லிம்களே! இதிலும் எவ்வளவு நிச்சயமாயும் தைரியமாயும் அந்த மௌல்வி சாஹிபுகள் எழுதியிருப்பதாக தாவாச் செய்கிறார்.

இன்னும் எழுதுகிறார்:-

குலாம் தஸ்தகீரின் கிதாபு தூரத்திலில்லை. கொஞ்சகாலமாக அச்சாகி வெளியாய்விட்டது. பாருங்கள் எவ்வளவு துணிகரமாக எழுதுகிறார். அதாவது, நம்மிருவரில் எவன் பொய்யனே அவன் முதலாவது மரணவான். (500 ரூபாய் விளம்பர நோட்டீஸ் 7 ப. அர்பயீன் கிர். 3. ப. 12.)

முஸ்லிம்களே! மௌல்வி சாஹிபு தமது கிதாபில் நம்மிருவரில் எவன் பொய்யனே அவன் முன்னே மரணமாய்விடுவானென்று எழுதியிருப்பதாக மிர்ஸா சாஹிபு எழுதியிருக்கிறார் அல்லவா? அதைத்தான் நாம் மிர்ஸாயி மதத்தார்களிடத்தில் கேட்கிறோம். அதாவது, மிர்ஸா சாஹிபு சொல்படி ஷை மௌல்வி சாஹிபுகள் தங்கள் கிதாபுகளில் எங்கே எழுதியிருக்கிறார்கள்?.

மிர்ஸா சாஹிபுக்கு மறுப்பாக குசூரி, மௌல்வி. குலாம் தஸ்தகீர் சாஹிபு பத்துஹுர்றஹ்மானி என்று ஒரு நூலும்,

அலிக்கர் மௌல்வி. இஸ்மாயில் சாஹிபு இகுலாவுல் ஹக்குஸ் ஸரீஹ என்று ஒரு நூலும் இயற்றியிருக்கிறார்கள். இவ்விரண்டு நூல்களில் எந்த இடத்தில் நம்மிருவரில் எவன் பொய்யனோ அவன் முன்னே மரணமாய் விடுவானென்றும் மற்றும் மிர்ஸா சாஹிபு சொன்ன விஷயங்களும் எழுதியிருக்கிறது.

ஏ! மிர்ஸாஜீ மதத்தார்களே உங்களின் நபியும் மஹ்தியும் மஸீஹுமாகிய மிர்ஸா சாஹிபு எழுதியிருக்கிறபடி ஆதாரத்தை எடுத்துக் காட்டுங்கள். அன்றேல்; பொய்யாகத் தீர்மானித்து உலமாக்களின் தீர்ப்புகளுக்கு இணங்குங்கள்.

ஆங்கிலத்தில் பி. ஏ, எம். ஏ. பரீக்ஷையில் பாசான காதியானி நேயர்களே! இந்தப் பொய்யைப் பகுத்தறியாதிருந்தால் உங்களின் இந்த உயர்தரப் பட்டத்திற்கு இழிவு இல்லையா?

மிர்ஸாயி மதத்தைச் சேர்ந்த காதியானி மௌல்விகளும், லாகூர் மௌல்விகளும் எங்கே இருக்கிறார்கள்? நமது ஆக்ஷேபங்களுக்குப் பதில் உரைப்பார்களா? அன்றேல், இரு கக்ஷியாரும் பதில் உரைக்காமல் வாயை மூடி மௌனம் சாதிப்பார்களா? மௌனம் சாதித்தால் காதியான் மதஸ்தர்களில் இவ்வளவு அறிவுள்ள ஒருவரும் இல்லையாவென்ற கேள்வியுண்டாகும்.

ஏ! கிருஷ்ணஜீ உம்மத்தார்களே; நீங்கள் எங்களிடத்தில் மௌனம் சாதிப்பீர்களானால் சாதியுங்கள். ஆயினும், நீங்கள் பிறமதஸ்தர்களுடன் தர்க்கப் போராட்டம் செய்யும் சமயத்தில் இவ்விதக் கேள்விகளைக் கொண்டு மாட்டிக்கொள்ளப்பட்டால் என்ன செய்வீர்களென்பதை முற்கூட்டியே ஆலோசித்துக் கொள்ளுங்கள்.

காஜா கமாலுத்தீன் சாஹிபின் மூளையை வெகுவாய்ச் சிலாக்கித்துப் பேசுகிறதானால் இஸ்லாம் பத்திராதிபர் இந்த விஷயத்தில் முழுதும் அக்கறை எடுத்துக்கொள்வாரென்று நம்புகிறோம்.

இப்பூமண்டலத்திலுள்ள நீதிமான்களே! உத்தியோக வகுப்பார்களே முஸ்லிம்களாகிய நாங்கள் மிர்ஸாயி மதஸ்தர்க

ளிடத்தில் வேறொன்றும் கேட்கவில்லை. மிர்ஸா சாஹிபு இன்ன கிதாபில் இன்ன விதமாக எழுதப்பட்டிருக்கிறதென்று ஆதாரங் காட்டினாரே அதைத்தான் கேள்கிறோம்.

காதியான் நேயர்களே! இதற்குத் தகுந்த பதிலுரைக்காமல் ஏழை முஸ்லிம்களிடத்தில் நாங்கள் இஸ்லாத்திற்கு ஊழியம் செய்கிறோம், இஸ்லா மதத்தைப்பாதுகிறோம் எங்களுக்கு உதவிபுரியுங்களென்று கபடச்சித்தமாக நிதி வசூலிக்கிறது ஹறாம். மேலும், கடினமான ஹறாமாயிருக்குமென்பதை நீங்கள் அறிவீர்களாக.

காதியான் வகுப்பார்கள் மிர்ஸா சாஹிபின் சுன்னத்தை (பொய்யையும் எச்சையும்) எடுத்துக்கொள்ளாமல் நீதியாக பதில் உரைப்பார்களாவென்பது கவனிக்கத்தக்கது.

## மிர்ஸா சாஹிபும் முஸைலமா கஸ்ஸாபும்.

**தாரீகுல் காமில் என்ற கிதாபில் எழுதப்பட்டிருப்பதாவது:**

நிஹாருர்ரஜால் என்ற ஒரு மனிதன் தனது ஊரிலிருந்து புறப்பட்டு நபி கரீம் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் சன்னதியில் ஆஜராகி குர்ஆன்ஷரீபைக் கற்றுக்கொண்டு யமாமா நகர்வாசிகளுக்குப் போதிக்கிறதற்காகச் சென்றான். அதன் பயனாக அவிடத்திலுள்ள எல்லோரும் இஸ்லாமாய்விட்டார்கள். முஸைலமா கஸ்ஸாப் என்பவன் ஏதோ ஒருபாயத்தினால் அம்மனிதனை தன் வசப்படுத்திக்கொண்டான். அதன் மீது அந்த நிஹார் என்ற மனிதன் யமாமா நகர்வாசிகளிடத்தில் "நபி நாயகம் அவர்கள் இம்முஸைலமாவையும் தங்களுடன் நபிப் பட்டத்தில் சேர்த்துக்கொண்டார்கள்" என்று பிரஸ்தாபித்துவிட்டான். அவ்வூர் வாசிகள் புதிய முஸ்லிம்களாயும் மார்க்க உண்மைகளை இன்னும் செவ்வனே உணராதவர்களாயும் மேலும் அவர்களுக்குப் போதனை புரியவந்த நிஹார் என்பவனே அவ்வாறு பிரஸ்தாபிப்பதாலும் அவர்கள் நல்லெண்ணத்தின் மீது மேற்கூறிய முஸைலமா கஸ்ஸாபையும் ஒரு நபியென விசுவாசித்து அவனைப் பின்பற்றிவிட்டார்கள்¶.

¶ சமதி மார்க்க வழி விலக்குகளைச் செவ்வனே யுணராத சில ஜனங்கள் மிர்ஸா சாஹிபையும் இவ்வாறே நல்லெண்ணத்தின்மீது நபி யென்றும் மஸீஹென்றும் விசுவாசித்து வழி தவறிவிட்டார்கள்.

முஸைலமாவோ சாதுர்யமாய்ப் பேசுகிறவனும் சமர்த்தனுமாயிருந்ததால் எனக்கு வஹீ வருகிறதென வாதிக்கத் தொடங்கினன் பின்னர் என்மீது இறைவனிடமிருந்து வஹீ வருகிறதென அரபியில் அழகான வாக்கியங்களைச் சோடித்து ஜனங்களுக்குக் காண்பித்தான். அன்றியும், குர்ஆன் ஷரீபுக்குச் சமமாக நினைக்க ஒரு வேதமியற்றி இது இல்ஹாம் மூலமாக இறைவனிடமிருந்து என் மீது அருளப்பட்டதென்று தாவாச் செய்துவிட்டான்.

எனவே, இவ்வாறன சாமர்த்தியத்தினல் ஒரு பெரிய கூட்டத்தாருக்கு நபியாய்விட்டான். எனினும் புதிய ஷரீஅத்து ஒன்றும் உண்டுபண்ணுமல் நாயகம் அவர்களின் ஷரீஅத்தின்படி ஐந்து நேரத்துத் தொழுகையும் தொழுதுகொண்டிருந்ததுமன்றி நாயகம் அவர்களையும் நபியென விசுவாசித்துக்கொண்டுமிருந்தான். ஒரு விடுத்தம் முஸைலமாவிடம் ஒருவன் வந்து மதீனமா நகரில் வசிக்கும் நபியானவர்கள் ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்து குருடாயிருந்த ஒருவனின் கண்ணுக்குப் பார்வை அளித்துவிட்டார்கள். தாங்களும் நபியாயிருந்தால் எனது ஒற்றைக்கண்ணைச் செவ்வையாக்கிவிடக்கூடாதாவென்க. முஸைலமா அதற்கிசைந்து ஆண்டவனிடம் துஆக் கேட்டான். அப்போது சுத்தமாயிருந்த ஒரு கண்ணும் குருடாய்விட்டது.

மவாஹிப் என்ற கிதாபில் கூறப்படுவதாவது:-

முஸைலமா வென்பவனுக்கு ரஹ்மான் யென்று ஓர் நாமதேயம் மிகப் பிரபல்யமாயிருந்தது. நமது நாயகம் அவர்கள் பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம் என்று ஓத ஆரம்பித்த பொழுது அருகிலிருந்த ஒருவன் இதில் முஸைலமாவைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறதெனப் பகர்ந்தான். அந்த முஸைலமா, பனீ ஹனீபாக் கூட்டத்தின் தூதர்களுடன் மதீனமா நகரில் நாயகம் அவர்களின் சமுகம் ஆஜராகி இஸ்லாமானன். ஆயினும், கூடவே அரைவாசி தேசம் எனக்களிக்கவேண்டுமென்று நாயகம் அவர்களிடம் விண்ணப்பம் செய்தான். இதைச் செவியுற்ற நாயகம் அவர்கள் விசனித்தார்கள். பின்னர், யமாமா நகரில் வந்து நபிப்பட்டத்தைப்பற்றி தாவாச் செய்து நாயகம் அவர்களுக்கு ஒரு கடிதமெழுதினன்.

முஸைலமா ரஸூலுல்லாவில் நின்றும் முஹம்மதுர்ரஸூலுல்லாவுக்கு; நான் (நபிப்பட்டத்தில்) தங்களுடன் கூட்டாளியாயிருக்கிறேன். (ஆதலால் ஜெயித்த தேசங்களில்) எனக்குப் பாதி குறைஷிகளுக்கு (தங்களுக்கு)ப் பாதியாயிருக்கவேண்டும் என்பதே.

நாயகம் அவர்கள் அக்கடிதத்துக்குக் கொடுத்த மறுமொழியாவது:-

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம். முஹம்மதுர்ரஸூலுல்லாவில் நின்றும் பொய்யனான முஸைலமாவுக்கு நேர்வழியைத் துயர்ந்தோர்கள் மீது சலாமுண்டாவதாக: நிச்சயமாக பூமியாகிறது இறைவனுக்குச்சொந்தமாயிருக்கும் அவனது அடிமைகளில்நின்றும்நாடினவர்களுக்கு அதைச் சொந்தமாக்குவான். நல்ல முடிவாகிறது பயபக்தியுடையோருக்காயிருக்கும் என்பதாம்.

நாயகம் அவர்கள் காலத்துக்குப் பின் ஹஸ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்துவக்கத்தில் சஜாஹ் என்னும் ஓர் ஸ்திரீ நபிப்பட்டத்தைப்பற்றித் தாவாச் செய்தாள். இம்மாது மிக சாதுர்ய வாக்குடையவளாயிருந்தாள். எந்த வார்த்தை சொன்னாலும் பாஷாஞானப்படி கவியினது மயமாகக் கூறிக்கொண்டிருந்தாள். இவளின் நிகரற்ற வாக்கலங்காரம் ஜனங்களின் இருதயத்தைக் கவர்ந்துவிட்டது. அரபிக் கூட்டத்தாரில் பலர் அவளோடு சேர்ந்துவிட்டார்கள். அப்பால், பெரும்பான்மையோராகிய பனீதமீம் கூட்டத்தாரை நோக்கிச் சென்று அவர்களை நோக்கி நீங்கள் எனக்கு ஒத்தாசைபுரிவீர்களானால் இராஜரீகமும், அதிகாரமும், உங்களிடமே தங்கும் எனக்கூறினாள். அன்னார், உடனே இசைந்துவிட்டனர்.

முஸைலமா கஸ்ஸாபைப்பற்றி கீர்த்திப் பிரதாபமாயிருந்த இச்சமயம் இம் மங்கை தனது கூட்டத்தாரை நோக்கி முஸைலமாவைச் சோதனை செய்யப் புறப்படுங்கள். மெய்யாகவே, அவன் நபியாயிருந்தால் சரி. இன்றேல், அவனது கூட்டத்தாரை அவமானப்படுத்தவேண்டும் எனப் பகர்ந்தாள். அவர்களும் அதற்குத் தலை சாய்த்து ஒரு பெருங்கூட்டத்தோடு புறப்பட்டார்கள்.

இவர்கள் இவ்வாறு புறப்பட்டு வரும் விஷயம் முஸைலமாவுக்கெட்டியதும் நடுநடுங்கி அநேக வெகுமதிகளையும், நன்கொடைகளையும் அனுப்பி அமைதியாயிருக்கும்படி வேண்டிக்கொண்டான். அவர்கள் அதற்கிணங்கியதும் இவன் நாற்பது பேர்களுடன் பயணமாய் சமீபத்தில் சென்று தனது சிநேகிதர்களை அழைத்து ஒரு அழகான கூடாரமமைத்து அதில் வாசனைகளை பரிமளிக்கச் செய்யுங்களென்று கட்டளையிட்டான். அதன் பிரகாரம் கூடாரம் தயார்செய்யப்பட்டபொழுது அப்பெண் நபியை அழைக்கப்பட்டது. அவளதற்குச் சம்மதித்து கூடாரம் வந்தமர்ந்தபோது பெண் நபியும், ஆண் நபியும் ஓரிடத்தில் சேகரமாய் பல் வேறு விஷயங்களைப்பற்றி வார்த்தையாடிக்கொண்டிருந்துவிட்டு பெண் நபி, ஆண் நபியைப் பார்த்து தங்கள் மீது என்னவிதமான வஹீ இறங்கினதென வினவ. முஸைலமா சில அரபி வாக்கியங்களை ஓதினான். அதைச் செவியுற்ற பெண் நபி, நீ அல்லாவின் நபியென நான் உறுதிமொழி கூறுகிறேனெனப் பகர்ந்தாள். முஸைலமா அம்மாதை நோக்கி நீ என்னை மணம்புரிந்து நம்மிருவரின் சேனைகளையும் ஒருங்கே திரட்டி அரபியா வெங்கும் ஜெயித்து வெற்றிக்கொடி நாட்ட உனது அபிப்பிராயமென்ன வென்க. அவளும் அதற்குச் சம்மதித்தாள். உடனே முஸைலமா ஒரு கவி பாடினான். அதன் கடைசி வாக்கியத்தை மிக மெச்சி ஸல்லல்லாஹு அலைக்க. உன் மீது அல்லாவின் சலவாத்துண்டாவதாக வென அப்பெண் நபி கூறினாள்.

இவ்வாறு நடந்து முடிந்தபின்னர் சஜாஹ் என்ற பெண் நபி தனது ஜாகைக்குச் சென்றாள். ஜனங்கள் நடந்த விஷயங்களை வினவியபோது, முஸைலமா மெய்யாகவே நபியாக இருக்கிறார். ஆதலால், நான் அவரை மணம்புரிந்துகொண்டேனெனக் கூறினாள். அதற்கவர்கள் மஹர் உண்டாவென்க; இல்லையென்றாள். உன்னைப்போலொத்தஸ்திரீகளுக்கு மஹரில்லையாவென்று ஜனங்கள் வருந்துவதை யறிந்த சஜாஹ் திரும்பி முஸைலமாவிடம் சென்றாள். முஸைலமா க்ஷேமத்தைப்பற்றி விசாரித்தபொழுது, நான் மஹருக்காக வந்தேனெனக் கூறினாள். அவன் அவளை நோக்கி உனது முஅஸ்ஸின் யாரென்க. அவள் ஷபீபி புனு ரபஹீயைக் காட்டினாள். அவனை அழைக்கப்பட்டு வந்த

போது முஸைலமா கூறினதாவது:

> சஜாஹுக்கு மஹராக உங்கள் எல்லோரில் நின்றும் பஜ்று, இஷா வென்று இரு நேரத்துத் தொழுகைகளையும் நான் மன்னித்து விட்டேன். முஹம்மது ரசூலுல்லா ஏற்படுத்திய ஐந்து நேரத்து தொழுகைகளில் நின்றும் முஸைலமா இபுனு ஹபீப ரசூலுல்லாஹ் மன்னித்துவிட்டதாக எல்லா வகுப்பாருக்கும் விளம்பரம் செய்துவிடுங்கள் என்பதே.

இவ்வுத்தரவின்படியே பனீதமீம் கூட்டத்தார் இரு தொழுகைகளையும் தொழுகிறதேயில்லை. (இபாதத்துல்அப்ஹாம்.)

ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் தங்களது கிலாபத்தின் காலத்தில் இஸ்லாமிலிருந்து மாறிப்போன வேஷதாரிகளையடக்க ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களைத் தலைமையாகக்கொண்ட ஓர் பட்டாளம் அனுப்பினார்கள். இவர்கள் சென்று முஸைலமாவின் சேனையோடு கொடூரமான யுத்தம் நடத்தி அவர்களைத் தோற்கடித்தார்கள்; முஸைலமாவும் கொல்லப்பட்டான். அந்த சஜாஹென்ற பெண் நபி இஸ்லாமாய்விட்டாள். அதோடு முர்க்ததுகளின் கலகம் அடங்கிவிட்டது.

### இப்போது, மிர்ஸா சாஹிபைக் கவனிப்போம்.

முதன் முதல் இவர் பிறமதஸ்தர்களுக்கு இஸ்லாம் மதத்தின் உண்மைத் தத்துவங்களைப் புகட்டப் போகிறேனென பராஹீன அஹ்மதிய்யா வென்றும் நூலை இயற்றி பொது ஜனங்கள் கிரகித்துக்கொள்ளாவண்ணம் தமது இல்ஹாம்களையும் அதில் நுழைத்துப் பிரசித்தப்படுத்தினர். அதன் ஆழ்ந்த கருத்துகளைப் பொது ஜனங்கள் உணராவிட்டாலும் குறிப்பறிந்த சிலர் இவர் பிற்காலத்தில் நபியென வாதிப்பாரெனக் கூறலாயினர். இதையறிந்த மிர்ஸா சாஹிபு நமது நாயகத்துக்குப்பின் வேறு நபி கிடையாது. அப்படி நபி உண்டென்றால் இஸ்லாமைவிட்டுப் புறம்பாய்விடுவான். அவ்வாறு நபியெனக் கூறி நான் காபிராய்விடுவேனோ வென பகிரங்கமாகக் கூறினர். பொது ஜனங்கள் இதை மெய்யெனவே நம்பினர். பின்னர், மெள்ள நபி

யென எனக்கு இல்ஹாம் மூலமாய் ஆண்டவன் அறிவிக்கிறானென்றார். பொது ஜனங்களில் பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது. ஆட்சேபங்கள் கிளம்பின அதைவிட்டும் தப்பித்துக்கொள்ள நான் ஷரீஅத்தின் நபி யெனக் கூறவில்லை. நான் நபியுடைய சாயலில் வந்த ஸில்லி நபியாக இருக்கிறேனென்றார். முன்னதாகவே இவர் மீது ஏற்பட்ட நல்லெண்ணத்தின் மீது பொது ஜனங்கள் இதையும் நம்பினர். அப்பால், நான் நபிமார்களைவிடச் சிறந்தவன்; ஷரீஅத்தையுடையவனென்றும் என்னைக் கூறலாம். என்னை நம்பாதோர், சந்தேகித்தோர் எல்லோரும் காபிரே யெனச் செப்பி ஒரு கூட்டத்துக்கு நபியாய்விட்டார். அவரது உம்மத்தார் இதுவரை அவரை ஒரு நபியெனவே நம்பி வருகின்றனர்.

முஸைலமாவைப்போல் இவரும் ஒரு கவியை அரபியில் பாடி ¶ இதற்கு நிகர் காட்டமுடியாது. எனது அற்புதமென்றும் கூறியிருக்கிறார். முஸைலமாவுக்கு அவனது பெண் நபி ஸலவாத்துச்சொன்னதுபோல் மிர்ஸாயி மதஸ்தரும் அவர்மீது ஸலவாத்துச் சொல்கிறார்கள். இன்னும், சில காலம் சென்றால் அவர் பெயரால் கலிமாச் சொல்லவும் அவரின் வாசஸ்தலமாகிய காதியான் கிராமத்தையே மக்கா, மதீனா, பைத்துல் முகத்தீஸ் என்று நிச்சயமாய்க் கூறத் துணிவார்களென்பதும் ஆச்சரியம் அல்ல. முஸைலமாவோ நபிப்பட்டத்தில் நானும் கூட்டாளியாயிருக்கிறேனென்றான். இவரோ நான் ஹஸரத் நாயகம் அவர்களையும் மற்றும் நபிமார்களை விடவும் பதவியிலும் ஞானத்திலும் சிறந்தவனென்று ஜாடையாகவும், சிலவிடங்களில் மிகத் தெளிவாகவும் கூறியிருக்கிறார். நீர் நபியானால், அற்புதஞ் செய்யலாமே என்று சிலர் கேட்க அவர் நாம் முஸைலமாவைப்போல அகப்பட்டுக்கொள்ளக் கூடாதெனக்கருதி அற்புதங்களை கிடையாது. நபிமார்களால் அற்புதம் நடந்ததாகக் கூறுவது சுத்தப் பிசகு மெஸ்மரிசமென்னும் ஒருவித தந்திரத்தினால் சில காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. அது அற்பத்தனமாயிருப்பதால்

¶ ஆண்டவனேயறிவான்; இவர்தான் பாடினாரோ அல்லது பாடச் செய்தாரோ எனினும் சட்டத்துக்கு மாற்றமாக யிருக்கிறதென்பதில் சந்தேகமன்று.

எனக்கது பிரியமில்லை. அன்றேல், அதைவிட மிக மேலாம்பாமாக நான் காட்டியிருக்கக் கூடுமென்று கூறி அற்புதம் காட்டுகிறதைவிட்டும் தம்மைத் தப்பித்துக்கொண்டார்¶. எனினும், பொய் முன்னறிக்கைகளைக் கூறி பொய்யனென்று உலகெங்கும் பிரஸ்தாபமாய்விட்டார். முஸைலமா பொய்யனென உணர்ந்தும் அவனது கூட்டத்தார் அவனை நபியெனவே நம்பி வந்தது போல் மிர்ஸாயி மதஸ்தர்களும் பொய்யரென அறிந்திருந்தும் நபியென்றும், மஸீஹ் என்றும் நம்பி வருகிறார்கள். இவர்களிடத்தில் பொய் உடனே மஹ்தி, மஸீஹ் ஆயிருக்கலாம் போலும்.

முஸைலமா நமது நாயகமவர்களிடம் தேசங்களை ஆசித்ததுபோல் இவர் இங்கிலீஷ் கவர்ன்மெண்டாரிடத்தில் ஏதாவது ஒரு பட்டம் பெற்றுக்கொள்ளலாமென வேண்டிய மட்டும் பிரயாசையெடுத்தும் பலிக்காததால் ஆங்கிலேயர்களை யாஜூஜ், மாஜூஜ் கூட்டம் என்று இகழவும்; அப்பால் இன்னும் நம்பிக்கை வைத்துப் புகழ்ந்து போற்றவும் ஆரம்பித்தார். எனினும் முஸைலமாவைப்போல் இவரது உலக அபேட்சையும் நிறைவேறாமல் மரண அரைக்குச் சென்றுவிட்டார்.

மிர்ஸாயி மதஸ்தர்கள் நாம் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களை ரசூலென்று விசுவாசிக்கிறபோது நம்மீது குற்றஞ்சாராதெனவும்; நாம் முஸ்லிம்தானெனவும் நம்புகின்றனர். எனினும், ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் அந்த முஸைலமாக் கூட்டத்தாரை யெதிர்த்துப் போராடி அழித்துவிட்டார்களென்பது உலகம் அறிந்த இரகசியமே. இந்த முஸைலமாக் கூட்டத்தார் நமது நாயகம் அவர்களையும் நபியென அங்கீகரித்திருக்கிறார்களென்பதை அவர்கள் கவனித்தார்களா இல்லை. * ஏனெனில், நாயகம் அவர்களின் அருள்வாக்கின் உண்மை அர்த்தங்களை அவர்கள் செவ்வனே உணர்ந்திருந்ததே அதற்குக் காரணமாகும். இதே விதமாக மிர்ஸாயி மதத்தினரும் நாங்கள் நாயகமவர்களையும் நபியென விசுவாசிக்கிறோமென்ற இந்த எண்ணத்தினால்

¶ குழிநரியும் திராட்சைப்பழமும் என்ற கதை நேயர்களுக்கு ஞாபகத்தில் வரலாம்.

அவர்கள் முஸ்லிமாயிருக்க முடியாதென்பதை இன்னும் அவர்கள் உணர்ந்தபாடில்லை. மேலும், இச்சம்பவம் ஹஸ்ரத் ஸஹாபாக்களின் காலங்களில் நடைபெற்றிருந்தால் எவ்வாறு நடத்தப் பட்டிருப்பார்களென்பது கவனிக்கத்தற்குரியது.

இச்சரித்திரத்தினுல் மிர்ஸா சாஹிபுக்கும், முஸைலமா கஸ்ஸாபுக்குமுள்ள சம்பந்தங்களை நேயர்கள் ஊன்றிக் கவனிப்பார்களாக.

## சுவர்க்கலோக சமாதி.

வட இந்தியாவில் சர் ஆகாகான் பாத்தினிய்யா (ஷீயாக்களில் ஒரு வகை)க் கூட்டத்திற்கு இமாமாயிருக்கிறுர். அவர் உலக ஆதிக்கத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர். அவர் மரணமாய்ப்போன தமது கூட்டத்தாருக்கு கபுரில் எவ்விதக் கேள்வியும் ஏற்படாதபடி ஒரு சிட்டுக் கொடுத்தனுப்புகிறது வழக்கமாம். அந்த மரணமாய்ப் போனவன் தனது மண்ணறையில் தன்னிடம் கேட்கவரும் மலக்குகளிடம் அந்தச் சிட்டைக் காண்பித்துவிட்டால் உடனே யாதொன்றும் கேட்காமல் அவனுக்கு வேண்டும் சௌகரியங்களெல்லாம் செய்துவிட்டுப்போய் விடுவார்களாம். அந்தச் சிட்டில் எழுதியிருப்பதாவது:-

"எனது சகோதரர் ஜிபுரீலுக்கு என்னிடம் தீட்சை பெற்றுக்கொண்டவர்களில் ஒருவன் அவிடம் வருகிறபடியால், தாங்கள் அவனை எவ்விதத் தொந்தரவும் நேரிடாதபடி காத்து வேண்டும் சௌகரியம் செய்து வைப்பீர்களென்று நம்புகிறேன்" என்பதாய் இக்கடிதத்தின்மீது அவருடைய சிஷர்களுக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டிருப்பதால் விசேஷமான இக் கடிதத்தைப் பெற்றுக்கொள்கிறதற்காக தங்கள் ஜீவேஜிலிருந்து தங்கள் சக்திக்குத் தக்கவாறு தொகையைக் காணிக்கை செலுத்திவிடுகிறுர்களாம். இச்சம்பவத்தைப்பற்றி இன்னும் பலவிதமாகவும் கூறப்படுகிறது. இது எவ்வளவு தூரம் உண்மையென்று இறைவனேயறிவான்.

இவைகளையெல்லாம் கண்ணுற்ற ஜனுப் மிர்ஸா சாஹிபு குர்ஆன், ஹதீது ஸஹாபாக்களின் நடப்புகள் எவ்விதமாயிருந்தாலும் சரி; நாம் அவைகளைக் கவனிக்கக்கூடாது. காலஷியல்புக்

குத்தக்கவாறு பிறிது பொருள் சம்பாதித்துக்கொள்ளவேண்டும். ஜனங்களோ, எந்தவழியிலழைத்தாலும் வரத் தயாராயிருக்கிறார்களேயல்லாது அதைப்பற்றி பகுத்தறியக்கூடியவர்களாக இல்லை; இச்சமயத்தைக் கைவிடலாகாதெனக் கருதி உடனே ஒரு வஹியை இறக்கினார். அதாவது: "உலகுமானத்திற்கு மிகசொற்ப நாட்களே யிருக்கின்றனவென்று இறைவன் எனக்கு அறிவித்தான். இன்னும், எனக்கு ஒரு இடத்தை காண்பிக்கப்பட்டு அதன் பெயர் பிஹஸ்திமக்பரு (சுவர்க்கலோக சமாதி) வென்று வைக்கப்பட்டது. இன்னும் அது சுவர்க்கவாதிகளான பரிசுத்தம் பெற்றவர்களின் கபுறாயிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டது." (அல்வஸிய்யத்.)

இந்த வஹியை விளம்பரம் செய்து மூரிதின்களிடத்தில் அதற்குப் பண உதவியை வேண்டப்பட்டு அதன் நன்மைகளையும் விபரிக்கப்பட்டது. சிலர்கள் ஏராளமான பண உதவி செய்து மிர்ஸா சாஹிபின் ஆவல் ஒருவாறு அடங்கலாச்சுது. எனினும், இந்த வருமானங்கள் என்றென்றைக்கும் நீடித்திருக்க ஒரு உத்தரவு பிறப்பித்தார்; இந்த சிறப்புற்ற ஸ்தலத்தில் சமாதியாகிறவர்கள் தங்கள் சொத்தில் பத்திலொரு பங்கை காணிக்கை செய்துவிடவேண்டும் என்பதாம். சில ஜனங்கள் சுவர்க்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தங்கள் சொத்தில் பத்திலொருபங்கு அளித்து தங்கள் மனதில் சொர்க்கவாதியாகி விடுகிறார்கள். இவ்வாறாகவும் பணம் சேர்க்கப்படுகிறது. இதை யாரும் குறைகூறிவிடாதபடி, "எந்த அறிவினனும் இதை பித்அத்தென்று கூறிவிடக்கூடாது; ஏனெனில், இது வஹியின் மூலம் நடத்தப்பட்டதாயிருக்கும்" என்றும் நோட்டில் எழுதப்பட்டுள்ளது.

மிர்ஸாயிகளின் நம்பிக்கையும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. அவர் எதைக் கூறினாலும் நம்பினார்களேயல்லாது பகுத்தறிவென்னும் தீபத்தை உபயோகித்துப் பார்ப்பதை ஹறாமாக நினைத்துவிட்டார்கள். இவ்வாறாக கண்மூடித்தனமாய் அவர்பின் சென்று மார்க்கத்தை இழந்துவிட்டார்கள்.

## மிர்ஸா சாஹிபு ஹஜ்ஜுக்குப் போகவில்லை.

பஞ்சாப் நபியாகிய ஜனாப் மிர்ஸா சாஹிபு தாம் ஆகுல்,

நபி, மஹ்தி, மஸீஹ், முஜத்திது, கிருஷ்ணன், இமாமுஸ்ஸமான், ஹாரிது முதலிய இன்னும் பல நாமங்களை தம்மீது ஒட்டிக்கொண்டதுமன்றி என்னை நம்பாதோரடங்கலும் காபிர்கள் என்றும் கூறி இஸ்லாமிய உலகத்தில் எதிர்பாராத பிளவை உண்டுபண்ணிவிட்ட விஷயம் யாவரும் அறிந்ததே. தாம் போதுமானவரை சக்தி பெற்றவராயிருக்கிறதுடன் ஈசா நபியாயிருந்தும் ஹஜ்ஜுக்குப் போகாததைப்பற்றிக் கேள்விகளுண்டாயின. நாயகமவர்களின் ஹதீதின்படி இபுனுமரியமாகிய ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஹஜ்ஜுக்குப் போவார்கள். விவாகம் புரிவார்கள். இறுதியில் நாயகமவர்களின் கபுரின் சமீபத்தில் மதீனாவில் அடங்கப்படுவார்களென ஹதீது ஷரீபில் வந்திருக்கின்றது. இந்த ஹதீதின்பேரில் ஜனங்கள் மிர்ஸா ஸாஹிபை நோக்கி தாங்கள் மஸீஹாயிருந்தால் ஹஜ்ஜுக்குப் போகவேண்டியது அவசியமல்லவா எனக்கேட்க; அந்த சாமர்த்தியவான் அதற்கு விடையளித்ததாவது:

இக்கேள்வி ஷரீஅத்தைக்கொண்டு அறிவினமும் குறுகிய நோக்கமுமென அறிவிக்கிறது. எனது முக்கிய முதற்றரமான கடமை தஜ்ஜாலுடைய கலகப் புரட்சிகளை வேரறக்களைகிறதாயிருக்கிறது. நான் ஹஜ் செய்கிறது ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய ஹதீதுக்கு மாற்றமாகும். ஏனெனில், நாயகமவர்கள், தஜ்ஜாலும், வாக்களிக்கப்பட்ட மஸீஹும் ஒரே நேரத்தில் கஃபாவை தவாபு செய்கிறதாகப் பார்த்திருந்தார்கள். உண்மையில் நான் ஹஜ் செய்கிறதற்குத் தகுந்த நியாயமான நேரமெதுவென்றால் தஜ்ஜால் குப்ரையும் குபாடத்தையும் விட்டு நீங்கி கலப்பற்ற ஈமானுடன் கஃபாவை தவாபு செய்யவேண்டும் (அதுவே நான் ஹஜ் செய்கிற நேரமாகும்.) சுருங்கக் கூறுமிடத்து, எப்போது தஜ்ஜாலுக்கு ஈமானின் [illegible] அபேட்சையும் ஹஜ்ஜுடைய விருப்பமும் ஏற்படுமோ அக்காலம் நான் ஹஜ் செய்யவேண்டியதாயிருக்கும். இப்போது தற்காலத்தில் எனது நோக்கமாகிறது தஜ்ஜாலியத்தை(வீணத்தனத்தை) அடக்குகிறதில் கவனத்தைச் செலுத்தும்போது எனது எஜமானுடைய கைக்கினைக்கு மாறாக ஒரு அடியேனும் (ஹஜ்ஜுக்கு) யெடுத்து வைக்கமுடியுமா? (அப்பாமுஸ் ஸுல்ஹு 135 ப. அல்ஹகம் 3 மா 37.)

சகோதரர்களே! இப்போது கவனியுங்கள். மிர்ஸாசாஹிபு ஹஜ் செய்தாரா? இல்லை. இந்த மிர்ஸா சாஹிபின் தம் வாக்கின்படியே இவர் பொய்யரா அல்லது மஸீஹா வெனப்பகருங்கள்.

ஏ! காதியான் பார்ட்டிகளே! மிர்ஸா சாஹிபின் வாக்கியப்படி அவர் அல்லாஹுத்தஆலாவிடத்தில் நேர் நேராகப் பேசுகிறார். சில நேரம் கேள்விக்குப் பின் ஜவாபும், அப்பால் கேள்விக்குப்பின் ஜவாபும் இவ்வாறு இவர் கேள்வி கேட்கிறதும், இறைவன் உடனே பதிற் கூறுகிறதுமாயிருந்திருக்கிறார். பல விடுத்தம் நாயகமவர்களை இதே சரீரத்தோடு முழிப்பில் கண்டு மஸாயில்களைக் கேட்டிருக்கிறார். மறைவான விஷயங்களோ, வலிமார்களென்ன; நபிமார்களுக்குக்கூட அதிலும் விசேஷமாக நமது சர்தார் ஹஸ்ரத் காத்தமன் நபிய்யின் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்கும் எட்டாததெல்லாம் அறிந்திருக்கிறார். குர்ஆன் ஷரீபின் உண்மைக் கருத்துகளையும், நுட்பங்களையும் அறிகிறதில் கரைகாணா சமுத்திரமாயிருக்கிறார். பரிசுத்தஆவியுடன் பேசிக்கொண்டிருந்திருக்கிறார். இவ்வாறான நிகர் காட்ட முடியாத மகத்துவம் பெற்றஜனாப் மிர்ஸா சாஹிபு ஏன்தான் ஹஜ் செய்யாமல் மரணமாய்விட்டாரோ?.

தாம் எந்த காரியத்திற்காக மஸீஹின் வேடம் பூண்டு வந்தாரோ அந்த காரியத்தை முடிக்காமலும், ஹஜ் செய்யாமலும் அரைகுறையாய் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். மஸீஹ், மஹ்தியின் வேலையைப் பூர்த்தியாய் முடிக்காமல் போய்விட்டனர். அய்யோ பரிதாபம்.

மிர்ஸா சாஹிபு கூறுகிறார்:-

எனது காலத்தில் கடல்கரையில் பிரயாணத்துக்குற்ற வழிகள் எவ்வளவு சவுகரியமாயிருக்கிறதென்றால், அதைவிட இலகுவான சவாரி கிடைக்கமுடியாது. (துஹ்பா கோல்றிய்யா 164 ப.) *.

மிர்ஸாயி மதஸ்தர்களே! லாகூர் பார்ட்டிகளே! பகுத்தறிவுடையோர்களே! கவனித்தீர்களா, ஒரு சாதாரண மனிதன்

* பிற்காலத்தில் இதைவிட இலகுவான சவாரிகளெல்லாம் உற்பத்தியாகுமென்று மிர்ஸா சாஹிபுடைய இல்மகைபுக்கு என்ன தெரியும்.

நாயகம் அவர்கள் மீது கொண்டுள்ள மெய்யன்பினுல் போக்கு வரத்துச் செலவுக்கு இல்லாமலிருந்தும்கூட தாங்கவியலாத கஷ்ட நஷ்டங்களை யெல்லாம் சகித்து கால் நடையாகச் சென்று ஹஜ் செய்து நாயகமவர்களின் றவ்லா ஷரீபைத்தெரிசித்து அத ஞலேற்படும் பாக்கியங்களைப்பெற்றுக்கொள்கிறுன். இங்ஙன மாக, மிர்ஸா சாஹிபோ அநேகத் தத்துவங்களைப்பெற்றவர். நாயன் அவரது வேண்டுதலையெல்லாம் உடனே ஒப்புக்கொள் கிறுன். அவர் உண்டாகுக வென்ருல் உண்டாய்விடுகிறது. இறைவன் அவரை ஆபத்துகளைவிட்டும் காப்பாற்றுகிறுன்: பிற் காலத்தில் இன்னின்ன விஷயங்களெல்லாம் நடக்குமென்பதை எழுதிய இவரின் பத்திரத்தில் ஆண்டவன் அப்படியே கை-யொப்பம் கூடப் போட்டிருக்கிறுன். அன்றியும், இல்ஹாம் வஹீயுடைய பொட்டணமோ இவர் கக்கத்தில் இருக்கிறது. நினைத்த நிமிஷமே இல்ஹாமையும், வஹீயையும் வெளிப்படுத்த தலாம். இவரின் வாக்கியப்படி பிரயாணத்துக்குரிய சகல சவு கரியங்களும் இனியில்லாவண்ணம் ஏற்பட்டிருக்கிறது. ஜட்கா வோ வாசலில், ரயிலோ அதற்கப்பால், அதற்குப்பின் கப்பலோ தயாராயிருக்கிறது. செலவுக்கோ ஒவ்வொரு பாகங்களிலிருந் தும் சிஷர்களின் ஏராளமான மணியார்டர் பாதையில் கவலை யின்றி கார்மானமாகச் செல்ல இல்ஹாமுடைய பையோ கை-வசம். ஆகவே, இவ்வளவு சவுகரியங்களும் ஏற்பட்டிருந்தும் ஜனுப் பஞ்சாப் நபி ஹஜ் செய்யாத காரணமென்ன?

மிர்ஸா சாஹிபின் உம்மத்துகளில் சிலர் "மிர்ஸா சாஹிபு நாயகம் அவர்கள்மீது அளவிடக்கூடாத அன்பும் ஆசையும் கொண்டவராயும் அவர்களின் கபுரை தெரிசிக்கிறதில் சதா மயக்கங்கொண்ட ஆஷிக்காயுமிருந்தார்" என்று கூறுகிறுர்கள். அன்றியும், அவருக்குச் சிறகு மட்டும் முளைத்திருந்தால் அப் படியே பறந்து மதீனமாநகரம் சென்று எல்லோருக்கும் முந்தி தமது சிறகைப் பலியிட்டிருப்பார் என்றும் கூறுகிறுர்கள்.

மிர்ஸா சாஹிபின் உம்மத்துகளே! ஏன் மிர்ஸா சாஹிபு ஹஜ்ஜுக்குப் போகிறதற்கு பை பையான இத்தனை இல்ஹாம் களும், இத்தனை வசதிகளும் ஏற்பட்டிருப்பது போதாதா? அல் லது மெய்யாகவே பட்சிகளுக்கொப்ப இரண்டு சிறகும், இரண்டு

காணும், ஒரு மூக்கும் உண்டாய்விடவேண்டுமோ? அய்யோ! இந்த மிர்ஸாயி மதஸ்தர்களின் புத்திசாலித்தனத்திலும், பகுத்தறிவிலும் ஆச்சரியம்! ஆச்சரியம்!!. விசேஷமாக இங்கிலீஷ் குர்ஆன் வெழுதி இஸ்லாமார்க்க உண்மைத் தத்துவங்களை உள்ளது உள்ளவாறு வெளியிட்டு இஷாஅத்தே இஸ்லாமென்னும் மதப்பிரசாரத்தின் மூலமாக உலகோர்களுக்கெல்லாம் வழி காட்டுகிறோமென்று வெறும் பறை சாற்றி வருகிறார்களே அவர்களின் பகுத்தறிவையும் ஆராய்ச்சியையும் பற்றித்தான் எமக்கு அளவுகடந்த ஆச்சரியமுண்டாகிறது. ஒரு சிறிதும் பொய் மெய்யைப் பகுத்துணரத்தகாத இவர்கள் என்னவிதமாகத்தான் குர்ஆனென்னும் திருமறைக்கு வியாக்கியானம் செய்யவும், அதை தமிழ்ப் படுத்தவும் முயன்றனரோ? ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெறும் சிறுவர்களும் பட்டிக்காட்டுக் கிழவிகளுங்கூட பகுத்துணரத்தக்க பொய்களை இம்மகான்கள் அறியாது நாங்கள் அப்படிச்செய்கிறோம்; இப்படிச் செய்கிறோமென்று வீண் டம்பங்கூறி முன்வருவதுதான் நமக்கு வியப்பை விளைவிக்கின்றது. இப்புண்ணியவான்களைத்தான் தற்காலத்தில் காலத்துக்குத் தக்கபடியும், சமயத்துக்கேற்றவாறும் அர்த்தம் அமைத்துவிட்டார் என்று நீண்ட நீண்ட வியாசங்கள் விபரம் தெரியாத முஸ்லிம்களால் வரையப்பட்டு வருகிறது.

புதூஹாத்தெ இஸ்லாமிய்யா வென்ற கிதாபில் எழுதப்பட்டிருப்பதாவது:- 1072-ம் வருஷத்தில் ஓர் யகூதி தன்னை மஸீஹென்றும் ஓர் முஸ்லிம் தன்னை மஹ்தி யென்றும் தாவாச்செய்திருந்தார்கள். யூத வேதமாகிய பழைய ஏற்பாட்டில் ஒரு நபி வருவார்களென்று ஹஸ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் கூறியிருக்கிறார்கள். அது உண்மையில் நமது இறுதி நபியாகிய நாயகத்தைக் குறிக்கும். எனினும், அந்த யூதர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் ஆகிய இரு நபிமார்களையும் அங்கீகரிக்கவில்லை ஹஸ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களால் முன்னறிக்கையாய்க் கூறப்பட்ட அந்த நபியையே எதிர்பார்த்திருக்கிறார்கள். அந்த யூதன் தன்னை யூதர்கள் வாக்குச்சொல்லப்பட்ட நபி என்றும், முஸ்லிம்கள் உரைத்த கூறப்பட்ட மஸீஹென்றும் நம்ப வேண்டுமென்பதே அவனது சித்தாந்தம். அவன் முஸ்லிம்

களைப்பார்த்து உங்கள் வேதப்படி இனி வரப்பட்ட ஹஸ்ரத் ஈஸா எப்படியும் இஸ்ராயேலைச் சேர்ந்தவர்களே. நானும், இஸ்ராயேல் ஜாதியைச்சேர்ந்தவனே. மேலும், இன்றளவும் நான் ஈஸாவென்று தாவாச் செய்த ஒருவனுடைய தாவாவும் ருஜூவாகவில்லை.

நான் தாவாச் செய்து கூறுவதாவது:- நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாயிருக்கிறேன். ஆதலால், எனது தாவா ஒப்புக்கொள்ளத்தகுந்ததாயிருக்கிறது என்பதாம்.

யூதர்களை நோக்கி, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களால் கூறப்பட்ட அறிக்கையின்படி எவ்வாறாயினும் ஒரு நபி வருவாரென்பது ஒப்புக்கொள்ளப்பட்டதும், அவசியமானதுமாயிருக்கிறது.

என்மீது வஹீ இறங்குகிறது, அற்புதங்கள் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்று மொழிந்து மனோவசிய தந்திரத்தினால் சில அற்புதங்களையும் ஜனங்களுக்குக் காட்டினான். அவன் அழகிய முக லட்சணமும், வாக்கலங்காரத்தில் மிகத் தேர்ச்சி பெற்றவனுமாயிருந்ததினால், வெகு தூரத்திலிருந்து ஜனங்கள் வந்து அவனைத் தெரிசித்துக்கொண்டிருந்தார்கள். அவனது உருக்கமான நாகரீகவசனம் அவர்களின் இருதயங்களைக் கவர்ந்துவிட்டன இவ்வாறான ஒரு பெருங் கூட்டம் அவனைத் தயர்ந்துவிட்டது. அப்பால், அவன் இஸ்தம்பூலை நாடிப் புறப்பட ஆரம்பித்தபொழுது கலகப்புரட்சியின் அச்சத்தால் துருக்கியின் பிரதம மந்திரி அவனை கப்பலில் வைத்தே கைது செய்துவிடும்படி கட்டளையிட்டார்; அதன்படியே கைதியாக்கப்பட்டான். ஆயினும், அவனை விசுவாசித்தோர் திரள் திரளாக வந்து காணிக்கையைச் செலுத்திவிட்டு சிறைச்சாலைக்குச் சென்று அவனது பாதத்தை முத்தியிட உத்தரவு பெற்றுக் கொள்கிறவர்களாயிருந்தார்கள்.

ஒரு நாள் கலீபத்துல் முஸ்லிமீன் சுல்தான் முஹம்மது அவர்கள் அவனைத் தமது சமுகத்தில் அழைத்து ஏதோ சிற்சில கேள்விகள் கேட்டார். அதற்கு துருக்கிப் பாஷாஞான மின்றி ஒழுங்கற்றப்படிக் கூறினான். சுல்தான் அவனை நோக்கி காலத்தின் மஸீஹுக்கு குறைந்தபட்சம் ஒவ்வொரு பாஷை

களிலும் நாகரீகமாகப் பேசவேண்டுமேயெனக் கூறிவிட்டு பின்னரும் அவனைப்பார்த்து சரி, ஏதாவதொரு ஆச்சரியம் அல்லது அற்புதமாவது:- உன்னில் நின்றும் வெளியாகிறதாவெனக் கேட்டார். அதற்கவன் ஆம்; சிற்சில சமயம் என்றான். அப்போது சுல்தான் நான் உனது மஸீஹாப் பதவியைச் சோதனை புரிய விரும்புகிறேனெனப் பகர்ந்து உடனே அவனது பிடவைகளை களையச் செய்யுங்களென ஆக்ஞாபித்தார். பின்னர், இவன் மீது துப்பாக்கிக் குண்டு தைக்கிறதாவெனப் பார்ப்போம். இவன் மெய்யாகவே மஸீஹாயிருந்தால் இவன்மீது குண்டு தைக்கமாட்டாது என்றார். இதைச் செவியுற்றதும், அவன் மிகத் தாழ்மையுடன் அடிபணிந்து எனது அற்புதத்தில் குண்டின் அடியைத் தாங்கி அதைவிட்டும் என்னைக் காப்பாற்ற சக்தியில்லையென விண்ணப்பஞ்செய்துகொண்டான். அப்பால், சுல்தான் அவனை வெட்டிவிடும்படி கட்டளையிட்டார்.

அந்த யகூதியாகிய மஸீஹ் தன்னைத் தப்புவித்துக்கொள்ள ஒரு உபாயமும் தென்படவில்லை. நமது மஸீஹாப்பதவியும் சமயத்தில் உதவிபுரியவில்லை யெனக் கண்டவுடன் சுல்தானின் பாதத்தில் வீழ்ந்து மன்னிப்புத்தேடி இஸ்லாத்தின் உண்மை தத்துவத்தை உறுதி கூறி தூய்யமனதுடன் இஸ்லாமாய்விட்டான். கீர்த்தி பெற்றிருந்த இம்மஸீஹ் இஸ்லாமாய்விட்டதினால் இவனைத் தொடர்ந்தோரில் பெரும்பான்மையோர் இவனது அரிய உபந்நியாசத்தினால் இஸ்லாமானார்கள்.

இப்போது, மஹ்தியின் சரித்திரத்தைக் கேளுங்கள். அவனையும் இம்மாதிரியே கைதி செய்யப்பட்டு சுல்தான் சமுகம் கொண்டுவரப்பட்டது சுல்தான் அநேகவிதமான வினாக்களை இவனிடமும் வினவியபோது பதிற்கூற முடியாமல் தத்தளித்தான். எனினும்; தௌபாச் செய்யவில்லை; பின்னர் கொல்லப்பட்டுப்போனான்¶.

¶ முற்காலத்திய பொய் மஹ்திகளும், மஸீஹ்களும்; மஹ்தி வேறு, மஸீஹ் வேறு என்று தாவாச்செய்துகொண்டிருந்தார்கள். எனினும், பஞ்சாப் கிருஷ்ணஜீ பார்த்தார்; நாமே மஸீஹென்று வாதம் செய்கிறோம். ஆயினும், மஸீஹின் காலத்தில் மஹ்தியை எங்கே யென்ற கேள்வி பிறக்கக்கூடும். நமக்கொத்த சமர்த்தன் மஹ்தியாக அகப்படுவது அரிது யென்று உணர்ந்து மஹ்தி, மஸீஹ் இருவர் என்ற தாவாவை

சிதேவித்தனமும், மூதேவித்தனமும் இறைவன் கைவசம் இருக்கின்றன. யகூதியின் மஸீஹென்ற வாதமாகிறது நேர் வழிக்குக் காரணமாகவும், முஸ்லிமின் மஹ்தியென்ற தாவா வாகிறது தீயவழிக்குக் காரணமாகவுமிருந்தது. (இபாதா 338 பு.)

மிர்ஸா சாஹிபு தம்மை மஹ்தி, மஸீஹென்று வாதிக்கும் சமயம் ஷரீஅத்தின்மீது முழுப்பற்றும், மதாபிமானத்தில் சிறந்து விளங்கும் சுல்தான் அப்துல் ஹமீத்கான் அவர்களின் கிலாபத்துடைய காலமுமாயிருந்தது. இவ்வமயம், நாம் ஹஜ்ஜு செய்யப்புறப்பட்டால் முன்னுள்ள நமது சகோதர மஸீஹ் மஹ்திகளின் நிலைமையே நமக்கேற்படவும் கூடும். நமது மஸீஹுப் பதவியும், ஆத்மாவும், அதனுடன் சரீரமும் திரும்பி இந்தியாவுக்கு வரமாட்டாது என்பதை நன்கு விளங்கிக்கொண்டார்; அதற்கிணங்க வஹீயும் உண்டாய்விட்டது. இதுவே, அவர் ஹஜ்ஜுக்குப் போகாததற்குக் காரணமாயிருக்குமென்று நினைக்கவேண்டியதாயிருக்கிறது அல்லது தமது வஹியில் ரயிலை தஜ்ஜாலின் கழுதையென்று கூறப்பட்டிருப்பதால், தஜ்ஜாலின் கழுதை மீதேறி ஹஜ்ஜுக்குப் போவதா? பட்சிகளைப்போல் சிறகு முளைக்கட்டும் என்று நாடியிருந்தாலும் இருக்கலாம். எவ்வாறாயினும் அவர் ஹஜ்ஜுக்குப் போகவில்லை யென்பதிலிருந்து அவரும் அவரின் மஸீஹுப் பதவியும் எத்தன்மையுடையதென சாதாரண மனிதன்கூட அறிந்துகொள்ளலாம் என்பதிலையமில்லை.

## காலத்துக்குத்தக்க நபி

கலீபா முஹ்தஸிம்பில்லாஹ் உடைய காலத்தில் ஒருவன் நபிப்பட்டத்தைப்பற்றி வாதித்தான். அவனைக்கைதியாய்ப்பிடிக்கப்பட்டபொழுது கலீபா அவனை நோக்கி, நீ நபிதானாவெனக் கேட்டார். அவன் ஆம்; என்றான். யார்பால் அனுப்பப்பட்டிருக்கிறாயென்றார். அவன் தங்கள் மீது யென்றான். அதைக் கேட்ட கலீபா நீ அறிவற்றவனும், மடையனுமாயிருக்கிறாயென்றார். அவன் ஜனங்கள் எப்படியோ அப்படியே நபியும் அனுப்

---

அடியோடு தீர்த்துவிட்டார், அதாவது: மஹ்தி, மஸீஹென்பது இருவரல்ல. ஒருவருக்குரிய இரு பட்டங்களாயிருக்கும் என்பதாம்.

பப்படுகிறதென்றான். கலீபா இவ்வார்த்தையின் சமயோஜித நுட்பத்தின்மீது வியந்து சில வெகுமதிகளை அவனுக்களித்து அனுப்பிவிட்டார். (இபாதா 226.)

தற்காலம் பொய்யும், புரட்டும் நாஸ்திகக் கொள்கைகளும் ஏராளமாகப் பரவி வருவதால், மிர்ஸா சாஹிபும் இதேகாலத்துக்குற்ற சரியான மஸீஹ், மஹ்தீ, நபியாயிருக்கிறாரென்பதை அங்கீகரிக்கவேண்டியதாகவேயிருக்கிறது. இனி இவரின் சரித்திரத்தைச் சிறிது ஆராய்வோம்.

## மிர்ஸா சாஹிபின் சரித்திரச் சுருக்கமும், அவரின் உம்மத்துகளின் பிரிவினையும்.

முஸ்லிம்களே! கொஞ்சக்காலத்திற்கு முன் வட இந்தியாவில் சமயப்போராட்டம் நடைபெற ஆரம்பித்து ஒவ்வொரு சமயத்தாரும் தங்கள் தங்கள் மதமே சரி யென்றும், மற்றும் மதங்களெல்லாம் தவறென்றும் போதித்து வந்தனர். விசேஷமாக புதிதாய்க் கிளம்பின ஆரியசமாஜத்தார் பிறமதங்களை மிகவும் இழிவாக நிந்திக்கலாயினர். பிரமசமாஜத்தாரும், ஹிந்துக்கள், கிறிஸ்தவர்களும் தங்கள் மதத்தையே வெகுவாய் சிலாகித்துப் பேசி வந்தனர். இத்தருணம், முஸ்லிம்களில் நேச்சரி வகுப்பாரென்ற ஒரு கூட்டம் தோன்றி மார்க்க விசுவாச முதலிய சகல அம்சங்களையும் ஐரோப்பிய சயன்ஸுக்கு நிகராக அர்த்தம் செய்து சயன்ஸ் பல்லபாவுக்குள் அடக்கிக்கொண்டிருந்தனர். இவ்விதமாக இஸ்லா மார்க்கத்திற்குள் புதிய கூட்டம் தோன்றி பூர்வீக இஸ்லாமியக் கொள்கைகளை அழித்துக்கொண்டிருக்கிறதையும், மற்றும் பிறமதஸ்தர்கள் தங்களின் மதத்தை விர்த்திசெய்ய புத்தகங்கள், நோட்டீஸ்கள், பத்திரிகைகள், தர்க்கங்கள் மூலமாக அரும்பிரயாசை யெடுத்துக்கொண்டிருக்கிறதையும், பார்த்து வந்த முஸ்லிம்கள் பெரும் கலக்கங் கொண்டிருந்தனர். முஸ்லிம்களிலும், கீர்த்திபெற்ற மௌல்விகளும் பிரசங்கிகளும் கிளம்பி சர்வசமயத்தாருக்கும் தகுந்தபடி பதிலளித்துக் கொண்டிருந்தாலும் இப்பேர்ப்பட்ட மகான்கள் மிகவும் சுருக்கமாகவே இருந்து வந்தனர்.

மிர்ஸா சாஹிபு முதலாவது கவர்ன்மெண்டு ஆபிஸில் அலு:

வல் பார்த்துவிட்டு அப்பால் சூபி யென்ற கோலமாக ஜனங்களிடத்தில் வெளியானார். முரீது கொடுக்க ஆரம்பித்தார். அச்சமயம், இதர மதஸ்தர்களின் போராட்டங்கள் மிகவும் சுறுசுறுப்பாயிருந்ததினால் தாமும் அன்னவர்களுக்கு எதிராகத் தர்க்கிக்க ஆரம்பித்தார். இவர் இதர மதஸ்தர்களோடு தர்க்கித்து ஜெயிப்பதற்காக பிறமதஸ்தர்களின் நூல்கள், வேதங்கள் சரித்திரங்கள் இன்னும் சுயமதஸ்தர்களில் வழி சருகிய கெட்ட கொள்கையுடையோர்களின் சரித்திரப் போக்குகளையும், நன்கு உணர்ந்துகொண்டனர். பராஹீன அஹ்மதியா வென்ற ஒரு பெரிய தர்க்க சாஸ்திரப் புஸ்தகமியற்றி சர்வசமயத்தாரின் ஆக்ஷேபங்களையும் பூரணமாக நிவிர்த்திசெய்து இஸ்லா மார்க்க சத்தியத்தை ருஜூப்படுத்திவிடுகிறதாயும் தீர்மானித்து முஸ்லிம்களிடத்தில் பண உதவி கேட்டனர். அன்றியும், தமது கிதாபுக்கு மறுப்பு எழுதிவிட்டால் பதினாயிரம் ரூபாய் இனாப் அளிப்பதாயும் வாக்குறுதி செய்தார். இவைகளைக் கவனித்த முஸ்லிம்களில் பெரும்பாலோர் ஏராளமான பண உதவி செய்தனர். மிர்ஸா சாஹிபும் தமது வாக்குறுதியை நிறைவேற்ற ஷை புத்தகமியற்றலாயினர். அதுமுடிந்ததும் பார்க்கும்போது அவர் நோட்டீஸில் சொன்னபிரகாரம் அத்தாக்ஷிகளுமில்லை. நிதி உதவி செய்தோர்களுக்குப் புத்தகமனுப்பவுமில்லை; கணக்குக்கேட்டவர்களுக்கு கணக்குக் கொடுக்கவுமில்லை. இந்த விதமாக சுமார் பதினாயிரம் ரூபாய் அப்பிக்கொண்டதுமன்றி வரவு செலவு கணக்குக்கேட்டவர்களை யேசி தூஷணிக்க ஆரம்பித்தார் அன்றியும், அந்தப் புத்தகத்தில் தமது இல்ஹாம்களையும், சமயத்திற்குத் தக்கவண்ணம் அர்த்தம் வைத்துக்கொள்ளத்தக்க வார்த்தைகளையும் எழுதியுள்ளார்.

இவைகளைக் கண்ணுற்ற முஸ்லிம்களில் வாசித்த வகுப்பார் பதறி இவரின் வார்த்தைகளையும், நடத்தைகளையும் நோட்டமிட்டுப் பிற்காலத்தில் இவர் தம்மை நபியென்று சாதிப்பாரென முன்னெச்சரிக்கை செய்யலாயினர். ஆயினும், பொதுவாக எல்லோரும் இவர் மும்முரமாக பிறமதஸ்தர்களோடு போராடிக்கொண்டிருக்கிறதையும் இவரின் அரிய முயற்சிகளையும் பார்த்து இச்சமயம் இவரின் தவறுகளை யெடுத்து விளக்கிப் பங்கப்படுத்துகிறது உசிதமல்லவென நினைத்து இவரின் முயற்சியி

லேயே கவனம் செலுத்திவந்தார்கள்.

மிர்ஸா சாஹிபு விளம்பரம் கொடுக்கிறதும், தர்க்கம் செய்கிறதும் எனது புத்தகத்தை தக்க ஆதாரத்துடன் மறுத்துவிட்டால் இனாம் கொடுக்கிறேனென்று வாக்களிப்பது முதலிய இவ்விஷயங்களெல்லாம் பற்பல பாகங்களில் பிரஸ்தாபமாய்விட்டபொழுது பொது ஜனங்கள் இவரைப் பெரிய மத போதகரென்றும் வழிகாட்டியென்றும் நம்பிவிட்டார்கள். மிர்ஸாசாஹிபும் இப்பேர்ப்பட்ட சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அப்பால், மெள்ள தம்மை முஜத்தித் (மார்க்க சீர்திருத்தம் செய்கிறவர்) என்று பிரஸ்தாபப்படுத்தினார்; இதன்பேரிலும் பொது ஜனங்களில் பெரும்பாலோர் யாதொரு ஆக்ஷேபமும் செய்யவில்லை.

மிர்ஸா சாஹிபு தம்மைப்பற்றி ஜனங்கள் எண்ணிக்கொண்டிருக்கிற நல்லெண்ணங்களை நன்கு உணர்ந்துகொண்டனர். அப்பால் தாம் நபிமார்களைப்போலென்றும் எல்லா நபிமார்களின் திருநாமத்தைக்கொண்டு அல்லா என்னை அழைத்தானென்றும், சொல்லத் தொடுத்தனர். முற்குறிப்பறிந்த சில உலமாக்கள் இவரின் கூற்றையுணர்ந்து பின்னால் இவர் நபியெனத் தாவாச் செய்வாரென்று எச்சரிக்கை செய்தும் பொது ஜனங்களெல்லாம் இவர் பேரில் நல்லெண்ணத்தோடு இவரின் வார்த்தைகளுக்கு நல்லர்த்தம்வைத்து இவர் செய்யும் வேலைகளிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து வந்தார்கள்.

தூரதிஷ்டயுடைய உலமாக்கள் நம்மீது சந்தேகப்படுகிறார்களென்ற விஷயம் தெரிந்தவுடன் மிர்சாசாஹிபு. நபியென்று தாவாச்செய்கிறவன் இஸ்லாமார்க்கத்தை விட்டும் புறம்பான முர்த்ததாய் விடுவானென்று பகிரங்கமாய் எழுதிவிட்டார் இவைகளை யறிந்த பொது ஜனங்கள் தூரதிஷ்டியுடைய உலமாக்களைக் கண்டனம் செய்ததுமன்றி மார்க்கத்திற்காக மறுமதஸ்தர்களிடத்தில் போராடி உழைக்கிற மனிதனை அவதூறு சொல்லிக்கெட்டபேர் உண்டாகிறது. இந்த உலமாக்களின் வழக்கமென்றும் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்¶. மிர்ஸாசாஹிபு வழி

¶ தற்காலத்திலும், மிர்ஸாயி மதத்தைச்சேர்ந்த பிரசங்கிகளின் சமர்த்தை விளங்கியறிந்த முஸ்லீம் உலமாக்கள் இவர்களின் கூற்றை

சருகிய தப்புமார்க்கத்தாரின் புத்தகங்களையும் அவர்கள் குர் ஆன், ஹதீதுக்கு போக்குச்சொல்லுகிற சமர்த்துகளையும் அவர்களின் பக்கம் கூட்டம் சேர்ந்து விடுகிறதையும் நன்கறிந்து கொண்டதுமன்றி காலங்களின் மாறுதல்களையும் செவ்வனே விளங்கிக்கொண்டார்.

சில பலமில்லாத ஆதாரத்தைக்கொண்டு நேச்சரியர்களின் தலைவராகிய ஜனாப் சர் சையிது அஹ்மதுகான் சாஹிபு என்பவர் ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாமவர்களை மரணமானதாக ருஜூப்படுத்திவிட்டதையும் அந்த ஸ்தானம் காலியாயிருப்பதையும் உத்தேசித்து நல்ல சமயம் வாய்த்ததெனக் கருதி நம்மை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வாதாட ஆரம்பித்தார். ஹஸ்ரத் ஈசாநபியவர்களைப்பற்றிய அநேக அடையாள அற்புதங்கள் குர்ஆன் ஹதீதுகளில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நம்மில் அந்த அடையாளங்களெல்லாம் இல்லாததால் ஜனங்கள் நம்மை நம்பார்கள் என்று ஆலோசித்து சில போக்குகள் சொல்லலானார். அதாவது இபுனுமரியம் திமஷ்க்கின் மினாராவில் வானலோகத்திலிருந்து இறங்குவாரென்பது வாஸ்தவந்தான். ஆயினும் அது வெளிரங்கமான அர்த்தமல்ல இபுனுமரியம் மரணமாய் விட்டதினால் வேறொரு இபுனுமரியம் அந்த ஸ்தானத்திற்கு வரவேண்டியது அவசியம் என்னை இபுனுமரியமென்று ஆண்டவன் அழைத்திருக்கிறான். ஆகலால் வாக்களிக்கப்பட்ட ஈசாவென்பதும் இபுனுமரியமென்பதும் நான் தான். திமஷ்கு என்பது எனது காதியான் கிராமமாகும். மினாரா வென்பதற்குச் சில போக்குகள் சொல்லி மினாரா கட்ட ஆரம்பித்தார்*. இன்னும், ஈசாநபியின் காலத்தில் தஜ்ஜால் வருவானென்பது பாதிரிகளாயிருக்கும் அவன் கழுதையென்பது. புகைவண்டி. அவர்கள் விவாகம் செய்வார்களென்பது.

விளக்கிக்காட்டும்போது பொது ஜனங்கள் இவ்வண்ணமே அபிப்பிராயப் படுகிறார்கள். ஆண்டவன், இவர்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவாராக.

* இவர், தமது கிராமத்தில் மினாரா உண்டுபண்ணி அதைக்கொண்டு போக்குச்சொல்லலாமென்றெண்ணிக் கட்ட ஆரம்பித்தார். ஆயினும், அது கட்டி முடிவாகிறதற்குள் தாம் செய்த அக்கிரமத்திற்கு கூலிபெறுவதற்காக ஆண்டவன் சமூகத்தில் அழைக்கப்பட்டுக்கொண்டார். பரிதாபம்!

முஹம்மதிபேகம் என்ற மங்கையை நான் மணந்து கொள்கிறதாயிருக்கும்¶. இன்னும், ஈசாநபியின் காலத்தில் மஹ்தி வருவார்களென்ற விஷயம் தவறு. உண்மையில் மஹ்தியும் ஈசாவும் ஒன்றே. இவர்கள் வெவ்வேறென்று விபரிக்கப்பட்ட ஹதீதுகள் உண்மையானதல்ல. ஏனெனில், ஹஸ்ரத் முஹம்மதுர்ரசூலுல்லா அவர்களின் வஹீயில் தவறுதல் உண்டாய் விட்டது. என்னைப்பற்றிச் சொல்லவேண்டியதிருக்க தவறுத லாக வெவ்வேறாகச் சொல்லிவிட்டார்கள் என்று சொன்னவுடன் தாம் நபி யென்றும், ரசூலென்றும் சொல்லலானார். இதன்பேரில் அநேக ஆக்ஷேபங்கள் கிளம்பலாயின. மிர்ஸா சாஹிபு சொன்னார், நமது நாயகத்துக்குப்பின் வேறு நபியில்லை யென்பது வாஸ்தவந்தான். நான் ஷரீஅத் இல்லாத லில்லி, பரோஸி, என்ற ஸ்தானத்தில் நபியாயிருக்கிறேனேயல்லாது ஷரீஅத்துடைய நபியாயிருக்கவில்லை * என்று சொன்னார்.

நபிமார்கள் ஜனங்களுக்கு அற்புதம் காட்டினதுபோல் நம்மிடத்திலும் ஜனங்கள் அற்புதம் கேட்பார்கள் என்று உணர்ந்து முன்னதாகவே ஒரு தடை செய்துகொண்டார். அதாவது, நபிமார்களின் அற்புதங்களெல்லாம் மெஸ்மரீஸமென்னும் மனோசக்தியால் செய்யப்பட்ட ஒருவிதத் தந்திர வேலைகளாகும் அது வீணான தந்திரவேலைகளாயிருப்பதினால் எனக்கு அதின்

---

¶ முஹம்மதி பேகம் என்ற மங்கையை வெகு காலமாக தந்திரோபாயங்கள் செய்து மணந்துகொள்ளலாமெனப் பிரயத்தனப்பட்டார். இன்னும், நான் கட்டாயம் மணந்துகொள்வேனென இல்ஹாம் மூலமாக முன்னறிக்கையும் செய்தார். அவரின் உம்மத்துகளும் அதை மெய்யென நம்பி அந்த அற்புத விவாகத்தின் வலீமா வென்னும் விருந்துண்ணலாமென மனமகிழ்ந்திருந்தனர். மிர்ஸா சாஹிபு அவரின் உம்மத்துகளை ஏக்கத்தில்விட்டுப் பங்கப்படுத்தினதுமன்றி, தாமும் அதே ஏக்கத்தில் உயிர் துறந்துவிட்டார். அய்யோ பரிதாபம்!

இந்த விவாகம் முடிந்திருந்தால் என்னென்ன அட்டூழியங்களெல்லாம் செய்திருப்பாரோ அல்லாவுக்கே வெளிச்சம்.

* லில்லி யென்பது நபியுடைய சாயலில் நபியாயிருக்கிறது. பரோஸி யென்பது நபிமார்களின் ஆத்மாக்கள் ஒரு சரீரத்தில் புகுந்துவிடுகிறது. மிர்ஸா சாஹிபுடைய சரீரத்தில் நபிமார்களின் ஆத்மாக்கள் எல்லாம் புகுந்திருந்ததாம்

பேரில் பிரியமில்லை. அன்றேல் நான் அதைவிட விசேஷமான அநேக விஷயங்களைக் காட்டியிருப்பேனென்று விளம்பலானார். இன்னும், தம்மைப்பற்றி அநேக முன்னறிக்கைகள் குர்ஆன் ஷரீபு ஹதீதுகளில் சொல்லப்பட்டிருப்பதாயும் உரைத்தார்.

ஆகவே, மிர்ஸா சாஹிபு தமது தாவாக்களுக்கு அஸ்திவாரமாக ஸர் ஸையத் அஹ்மத்கான் மஹ்தி ஜோன்பூரி முதலியோர்களின் நூல்களை ஆதாரமாய்க்கொண்டாலும், விசேஷமாக ஷியா வகுப்பைச் சேர்ந்த ஈரான் முஹம்மதலிபாபி என்போரின் நூல்களையே மிகவும் உறுதியாய நம்பியுள்ளார். ஏனெனில், அவர்தான் இவ்விதத் தந்திரத்துடன் தம்மை மஹ்தி என்றும், வழிகாட்டி என்றும் விஸ்தரித்ததுடன் நாயகம் அவர்களின் ஹதீதாகிய ¶ அனுமதினத்துல் இல்மி வஅலிய்யின் பாபுஹா என்ற ஹதீதின்படி நானே கல்வியின் பட்டணமாயும் நானே அதன் வாசலாயுமிருக்கிறேனென்றும் தாவாச்செய்தார்.

அன்றியும், இவர் ஒரு குர்ஆனென்ற வேதமியற்றி அதற்கு ஈக்கான் என்று நாமமிட்டார். மிர்ஸா சாஹிபும் இம்மகான்களின் அடியைப் பின்பற்றி குர்ஆனில் ஹஸ்ரத் ஈசாநபி அவர்களால் முன்னறிக்கையாய் சொல்லப்பட்ட அஹ்மது நான் தானென்று வாதாட ஆரம்பித்தார். பின்னர், அதிலிருந்து கொஞ்சம் உயர்ந்து தமக்கு வஹி உண்டாவதாயும் குலாம் அஹ்மது என்று ஆண்டவன் புறத்திலிருந்து நாமமிட்டழைக்கதாயும் வெளிப்படுத்தினர்.

குலாம் (அடிமை) என்ற வார்த்தை தமது நாமத்துடன் சேர்ந்திருக்கிறது இழிவென நினைத்து அஹ்மது என்றும் பெயர் வைத்துக்கொண்டார். சிலவேளை தமது நாமத்தைக் கொண்டே தம்மை முஜத்திது என்று ஸ்தாபிக்கிறதற்காக அப்ஜத்து கணக்கின்படி குலாம் அஹ்மது காதியானி என்றும் நாமமிட்டுக்கொள்வார் ☉

¶ நமது நாயகம் அவர்கள் ஹஸ்ரத் அலிரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விஷயத்தில் நான் இல்முடைய பட்டணமாயும் அலி, அதன் வாசலாயுமிருக்கிறார் என்று சொன்னார்கள். இந்த ஹதீதை இந்த ஈரான் மஹ்தியாகிய முஹம்மதலி யென்பவர் தன் மீது ஒட்டிவிட்டார்,

☉ அப்ஜத் கணக்கின்படி குலாம் அஹ்மத் காதியானி என்ற

இன்னும் நஷ்ரியர்கள், பலாசிபர்கள், நேச்சரியர்களிடத்தில் சென்றால் அவர்களுக்கநுகூலமாக ஆண்டவனை நம்பத்தகாதென்றும் சுவர்க்கம் நரகம் இல்லையென்றும் அற்புதம் முதலிய மற்றும் முக்கிய விஷயங்களெல்லாம் இல்லையென்றும் அவைகள் சுத்தத் தவறென்றும் கூறி அவர்களுக்கும் நல்லவராக நிற்கிறார். கிறிஸ்தவர்களிடத்தில் சென்றால், இயேசு சிலுவையில் அறையப்பட்டது வாஸ்தவம்; முஸ்லிம்களின் கொள்கை தவறு. இயேசு மரணமாய்விட்டார். ஆதலால், நானே உங்களுடைய இயேசுவாயிருக்கிறேனென்று செப்பி இயேசுவாகப் பார்க்கிறார் ஆரியர்களிடத்தில் சென்றால், உங்களுடைய பாதுஷா நானேயென்று வற்புறுத்துகிறார். ஹிந்துக்களிடத்தில் போனால், உங்களின் கிருஷ்ணசுவாமி நானே; என்னை நம்புங்கள் என்று வாதிக்கிறார். ஷியாவகுப்பாரிடத்தில் போனால் உங்களுடைய அலி நான்தான் நான் உயிரோடிருக்கும்போது செத்துப்போன அலியை ஏன் நாடுகிறீர்களென்று மயக்குகிறார். சுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம் பக்கம் திரும்பினால் நானே வாக்குச்சொல்லப்பட்ட மஸீஹ்; நானே மஹ்தி; என்னை நம்பாதோர் காபிராகி ஜாஹிலிய்யத்தின் மரணமாக மரணமாய் விடுவார்களென்று உறுக்குகிறதுடன் எந்த ஜாதியாரின் குருக்களின் நாமமாவது தெரிந்துவிட்டால் அது நான்தானென்று அத்தனை பெயர்களையும் தம்முடன் சேர்த்துக்கொள்வார். இவ்விதமெல்லாம் நடத்தினதுடன் தாம் நபி, ரசூல், மஹ்தி, மஸீஹ், கிருஷ்ணன் என்ற பட்டங்களை உறுதிப்படுத்த அநேக முன்னறிக்கைகளும் சொல்லலாயினர். இவ்வித முன்னறிக்கைகள் சொல்லிவிட்டு காலங்களின் மாறுதல்களையும், நடப்புகளையும் கவனித்துக் கொண்டேயிருப்பார். தமக்குச் சாதகமாக ஏதாவது நடந்துவிட்டால், எனது முன்னறிக்கையின்படி நடந்துவிட்டது. என்னை நம்பாதவர்கள், காபிர்கள்; ஆண்டவன் பகிரங்கமாக

---

வார்த்தைகளின் இலக்கம் 1300 ஆகிறது. மிர்ஸா சாஹிபு தமது நாமத்தைக்கொண்டும், தம்மை முஜத்திது என்று ருஜுப்படுத்துகிறதற்காக அப்ஜத் கணக்கைச் சரிபார்த்தார். அது ஒத்துவராததால் தமது நாமத்தில் மிர்ஸா என்ற வார்த்தையை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக தமதுகிராமத்தின் பெயரையும் கூட சேர்த்துக்கொண்டார். மிர்ஸா சாஹிபுடைய [illegible] மிகவும் மெச்சத்தக்கதேயாம்.

அடையாளங்கள் காண்பித்துவிட்டானென்று பத்திரிகைகள், நோட்டீஸ்களில் பிரசுரம் செய்வார்.

தமது முன்னறிக்கைகளுக்கு மாற்றமாய் நடந்தால் எனது முன்னறிவிப்பின் கருத்து இதல்ல. அதன் கருத்து இன்னமும் நன்றாய் ஆண்டவனிடத்திலிருந்து துலக்கப்படவில்லை யெனப் பதிலளிப்பார். சில சமயம் ஆண்டவனும், றஸூலும், பொய் சொல்லிவிட்டார்கள். அல்லது தவறுதல் செய்துவிட்டார்கள் என்று ஆண்டவன் மீதும், றஸூல்மீதும் குறை கூறித் தம்மைப் பொய்யில் நின்றும் தப்பித்துக்கொள்வார்.

எனவே, மிர்ஸா சாஹிபு மற்ற நபிமார்களைப்போல் ஒரே விடுத்தத்தில் நபியாகிவிடவில்லை. முதலாவது இளர்க்காயிருந்தார். பின்னர், மௌல்வியானார். சூபி (ஞானி) யானார்; பிரசங்கியானார்; முஜத்தித் ஆனார். அப்பால், மஹ்தியானார்; மஸீஹானார்; நபியானார்; றஸூலானார்; கிருஷ்ணனானார். எல்லா றஸூல்மார்கள், நபிமார்களின் திருநாமமானார். பின்னர், எல்லோருக்கும் பதவியிலுயர்ந்தவரானார். ஒரு சமயம், நாயனாகவுமிருந்து ஒரு புது உலகத்தை சிருஷ்டிக்கவும் நாடிவிட்டார். இன்னும், கொஞ்சகாலம் உயிரோடிருப்பாராளுல், உலகத்தைப் படைத்தானுகிற நாயன் என்னைத் தவிர வேறில்லை, சர்வ வணக்கங்களும் எனக்கே உரித்தானதென்றும் வாதிக்க இருந்தார். ஆயினும், காலமாகிறது அவரின் நோக்கங்களைப் பலிக்கவிடாமல் வழியனுப்பிவிட்டது. லாகூருக்குச் சென்றிருந்த விடத்தில் பிளேக் நோய் கண்டு சொற்ப நேரத்துக்குள் மரணமாய்விட்டார். அவரைத் தஜ்ஜாலின் கழுதையிலேற்றி காதியான் கிராமத்தில் கொண்டு வந்து தகனம் செய்தார்கள்.

மிர்ஸா சாஹிபின் உம்மத்துகளோ, அவர் என்ன சொன்னாலும் சரி; எற்றுக்கொண்டு ஒப்புக்கொண்டோம்; அங்கீகரித்தோம் என்று சொன்னார்களேயல்லாது வேறொன்றும் கேள்க்க அவர்களுக்குத் தோன்றவேயில்லை. மழை பொழிகிறதுபோல் வஹீயாகிறது பொழிந்துகொண்டிருக்கப்பட்ட பரிசுத்தமான நபியின் முன்னால் எதாவது ஒரு விஷயத்தைப்பற்றி ஆக்ஷேபிக்கிறது மரியாதைக் குறைவு என்று எண்ணினார்கள் போலும்.!

ஏ! காதியானி மதத்தார்களே! இப்படிப் புரட்டுகிற இந்த

மிர்ஸா சாஹிபைத்தான கமறுல் அன்பியா (நபிமார்களில் சந்திரனுக்கொப்பானவர்) வென்றும் றசூல் என்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும், மஹ்தி என்றும் விசுவாசிக்கிறீர்கள். பேஷ்! பேஷ்!.

ஓ! மிர்ஸாயி நேயர்களே! மிர்ஸா சாஹிபு மெள்ள மெள்ள உயர்ந்து கடைசி சிருஷ்டிகர்த்தாவே இல்லையென்று சாதிக்கக்கூடிய தஹ்ரியாவாய் விட்டாரா இல்லையா? இனியாவது கவனித்து சத்தியத்தில் சார்வீர்களாக.

### ஏ! அஹ்மதியா சங்கத்தார்களே!

மிர்ஸா சாஹிபு இவ்விதம் ஒவ்வொரு ஆயத்திற்கும் ஒவ்வொரு ஹதீதிற்கும் தம்மைப்போல் கருத்துகளமைத்து அதன் கருத்து இன்னது; இதன் கருத்து இன்னது என்று அர்த்தம் வைத்து மஹ்தியாகவும், மஸீஹாகவும் ஆகிறதாயிருந்தால் உலகில் வழி சருகிய ஒவ்வொருவரும் இப்படியே மஹ்தியாகிறதும், மஸீஹாகிறதும் மிகவும் இலகுவாயிருக்கும் அல்லவா? இதை விளக்கிக்காட்ட மிர்ஸா சாஹிபுடைய உம்மத்துகளில் ஒருவருக்கும் ஒரு கள்ள மஹ்திக்கும் நடந்த சம்பவத்தைப்போல் ஒருவிஷயம் எழுதி காட்டுகிறேன். கவனிப்பீர்களாக.

> காதியான் மதத்தைச் சேர்ந்த கமாலுத்தீன் சாஹிபுக்கும் தம்மை ஈஸா வென்றும், மஹ்தியென்றும் வழக்காடுகிற முஹம்மது ஈசா வென்ற மஹ்திக்கும் நடந்த சம்பாஷணை.

1. முஹம்மது ஈசா மஹ்தி சொல்கிறார்: ஓ! ஜனங்களே! என்னை வாக்களிக்கப்பட்ட ஈசா நபி யென்று அனுப்பினனே அவன் மீது சத்தியமாக என்னை நம்பாதார்கள் ஜெயம்பெற மாட்டார்கள். என்னைப்பற்றி எனது நாயகம் ஹஸ்ரத் முஹம்மது நபி அவர்களும் முன்னறிக்கை செய்திருக்கிறார்கள். எனது றஹ்மான் எனக்கு இல்ஹாமைக்கொண்டும், வஹீயைக்கொண்டும், மகிமைப்படுத்தி வைத்திருக்கிறன். ஆதலால், என்னை விசுவாசியுங்கள். எனது கட்டளைகளுக்கு அடங்கி நடவுங்கள். ஆண்டவன் உங்களுக்கு கிருபை செய்வானக.

மிர்ஸா சாஹிபின் உம்மத்தாகிய கமாலுத்தீன் சாஹிபு யோசித்தார் ஆ! இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது. நமது மிர்ஸா நபிக்கு மாற்றமாக இவரும் தம்மை நபி யென்றும் தம்மை ஒப்புக்கொள்ளாவிட்டால் மோக்ஷமில்லை யென்றும் சொல்கிறார். சரி, இருக்கட்டும். நாம் இவரிடத்தில் ஆதாரம் மூலமாய்ப் பரீட்சிக்க வேண்டுமே அல்லாது; வீணாக தூஷணிக்கிறதும், நிந்திக்கிறதும் தர்மமல்லவென தமக்குள் தீர்மானித்துக்கொண்டு பேச ஆரம்பித்தார்.

கமாலுத்தீன் சாஹிபு ஓ! ஈசா நபி சாஹிபே! தங்களைப் பற்றி நாயகம் முன்னறிக்கை செய்ததாகவும், றஹ்மானும்; இல்ஹாமும், வஹீயும் அனுப்புகிறதாகவும் வாதிக்கிறீர்களே; அதற்கு ஆதாரமிருந்தால் காட்டுங்கள்.

2. ஜனாப். கமாலுத்தீன் சாஹிபே! தாங்கள் மடையர்களைப்போல் தூஷணிக்காமல் ஆதாரம் கேட்டதைப்பற்றி நான் சந்தோஷிக்கிறேன். கேளுங்கள்.

அல்லா என்னைப் பார்த்து, வாக்களிக்கப்பட்ட ஈசாவே என்றழைத்தான். அப்போது, நான் எனது நாயகா எனக்கு முந்தியும் அநேகரை நபியென்றும், மஸீஹ் யென்றும், மஹ்தி என்றும் ஜனங்களிடத்திலனுப்பியிருக்கிறாயே, இப்போது என்னையும் அனுப்புகிறாயே; ஜனங்கள் என்னை எப்படி நம்புவார்களெனக் கேட்டேன். அதற்கு எனது நாயகன் நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். உன்னை நாம் காப்பாற்றுவோம். உனக்கு முன் எனது முஹம்மது நபிக்குப் பின் வெளியான மஹ்திகள் ஈசா நபிகள் முதலிய எல்லோருக்கும் உன்னைச் சர்தாராக அனுப்பியிருக்கிறோமென்று எனது இல்ஹாமில் நாயகன் அருள் புரிந்தான். அன்றியும், நாயகமவர்கள் எனக்குப் பின்னால் ஈசா நபி வந்து ஜனங்களை திருத்துவாரென்றும் அருளி இருக்கிறார்கள். இதுவும் தவிர எனது நாமமோ முஹம்மது ஈசா வென்று இருக்கிறது. அதன் கருத்தாவது, முஹம்மதி நபியால் வாக்களிக்கப்பட்ட ஈசா நபியென்பதேயாகும். ஆத

லால், கமாலுத்தீன் சாஹிபே! இவ்வளவு ஆதாரங்களும் கேட்டபின்னர் என்னை வாக்களிக்கப்பட்ட பரிசுத்தமான ஈசா நபியென்றும், மஹ்தி யென்றும் ஒப்புக்கொள்ளுகிறதில் தடையுண்டோ?

ஜனாப். ஈசாவே! தாங்கள் சொல்லப்பட்ட விஷயங்கள் நம்பிக்கைக்குப் போதாததால் இதோ மூன்று விதமாக ஆக்ஷேபிக்கப்படுகிறது.

(1) தங்கள் இல்ஹாமில் ஆண்டவன் என்னை அப்படி அழைத்திருக்கிறான்; இப்படிச் சொல்லியிருக்கிறான் என்று கூறுகிறீர்கள். ஆயினும் தங்கள் தாவாவுடன் குர்ஆன் ஹதீதும் சாக்ஷிக் கொடுக்காதவரை நம்புவதில் பயனில்லை. மேலும், எங்கள் மிர்ஸா நபி நான் எல்லா நபிமார்களுக்கும் சர்தார் என்று பகர்ந்திருக்க; தாங்கள் நான் எல்லோருக்கும் சர்தார் என்று பகர்கிறீர்கள். இதோ மாற்றமாகயிருக்கிறது. (2) நாயகமவர்கள் எங்கள் மிர்ஸா நபியை வாக்களிக்கப்பட்ட மஹ்தி யென்றும், மஸீஹென்றும் ஹதீது மூலமாக அருள் புரிந்திருக்க; தாங்கள் அப்படியல்ல நான்தான் வாக்களிக்கப் மஹ்தி, மஸீஹென்று அறைகிறீர்கள். இதுவோ, ஹதீதுக்கு நேர் மாற்றமாகயிருக்கிறது. (3) தங்களின் பெயரைக்கொண்டு நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹென்று ஸ்தாபிக்கப் பார்க்கிறீர்கள். ஒவ்வொருவரும் இப்படியே தாவாச் செய்யக்கூடும். ஆகவே, தங்களது தாவாவை மூன்று விதமாய் ஆக்ஷேபிக்கப் பட்டுவிட்டதால் தாங்கள் இனி நான்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற தாவாவை விட்டுவிடுவீர்களென நம்புகிறேன்.

3. வ! ஜனாப் பரிசுத்த இல்ஹாம் மூலமாய் வாதம் செய்யப்பட்ட ஒருவனின் வாதத்தை இவ்வளவு அவசரப் புத்தியாக ஆக்ஷேபித்து விடுகிறது, தங்களைப்போலொத்த மிர்ஸா நபியின் உம்மத்தாருக்குத் தகுந்ததல்ல. தாங்கள் மிர்ஸா நபியின் உம்மத்தாயிருக்கிறதுடன் அவரின் சமூகமும் அதிகமாய் பழகியிருந்தும் நபிமார்களைப் பகுத்தறிய முடியாமல் போனதைப் பற்றி நான் மிக்க வருந்துகிறேன். மிர்ஸா நபியின் போதனையில் இப்பேர்ப்பட்ட குறைகளும், தவறுகளும் ஏற்பட்டதனால், அவைகளை நிவர்த்தி செய்யவே எனக்கு மஸீஹ் என்ற நபிப்

பட்டம் கொடுத்து எல்லோருக்கும் சர்தாராக அனுப்பப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி தாங்கள் ஆச்சரியப்படுகிறது மிக்க விநோதமே.

தங்களால் ஆக்ஷேபிக்கப்பட்ட மூன்று கேள்விகளுக்கும் தக்க விடையை எனது நாயனின் அருள்வாக்கைக் கொண்டு சமர்ப்பிக்கிறேன் கேளுங்கள்.

(1) ஜவாபு: தங்களுடைய மிர்ஸா நபியின் அருள் வாக் வாக்கியத்தை மறந்துவிட்டீர்கள். அவர் தமது நூலில் மூமினுனவர்கள் இல்ஹாமி விஷயத்தைக் கேட்டதும் யாதொன்றும் ஆக்ஷேபிக்காமல் சும்மாயிருந்துவிடவேண்டும். ஒப்புக்கொள்ள வேண்டும் என்றுஎழுதுகிறுர். தாங்களோ எனது இல்ஹாமை ஒப்புக்கொள்ளாமல் ஆக்ஷேபிக்கிறீர்கள். இதனுல், தாங்கள் மிர்ஸா நபியின் மார்க்கத்தையறியாமல் அவரின் மார்க்கத்தை விட்டு நீங்கின முர்த்தத் ஆய்விட்டீர்கள். இன்னும், குர்ஆன் ஹதீதுகளுடைய சாக்ஷி வேண்டுமென்கிறீர்கள். இது தவறுன கொள்கை. ஏனெனில், ஹஸ்ரத் முஹம்மது நபியவர்களுக்குப் பின் வரப்பட்ட மஹ்திகள்,மஸீஹ்கள் முதலிய எல்லோருக்கும் அப்பேர்ப்பட்ட பகிரங்கமான ஆதாரம் தேவையில்லை. எங்களுடைய இல்ஹாம்தான் எங்களுக்காதாரமேயல்லாது வேறொன்றுமல்ல. தாங்கள் மிர்ஸா நபியின் உம்மத்தாகயில்லாமலிருந்து இப்பேற்பட்ட ஆக்ஷேபம் செய்தால் நான் ஒருவாறு பொருந்துவேன். ஆனுல், தாங்களோ மிர்ஸா நபியின் உம்மத்தாயிருந்தும் அவரின் போதனைகளைக் கற்றுக்கொள்ளாமல் இப்பேர்ப்பட்ட ஆக்ஷேபங்கள் செய்கிறது எனக்கு மிக்க வியப்பை உண்டு பண்ணுகிறது. கேளுங்கள் மிர்ஸா றசூலுல்லா; நான் எனது இல்ஹாமுக்கு மாற்றமான ஹதீதுகளை யெல்லாம் குப்பையிலெறிந்துவிடுவேன். எனது இல்ஹாமே உங்களுக்கு ஆதாரமானதென்று கிதாபுகளிற் கூறியுள்ளார். இங்ஙனமாக, தாங்கள் பரிசுத்தமான மகத்துவம் பெற்ற மஸீஹாகிய என்னிடத்தில் குர்ஆன் ஹதீதைக்கொண்டு ஆதாரம் கேட்கிறீர்கள்! இதுவோ முற்றிலும் பொருந்தாத விஷயம். இன்னும், மிர்ஸா றசூலுல்லா தம்மை எல்லா நபிமாருக்கும் மேலென்று சொன்னது சரிதான். ஆயினும், அதன் கருத்தை விளங்கினுரில்லை. அதன் கருத்தாகிறது, ஹஸ்ரத் முஹம்மதுர்றசூலுல்லா அவர்

களுக்குப் பின்வந்த நபிமார்களைக் குறிக்கும். இந்த விளக்கத்தில் அவர் தவறுதல் அடைந்து விட்டதினால் அதைத் திருத்தவே என்னை நபியாகவும், ரசூலாகவும் அனுப்பப்பட்டது. ஜனாப் கமாலுத்தீன் சாஹிபே! இப்போது தாங்களே சொல்லுங்கள். மிர்ஸா நபியின் தவறுதல்களை விளக்கிக் காட்டிய நான் மிர்ஸா நபிக்கு மேலா இல்லையா? இன்னும் எனது நாயன் என்னை நோக்கிச் சொல்லுகிறான். ஏ! பரிசுத்தமான முஹம்மது ஈசா ரசூலுல்லா! உனக்கு முன்னுண்டான எல்லா நபிமார்களும், ரசூல்மார்களும் மஹ்திகளும், மஸீஹ்களும் இன்னும் உனக்குப்பின் உலகம் முடிவாகிறவரையில் உண்டாகக்கூடிய எல்லா வழிகாட்டிகளும் அவர்களின் சென்னியில் உனது பாதத்தைத் தாங்காத வரை நான் அவர்களை நபியாக்கமாட்டேன்; பரிசுத்தமாக்கமாட்டேன் என்று எனக்கு வஹீ மூலமாகக் கூறியுள்ளான். இந்த எனது மகத்துவத்தை எனது ஆத்மா மூலமாக எல்லா மஹ்திகளுக்கும், மஸீஹ்களுக்கும் நபிகளுக்கும் அறிவித்துவிட்டேன். மிர்ஸா நபியோ, எல்லோரை விட அதிசீக்கிரமாகவே எனது திருப் பாதத்தை தமது சென்னிமீது தாங்கிக்கொண்டார். அதன்மீது அவர் பேரில் ஏற்பட்ட குற்றத்திற்காக அதாவது தாம் எல்லா நபிமார்களுக்கும் மேலென்று விளங்கிக்கொண்டதற்காக நரகலோகத்தில் சிக்ஷிக்கப்பட்டுக்கொண்டிருந்ததை நான் சிபார்சு செய்து சுவனலோகத்துக்கு அனுப்பி இப்போதுதான் ஒரு மாத மாகிறது. ஆதலால், கமாலுத்தீன் சாஹிபே! தங்களின் நபியாகிய மிர்ஸா ரசூலுல்லா கூட எனது பாதத்தைத் தமது சென்னிமீது இருத்திக்கொண்டிருக்கும்போது நான் எல்லா நபிமார்களுக்கும் மேலென்று சொன்னது பொருந்துமா அல்லவா? தாங்களே யோசித்துச் சொல்லுங்கள். (2) ஜவாபு: உங்களுடைய மிர்ஸா நபியை மட்டும் வாக்களிக்கப்பட்ட மஸீஹென்று சொல்லப்படவில்லை; என்னையும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, இபுனு மரியமென்பது இரண்டு பெயரைக் குறிக்கும். முந்தினவர் மிர்ஸா நபி பிந்தினவர் இந்த ஏழையாகிய நான் இதை விளங்காமல் ஜனங்கள் இப்னு மரிய மென்பது ஒருவரைத்தான் குறிக்குமென்று எண்ணிக்கொள்கிறார்கள். அது மிகவும் தவறான

கொள்கை. எவ்விதமாக எல்லா நபிமார்களுக்கு கடைசியாகிய ஹஸ்ரத் முஹம்மது நபி மேன்மையாயிருக்கிறார்களோ அவ்விதமே நானும் கடைசி மஸீஹாக இருப்பதினால் எல்லோருக்கும் மேன்மையாகவேயிருக்கிறேன். தவிரவும் மிர்ஸா நபி முன்னெச்சரிக்கையாய் நான் வருமேவனென்று அருளியிருக்கிறார். அதாவது என்னோடு மஸீஹ் என்றஸ்தானம் முடிவடைந்துவிடவில்லை. எனக்குப் பின் பதினாயிரம் மஸீஹ்கள் வரை வரக்கூடும் என்பதே இப்படி மிர்ஸா நபி சொல்லியிருக்கத் தாங்கள் என்னை நம்பாமல் ஆக்ஷேபிக்கிறீர்கள். மிர்ஸா நபியின் உம்மத்தாகிய தங்களுக்கு இது தகுமா? (3) ஜவாபு: எனது நாமத்தைக்கொண்டு நான் ருஜூப்படுத்தியதற்கு என்னை ஆக்ஷேபிக்கிறீர்களே; மிர்ஸா நபி சொன்னதைக் கவனித்தீர்களா கேளுங்கள். அவர் சொல்கிறார், எனது நாமம் குலாம் அஹ்மது காதியானி. அப்ஜத் கணக்கின்படி அதன் இலக்கம் 1300 ஆகிறது. ஆதலால் நான் இந்தப் பதிமூன்றாம் நூற்றாண்டில் முஜத்தித்தாயும், மஸீஹாயும், மஹ்தியாயுமிருக்கிறேன் என்று அருளியிருக்கிறார். மிர்ஸா சாஹிபின் வாக்கியத்திலிருந்து ஒரு நுட்பம் வெளியாகிறது அவரின் நாமத்தின் இலக்கப்படி 13-ம் நூற்றாண்டுக்கு மட்டும் அவர் மஸீஹாயிருந்தார். அப்பால் 14-ம் நூற்றாண்டுக்கு அவர் ஸ்தானத்திற்கு ஒருவர் வேண்டியது அவசியமென்பதே. இந்த வாக்கியத்தின்படி நான் ஈசாவும் மஹ்தியாயுமிருக்கிறேன்,

ஆகவே, குர்ஆன் ஹதீது மிர்ஸா நபியுடைய இல்ஹாம் எனது இல்ஹாம் முதலிய இவைகளடங்கலைக்கொண்டும் நான் வாக்களிக்கப்பட்ட ஈசா நபி யென்று ருஜூப்படுத்திவிட்டேன். இனிமேலாவது தங்களின் மிர்ஸா நபியின் வாக்கியப்படி எனது இல்ஹாமைக் கேட்டுப் பதிலுரைக்காமல் ஒப்புக்கொள்வீர்களா?

ஏ! மிர்ஸாயி மதஸ்தர்களே! மேலெழுதப்பட்ட மஸீஹின் தாவாக்களையும், அத்தாக்ஷிகளையும் கேட்டுக்கொண்டீர்களல்லவா? இப்போது இவர் விஷயத்தில் நீங்கள் என்ன சொல்கிறீர்கள். இவரை மஸீஹ் என்று ஒப்புக்கொண்டால் மிர்ஸா சாஹிபையும் ஒப்புக்கொள்ளுங்கள், அன்றேல், மிர்ஸா சாஹிபையும் ஒப்புக்கொள்ளக் கூடாது. ஏனெனில், இருவரின் விவகாரமும் ஒன்றாகவே இருக்கிறது.

## மிர்ஸா சாஹிபின் உம்மத்துகளின் பிரிவினைகள்.

### 1-வது கூட்டம்.

மிர்ஸா சாஹிபு காலம் சென்றுவிட்டபின்னர் அவரது கிலாபத்து ஸ்தானத்தை ஹஸ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப்போல் ஹக்கீம் நூருத்தீன் சாஹிபு தாங்கி விளங்கினார். மிர்ஸா சாஹிபின் உம்மத்துகளில் பிரிவினையுண்டாகிவிடாமல் கூடியமட்டும் எச்சரிக்கையாய் அவரின் அடிமேலடி வைத்து நடத்தி வந்தனர். சுமார் ஆறு வருஷம் சென்ற பின்னர் அவரும் மரணமாகிவிட்டனர். அவரின் கிலாபத்து ஸ்தானத்தை மிர்ஸா சாஹிபின் செல்வச்சேய் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது என்பவர் ஹஸ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப்போல தாங்கிநின்றார். இவர் தமது காதியான் மதத்தை விர்த்தி செய்து கூட்டங்களைத் திரட்டுகிறதற்காகப் பெரு முயற்சி எடுக்கலாயினர். ஆயினும், இவரது நோக்கத்திற்கு மாறாக மிர்ஸாயி மதஸ்தர்களில் வேற்றுமையும் பிரிவினையும் எற்பட்டுவிட்டது. இந்த மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது என்பவரின் கொள்கையாவது:--

மிர்ஸா சாஹிபு நபியாகவும், ரசூலாகவும், மஹ்தியாகவும் மஸீஹாகவுமிருக்கிறார். இவரை ஒப்பாத எவரும் முர்த்ததுகள் போன்ற இன்னும் அநேக கொள்கைகளுமாம். இவர்கள்தான் மிர்ஸாசாஹிபின் மார்க்கப்படி அடிமேலடி வைத்து நடக்கிறவர்கள். இவர்களின் கூட்டமும் சிற்சில பாகங்களில் பரவி வருகின்றன. இவரும் கொஞ்சக் காலத்தில் தம்மையே நபி என்று வாதிக்கத் தயாராயிருக்கிறார். இதற்கு அநுகூலமான இல்ஹாமி விஷயங்களை முன்னதாகவே இவரின் தந்தை மிர்ஸா சாஹிபு எழுதிவைத்துவிட்டுப் போயிருக்கிறார் கொழும்பு அஹ்மதியாச் சங்கமும் இதைச் சேர்ந்த ஒரு கிளையேயாம். இவர்கள் துருக்கி கிலாபத்துக்கு மாறாகத் தாங்களே கலீபா வென்றும் துருக்கி கிலாபத்தை ஒப்புக்கொள்ளவில்லையென்றும் சொல்லி வருகிறதுடன் கிலாபத்தின் விரோதிகளோடு பூரண அநுதாபமும் காட்டிவருகிறார்கள்.

### 2-வது கூட்டம்.

மிர்ஸா மஹ்மூது சாஹிபின் கோட்பாடுகளையும், நோக்கங்

களையும் கவனித்த மௌல்வி முகம்மதலி எம். ஏ. என்பவர் அவரின் கூட்டத்தைவிட்டு நீங்கி லாகூருக்கு வந்து தனிக்கூட்டம் ஒன்று ஏற்படுத்திவிட்டனர். அன்றியும் மிர்ஸா சாஹிபு மகனுக்கு மாறாக முரீது கொடுத்து கிலாபத்தின் தொடரை நடத்தவும் ஆரம்பித்தனர். மௌல்வி முஹம்மது அஹ்ஸன் அம்ரூஹி காஜா கமாலுத்தீன் சாஹிபு முதலியோர்களும் மிர்ஸா மஹ்மூது சாஹிபின் பைஅத்தை (தீக்ஷையை) முறித்துவிட்டு லாகூர் முஹம்மத் அலி சாஹிபின் கூட்டத்தில் சேர்ந்துகொண்டார்கள். இவர்களின் கொள்கையாவது:—

மிர்ஸா சாஹிபு நபியுமல்ல, ரசூலுமல்ல ஆயினும் வாக்களிக்கப்பட்ட மஸீஹும், மஹ்தியும் என்பதிற் சந்தேகமில்லை. மிர்ஸா சாஹிபை நபி யென்றும் ரசூலென்றும் சொல்கிறவர்கள் இஸ்லாமை விட்டுப் புறம்பான முர்த்தத்துகளாயிருக்குமென்பதே.

இதன் பேரில் காதியானி மஹ்மூது சாஹிபுக்கும் லாகூர் முஹம்மதலி சாஹிபுக்கும் பலத்த தர்க்கங்கள் நடக்கலாயின. லாகூர் வகுப்பார் ஆங்கிலத்தில் தேர்ச்சியடைந்திருப்பதால் தங்கள் படிப்பின் சாமர்த்தியத்தினால் காதியானி வகுப்பார்களை அடக்கப் பார்க்கிறார்கள் இந்த இரு வகுப்பார்களின் கொள்கைகளை விளக்கிக் காட்டுகிறதற்காக லாகூர் வகுப்பார்கள் காதியானி வகுப்பார்களைப்பற்றி எழுதும் ஒரு விஷயத்தை இங்கு குறிப்பிடுகிறேன். அதாவது லாகூர் முஹம்மதலி சாஹிபு வகுப்பார் காதியானி மஹ்மூது சாஹிபு வகுப்பாரைப்பற்றி எழுதுகிறார்கள்.

## இறுதி நபி.

அரபியர்களின் வழக்கமாவது அவர்கள் எல்லா முஷ்ரிகின் (இணைவைக்கிறவர்)களுடைய சொற் செயல்களை இப்ராஹீம் நபியுடைய மார்க்கமென்று எண்ணிக்கொண்டிருந்ததுமன்றி ஹஸ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிரார்த்தனையின்படி அரபியாவில் ஒரு மஹத்துவம் பெற்ற ரசூல் வருகிறதாயும் நம்பிக்கொண்டிருந்தார்கள். ஆயினும், அல்லாஹுத்தஆலா ஹஸ்ரத் முஹம்மதுர்ரசூலுல்லா அவர்களுக்குக் கடைசி நபியென்ற பட்டத்தைக்கொடுத்து மக்கத்துக்

காபிர்களின் மேலெண்ணத்தை அறத் தவிர்த்துவிட்டான். இதன் கருத்தாவது, எவ்விதமாக மஹ்மூதியர்கள் (காதியானிகள்) ஹஸரத் முஹம்மதுர்ரசூலுல்லா எழும்பினதின் பின்னரும் நபிப்பட்டத்தின் வாயிலைத்திறந்து வைக்கிறார்களோ; அவ்விதமாகவே அரபியர்க் காபிர்களும் நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் எழும்பினதின் பின்னரும் நபிப்பட்டத்தின் வாயில் திறந்திருப்பதாக விசுவாசித்துக்கொண்டிருந்தார்கள். இன்னும், எவ்வண்ணம் தற்காலத்தில் மஹ்மூதியர்கள் ஆயிரக் கணக்கான நபிமார்கள் வருகிறதை விசுவாசிக்கிறார்களோ; அவ்வண்ணமே மக்கத்துக் காபிர்களும் நபிமார்கள் வருகிறதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இக்காரணத்தினாலேயே முஸைலமா கஸ்ஸாப் அஸ்வது இன்சி முதலிய நபிப்பட்டத்தைத் தாவாச் செய்தவர்களின் பேரிலும் லக்ஷக்கணக்கான அரபியர்கள் விசுவாசித்துக்கொண்டிருந்தார்கள். அன்றியும், மஹ்மூதியர்களின் மொழிபெயர்ப்பும் பெரும்பிழையாயிருக்கிறது. ஆகவே, நபிப்பட்டத்தை ருஜூப்படுத்துகிற நோக்கத்துடன் மிர்ஸா சாஹிபு மாதிரிக்காக எடுத்துக்காட்டுகிறது அறிவீனமில்லாவிட்டால் சேஷ்டையென்பது திண்ணம்.

நீங்காத ஆண்டவன் மீது ஆணையாக தங்களுக்கு (காதியானிகளுக்கு) ஆண்டவன் உண்டென்பதின்பேரிலும் அவனின் வேதமாகிய குர்ஆன்ஷரீபின்பேரிலும் விசுவாசமிருப்பதாக எனக்கு ஒருபோதும் நம்பிக்கையில்லை. எனினும், தாங்கள் குர்ஆன் ஷரீபைக்கொண்டே பதிலை நாடியிருப்பதினால் அதைக்கொண்டே பதிலளிக்கப்பட்டது. தங்களுக்கு நபிகரீம் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள்மீது விசுவாசம் இருக்கும் விஷயத்தில் நபிப்பட்டம் கடைசி யென்ற விசுவாசம் பிறவூனைத் தொடர்ந்தவர்களின் விசுவாசமென்று எழுதமாட்டீர்கள். நபிப்பட்டம் முடிவடைந்துவிட்டதென்ற விசுவாசத்தை முஸ்லிம்கள் யாரிடத்திலிருந்து படித்தார்கள்? எனக்குப்பின் வேறு நபியில்லை யென்று வெளிப்படுத்தினது யார் என்பதை உலகமெல்லாம் அறிகிறது.

ஆதலால், தாங்கள் (நபிநாயகமவர்களின் உத்தரவுக்கு மாறாக) நபிப்பட்டம் முடிந்துவிட்டதென்பது பிறவூனியர்களின் விசு

வாசமெனச் சொன்னால் தாங்கள் நபிநாயகமயர்களின் சொந்த உள்ளமையின்பேரில் எதிர்க்கிறதைத் தவிர வேறென்ன? ஒரு புறம் முஹம்மது நபியவர்களின் மார்க்கத்தை வேரறக்களைந்து கொண்டிருக்கிறீர்கள். மறுபுறம் நபியவர்களைப் பின்பற்றுகிறதைப்பற்றி அவதூறாய் உளறுகிற இந்த விஷயங்கள் சட்டையில் வைத்திருக்கப்பட்ட சர்ப்பத்தைப்போலன்றி மற்றப்படியல்ல. தாங்கள் ரசூலுல்லாவுடைய ஹதீதின் தீர்ப்புக்கிணங்காவிட்டாலும் ஹஸ்ரத் முஹம்மது ரசூலுல்லா அவர்கள் பாஷையுடையவர்களென்பதை மறுக்கமாட்டீர்களல்லவா? ஆதலால், நாயகம் அவர்களின் திருவாயிலிருந்து வெளியான (அல்லாவின்) திருவசனத்தை நகல் செய்கிறேன். இதை வாசிக்கிறவர்கள் கவனிப்பீர்களாக.! அல்லாஹுத்தஆலா சொல்கிறான்:-

> உனது ஆண்டவன் மீது சத்தியமாக தங்களுக்குள் எந்தக் கலகம் ஏற்பட்டாலும் உன்னையே நியாயாதிபதியாக்காதவரை அவர்களுக்கு ஈமான் இருக்கமாட்டாது யென்றும்; இன்னும் ஆண்டவனையும் தொடருங்கள். அவனின் ரசூலையும் தொடருங்கள் என்றும் ஆண்டவன் அருள்புரிந்திருக்கிறான்.

ஆயினும், எங்களுக்கு யாதொரு மனிதன் வார்த்தையின் தீர்ப்புத் தேவையில்லை யென்று மஹ்மூதியர்கள் (காதியானிகள்) சொல்கிறார்கள். இவ்வித பஹிரங்க மூர்த்ததாயிருக்கிறதுடன் இன்னாமென்ற விவகாரமுமிருக்கிறது; கவனிக்கவும். (பைகாம் சுல்ஹு ஜூன் 16, 1920. அஹ்ல ஹதீஸ் ஜூலை 16, 1920.)

சிநேகிதர்களே! இதன்மூலமாக மிர்ஸா சாஹிபின் உம்மத்துகளில் 1-வது கூட்டமாகிய காதியானி மஹ்மூதியர்களின் கொள்கை, நன்கு விளங்கியிருக்கும். அதாவது, ஹஸ்ரத் முஹம்மதுர்ரசூலுல்லா அவர்கள் கடைசி நபியல்ல. அவர்களைக் கடைசி நபியென்று ஒப்புக்கொள்ளல் பிறவூனியர்களுடைய கொள்கையாம்¶.

---

¶ கொழும்பு அஹ்மதியா சங்கத்தார்களும் இவர்களைத் தொடர்ந்தவர்களே. இவர்கள் தங்களை முஸ்லிமென்று சொல்லி ஜனங்களிடத்தில்

சகோதரர்களே! இந்தக் கடைசி நபி யென்ற தர்க்கத்தில் லாகூர் கூட்டம் உண்மையிலிருந்தாலும் இவர்களின் மஹ்தியான மிர்ஸா சாஹிபு இதை மறுத்திருக்கிறார்.

உண்மையில் இந்த லாகூர் வகுப்பார்கள் மிர்ஸா சாஹிபை முர்த்தத்தென்று தீர்ப்புச் செய்து அவரின் மார்க்கத்தைவிட்டு நீங்காமல் அவரின் அடிமேலடி வைத்து நடக்கப்பட்ட அவரின் மகனாகிய மஹ்மூது சாஹிபையும் அவரின் கூட்டத்தையும் பொது ஜனங்கள் மெச்சிக்கொள்ளும்படி குறைகூறுவதில் என்ன பயன்.? ஆனால், மிர்ஸா சாஹிபு தம்மை நபி யென்றும் ரசூலென்றும் நபிமார்களிற் சிறந்தவரென்றும் சொல்லவேயில்லை யென்று விசுவாசிக்கிறதாயிருந்தால் இன்ஷா அல்லா அதை எடுத்துக்காட்ட நாம் ஆயத்தமாயிருக்கிறோம். ஆதலால் மிர்ஸா சாஹிபு தான் முதன் முதல் முர்த்தது என்ற பட்டத்திற்கு உரித்தானவரே யல்லாது மற்றவர்களல்ல வென்பது நமது வாதம்.

எனவே, இவ்விரு கூட்டத்தாரின் கொள்கைகளையும் இவர்களுக்குள் ஒருவர் மற்றொருவரைச் சொல்லும் வார்த்தைகளையும் நன்கு கவனித்துக்கொண்டீர்களல்லவா? இவர்களின் கூட்டமும் சில பாகங்களில் பரவி வருகிறது. நாச்சியார்கோவில் முஸ்லிம் சங்கமும் இந்த லாகூர் கூட்டத்தாரின் ஒரு கிளையேயாம். இவர்களும் நாங்கள்தான், இஸ்லாத்தின் ஈடேற்றத்திற்கு உழைக்கிறோமென்றும் சொல்லிக்கொள்கிறார்கள் இந்த மிர்ஸாயி மதஸ்தர்களின் கொள்கைப்படி நாச்சியார்கோவில் முஸ்லிம் சங்கத்தார், கொழும்பு அஹ்மதியா சங்கத்தாரைக் காபிரென்றும் அவர்கள், இவர்களைக் காபிரென்றும் சொல்லும்படியாய் ஏற்பட்டு விட்டது. உண்மையில் இவ்விருவர்களும் முஸ்லிம்களிடத்தில் முர்த்ததுகளாம்¶.

ஆகவே, இவ்விருவகுப்பாரும் ஒருவரை யொருவர் காபிர்

---

தங்களின் கொள்கையைப் பரவச் செய்வதுடன் தாங்களே இஸ்லாம் மார்க்கத்திற்கு உழைக்கிறவர்களென்றும் சொல்லிக்கொள்கிறார்கள்.

¶ இவர்கள் இப்போது சென்னையில் இஷாஅத்தே இஸ்லாம் என்ற சங்கத்தின் கீழ் 'தாருல் இஸ்லாம்' என்னும் மாத சஞ்சிகை நடத்தி வருகிறார்கள்.

என்று தர்க்கித்துக்கொண்டு எந்த இஸ்லாத்தைப் பாப்ப முயற்சி செய்கிறார்களோ, இது விபரம் கடவுளுக்கே வெளிச்சம்.

## 3-வது கூட்டம்.

இந்த ஜனங்களின் நடத்தைகளையும், இஸ்லாமின் உண்மைகளையும், பிரிவினைகளையும் பார்த்தவுடன் கோஜிரன் வாலா தேசத்தில் ஸஹீருத்தீன் சாஹிபு அரூப்பி என்பவருக்கும் இல்ஹாம் கிளம்பிவிட்டது. ஒவ்வொருவரும் தனித்தனியாகக் கூட்டங்களைச் சேர்த்துத் தாங்களே கலீபாவாக ஆகும் போது இவர்மட்டும் சும்மா பார்த்துக்கொண்டிருக்கிறது தர்மமாகுமா? இவரும், தனி ஜமாஅத்தை ஏற்படுத்திக்கொண்டு முரீதின் தொடரை நடத்த ஆரம்பித்துவிட்டனர்.

இவரின் கொள்கையாவது:=

எனது மஸீஹாகிய மிர்ஸா சாஹிபு எனக்குப்பின் யூசுபு வருவாரென்று சொல்லியிருந்தார். அந்த முன்னறிவிப்பின்படி நானே ஆண்டவன்; வெளியாகும் ஸ்தானமாயிருக்கிறேன். மிர்ஸா சாஹிபின் ஸ்தானத்திற்கு நானே தகுந்தவன். மிர்ஸா சாஹிபின் மகன் மிர்ஸா மஹ்மூது எனது பதவியை அநீதமாகப் பிடுங்கிக்கொண்டவராயும் அக்கிரமக்காரராயுமிருக்கிறார். ஒரு ரசூல் உதயமான காதியான் கிராமத்திற்கு நேர் நோக்கி வணக்கம்புரிகிறது மேன்மையாயிருக்கிறதென்றும், இன்னும் பலவிதமாகவும் கூறியுள்ளார். இவர் சார்பிலும் கூட்டம் சேர்ந்து வருகிறது.

முஸ்லிம்களே! நம் காலத்தில் ஈசா நபிகளும், மஹ்திகளும், நபிகளும் மிகவும் மலிவாகக் காணப்படுகிறதினால் நமது காலம் மிக்க விசேஷமானதெனவே கூறல்வேண்டும்.

## 4-வது கூட்டம்.

தக்கன் தேசத்தைச் சேர்ந்த தைமாப்பூர் என்ற ஊரில் மௌல்வி அப்துல்லா சாஹிபு என்றொருவர் தோன்றி நான் மஹ்தியாயிருக்கிறேன். மிர்ஸா சாஹிபு மஸீஹாயிருந்தார் என்று வாதாடினதோடு தப்ஸீர் ஆஸ்மானியென்று ஒரு கிரந்தம் இயற்றி அதில் ஹஸ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களை

அவமரியாதையாகக் குறைகூறுகிறார். இவர் இவ்விதமாக இல்ஹாமையுடைய மஹ்தியாய்விட்டதும்; மிர்ஸா சாஹிபின் புத்திரபாக்கியம் மிர்ஸா மஹ்மூது சாஹிபுக்குச் சகிக்கமுடியாமல் உடனே தமது சீஷர்களுக்கு "ஓர் விண்ணப்பம் கொடுக்கலாயினார். அதாவது:-

தக்கன் தேசத்தைச் சார்ந்த தைமாப்பூர் என்ற ஊரில் தற்சமயம் மௌல்வி அப்துல்லா சாஹிபென்றொருவர் ஒரு ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார். அவர் ஹஸ்ரத் சாஹிபை (மிர்ஸாவை) அஸல் மஸீஹென்றும், தம்மை அஸல் மஹ்தியென்றும் வாதாடுகிறார். அவர் தமது கடிதத்தில் எழுதுகிறதாவது, ஹதீதுகளில் மஸீஹ் இறங்குவார். வாக்களிக்கப்பட்ட மஹ்தி அவர்களை விசுவாசித்தவர்களில் நின்றும் இமாமாயிருப்பார் என்று இரண்டு மனிதர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அந்த இமாம் (மஹ்தி) இந்த ஏழையாகவேயிருக்கிறேனென்று சொல்லுகிறார். இவ்விதமாக அவர் ஹஸ்ரத் (மிர்ஸா) சாஹிபுடைய சகல விவகாரங்களையும் அழிக்க நாடுகிறார். ஹஸ்ரத் (மிர்ஸா) சாஹிபு எப்போதும் தங்கள் நூல்களில் நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ், வாக்களிக்கப்பட்ட மஹ்தியாகிய இரண்டையும் பொதிந்தவனாகவிருக்கிறேன் என்று ஊன்றி எழுதி வந்திருக்கிறார்கள்¶. அன்றியும், நாயகமவர்கள் (மிர்ஸா) இவ்விஷயத்தை ருஜூப்படுத்துகிறதற்காக, பற்பல ஹதீதுகளைக்கொண்டும், அவுலியாக்களின் கஷ்பு (ஞானச்சொற்கள்) களைக்கொண்டும் அத்தாக்ஷி எடுத்திருக்கிறார்கள். இன்னும், மஸீஹும் மஹ்தியுமாகிய இவ்விரண்டும் ஒரே மனிதனின் இரண்டு உத்தியோகங்களாயிருக்கின்றனவென்று மிகவும் உறுதியாக எழுதிக்கொண்டிருந்திருக்கிறார்கள். ஆயினும், மௌல்வி அப்துல்லா சாஹிபு தாம் வாக்களிக்கப்பட்ட மஹ்தியென்றும் ஹஸ்ரத் (மிர்ஸா) சாஹிபு வாக்களிக்கப்பட்ட மஸீஹாயிருந்தார்களென்றும் வாதிக்கிறார். இம்மட்டிலும் அவர் நிறுத்திவிடவில்லை. ஹஸ்ரத் (மிர்ஸா)

¶ ஹதீதுகளில் இருவரும் வெவ்வேறென்று மிகவும் பகிரங்கமாகச் சொல்லப்பட்டிருப்பதினால், இவர் அந்த ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்கிறார். ஆயினும், மிர்ஸா மஹ்மூது சாஹிபு விடுகிறாரில்லை.

சாஹிபைப் பார்க்கிலும் தாம் உயர்ந்தவராகத் தர்க்கம் செய்கிறார். அதாவது, ஹஸ்ரத் (மிர்ஸா) சாஹிபு அஹ்மது வெளியாகும் ஸ்தானமாயிருந்தார். அழகிய நிறத்தில் மட்டும் அவரின் வெளியாகுதல் உண்டாயிருந்தது. இந்த ஏழையோ (அப்துல்லா) அஹ்மது முஹம்மது வெளியாகும் ஸ்தானமாயும் மகத்துவமும், அழகும் பொருந்தியவனுயுமிருக்கிறேனென்றும் எழுதுகிறதுமட்டுமல்ல. இன்னும் தம்மை உயர்த்துவதாவது¶ ஹஸ்ரத் (மிர்ஸா) சாஹிபுடைய பலஹீனமான போதனையால் ஜனங்களிடத்திலிருக்கப்பட்ட குறைவை நிவர்த்தி செய்கிறதற்காகவே நான் ஏவப்பட்டவனுக யிருக்கிறேனென்றும் எழுதுகிறார்*.

மௌல்வி சாஹிபுக்கு ஹஸ்ரத் (மிர்ஸா)சாஹிபின் காலத்திலிருந்தே தாம் இல்ஹாமுடை (உதிப்பு) யவனென்ற விவாதம் உண்டாயிருக்கிறது ¶¶.

---

¶ இல்ஹாம்களெல்லாம் சொந்த இல்ஹாமா யிருக்கும்போது என்னதான் சொல்லக்கூடாது. இதற்குப் பூர்வ வழிகாட்டி ஜனப். மிர்ஸா சாஹிபேயாம்.

* மிர்ஸா சாஹிபு ரசூலுல்லாவுடைய போதனையில் குறைவுகள் ஏற்பட்டதை நான் திருத்த வந்தேனென்று சொன்னதுபோல் இந்த அப்துல்லா சாஹிபும் மிர்ஸா சாஹிபுடைய குறைவை நிவர்த்தி செய்ய வந்திருக்கிறார். பேஷ்! பேஷ்!! மஹ்மூது சாஹிபு இதைப்பற்றிச் சஞ்சலப்படுவானேன்.

¶¶ மிர்ஸாயி மதஸ்தர்கள் இந்த அப்துல்லா சாஹிபை ஆக்ஷேபிக்காமல் ஒப்புக்கொள்ளவேண்டியதாக ஏற்பட்டுவிட்டது. ஏனெனில், மிர்ஸா சாஹிபு எழுதுகிறதாவது, உண்மை என்னவென்றால் முஹம்மதியா உம்மத்தில் இல்ஹாம் உண்டாகிய பல கோடிக்கணக்கான அடிமைகள் இருக்கலாம் (ஸறூறத்துல் இமாம் 4. ப.)

நான் மெய்யாகவே மெய்யாகவே சொல்லுகிறேன். எனது கூட்டத்தில் இவ்விதமான இல்ஹாமுடையவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்களென்றால் அவர்களில் சிலருடைய இல்ஹாம்களை எழுதும்பக்ஷம் ஒரு புத்தகமாய் விடுகிறது. (ஸறூறத்துல் இமாம் 30 ப.)

ஒரு மார்க்க விசுவாசியான அறிவாளியின் கடமையாவது, இல்ஹாம் இன்னும் கஷ்பினுடைய பெயரைக் கேட்டதும் சும்மாயிருந்துவிடவேண்டும். (தலை சாய்த்துவிடவேண்டும்) வீணான ஆக்ஷேபங்களை விட்டும் நீங்கிவிடவேண்டும். (இஸாலா 148 ப.)

அக்காலத்திலும் இவர் தமது இல்ஹாமை ஹஸ்ரத் (மிர்ஸா) சாஹிபுக்கு எழுதிக்கொண்டிருந்தார். ஒரு விடுத்தம் காதியானுக்கும் வந்தார். ஹஸ்ரத் (மிர்ஸா) சாஹிபு (இவரின் இல்ஹாம்களைப் பார்த்து) இவருக்குப் பைத்தியம் உண்டாய் விடுகிறதைப் பயப்படுகிறேன் என்றும் சொன்னார்கள். இந்த நேரம் துவக்கமாயிருந்தது. அவர் இரண்டாம் விடுத்தமும் பைஅத்துந் (தீக்ஷை) பெற்றுக்கொண்டார் இவ்விஷயம் ஹஸ்ரத் (மிர்ஸா) சாஹிபுடைய டைரி புக்கில் எழுதப்பட்டிருக்கிறதுமன்றி அவர்களின் ஒரு கனவினாலும் இப்படியே ருஜு வாகிறது.

ஹஸ்ரத் சாஹிபுடைய மரணத்திற்குப் பின்னர் அவருக்குக் கிளர்ச்சியுண்டாய்விட்டது.

காதியானுக்கு இரு விடுத்தம் வந்தார்; தற்சமயம் வளர்ந்தேறி அவரின் நிலைமை இவ்வாறாய்விட்டது. அவர் ஊக்கமுடையவராகயிருப்பதால் பற்பல கூட்டங்களில் சென்று சாதாரண ஜனங்களை ஏமாற்றிவிடவுங்கூடும். இதற்காகப் பகிரங்கமான விளம்பரம் செய்யப்படுகிறதாவது; ஒவ்வொரு பாகத்திலுமுள்ள அஹ்மதியர்கள் அவர்களின் விஷயங்களை அறிந்திருக்கவேண்டும்; அவர்களை அவர்களின் நோக்கப்படி விட்டுவிட்டு அவர்களிடம் சம்பந்தமில்லாமலிருக்கவேண்டும். இவர் பொய்யுரைகள் செய்கிறவரல்ல. ஆயினும், மூளையின் நிலைமையினால் வியாதியஸ்தராயும் புலமற்றவராயுமிருக்கிறார்¶. தற்சமயத்தில் அவரின் கிளர்ச்சி மிகவும் மேலோங்கி இருக்கிறது.

---

எனக்குப் பின் பதினாயிரம் மஸீஹ்கள் வரை வரக்கூடுமென்று நான் நம்பி அடிக்கடி கூறுகிறேன். (இஸாலா 122 ப).

இவ்விதமாக மிர்ஸா சாஹிபு கூறியிருக்க, மிர்ஸா மஹ்மூது சாஹிபு சந்தோஷம் கொண்டாடாமல் சஞ்சலப்படுவானேன். இல்ஹாமுடையவர்களை ஒப்புக்கொள்ளாவிட்டால் மிர்ஸாயி மதத்தை விட்டு நீங்கின முர்த்ததுகளாய்ப் போகிறதில் என்ன தடையிருக்கிறது.

¶ மிர்ஸா சாஹிபுடைய இல்ஹாமின் துவக்கத்திலும் மௌலானா ரஷீது அஹ்மது சாஹிபு சங்கூகி மர்ஹூமும் அவர்களைப்போலுள்ள சில உலமாக்கள் மிர்சாசாஹிபுடைய மூளையின் பேதகமென்று நம்பியிருந்தனர். அப்பால் அந்த எண்ணத்தை மாற்றிவிட்டனர்.

எதுவரை என்றால், ஹஸ்ரத் (மிர்ஸா) சாஹிபுடைய விவாக முன்னறிவிப்பு நடக்காததற்குக் காரணமாவது, தாங்கள் (மிர்ஸா) அதை மெய்யாக நம்பவில்லையென்றும் இவ்விதமாகவே வயதின் முன்னறிவிப்பிலும் தாங்கள் (மிர்ஸா) தங்களையறியவில்லையென்றும் கூறுகிறார். ஒரு சமயத்தில் இரண்டு கலீபா உண்டாகமாட்டார்களென்றும் பகிரங்கமான ஹதீது உண்டாயிருக்கிறதுடன் (இவரின் நடப்பு) ஆச்சரியமாயிருக்கிறது. எவன் பின்னால் கலீபாவாக ஏற்படுவானோ அவனைப்பற்றி இஸ்லாமிய இராச்சியங்களில் அவன் கொல்லப்படவேண்டும் என்று ரசூலுல்லா சொல்கிறார்கள்¶ மௌல்வி சாஹிபு ஏன் கிலாபத்தைத் தாவாச் செய்தவராக கூட்டங்களில் வேற்றுமையை உண்டு பண்ணுகிறார்*. சந்தேகமின்றி இச்சமயம் இங்கிலீஷ் கவர்ன்மெண்டாரின் ஆளுகையாயிருக்கிறது. அவர்களுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்று நமது மார்க்கச்சட்டமும் நமக்கு விதிக்கின்றது. ஆயினும், இறைவனுடைய வெறுப்பை விட்டும் தப்புகிறது கஷ்டம். அவர் பிறமதஸ்தர்களுக்கும், பிற அஹ்மதியர்களுக்கும் போதிக்கவேண்டியதாயிருந்தது. எனினும், அவர் தமது கூட்டத்திலேயே கலகத்தை உண்டுபண்ண எத்தனித்து விட்டார்‡.

கடைசி ஒரு விஷயத்தைத் தெரியப்படுத்தி விடுகிறதும்

---

¶ மிர்ஸா சாஹிபும் இஸ்லாமிய இராச்சியத்தில் இருப்பாரானால் அவரின் மஸீஹ் மஹ்தி யென்ற தன்மையும் அரை நிமிஷத்தில் வெளியாய்விடும். இதனாலேயே அவர் ஹஜ்ஜுக்குப்போகாமல் காலம் தள்ளிவிட்டார்.

* மஹ்மூது சாஹிபே! மார்க்கச் சட்டப்படி மஹ்தி என்று வாதிக்கிறவரை கலீபாவாக்கவேண்டியதிருக்க, அப்படிச் செய்யாமல் ஜனங்களால் தீர்மானிக்கப்பட்டவர்களை கிலாபத்து ஸ்தானத்தில் வைத்தல் பொருந்துமா? இது உங்கள் மதக் கிரமப்படி தர்மமாகுமா?.

‡ மிர்ஸா சாஹிபும் முதன் முதல் பிறமதஸ்தர்களிடத்தில் வாதித்து இஸ்லா மதத்தின் உண்மையைப் புகட்டுகிறேனென்று போதுமான தொகை வசூலாய்விட்டபின்னர், முஸ்லிம்களைப் பார்த்து என்னை நம்பார்கள் காயிரென்று திரும்பிவிட்டாரல்லவா? அதைப்போல் அவரின் சிஷரும் திரும்பிவிட்டார். இதற்கு வருத்தப்படுகிறதில் என்ன லாபம். குருவைப்போல் சிஷர்.

அவசியமென்றெண்ணுகிறேன். இந்த விளம்பரத்தினால் அஞ்ச வேண்டிய அவசியமில்லை. கூட்டங்கள் அதிகரித்து வளர்ந்து வரும்பொழுது நல்லவர்கள், கெட்டவர்கள், புத்திசாலிகள் பைத்தியக்காரர்களாகிய பலவிதமான ஜனங்கள் எற்கனவே உண்டாய்விடுகிறார்கள்¶.

மிர்ஸா குலாம் அஹ்மது காதியானியின் மகன்
**மிர்ஸா மஹ்மூது அஹ்மது.**

பதுர் அக்டோபர் 19, 1911. அஹ்லஹதீஸ் நவம்பர் 10 1921.

முஸ்லிம்களே! மஹ்திகள் கிளம்புகிற விந்தைகளையும் ஒவ்வொருவரும் மிர்ஸா சாஹிபின் அடிமேலடிவைத்துத் தமது இல்ஹாமைக்கொண்டே மஹ்தியாய்விடுகிறதையும் கவனித்துக்கொள்ளுங்கள். இவ்வண்ணம் இவர்களுக்குள் தடுமாறிக்கொண்டு இருக்கிறதுடன் அவர்கள் முஸ்லிம்களைப்பார்த்து எங்களுக்கு இமாமும் உண்டு, ஒற்றுமையும் உண்டு. உங்களுக்கு இமாமுமில்லை, ஒற்றுமையுமில்லையென்று புகலுகிறதையும் கவனிப்பீர்களாக.

## 5-வது கூட்டம்.

வஸீர்ஆபாது என்ற பட்டணத்தினருகே சம்படியால் என்ற ஓர் கிராமம் இருக்கிறது. அதில், முஹம்மது சயீது என்ற பெயருடைய ஒரு மிர்ஸாயி மதஸ்தருக்கு இல்ஹாம் உண்டாய்விட்டது. அவர் சொல்கிறார், மிர்ஸா சாஹிபு இல்லாமை புதுப்பிக்கத்தொடங்கியிருந்தார்; ஆயினும் முடிவடையவில்லை. அதை முடிவு செய்கிறதற்காகவே இறைவன் என்னை கமருல் அன்பியா (நபிமார்களில் சந்திரனை நிகர்த்தவர்) வாக உற்பத்தி செய்து அனுப்பியிருக்கிறான் என்பதே.

அவரின் கொள்கையாவது:-

சாராயம் குடித்தல் ஆகும். தனது குடும்பத்தில் விவாக சம்பந்தம் செய்கிறது கூடாது. ஹஸ்ரத் மஸீஹ் யூசுபு நஜ்ஜாருடைய குமாரனாயிருந்தார். கத்தனா (விருத்தசேதனம்) செய்கிறது ஆகாததாயிருக்கிறது என்ற இது முதலியவைகளாம்.

---

¶ முஸ்லிம்களும் மிர்ஸா சாஹிபு விஷயத்தில் இப்படியே நினைத்து வருகிறார்கள்.

ஆகவே, மிர்ஸாசாஹிபு தாம் கூட்டங்களை ஒன்று சேர்த்து அபிப்பிராய பேதகங்களையெல்லாம் அழித்துவிட வந்தேனென்று தாவாச்செய்தவர் என்னமோ இப்பேர்ப்பட்ட விபரீதமான பிரிவினையை உண்டுபண்ணிவிட்டுப் போய்விட்டார். இன்னமும் எத்தனை மஹ்திகளும், மஸீஹ்களும், நபிகளும் தோன்றப்போகிறார்களோ கடவுளுக்கே வெளிச்சம். இதெல்லாம் நமது பஞ்சாப் மஸீஹின் பாக்கியமேயாம். மிர்ஸாயி மதஸ்தர்கள் பலத்த வேற்றுமைப்பட்டிருந்தாலும் இவர்களில் பெரிய கூட்டம் இரண்டுளது; 1-வது காதியான் மஹ்மூதுசாஹிபு கூட்டம். 2-வது லாகூர் மௌல்வி முஹம்மதலி சாஹிபு எம். ஏ. என்பவரின் கூட்டம். இவ்விரண்டு கூட்டங்களுக்கும் பலமான போட்டிகள் ஏற்பட்டு ஒருவரையொருவர் காபிர்களென்றும், முர்த்தத்துகளென்றும் போராடிக்கொண்டு மிர்ஸா சாஹிபின் மதத்தைப் பங்கப்படுத்திக்கொண்டிருக்கிறதை நேயர்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

### மிர்ஸாயி மதஸ்தர்கள் தங்களின் மதத்தைப் பரப்ப முஸ்லிம்களிடத்தில் செய்யும் சூழ்ச்சிகள்.

மிர்ஸா சாஹிபு துவக்கத்தில் பிறமதஸ்தர்களிடத்தில் இஸ்லாத்தின் மகிமையைப் புகட்டப்போகிறேனென்று நோட்டீஸ் மூலமாக பஹிரங்கப்படுத்தியதும், முஸ்லிம்கள் கூட்டம் கூட்டமாய் அவரைப் போற்றி அவருக்கு ஒத்தாசை செய்து வந்தார்கள், பறாஹீன அஹ்மதியா வென்ற நூலில் ஜாடை ஜாடையாக தமது உள்ளெண்ணத்தை வெளிப்படுத்தியும் அவைகளைக் கவனியாது இவரின் ஜோலிரியிலேயே முஸ்லிம்களில் பெரும் பாலோர் கவனததைச் செலுத்திவந்தார்கள். மிர்ஸா சாஹிபு பூரணமாக ஜனங்களின் நோக்கத்தை அறிந்துகொண்டபின்னர் மெள்ள தாம் மஸீஹென்றும், மஹ்தியென்றும் சொல்லத் தொடங்கினர். அது முதல் அவரைத் தஜ்ஜாலென்று நினைத்து பெரும்பாலோர் அவரை விட்டு நீங்கிக்கொண்டனர். இவைகளைக் கண்ணுற்ற மிர்ஸாயி மதஸ்தர்கள் நாம் பிரமதஸ்தர்களிடத்தில் மிர்ஸா சாஹிபின் மகத்துவத்தை எடுத்துப் போதித்து நமது மதத்தில் சேர்க்கிறது முடியாத காரியம். சிறு மாணுக்கர்கள் கூட அவரின் பொய்மையையும், புரட்டையும்

எடுத்து வாதித்து நம்மைப் பங்கப்படுத்தி விடுவார்களென ஆலோசித்து வேறு விதங்களாக நடிக்க ஆரம்பித்துவிட்டனர். அதாவது,

(1) சிலர் கல்விச்சாலைகளை ஏற்படுத்தி பல கல்விகளும் கற்றுக்கொடுக்கிறதுடன் விசேஷமாக இஸ்லாம் மதத்தின் மகிமையைப் பிறமதஸ்தர்களிடம் எடுத்துக் காட்டக்கூடிய தர்க்க சாஸ்திரங்களையும் கற்றுக்கொடுக்கலாயினர். இவர்களின் தந்திரோபாயங்களை அறியாத முஸ்லிம்களில் சிலர் இவர்கள் சத்திய இஸ்லாம் மார்க்கத்தை மிகவும் ஆராய்ச்சியுடன் கற்றுக்கொடுக்கிறதுமன்றி, பிறமதஸ்தர்களோடு வாது புரிந்து உண்மையைப் புகட்டக்கூடிய சக்தியையும் உண்டுபண்ணிவிட்டுவிடுகிறார்கள் என்ற அபிப்பிராயத்தின் மீது தங்கள் மைந்தர்களை அவடம் அனுப்புகின்றனர். சந்தாவும் கொடுத்து வருகின்றனர். அந்த மிர்ஸாயி மதஸ்தர்களோ மெள்ள மெள்ள தங்களின் கொள்கைகளை நுழைத்து மிர்ஸாயி மதத்தை ஆதரித்த அபிமானிகளாக ஆக்கி விட்டுவிடுகிறார்கள்.

(2) சிலர் தாங்கள் பிரதேசங்களில் சென்று இஸ்லாம் மதத்தை விர்த்திசெய்யப் போகிறோம் எங்களுக்கு நிதி உதவி செய்யவேண்டுமென்று நோட்டீஸ், பத்திரிகைகள் மூலமாய் பிரசுரம்செய்து பணங்களை வசூலித்து மிர்ஸாயி மதஸ்தர்களுக்கு தகுந்த சம்பளங்கள் ஏற்படுத்தி பற்பல பாகங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள்¶. அவர்கள் தங்களை அஹ்மதிய சங்கத்தாரென பெயர் வைத்துக்கொண்டு தங்களின் வேலையை ஆரம்பம்செய்து விடுகின்றனர். இவர்கள் பிரசங்கங்களில் இடை இடையே மிர்ஸா சாஹிபின் சிற்சில மஹாத்துவங்களை வெளிப்படுத்துகின்றனர். தெரிந்தவர்கள் மிர்ஸா சாஹிபின் மஹாத்துவத்தின்பேரில் குறுக்கு விஜாரணை செய்து ஆக்ஷேபித்தால் தங்களின் மீது ஆக்ஷேபம் வாராவண்ணம் அதன் கருத்து இன்னது; இதன் கருத்து இன்னது என்று சொல்லி மிரட்டிவிடு

¶ இவர்கள் முஸ்லிம்களிடத்தில் வசூலித்த பணங்களால் தங்கள் கொள்கைகளை ஆதரித்த மிர்ஸாயி மதப்பிரசாரர்களுக்கு மட்டும் சம்பளம் கொடுத்து பிரசாரத்திற்கனுப்புகிறார்களேயல்லாது மற்ற முஸ்லிம்களை அனுப்புகிறார்களாவென்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

கிறார்கள். சில சமயம் பொய் சொல்லவும் கூசுகிறதில்லை. மிர்ஸாயி மதஸ்தர்களை எங்கள் உலமாக்கள் காபிரென்று தீர்ப்புச் செய்திருக்கிறார்களே யென்று யாராவது ஆக்ஷேபித்தால் அதற்கு அவர்கள் நாங்கள் காபிரல்ல; சுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களே. அன்றியும் ஹனபி மதுஹபைச் சேர்ந்தவர்கள்; எங்களைக் காபிரென்று சொல்லும் நீங்கள் காபிராகிய நாங்கள் எங்கள் பிரசங்கத்தினால் இஸ்லாமாக்கியிருக்கிற அவ்வளவு பெயர்களை முஸ்லிம்களாகிய நீங்கள் ஏன் இஸ்லாமாக்கக்கூடாது என்று மிரட்டிவிடுகிறார்கள். இந்த மிர்ஸாயி மதஸ்தர்களின் குருவாகிய மிர்ஸா சாஹிபு இடத்தில் சில முஸ்லிம்கள் மிர்ஸா சாஹிபே! நீர் நான்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று சொல்லுகிறீரே, ஹதீதுகளில் ஹஸ்ரத் ஈசா நபி உயிரோடு வானத்திலிருப்பதாயும் பிந்தி வருவதாயும் சொல்லப்பட்டிருக்கிறதே, அதற்கென்ன சொல்லுகிறீரென்று கேட்டார்கள். அதற்கு அவர் நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இல்லாமல் வேறே மஸீஹ் வானத்திலிருக்கிறதாயிருந்தால் நீங்கள் ஆண்டவனிடத்தில் துஆச் செய்து இறக்கிக் காட்டுங்கள் பார்ப்போம். அப்படியானால் நீங்கள் மெய்யர்கள்தான் என்று பதில் கூறலானார்¶.

ஆகவே, இவ்வித தந்திர வார்த்தைகளை மிர்ஸாயி மதஸ்தர்கள் கைக்கொண்டு எங்களைக் காபிரென்று சொன்னால், நாங்கள் இஸ்லாமாக்கியிருக்கிற அவ்வளவு நீங்கள் இஸ்லாமாக்கிக்காட்டுங்கள் பார்ப்போமென்று சொல்லி விடுகிறார்கள். இவ்விதமாகத் தங்கள் மதத்தின் அந்தரங்கம் விளங்கவிடாமல் செய்து தங்களின் மதத்தை நுழைத்து விடுகின்றனர்.

(3) சிலர் எங்கள் அஹ்மதியா சங்கத்தின்பேரில் ஆக்ஷேபம் செய்கிறவர்கள் வரட்டும்; நாங்கள் பதில் சொல்லுகிறோமென வாதிக்கின்றனர். அவர்களிடத்தில் வாதஞ்செய்ய சம்மதித்தால் அவர்கள் முதன் முதல் ஹஸ்ரத் ஈசா நபி மரணமாய்

¶ மிர்ஸா சாஹிபின் இவ்வித வார்த்தைகளை ஆதாரமாகக்கொண்டு ஒரு தஹ்ரியன் முஸ்லிம்களிடத்தில், நீங்கள் ஆண்டவன் உண்டென்று சொல்லுகிறீர்களே, அப்படியானால் இறக்கிக் காட்டுங்களென்று வாதம் செய்யக்கூடும்.

விட்டார்களா இல்லையா யென்ற இந்த மஸலாவை முடிவு செய்து கொள்வோமென உரைக்கின்றனர். இதற்கும் முஸ்லிம்கள் சம்மதித்துவிட்டால், வேறுவிதமான தர்க்கங்களையெல்லாம் இடையே நுழைத்து அஸல் விஷயம் முடிவு பெருமல் செய்து விடுகின்றனர். ஹஸ்ரத் ஈசா நபி மரணமாய் விட்டார்களென்ற இந்த விஷயமோ இவர்களின் மஸீஹாகிய மிர்ஸா சாஹிபால் கூடியவரை பார்த்தும் பலிக்காமல் கடைசி புகலற்று,

> எனக்குப் பின்னல் பதினுயிரம் மஸீஹ்கள் வரை வரக்கூடுமென்றும் வெளிரங்கமான ஹதீதின்படி ராஜ ஆடம்பரத்துடன் திமிஷ்க்குப் பட்டணத்தில் ஒரு ஈசா நபி வரவும் கூடும். அதை நாம் மறுக்கவில்லை யென்றும் கூறியுள்ளார்.

மிர்ஸாயி மதஸ்தர்களின் குருவாகிய மிர்ஸா சாஹிபே, இவ்விதம் பகர்ந்திருக்க அவரின் உம்மத்துகளால் ஹஸ்ரத் ஈசா நபி மரணமாய்ப் போனார்களென்று எப்படி ருஜூப்படுத்தக் கூடும்.?

இவர்கள் இவ்விதத் தந்திரத்துடன் ஹஸ்ரத் ஈசா நபி மரணமாய்ப் போனார்களென்று ருஜூப்படுத்திவிட்டால் அந்த ஸ்தானத்தில் நமது மிர்ஸா சாஹிபை எற்றிவிடலாமென வெகு பாடுபடுகின்றனர். இவர்களுக்காக ஒரு நிமிஷம் ஹஸ்ரத் ஈசா நபி மரணமாய் விட்டார்களென்று வைத்துக் கொண்டாலும் மிர்ஸா சாஹிபை அந்த ஸ்தானத்தில் எப்படி எற்ற முடியும்? அவர்களின் இலக்ஷணங்களுக்கும், இவரின் இலக்ஷணங்களுக்கும் வானத்திற்கும் பூமிக்குமுள்ள வித்தியாசம் எற்பட்டிருக்கும்போது எவ்வண்ணம் சாதிக்கக்கூடும் கடைசி அதன் கருத்து இன்னது; இதன் கருத்து இன்னதென்று கருத்துக் கருத்தாக சொல்லவேண்டியதாக எற்படுகிறது. இவ்விதம் கருத்துக் கருத்தாக காரியத்தைச் சாதிக்கப்பார்த்தால் ஓர் பட்டிக்காட்டு லவுண்டிகூட இவ்விதம் சொல்லலாமென்பதை இவர்கள் உணரவில்லை.

காஜா கமாலுத்தீன் சாஹிபு முஹம்மதலி சாஹிபு எம்.எ.

என்பவரும் முஹம்மது அஹ்ஸன் சாஹிபும் இன்னும் பல மிர்ஸாயி மதஸ்தர்களும் ஹஸ்ரத் ஈசா நபி மரணமாய்ப்போனார்கள். அவர்களுக்குப் பதிலாக மிர்ஸா சாஹிபு தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாயிருக்கிறார் என்ற இந்த விஷயத்தை ருஜூப் படுத்த, ராம்பூர் நவாபு சன்னதியில் அழைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களுக்கு எதிர்த் தரப்பில் ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் மரணமாகவில்லை. உயிரோடு வானத்திலிருக்கிறார்கள்; குறிப்பிட்ட பிற்காலத்தில் வருவார்கள் என்ற இந்த விஷயத்தை ஸ்தாபிக்க மௌல்வி ஸனாஉல்லா சாஹிபு வந்திருந்தார். இந்தக் காக்ஷியைப் பார்க்கிறதற்காக முஸ்லிம்களும் இந்துக்களும் மற்றும் பிறமதஸ்தர்களும் திரள் திரளாக வந்திருந்தனர். இந்தத் தர்க்கத்தில் மிர்ஸாயி மதஸ்தர்களில் கீர்த்தி பெற்ற இந்த மகான்கள் அவடத்தில் பட்டபாடு அவர்களுக்குத்தான தெரியும்.* வெட்கப்பட்டு ராம்பூர் நவாபிடத்திலும் உத்தரவு வாங்காமல் போதும் போதுமென்று ஓட்டமெடுத்துவிட்டனர். இதில் முஸ்லிம்களுக்குக் கிடைத்த வெற்றி எங்கும் பகிரங்கமாய்விட்டதுமன்றி ராம்பூர் நவாபுடைய சர்ட்டிபிக்கட்டு உண்டாயிருக்கிறது.

இவ்வித கீர்த்திகளுடைய மிர்ஸாயி மதஸ்தர்களாலேயே இவ்விஷயத்தை ஸ்தாபிக்கக் கூடாமலிருக்கும்போது சாதாரண மிர்ஸாயி மதஸ்தர்கள் எவ்விதமாக ஸ்தாபிப்பார்களோ யாமறியோம்.

ஆயினும், இவர்களின் நடப்புகளை நன்குணர்ந்த ஒருவர் மிர்ஸா சாஹிபு மெய்யரா, பொய்யரா வென்ற விஷயத்தை ஆராய எடுத்துக்கொள்வோமென்றால் இவர்களின் உடல் நடுங்கி இருதயம் பதறிப் போக்குச் சொல்ல ஆரம்பித்துவிடுகின்றனர். அன்றேல் தர்க்கம் நடக்காதபடி நிபந்தனைகளை ஏற்படுத்திவிடுகின்றனர்.

உண்மையில் மிர்ஸா சாஹிபு பொய்யரா, மெய்யரா என்ற இந்த விஷயத்தைத் தான் முதன் முதல் ஆராய எடுத்துக்கொள்ளவேண்டும் இதில்தான் சீக்கிரம் முடிவுண்டாகுமென்பது முஸ்லிம்கள் கவனிக்கத்தற்குரியது.

(4) இன்னும் சில தேசிய பாஷையைச் செவ்வையாய்க்

கற்று சாமர்த்தியமாயும், சாதுர்யமாயும் பேசுகிறதிலும், எழுதுகிறதிலுமிருந்து அநேகர்களை வசியச் செய்துகொள்ளுகிறார்கள். பொது ஜனங்கள் இவர்களின் அந்தரங்கக்கொள்கைகளையும் நோக்கங்களையும் இடை இடையே விஷங்கலந்த வார்த்தைகளையும் அறிய வழியில்லாது மயங்கிவிடுகின்றனர்.

தற்காலங்களில் ஆங்கிலம் வாசித்தவர்களில் பலர் இலகுவாக இதில் சிக்கிக்கொள்கின்றனர்.

(5) இன்னும் சிலர் ஹஸ்ரத் மஸீஹ் வானத்தின்மேல் உயிரோடு ஜீவித்திருக்க நமது நாயகம் முஹம்மதுர்ரசூலுல்லா அவர்கள் மரணமாய்ப் பூமியின்கீழ் தகனிக்கப்பட்டிருக்கிறார்களென்று விசுவாசிக்கிறது நாயகமவர்களைத் தூஷணிக்கிறதல்லவா? என மிரட்டுகிறார்கள். சாதாரண ஜனங்கள் இதைச் செவியுற்றதும் வாஸ்தவந்தான் இது நாயகமவர்களின் மஹத்துவத்திற்குப் பங்கமேயென்று சஞ்சலப்பட்டு திகைக்கிறார்கள். இது சமயம் பார்த்து மிர்ஸாயிகள் ஈசா நபி மரணமாய்விட்டார்கள் என்றும் அவர்களுக்குப்பதிலாக ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபுதான் ஈசா நபி யென்றும் அவர்களுடைய இருதயத்தில் ஊன்றச் செய்துவிடுகிறார்கள்.

மிர்ஸாயி மதஸ்தர்களே கேளுங்கள்.

(1) ஹஸ்ரத் ஆதம்அலைஹிஸ்ஸலாமவர்கள் தாய் தந்தையில்லாமல் உற்பத்தியாயிருக்க; நமது நாயகமவர்கள் சாதாரண மனிதர்களைப்போல் தாய் தந்தையைக்கொண்டு உற்பத்தியானது இழிவில்லையா.? (2) ஹஸ்ரத் இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப்பின் பல் தலைமுறை வரை நபிப்பட்டத்தை வைத்திருக்க; நமது நாயகமவர்களுக்குப் பின்னர் அதிலும் விசேஷமாக அவர்களின் சொந்தக் குடும்பத்தாருக்குக் கூட அவ்விதப் பட்டங்களைக் கொண்டு மகிமைப்படுத்தாமலிருக்கிறது நிந்தையில்லையா.? (3) இன்னும் அவர்களுக்காக ஆண்டவன் நெருப்பை குளிர்ச்சியாக்கியிருக்க; நமது நாயகம் அவர்கள் மீது காபிர்கள் ஆயுதங்களைக்கொண்டும் தாக்கினது இழிவில்லையா.? (4) ஹஸ்ரத் சுலைமான் நபியவர்களுக்கு காற்று வசப்பட்டிருக்க; நமது நாயகம் அவர்களுக்கு இவ்விதமாக யாதொரு வஸ்துவும் வசப்படாமல் போனது நிந்தையில்லையா.?

(5) ஹஸ்ரத் நூஹ் நபி, ஹஸ்ரத் மூசா நபி இவர்களின் சத்துருக்களை ஆண்டவன் இப்புவியிலிருந்து இவர்களின் சிஷர்களுக்கு யாதொரு கஷ்டமும் உண்டாகாவண்ணம் பூரணமாய் அழித்தும் நமது நாயகமவர்களையும் அவர்களின் சஹாக்களையும் காபிர்கள் கஷ்டப்படுத்தினதும் இழிவில்லையா.? (6) ஹஸ்ரத் நூஹ் நபியவர்கள் 950 வருஷத்தைக் காண அதிகமாய் ஜீவித்திருக்க; நமது நாயகமவர்கள் 63 வருஷம் வரை ஜீவித்திருந்தது இழிவில்லையா.? இது முதலிய விஷயங்கள் குர்ஆன் ஷரீபைக்கொண்டு ருஜுவாகிறது. இன்னமும் கேளுங்கள்.

நமது நாயகமவர்களின் மஹத்துவம் உயரவேண்டுமானால் ஹஸ்ரத் ஈசா நபியவர்கள் விண்ணுலகத்தில் உயிரோடிருக்கக் கூடாது. மரணமாய்விடவேண்டுமென்ற காரணத்தைப் புகலுகிறீர்களே அப்படியானால் நமது நாயகமவர்கள் மரணமாகி பூமிக்குள் தகனிக்கப்பட்டிருக்க; நாம் உயிரோடு பூமியின்மேல் சுற்றித்திரிவது நாயகமவர்களுக்கு இழிவில்லையா.? இன்னும் நாயகமவர்களுக்கு 63 வயதாயிருக்க, நாம் அதற்கு அதிக வயதுக்கு ஜீவித்திருக்கிறது நாயகமவர்களுக்கு இழிவில்லையா.?

இப்போது அதிக வயதுள்ள மிர்ஸாயி மதஸ்தர்கள் ஏதாவது தின்று உயிரைப் போக்கடித்துக்கொள்ளவேண்டுமா?

மிர்ஸாயி மதஸ்தர்களே! மேல் விபரிக்கப்பட்ட இவ்விஷயங்களெல்லாம் நாயகமவர்களுக்கு இழிவை வருத்தாது. ஹஸ்ரத் ஈசா நபி வானத்தில் ஜீவித்திருக்கிறது மட்டும் இழிவை வருத்திவிட்டதோ? ஹஸ்ரத் ஈசா நபியவர்களை வானலோகத்தில் சில காரியங்களுக்காக உயிரோடு வைத்திருந்தால் இதில் நாயகமவர்களுக்கு என்ன இழிவு உண்டாய்விட்டது.

காதியான் மதத்தார்களே! உங்களின் குருவாகிய மிர்ஸா சாஹிபு எப்போதும் எங்கள் நாயகமாகிய ஹஸ்ரத் முஹம்மதுர்ரசூலுல்லா அவர்களைத் தமக்கு நிகர் காட்டிக் காட்டி இழிவுப்படுத்தியிருக்கிறதைப் பார்த்துத் தீர்ப்புச் செய்யுங்கள். ஹஸ்ரத் ஈசா நபியவர்கள் விண்ணுலகில் ஜீவித்திருப்பது இழிவென்று சொன்ன நீங்கள் மிர்ஸாசாஹிபு சொல்லும் வார்த்தைகளைக்கேட்டு என்ன சொல்லுகிறீர்களென்று பார்ப்போம். மிர்ஸா சாஹிபு எந்த ஆயத்து குர்ஆனில் நாயகமவர்கள் விஷ

யத்தில் மஹத்துவமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த யெல்லாம் தம்மீது ஒட்டிக்கொள்கிறார். அதைப்பற்றி 12, 14-ம் பிரிவுகளில் பார்வையிடவும்.

## ஓர் உதாரணம்.

ஒரு மனிதன் அவருக்கு மூவாயிரம் ரூபாய் ஐவேஜ் உண்டு எனக்கு மூன்று லக்ஷம் ரூபாய் ஐவேஜ் இருக்கிறதே என்றால், அதன் அர்த்தமென்ன.? அப்படியானால் இறந்த "மிர்ஸா சாஹிபின்" வார்த்தைகளைக் கவனித்து இவர் மனதில் நாயகமவர்களை எப்படி மதித்திருக்கிறார் என்பதை மிர்ஸாயி மதஸ்தர்களே யோசித்துச் சொல்லட்டும்.

மிர்ஸா சாஹிபுடைய இந்த நடப்புகளெல்லாம் நாயகமவர்களுக்கு இழிவில்லாமல் ஹஸ்ரத் ஈசா நபி மட்டும் வான லோகத்தில் ஜீவித்திருக்கிறது இழிவாய் விட்டதாம். காதியானிகளே! இவ்விஷயங்களிலுள்ள நியாயத்தை ஆதரிக்காவிட்டால், ஸ்கூல்களில் பயிர்ச்சிபெறும் சிறு மாணக்கர்முதல் உங்களின் புத்திசாலித்தனத்தின்பேரில் நகைக்கவேண்டியதாய் ஏற்படும் என்பதை உணர்வீர்களாக.

ஆகவே, கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தைப் பரப்புவதற்கு என்ன பிரையாசைகளும், சூழ்ச்சிகளும் செய்கிறார்களோ, அவ்விதமாகவே இவர்களும் தங்கள் பாதிரிகள் மூலமாக முஸ்லிம்களிடத்திலும் செலுத்திப் பின்னப்படுத்த பார்க்கிறார்கள்.

முஸ்லிம்களே! அவர்களின் சூக்ஷிகளையும், நடப்புகளையும் தெளிவாய் ஆராய்ந்துகொண்டு அவர்களுக்கு நற்புத்தி புகட்டி மிர்ஸாயி மதத்திலிருந்து "முஹம்மதிய" மதத்தில் சாரும்படி செய்யப் பிரயத்தனப்படுவீர்களாக.

## காதியான்கள் மிர்ஸா சாஹிபைப் புகழல்.

மிர்ஸா சாஹிபு உலகில் அவதாரமெடுத்ததிலிருந்து அவர் மரணமாகும்வரை செய்த புண்ணியக் கிரியைகளை ஒவ்வொன்றாய் விபரித்து துதித்துப் பாடி அவரின் உம்மத்துகளை ஆனந்த

சாகரத்தில் மூழ்கினார்கள். அன்றியும், பிறமதஸ்தர்களிடத்தி
லும் அவரின் பெருமையையும், அரிய முயற்சிகளையும் எடுத்
துக் காட்டி உலகில் மிக மேலாம்பரமான ஒரு மார்க்க சீர்
திருத்தகரைப் பின்பற்றிவிட்டோமென்றும், மோக்ஷத்திற்குரி
யோர் யாங்களே என்றும் பகருகிறார்கள். ஆதலால், அவர்
களின் சீர்திருத்தத்தை எடுத்துரைத்துவிட்டு அப்பால் அவரின்
கிரியைகளுக்குத் தக்கபடி யாமும் அவரை ஸ்துதித்துப் புகழு
கிறோம். ஏனெனில், இம்மகத்துவம் பெற்ற 14-ம் நூற்றாண்
டின் மகா சீர்திருத்தகரின் சரித்திரங்களையும், நடப்புகளையும்
விபரித்துவிட்டு அவரின் புகழை விபரியாதது ஒரு குறைவாகு
மென்பது எமது கருத்து.

## மிர்ஸா சாஹிபை அவர்கள் உம்மத்துகள் புகழல்.

காத்தமன் நபிய்யீனாகிய நாயகம் ரசூல் சல்லல்லாஹு
அலைஹிவசல்லமுடைய சாயலாகவும், ஆத்மாவாகவும் உருவெ
டுத்த நபியே!......எல்லா நபிமார்களின் தத்துவங்களின் மீது
வெளியாகி தங்களது கீர்த்திப் பிரதாபங்களை எங்கும் வியாபிக்
கச் செய்த ரசூலே! நீர் உலகில் அவதரித்து சிலுவையை
உடைத்துவிட்டீர். கிறிஸ்தவர்களின் வாயை அடக்கிவிட்டீர்.
சென்ற விடங்களிலெல்லாம் ஜெயம் பெற்றீர். ஆரியர்களைத்
தோற்கடித்தீர். இந்துக்களிடம் பூரண ஜெயம் பெற்றீர். சீக்கிய
மதத்தை வேரோடுகளைந்தீர். உமது அரும் பெரும் சேவைக்
காக இறைவனிடமிருந்து புதிது புதிதான பட்டங்களைப் பெற்
றீர். அஹ்மதுவெளியாகும் ஸ்தானமே சர்வ வலிமார்கள் இன்
னும் அநேக நபிமார்களையும் விடச் சிறந்த அண்ணலே! நேச்ச
ரியர், பிரமசமாஜிகளின் இடுப்பை ஒடித்துவிட்ட மஸீஹே!
உமது அவதாரத் தோற்றத்தினால் உலகிலுள்ள குபிர், ஷிர்க்குக
ளெல்லாம் தோற்றோடிப்போய்விட்டது. கிறிஸ்தவர்களின் கர்த்
தரை மரணமாக்கிவிட்ட மஸீஹே! முஸ்லிம்கள் வெகு கால
மாய் நம்பி வந்த தவறான விசுவாசங்களை ஒரே அடியாய்த்
தீர்த்துவிட்டீர். நாயகம் அவர்கள் காலத்துக்குப் பின் வெளி
யான மார்க்க சீர்திருத்தகர்களெல்லோரையும்விட விசேஷ காரி
யங்களைச்செய்து பலன் பெற்ற வள்ளலே! நீரே எங்களது வழி

காட்டியும், நீரே எங்களது முழு நம்பிக்கையுமானீர். உம்மீது இறைவனின் கடாட்சம் பூர்த்தியாய்விட்டது.

### மிர்ஸா சாஹிபைப்பற்றி முஸ்லிம்களின் புகழ்.

நாயகம் அவர்களுக்குப்பின் வேறு நபி கிடையாதென்று முஸ்லிம்கள் நம்பியிருந்ததை நிவர்த்தித்து நானும் நபிதானென வாதித்த முப்பதில் (தஜ்ஜால்) ஒரு நபியே! இறுதி நபிக்குப் பின் வேறு நபி இல்லை என்றிருந்த முத்திரையை உடைத்து பல தஜ்ஜால்கள் நானும் நபிதானென வாதாடும்படி வழி காட்டி வைத்த மார்க்க சீர்திருத்தகரே! கிறிஸ்தவர்களின் திரியேகத் துவத்தை இஸ்லாம் மார்க்கம் ரத்துச்செய்திருக்க அதை மாற்றி சுத்தமான திரியேகத்துவத்தை உற்பத்தி செய்து குபிர், ஷிர்க்குகளைத் தாங்கி நின்ற வள்ளலே! நீர் ஹஸ்ரத் ஈசா நபி குமாரனென்பதைப் பலப்படுத்தினீர். நேச்சரியர்கள், பிரம்ம சமாஜிகளுக்குப் பயந்து மலக்குகளை மறுத்துவிட்டீர். முன்னுள்ள நபிமார்களின் ஆத்மா என்னில் வந்திருக்கிறதென்று மறு ஜென்மத்தை யாதரித்தீர். நீர் இந்து வேதங்களை வான வேதமென்று அங்கிகரித்தீர். இந்துக்களின் அவதாரிகளை நபி மார்களென்று எற்றுக்கொண்டீர். உமது அரிய சக்தியால் காபிர் முஷ்ரிக்குகள் ஆண்டவனுக்குப் பிரியமான அடிமையாய் விட்டார்கள். என்னை நம்பாதோரும் எனது சக்தியின் மீது சந்தேகித்தோரும் காபிர்களென்று கூறி ஒரே அடியாய் 45 கோடி முஸ்லிம்களையும் காபிராக்கிவிட்ட இந்திய முஸைலமாவே! விண்ணுலகத்தில் உமக்கு விவாகம் செய்வித்த உத்தம பத்தினியை உமது ஜீவிய காலத்தில் உமது கண் முன்பே இன்னொருவர் கொண்டுபோய்விட்டதைக் கண்ணுற்றும் பேசாமல் பார்த்துக்கொண்டிருந்த பொருமையாளரே! இக்காரியங்களைக் கொண்டு நீர் நபி, ரசூல் இன்னும் மறைவான சங்கதிகளை அறியக்கூடியவர் என்பதை போதுபான மட்டும் ருஜ பப்படுத்தி விட்டீர். நீர் வந்ததும் உலகிலுள்ள 45 கோடி முஸ்லிம்களையும் இஸ்லாம் மார்க்கத்தைவிட்டகலச் செய்திருக்கும்போது பிற மதஸ்தர்களை இஸ்லாம் மதத்தில் சேர்க்கிறதைப்பற்றிக் கேட் பானேன். முஸ்லிம்களையெல்லாம் இஸ்லாம் மார்க்கத்தை விட்

டுத் தூரத்திவிடும் இச்சக்தி உம்மைத்தவிர யாருக்கு ஏற்படக் கூடும்? இவைகளெல்லாம் உமது அற்புதமேயன்றி வேறென்ன பகரமுடியும். இன்னும், உமது புகழை எவ்வாறு வர்ணிக்க முடியும். உலமாக்களை யெல்லாம் நாய், பேய், ஷைத்தான், சுக்கிலம், யகூதி, காபிரென்று கூறிவிட்டீர். உலமாக்கள், முஸ்லிம்கள், ச்ஹாபாக்கள், நபிமார்கள் முதல் இழிச்சொற்களால்தாக்கி உமது அழகிய நற்குணத்தை வெளிப்படுத்தினீர். இலக்ஷக் கணக்கான முன்னறிக்கைகள் கூறி ஒன்றும் நடவாமல் போனு லும் அநேக சில்லரைப் பொய்களால் அதை ஆதரித்து குறை கூறினவர்களைத் தோற்கடிக்கும் தீரபுருஷரே! என்னை எதிர்த்தோர்களெல்லாம் சிறுமைப்படுவார்களென்று வஹீமூலம் அறிவித்தும் உம்மை எதிர்த்தோர்கள் ஜெயத்திற்கு மேல் ஜெயம் பெற்றுக்கொண்டிருக்கும்போது ஆ! ஆ!! உமது வஹீயின் தன்மையும், உமது அந்தரங்க சுத்தத்தையும் என்னென்றுதான் கூறலாம். சுயமதஸ்தரிடத்திலும், பிறமதஸ்தரிடத்திலும், முன்னறிக்கையிலும், தற்கத்திலும் எத்தனை தூரம் தோல்வியடைந்தாலும், பின்னும் பின்னும் நானே ஜெயித்தேன் நானே ஜெயித்தேன் என்று பறை சாற்றி முன் வரும் வெட்கங்கெட்ட அற்புத சிங்கமே! நான் இஸ்லாம் மார்க்கத்தில் யேற்பட்டிருக்கும் அபிப்பிராயப் பேதங்களை யொழிக்க வந்தேனென்று முஸ்லிம்களுக்குள் தீராத பகையையும், பிரிவினைகளையும் ஏற்படுத்தி ஒருவரோடொருவர் சேர்ந்து தொழுகை புரிகிறதையும் நிறுத்திவிட்ட மகா யோக்கியரே! இன்னும் தமது கூட்டத்திலும் ஒற்றுமையைக் குலைத்து விபரீதப் போராட்டங்களை ஏற்படுத்திவிட்டுச் சென்ற கிருஷ்ணஜீயே! இந்து, ஆரியர், கிறிஸ்தவர்களெல்லாம் இஸ்லாம் மார்க்கத்தை அங்கீகரிக்கும்படி ஆதாரங்களால் வரைந்து அவர்களை அடக்கிவிட்டேனென்று கூறி சிறுகச் சிறுக விருந்த கூட்டங்களை யெல்லாம் இஸ்லாம் மார்க்கத்துக்கு எதிராக திரள் திரளாகக் கிளப்பிவிட்ட மறை மே! லயன்ல், பல்ஸ்பா நேச்சரியர்களுக்குப் பயந்து இஸ்லாம் மார்க்கத்தின் முக்கிய அம்சங்களாகிய நபிமார்களின் அற்புதங்களையும், கியாம நாளின் அடையாளங்களையும் மறுத்து, ஜால வித்தையென்றும், தந்திரமென்றும் கூறி மார்க்க அம்சங்களைப் பங்கப்படுத்த வந்த அண்ணலே! இரோப்பியர்களைக்

தஜ்ஜாலாக்கிவிட்டீர். ரயிலை தஜ்ஜாலின் கழுதையாக்கி அதன் மீது உமது உம்மத்துகளை யெல்லாம் சவாராக்கி வைத்து (தஜ்ஜால்களென்று) பட்டங்கட்டி விட்டுச் சென்று விட்டீர். ஆ! ஆ!! உமது அருமைக் குணங்களையும், அழகிய நடப்புகளையும் சுத்தமான சீர் திருத்தத்தையும் என்னென்று தான் கூறலாம். உமது மகிமை ஓங்கிவிட்டது. உமது நாமம் இனி ஒருபோதும் குன்றாது; குன்றாது. உமது பிரயாசைக்குத் தகுந்த வெகுமதி உமக்கு என்றென்றைக்கும் உண்டாவதாக.

## முஸ்லிம்களின் சந்தேக நிவாரணம்.

முஸ்லிம் நண்பர்களே! யாம் இதுகாறும் எழுதி வந்த மிர்ஸா சாஹிபின் சரித்திரத்தையும், அவரின் நடப்புகளையும், உலமாக்கள், ஜட்ஜிகளின் தீர்மானங்களையும், நேரான விளக்கத்தோடு உணர்ந்த யாவர்க்கும், இவரும் இவரது சேனைகளும், இஸ்லாம் மார்க்கத்தைச் சேர்ந்தவர்களல்லவென்று விளங்கிவிடுகிறதுடன் இவர்களது வேஷத்தின் ஜாலப் புரட்டுகளும் ஒருவாறு விளங்கிவிடுமென்பதில் சிறிதும் சந்தேகமின்று.

ஆயினும், நடுநிலைமையோடு ஆராய்ச்சி செய்யாத சில புண்ணியவான்களின் இருதயத்திலிருக்கப்பட்ட சந்தேகங்களையும் ஒருவாறு நிவர்த்தி செய்தல் உசிதமென நினைத்து இதை வரையலானோம். முஸ்லிம்கள் நன்கு கவனிப்பார்களாக.

(1) மிர்ஸா சாஹிபையும் அவரைச் சார்ந்தோர்களையும் பொய்யரென்றும், காபிரென்றும் அறைவதற்குத் தகுந்த ஆதாரங்களுளதோ?

### ஜவாபு.

இப்புத்தகத்தை துவக்கத்திலிருந்து கடைசி வரைப் படித்துப்பார்த்தால் அவரைப்பற்றிய சகல விபரமும் அறியலாகும். ஆயினும் ஒன்றிரண்டு விஷயங்களை விபரிக்கிறேன். அல்லாவையும்; அவன் தூதர்களையும் பொய்யர்களென்பதும் பொதுவாக நபிமார்க்கள்; ரசூல்மார்களைச் சொல்லத் தகாத நிஷ்டூர வார்த்தைக்களைக் கொண்டு தாக்கலும் அவர்களைப் பார்க்கிலும் நான் பதவியில் சிறந்தவனென்றும் நான் நபி ரசூல் மஹ்தீ,

மஸீஹ், முஜத்திது, இமாம், கிருஷ்ணன் என்று யாதொரு மார்க்க அத்தாக்ஷியில்லாமல் வாதாடலும், தம்மை நபிமார்களை காபிரென்றும், மூர்த்ததுகளென்று அழைத்தலும், பொய் முன்னறிக்கைகள் சொல்லி அது நடவா விட்டால் அதற்கு எண்ணத் தொலையாத சில்லரைப் பொய்களைக்கொண்டு அணைத்தலும், குர்ஆனை நிந்திக்கிறதுமன்றி எனது அர்த்தமே சரி என்பதும் முதலிய இன்னும் அநேக விஷயங்களுமிருக்கின்றன. முஸ்லிம்களே! யாவற்றிற்கு முதன்மையனான ரப்பில்ஆலமீனுடையவும் வானலோகம், பூலோகமெல்லாம் கீர்த்தி பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் அவர்களுடையவும், மஹத்துவத்தை இருதயத்திலூன்றிக்கொண்டு கவனியுங்கள். இவரைக் காபிரென்று செப்பலாமா அல்லவா? கனம் தங்கிய உலமாக்களெல்லாம் தெரியாத்தனமாய்த் தீர்ப்புச் செய்துவிடவில்லை. கவனிப்பீர்களாக.

(2) மிர்ஸா தாம் மெய்யரென்று குர்ஆன் ஹதீது இஜுமாகியாசிலிருந்து அநேக ஆதாரங்கள் காட்டும்போது காபிரென எவ்விதம் பகரலாம்?

### ஜவாபு.

சகோதரர்காள்! இவர் மட்டும் இவ்விதமாய் வாதிக்கவில்லை. இதற்கு முன்னுண்டான அநேக நபிகளும், ரசூல்களும் பரோஸி நபிகளும் மஹ்தீகளும் மஸீஹ்களும் அன்றியும் தற்காலங்களில் மிர்ஸா சாஹிபின் உம்மத்திலுள்ள அநேக மஹ்திகளும் இவ்வாறே வாதிக்கின்றனர். இவர்களெல்லோரும் அசல் அர்த்தங்களைப் புறட்டி அதற்குப் பதிலாகத் தங்களுடைய மன அர்த்தத்தை வைத்துக் கொள்கிறதுமான இவர்களுக்கு ஆதாரம் இவைகளைத் தவிர வேறு ஆதாரம் கிடையாது¶. சொல்ல முடியாத மகத்துவமுடையவரென்று தன்னைத்தானே போற்றிப் புகழ்ந்துகொள்ளும் மிர்ஸா சாஹிபைப் பற்றி பரிசுத்த திருக்குர்ஆனிலாவது ஹதீது ஷரீபிலாவது காதியான் கிராமத்தில் மிர்ஸா குலாம் அஹ்மத் என்ற ஒருவர் 'பிரசன்னமாவாரென்று எடுத்துக் காட்டட்டும் பார்ப்போம். இன்னும் பிறமதஸ்தர்களும் தங்களின் கொள்கைகளுக்கு ஆதாரமாக குர்ஆன் ஹதீதி

¶. இதைப்பற்றி கமாலுத்தீனுக்கும் மஹ்தி முஹம்மது ஈசாவுக்கும் நடந்த வாதத்தைப் பார்வையிடவும்.

லிருந்து அர்த்தங்கள் காட்டுகிறார்கள். இதுவோ, ஒவ்வொரு வழி தவறிய தப்பு மார்க்கத்தாருக்கும் ஏற்பட்ட வழக்கம். ஆகவே, துலக்கமான ஆதாரம் காட்டாதவரை இவர்களின் அர்த்தங்களையும், தாவாக்களையும் முஸ்லிம்கள் அங்கீகரிக்கத் தேவையில்லை. அன்றேல், இதற்கு முன்னுள்ளோர்களையும் அங்கீகரிக்கவேண்டியதாய் ஏற்படும். இவ்வித வீணர்களை விட்டும் ஆண்டவன் முஸ்லிம்களைக் காப்பாற்றுவானாக.

(3) பொய்யர்களின் மதம் எங்கும் வியாபிக்குமா?

ஜவாபு.

நமது அருள் பெற்ற நாயகம் அவர்களின் ஜீவிய காலத்தில் முஸைலமா கஸ்ஸாபென்ற பொய்யனின் மதம் பரவியிருக்கும்போது இந்த 14-ம் நூற்றாண்டில் பொய்யர்களின் மதம் பரவுகிறதைப்பற்றிப் புதுமைப்படுவானேன்.? அன்றியும், அநேக பொய் மஹ்தி மஸீஹ்களின் கூட்டங்கள் அளவுகடந்து பெருகி மன்னர்களோடு போர்புரிந்துமிருக்கிறார்கள். இன்னும் சிலர் தேசங்களையெல்லாம் ஜெயித்துத் தங்களின் விரோதிகளை யெல்லாம் சங்காரம் செய்து பிரசித்திபெற்றிருக்கிறார்கள். ஆகவே, இவ்வித காரணங்களால் அவர்களின்மதங்கள் மெய் மதமென்றேற்படாது.

(4) மிர்ஸா சாஹிபு பொய்யரென்று தெரிந்திருந்தால் அவரின் மதாபிமானிகள் அவருக்காக உயிர் துறப்பார்களா?

ஜவாபு.

முஸைலமா கஸ்ஸாபுக்காக அவனின் சேனைகள் இலக்ஷக் கணக்காய் உயிர் துறந்திருக்கிறார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் முதல் சஹாபாக்களோடு கடும் போர் புரிந்தி ருக்கிறார்கள். அன்றியும், இதற்கு முன்னுண்டான பொய்யர் களுக்கும் அவர்களின் உம்மத்துகள் உயிர் துறந்திருக்கும் போது மிர்ஸாவுக்காக உயிர் துறந்தால் என்ன ஆச்சரியம். ஆகவே, இவ்விதப் புகலற்ற வார்த்தைகளால் அவரை மெய்ய ரென்று ருஜூப்படுத்தல் செல்லாது.

(5) அநேகம் மெச்சத்தக்க மூளையுடையோர்கள் உதா ரணமாக முஹம்மதலி எம். ஏ. காஜா சாஹிபு, ஹக்கீம் நூருத்

தீன் சாஹிபு, கலீபா மஹ்மூது சாஹிபு முதலியோர்களெல்லாம் பரிசோதனை செய்யாமல் இவர் மதத்தில் சார்வார்களா?

**ஜவாபு.**

உலகில் இவர்கள்தான் மூளையுடையோர்களா? அல்லது இன்னமும் இருக்கிறார்களா? இவர்கள்தான் மூளையுடையோர்களென்றால் அதை நாம் ஆராய்ச்சி செய்யாமல் கண்மூடித்தனமாய் ஒப்புக்கொள்ள முடியாது. இன்னமும் மூளையுடையோர்கள் உலகில் இருக்கிறார்களென்றால் அவர்கள் ஏன் இம்மதத்தில் சேராமல் வெறுக்கிறார்கள்.

சகோதரக்காள்! உலகில் எத்தனையோ மூளையுடையோர்கள் ஆச்சரியப்பட்டு புத்தி மயங்கத்தக்க அரிய வேலைகளை எல்லாம் செய்திருக்கிறார்கள். ஆதலால், அவர்கள் சொல்லுகிற எல்லா விஷயங்களும் அப்படியே யிருக்குமென்று நம்பிவிடுகிறது மிகவும் கடைகெட்ட அஞ்ஞானமாகும் வான சாஸ்திரம் முதலியவைகளில் விசேஷ பிரக்யாதி பெற்றவர்கள் ஜீவராசிகளை வணங்கி ஸ்தோத்தரித்துக்கொண்டிருந்ததாக சரித்திரங்களில் கூறப்பட்டுள்ளது. ஆகவே, மேல் கூறியவர்கள் எவ்வளவு மூளையுடையோராயிருந்தும் ஜீவராசிகளை வணங்கிக்கொண்டிருந்ததுபோல், இந்தக் காதியானி மதஸ்தர்கள் எவ்வளவு மூளையுடையோராயிருந்தும் ஒரு பொய்யரை வழிகாட்டி என்றும் மஹ்தி யென்றும் மஸீஹ் யென்றும் போற்றிப் பணிகிறார்களேயன்றி வேறல்ல.

(6) மக்கத்தில்கூட இவர்களின் மதம் வியாபித்து வரும் பொழுது இவர்களை ஆக்ஷேபித்தல் பொருந்துமா?

**ஜவாபு.**

கனவான்களே! இவர்கள் எப்போதும் தங்கள் அந்தரங்க கொள்கைகளை வெளிக்காட்டாமல் நாங்கள் இஸ்லாம் மதத்திற்கு உழைக்கிறோமென்று பிரஸ்தாபப்படுத்துகிறார்கள். இவர்களின் அந்தரங்க உண்மை தெரியாதவர்கள் இவர்களை முஸ்லிம் மிஷனெரி யென்று நம்பிவிடுகிறதில் என்ன ஆச்சரியம். நமது இந்தியாவிலேயே இவர்களின் அந்தரங்கம் அறியாத அநேக முஸ்லிம்கள் இவர்களை முஸ்லிம் மிஷனரி யென்று நம்பி உதவி

புரியும்போது சமுத்திரத்திற்கப்பாலிருக்கப்பட்ட தேசத்தார் இவர்களை நம்பிவிடுகிறதில் என்ன புதுமை.

ஆயினும், இவர்களின் அந்தரங்க உண்மை தெரிந்த பின்னுல் இவர்களை நம்புவார்களேல் அப்போது கவனிக்கவேண்டியது நமது பொறுப்பு. ஒருவனின் அந்தரங்க நடப்புத் தெரிகிறதற்கு முந்தி சில நல்ல மனிதர்கள் அவனை மெய்யனென்று நம்பிவிடுகிறது சகஜந்தானே. இதனுல் அவர்கள் மெய்யரென்று அர்த்தமாய்விடாது.

(7) ஐரோப்பாவில் இஸ்லாம் மார்க்கத்தை வியாபிக்கச் செய்கிற இவர்களை காபிரென்று சொல்வது பொருந்துமா?

ஜவாபு.

உண்மையில் இவர்கள் இஸ்லா மதத்தைப் பரப்பும் நோக்கத்துடன் வேலை செய்யவில்லை இஸ்லாமுடைய உடையில் தங்களை மறைத்துக்கொண்டு மிர்ஸாயி மதத்தை எங்கும் வியாபிக்கச் செய்கிறுர்கள். உண்மையை அறியாத முஸ்லிம்கள் இவ்விதமாகவே நம்பி மோசம் போகிறுர்கள். இஸ்லாம் மார்க்கம் ஆப்பிரிக்கா முதலிய பாகங்களில் பரவி வருவதுபோல் ஐரோப்பாவிலும் பரவி வருகிறது.

(8) தற்சமயம் கிலாபத்துக்கு இடையூறு நேர்ந்து முஸ்லிம்களெல்லாம் சஞ்சலப்பட்டுத் தவித்துக்கொண்டிருக்கும்போது முஸ்லிம்களுக்குள் ஒருவரை யொருவர் காபிரென்றும் முர்த்தலென்றும் தர்க்கித்து வேற்றுமையை உண்டுபண்டுகிறது சிலாக்கிக்கத்தக்க வேலையில்லை. இவ்வித தர்க்கங்களை யெல்லாம் அடியோடு நிறுத்திவிட்டு கிலாபத்து விஷயம் ஒரு முடிவுக்கு வந்தபின்னுல் மதத் தர்க்கங்களில் மூளையைச் செலுத்தி வேலைகள் செய்யலாம். ஆதலால், இது தருணமல்ல.

ஜவாபு.

நேயர்காள்! நமது முஸ்லிம் நண்பர்களில் பலருக்கு இவ்விதமான அபிப்பிராயம் ஏற்பட்டு உண்மையை உணர வழியில்லாமலாய் தியங்குகிறுர்கள். வாருங்கள் இதைச் சற்றே ஆராய்வோம்.

முதன் முதல் இந்த காதியானி மதஸ்தர்கள் இஸ்லாமிய கிலாபத்துக்கு மிகவும் பங்கம் விளைவிக்கிறார்கள். இவர்களில் பெரிய கூட்டம் இரண்டுளது. ஒன்று காதியான் கூட்டம். மற்றொன்று லாகூர் கூட்டம். காதியான் கூட்டமோ, பகிரங்கமாக தாங்கள் முஸ்லிம்களின் கிலாபத்தை ஒப்புக்கொள்ளவில்லையென்றும் எங்கள் குருவாகிய மிர்ஸா சாஹிபையே கலீபாவாக ஒப்புக்கொள்கிறோமென்றும் சொல்லிவிட்டதுடன் இஸ்லாமிய கிலாபத்துக்குப் பங்கம் விளைவிக்கிற விரோதிகளுடன் அநுதாபங்காட்டி ஆனந்தங் கொண்டாடுகின்றனர். லாகூர் கூட்டமோ, பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலும் காட்டுகிறதுபோல் நடித்துவருகிறார்கள். உண்மையில் இவர்களும் இஸ்லாமிய கிலாபத்துக்கு விரோதிகளே. இவர்களின் குருவாகிய மிர்ஸா சாஹிபு தமது சிஷர்களுக்கு இவ்விதமே கற்பித்து விட்டிருக்கிறார். ஆகவே இவர்கள் அந்தரங்கத்தில் முஸ்லிம்களுக்கு விரோதிகளே.

அன்றியும், காதியானிகள் இதுதான் நல்ல தருணமென நினைத்து இஸ்லா மதத்தைப்பரப்புகிறோமென தங்களின் மதத்தைப் பரப்பிவருகிறார்கள். இன்னும், கிறிஸ்தவர்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆபத்துகரமான இச் சமயத்தை விட வேறு நல்ல சமயம் கிடைப்பது அரிது என உணர்ந்துகொண்டு தங்களின் மதத்தை முஸ்லிம்கள் முதல் எல்லோருடைய இருதயங்களிலும் ஊன்றிவிடவேண்டுமென்று அவர்கள் செய்யும் பிரயத்தனங்களைக் கவனிக்குங்கால் குலை பதறுகிறது. அதோடு இராஜாங்க உதவியும் சேர்ந்திருக்கிறதைப் பார்க்க உடலெல்லாம் நடுங்குகிறது. இங்ஙனமாக, முஸ்லிம்களில் சிலர் கலீபத்து விஷயம் முடிந்துகொள்ளட்டும் பார்த்துக்கொள்வோமென்று அஜாக்கிறதையாய் கவலையற்றிருப்பதைப்பார்க்க சுபுஹானல்லா என்னென்ன ஆபத்துகளெல்லாம் விளையுமோ என மனம் ஏங்குகிறது. கிலாபத்து விஷயம் முடிந்துகொள்ளட்டும் பார்த்துக் கொள்வோமென்று மொழியும் கனவான்களே! பிறர்கள் என்ன வேலை செய்கிறார்கள். நீங்கள் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள் என்று உணர்ந்தீர்களா? நமது நிலைமைகளையுணர்ந்து உங்களது கண்களில் நீர் ததும்பவில்லையா.?

அன்றியும், வெளிரங்கத்தில் மட்டும் யுத்தம் செய்து கிலா

பத்தைப் பங்கப்படுத்துகிறது போதாதென்று அந்தரங்க யுத்தம் புரிய பாதிரிகளைக்கொண்டு வேலை செய்து வருகிறதை நீங்கள் பார்த்திருந்தும் வெளி விஷயங்களை மட்டுமே கவனித்துக்கொண்டிருத்தல் புத்திசாலித்தனமாகுமா.? இவைகளை உலமாக்களிடம் வேண்டுகோள் என்னும் பிரிவில் பார்வையிடவும்.

முஸ்லிம்களே! கிலாபத்து விஷயம் பூரணமாகக் கிடைக்க வேண்டுமானால் மூன்று காரியம் தேவை யென்று தீர்க்காலோசனை செய்ததில் புலப்படுகிறது.

(1) கிலாபத்துப்பிரசார வேலை:- இந்த விஷயத்தில் எவ்வளவு தூரம் அக்கரையும், சிறத்தையும் எடுத்துக்கொள்வோமோ, அதில் நின்றும் கிஞ்சித்தும் பின் வாங்கக்கூடாது.

(2) சன்மார்க்கப் பரப்புதல்:- மேல்சொன்ன கலீபத்து விஷயத்தை ஆதரிக்கிறதுடன் ஒரு கூட்டம் மதப் போர் செய்கிற காதியானிகள், கிறிஸ்தவர்களோடு போர் புரிந்து அவர்களை மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான் நமது சுத்த சத்திய சுயம் ஜோதியான சன்மார்க்க மயம் எங்கும் ஜொலித்து நிற்கும்.

(3) உள் மார்க்கப் போதனை:- மேற்சொன்ன இரு விஷயங்களையும் தாங்கி நிற்பதுடன் ஒரு கூட்டம் முஸ்லிம்களுக்கிடையில் நடக்கும் குபிர், ஷிர்க்கு, பிதுஅத்து ஹறும் முதலிய துர் விஷயங்களை அகற்ற வழி தேடவேண்டும்.

ஆகவே, இந்த மூன்று காரியங்களும் ஒன்றைவிட்டொன்று பிரியாது தொடராக நடந்துவரும் பக்ஷம் நாம் கோரியபடி பரிபூரணமான கிலாபத்துக் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. அன்றேல், நாம் கோரிய அளவு கிடைப்பது அரிது என்பதை எமது முஸ்லிம் நண்பர்கள் அறிவார்களாக.

குர்ஆன் ஷரீபிலும், ஹதீது ஷரீபிலும் இவ்விஷயங்களை விபரமாய்த் துலக்கப்பட்டிருக்கிறது. விரும்புவோர், உலமாக்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

(9) காதியானி மதத்தில் சேராமல் அன்னவர்களாலெழுதப்பட்ட புத்தகங்களை வாங்கி வாசிப்பதில் என்ன கெடுதலிருக்கிறது?

ஜவாபு.

நேயர்களே! இப்பேர்ப்பட்ட எண்ணம் தான் நமக்குள் பலமான வேற்றுமையை நாட்டிவிட்டது நல் விஷயங்களின்னது, தீய விஷயங்களின்னது என்று மதத்தைக்கொண்டு சோதித்தறியக்கூடாதவர்கள் அதில் நுழைவார்களேயானால் சந்தேகமின்றி அவர்கள் பிறரால் தாக்கப்பட்டுவிடுவது நிச்சயம். ஆயினும், இவ்விஷயங்களைப் பகுத்துணர்ந்து ஆராயக்கூடிய ஞானமுடையோர் அவ்விஷயங்களைப் பாராது அஜாக்கிரதையாயிருத்தல் மிகவும் மோசத்திற்கிடமானதே. எனவே, சாதாரண ஜனங்கள் இப்பேர்ப்பட்ட தப்பு மார்க்கத்தாரால் வெளியிடப்பெறும் எவ்விதப் புத்தகங்களையும், பத்திரிகைகளையும், துண்டுப்பிரசுரங்களையும் வாங்கி வாசியாமல் உலமாக்களின் தீர்மானங்களை நம்பி இருத்தலே மோக்ஷத்திற்குரியது.

(10) அல்லாவையும் கடைசி நபியையும் ஒப்புக்கொள்கிறோமென்று உறுதிமொழி கூறுகிறவர்களை எப்படிக் காபிர் என்று சொல்லலாம்?

ஜவாபு.

நமது நாயகம் அவர்கள் காலத்தில் தோன்றின முஸைலமா கஸ்லாபு கூட நாயகமவர்களை நபியென ஒப்புக்கொண்டிருந்தான். அப்படியிருந்தும் நாயகம் அவர்களும் நேர்வழிபெற்ற கலீபாக்களும் அவனை என் மாறுவேடக் காரனெனத் தீர்மானித்து வேரறக்களைந்தார்கள். அந்த மஹான்களுக்கெல்லாம் அல்லாவையும் கடைசி நபியையும் ஒப்புக்கொண்டவன என்ற இந்த மஸ்அலா தெரியாமல் போய்விட்டதா.?

அன்றியும் நாயகமவர்கள் காலமுதல் மிர்ஸா சாஹிபுக்குப் பிந்தி நாளது வரை தோன்றியிருக்கிற ஒவ்வொரு மஸீஹ்களும் மஹ்திகளும், நபிகளும் இவ்விதமே வாதாடி வந்திருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் காபிர் என்று தீர்ப்புச் செய்திருக்கும் போது மிர்ஸாயி மதத்தினரைமட்டும் ஏன் நீக்கிக்கொள்ள வேண்டும்.

இன்னும், இதற்கு முன்னும் பின்னும் தோன்றின மஹ்திகள், நபிகள், ரசூல்கள், பரோஸி நபிகள், மஸீஹ்கள் முதலி

யோரை இந்த மிர்ஸாயி மதத்தினரே என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கேட்டு சந்தேகத்தை நிவர்த்திசெய்துகொள்ளவும்.

அல்லாவையும் கடைசி நபியையும் ஒப்புக்கொள்கிறதுடன் அவர்களால் விதித்திருக்கும் விதிமுறைகளை ஏற்றுக்கொள்கிறவர்களைத்தான் காபிரென்று மொழியக்கூடாதேயன்றி அல்லாவைப் பொய் சொல்லுகிறவனென்றும் அவனின் ரசூலை பொய்யர், தவறுதலுடையோர், என்னைவிட பதவில் குறைந்தவரென்றும், மற்றும் நபிமார்களை சொல்லத் தகாத இழிமொழிகளைக் கொண்டு தாக்குகிற ஒருவனை ஏன் காபிரென்று சொல்லக் கூடாது. மேலும், இப்பேர்ப்பட்ட சமயத்தில் இவ்விதமான துரோகிகளின் உள் நோக்கங்களை விளக்கிக்காட்டி. முஸ்லிம்களைப்பேணுமலிருக்கிறவன் மஹா பாவியென்று நிச்சயமாய் அறையக்கூடும்.

சுருக்கிச் சொல்லில் ஒவ்வொருவரும் இப்படியே வேஷம் போட்டுக்கொண்டு நினைத்தபடியெல்லாம் சொல்லக்கூடும். ஆகவே, இவ்விதமான தந்திரங்கள் இன்னும் அநேகமிருக்கின்றன. இவைகளை யெல்லாம் செவ்வையாயறிந்த பின்னரே உலமாக்கள் இவர்களைக் காபிரென்று தீர்ப்புச் செய்திருக்கிறார்கள்.

(11) அஹ்ல கிபுலாவை (கிபுலா உடையோர்களை) எப்படிக் காபிரென்று கூறலாம்?

## ஜவாபு.

முஸைலமா கஸ்ஸாபும் அஹ்ல கிபுலாதான் அதற்குப் பின் வந்த அநேக பொய் நபிகளெல்லாம் அஹ்ல கிபுலாதான் அவர்களின் நடப்புகளால் அவர்களை யெல்லாம் மார்க்கத்தை விட்டுப் புறம்பானவர்களென்று தீர்ப்புச் செய்யும்போது மிர்ஸாயி மதஸ்தரை மட்டும் சொல்லக்கூடாதென்பது என்ன நியாயம்.

அன்றியும், நமது நாயகம் அவர்களுக்குப் பின்பு மிர்ஸா சாஹிபுக்கு முன்பு வரை தோன்றியிருக்கும் நபிகள், மஹ்தி, மஸீஹ்கள் முதலியோரை இந்த மிர்ஸாயி மதத்தினரே என்ன தீர்ப்புச் செய்கிறார்கள் என்று கேட்டுப் பாருங்கள். இதைப் பார்த்தாவது சந்தேகம் தெளியுங்கள்.

சிநேகிதர்களே! முதன் முதல் அஹ்ல கிபுலாவாகிய முஸ்

லிம்கள் அடங்கலையும் நோக்கி, என்னை நம்பாதார்களடங்கலும் காபிரென்று தீர்ப்புச் செய்தவர் மிர்ஸா சாஹிபுதான். இவ்விதம் அஹ்லகிபுலா அடங்கலையும் காபிரென்று தீர்ப்புச் செய்த மிர்ஸாவையும் அவரைத் துயர்ந்தோர்களையும் முஸ்லிம்கள் ஏன் காபிரென்று சொல்லக்கூடாது.

இவ்விதம் முஸ்லிம்கள் அனைவோரையும் கூசாமல் காபிர் என்று பத்வாக் கொடுத்த மிர்ஸாவையும், அவரைத் துயர்ந்தோரையும் முஸ்லிம் உலமாக்கள் எல்லோரும் காபிரென்று தீர்ப்புச் செய்யும்போது இந்தத் தீர்ப்பை விட்டும் தப்பித்துக் கொண்டு முஸ்லிம்களை வழி கெடுக்கிறதற்காக அந்த மிர்ஸாயி மதஸ்தர்கள் நாங்கள் அஹ்லகிபுலாவாயிருக்கிறோம். எங்களை எவ்விதம் காபிரென்று சொல்லலாமென முஸ்லிம்களை அதட்டுகிறார்கள். இவ்வித தந்திரத்தினாலும், ஏமாற்றினாலும் சிற்சில சாதாரண ஜனங்களை மயக்கிவிட்டார்கள்.

ஆயினும், முஸ்லிம்களில் ஒருவன் அஹ்லகிபுலாவை காபிர் என்று சொன்னவனை ஏன் காபிரென்று சொல்லக்கூடாதென்று மிர்ஸா சாஹிபின் தீர்ப்பைக் காட்டிவிட்டால் அந்தத் திசையைக்கூட ஏறிட்டுப் பாராமல் ஓட்டமெடுத்துவிடுவார்களென்பது நிச்சயம்.

சுருங்கச் சொல்லுமிடத்து இந்த ஆக்ஷேபம் முதன் முதல் மிர்ஸாவையும் அவரின் உம்மத்துகளையுமே சாருகிறது என்பதை முஸ்லிம்கள் கவனிப்பார்களாக.

(12) ஒவ்வொரு கூட்டத்தாரும் நாங்களே மெய்வழி காட்டிகளென்று வாதாடும்போது ஒன்றும் அறியாத யாங்கள் யார் சொல்லை நம்புவது?

ஜவாபு.

சகோதரர்காள்! இவ்விதம் பிற்காலத்தில் குழப்பங்கள் ஏற்பட்டு எனது உம்மத்துகள் தயங்குவார்களென அறிந்து அப்போதே முன்னெச்சரிக்கையான அநேக நல் வாக்கியங்களை நமது நாயகம் அருள்புரிந்திருக்கிறார்கள்.

ஹதீது.

வசனங்களில் மேலானது குர்ஆன்ஷரீபு. நடத்தைகளில்

சிறந்தது முஹம்மதுடைய நடத்தை. செய்கைளில் தீயது புதிதாக ஏற்பட்டவைகள் புதிதானவைகள் அடங்கலும் வழிகேடு. வழிகேடுகளனைத்தும் நரகினிற் சேர்ப்பிக்கும்.

## ஹதீது.

எனக்குப்பின் எனது உம்மத்தில் 73 கூட்டம் உண்டாகும். அதில், நானும் எனது உடன்வாசிகளும், நடந்த வழியைத் தொடர்ந்த ஒரு கூட்டத்தைத் தவிர இதரக் கூட்டமெல்லாம் நகரவாதியாயிருக்கும். (அஹ்மது திர்மதி. அபூதாவூது ரஹ்.)

## ஹதீது.

இரிபாஸிபுசாரியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்; எங்களுக்கு ஒரு விடுத்தம் நாயகம் அவர்கள் உபந்நியாசித்தார்கள். அதனால், எங்களின் இருதயங்களெல்லாம் பதறி கண்களெல்லாம் நீரால் நிரம்பிவிட்டது. அப்பால் நாங்கள் அல்லாவுடைய ரஸூலே, இது இறுதிப் பயணத்தின் உபந்நியாசத்தை நிகர்த்திருக்கிறது. ஆதலால், இனியும் உபந்நியாசிப்பீர்களென வேண்டிக்கொண்டோம். அப்போது அருள் புரிந்ததாவது: நான் உங்களுக்கு இறைவனைக்கொண்டு அஞ்சும்படியும் முஸ்லிம்களுடைய அமீர் அடிமையாயிருந்தபோதினும் அவருக்கு வழிப்பட்டு வார்த்தைகளை அங்கீகரிக்கும்படியும் உபதேசிக்கிறேன். இன்னும் உங்களில் நின்றும் ஜீவித்திருப்பவன் அநேக மாற்றங்களைத் தெரிசிப்பான். (அந்நேரம்) நீங்கள் எனது சுன்னத்தையும் எனது நேர் வழி பெற்ற கலீபாக்களின் நடப்புகளையும் தங்கள் மீது அவசியப்படுத்திக் கொள்கிறதுடன் அந்த சுன்னத்துகளை பற்களால் மிகக் கெட்டியாய்ப்பிடித்து நவீன கிரிகைகளை விட்டும் பயப்படுங்கள். ஏனெனில் நவீன கிரிகைகளெல்லாம் (பிதுஅத்துகள்) தீயவழியாயிருக்கிறது. (அஹ்மது திர்மதீ. அபூதாவூது இபுனு மாஜ்ஜ)

முஸ்லிம்களே! பின்னால் வரக்கூடிய தப்பு மார்க்கத்தாரைக் கண்டனஞ் செய்து சஹாபாக்களின் நடப்புகளைப் பின்பற்றி நடவுங்களென்று கண்டிப்பாய் உத்தரவு செய்திருக்கிறதை கவனித்துக்கொள்ளுங்கள்.

உ25373
600 005.

### ஹதீது.

...தஜ்ஜால்கள் தோன்றி ஒவ்வொருவரும் நானே ரசூல் என்று சொல்லாத வரை கியாமம் உண்டாகமாட்டாது.

**ஹதீது:**= எனது உம்மத்தில் இனி முப்பதுபேருண்டாவார்கள். அதில் ஒவ்வொருவரும் நான் நபி யென்று கூறுவார்கள். உண்மையில் நான் கடைசி நபியாயிருக்கிறேன். எனக்குப் பின்னால் வேறு நபி கிடையாது. (அபூதாவூது. திர்மதி ரஹ்.)

முஸ்லிம்களே! இதில் தப்பு மார்க்கத்தாரின் கொள்கைகளை அடியோடு மறுத்து இனி நபியும் ரசூலும் உண்டாகப் போகிறதில்லை யென்று பகிரங்கமான தீர்ப்புச் செய்துவிட்டார்கள்.

**ஹதீது:**= முஹம்மதுடைய உம்மத்து தீய வழியில் ஒற்றுமையாக மாட்டாது. (திர்மதீ)

**ஹதீது:**= ஆண்டவனின் கை கூட்டத்தின்மீதிருக்கிறது. கூட்டத்தை விட்டும் வேறுபட்டவன் ஜஹன்னத்தில் (நரகத்தில்) சென்றுவிட்டான். (திர்மதீ)

**ஹதீது:**= பெருங் கூட்டத்தைப் பின்பற்றுங்கள். (இபுனுமாஜா) முஸ்லிம்களே! இதில் பெருங்கூட்டத்தைத் தொடரும்படியும் அதற்கு மாற்றமாகச் சிறு கூட்டத்தை தொடர்ந்தவர்கள் நரகவாதி யென்றும் அருள்புரிந்திருக்கிறார்கள்.

அல்லாஹுத்தஆலா அருள்கிறான்: ஏ! முஹம்மதுடைய உம்மத்துகளே! நீங்கள் நல்ல உம்மத்துகளாயிருக்கிறீர்கள்.

இன்னும்,

மூமின்களுடைய பாதையை விட்டும் வேறு வழியில் நடக்கிறவனை நாம் அவ்வழியிலேயே நடத்தாட்டி அப்பால், ஜஹன்னத்தில் (அக்கினிக்குழியில்) இருத்தாட்டுவோம் (என்பதே.)

சகோதரர்களே! இதில் ஆண்டவன் முஹம்மதுர்ரசூலுல்லா அவர்களின் உம்மத்தைப் புகழும்போது அப்பெயர்பெற்ற கூட்டம் வழிதவறிவிடமாட்டாதென்றும் அக்கூட்டத்தை விட்டும் பிரிந்தவன் வழி தவறிவிட்டானென்றும் தெரியவருகிறதல்லவா? இனிமேல் விபரிக்கப்பட்ட விஷயங்களின் சாரத்தைக் கீழ் வரைகிறேன்.